carol *n.* மகிழ்ச்சிப்பாடல், கிறித்துமஸ் பாடல்.

carouse (கறவுஸ்) *n.* மிகுதியாகக்குடித்துமகிழும் விருந்து.

carp *n.* நன்னீர்மீன்வகை *v.* குற்றங்காண், காரணமின்றிக் குறை கூறு.

carpenter *n.* தச்சன், carpentry *n.* மரவேலை.

carpet *n.* கம்பளம், புல் பரப்பு, *on the carpet* ஆலோசனையில்.

carr *n.* சதுப்பு நிலம்

carriage *n.* எடுத்துச்செல்லுதல், வண்டி, எடுத்துச்செல்ல ஆகும் செலவு.

carrion *n.* அழுகும்பிணம், ஊழ்த்த இறைச்சி.

carrot *n.* சிவப்புமுள்ளங்கிவகை,

carry *n.* சுமந்து செல்லுதல். *carry away* தன்வயமிழக்கச் செய், *carry off* சமாளி, வன்முறையால் அகற்று, வெற்றி, *carry on* தொடர்ந்து செய், களவாகக் காதல் நாடகமாடு, முன்னேறு, *carry one's point* தன்கருத்து நிறுவுதல், *carry out* நிறைவேற்று, *carry the day* வெற்றி பெறு, *carry through* நிறைவாக்கு, இடர்களினூடேதாங்கு, *carry too far* மட்டுமீறிச் செல், *carry weight* செல்வாக்குப் பெற்றிரு, *carried everything before one* வெற்றிபெறு.

cart *n.* கட்டை வண்டி, *put the cart before the horse* ஒழுங்கு முறையைத் தலை கீழாக மாற்றி விடு.

carte - blanche (காற் ப்ளான்ஷ்) *n.* முழுச் செயலுரிமை.

cartel *n.* உற்பத்திச் செலவைக் குறைத்து விலைகளை ஏற்றி வைப்பதற்கான சங்கம், அரசியற் கட்சிகளின் கூட்டணி, போரிற் சிறைப் பிடிக்கப் பட்டவர்களை மாற்றிக் கொள்வதற்கான உடன்படிக்கை.

cartilage *n.* எலும்புகளின் முடிவிலுள்ள உறுதியான சவ்வு.

cartographic *a.* நிலப்படத்துக் குரிய.

carton *n.* அட்டைப்பெட்டி.

cartoon *n.* கேலிச்சித்திரம், வேடிக்கை ஓவியம்.

cartridge *n.* தோட்டா.

carve *v.* செதுக்கு, துண்டாக்கு. *carve out* வெட்டியுருவாக்கு,

casanova *n.* காதல் மன்னன்.

cascade (கஸ்கேட்) *n.* சிறிய நீர் வீழ்ச்சி.

casco *n.* படகுவகை.

case *n.* கூடு, உறை, பெட்டி, நிகழ்ச்சி, வழக்கு, வேற்றுமை, *in any case* எப்படியும், *leading case* முன்மாதிரி வழக்கு, *make out a case* தகுந்த சான்றுகளுடன் வாதம் உருவாக்கு.

case-law தீர்ப்பு வழிச்சட்டம்.

casement *n.* பலகணி, கதவு போல் திறபடும் சாளரம்.

cash *n.* நாணயம், காசு, *cash down* அவ்விடத்திலேயே கொடுக்கப்படும் பணம், *cash in* பயனடைதல், *hard cash*, *spot cash* உடனடிப்பணம், *out of cash* பணமின்றி.

cashew *n.* மரமுந்திரி.

cashier *n.* காசாளர் *v.* வேலையிலிருந்து நீக்கு.

casino (கஸீனே) *n.* சீட்டாட்ட வகை, பொது ஆடரங்கம், சூதாடுகளம்

cask *n.* மிடா.

casket *n.* பேழை, பெட்டகம்.

cassock *n.* திருச்சபைக் குருமார் அணியும் உள்ளுடை வகை.

cast *v.* எறி, உதிர், வீசு, வாக்களி, கணி, உருக்கொடு, நடிகரைத் தெரிவுசெய், *n.* வடிவம், பண்பு, வண்ணம், வார்ப்பட அச்சு, தூண்டில் முனை நடிகர்குழு, எறிதல், நாடகப் பகுதி, எச்சம், பார்வை, திருப்பம், கணித்தல், *cast about* தேடு, *cast an eye* பார்வை செலுத்து, *cast aside*, *cast asunder*, *cast away*, *cast off* துற, தள்ளு, வீசு, *cast blame* குற்றம் சுமத்து, *cast down* வீழ்த்து, துயரம், *cast horoscope* சாதகம் உருவாக்கு, *cast in one's teeth* குற்றஞ் சாட்டி கண்டி, *cast loose* அவிழ்த்து விடு, *cast out* நீக்கு, *cast spell* மயக்கு, *a cast - iron case* வெல்லக் கூடிய வழக்கு.

castaway *n.* உடை கலத்திலிருந்து கரை சேர்ந்தவர், சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர், துணையிலி.

caste *n.* சாதி.

castigate *v.* தண்டி, கண்டி திருத்தம் செய், அடி.

casting vote *n.* தீர்மானிக்கும் வாக்கு.

cast - iron *n.* வார்ப்பிரும்பு, *a.* உறுதியான.

castle *n.* காவற்கோட்டை, மாளிகை, *castles in the air* மனக்கோட்டைகள்.

castor - oil *n.* ஆமணக்கு எண்ணெய்.

castor sugar *n.* மாச்சீனி.

castrate *v.* விதையடி, குறை, தூய்மைப்படுத்து.

casual *a.* தற்செயலான, திட்டமிடப்படாத, ஒழுங்கற்ற.

casualty *n.* காயம்பட்டவர் கொலைப்பட்டவர்.

casuarina *n.* சவுக்கு மரம்.

casuist *n.* வாதம் வல்லவர், வாதத்துக்கு வாதம் செய்பவர், விதண்டாவாதம் செய்பவர்.

casus belli (கேஸஸ் பெலை) *n.* போர்க் காரணம்.

cat *n.* பூனை, வம்புக்காரி, சாட்டை வார், *bell the cat* ஆபத்தான செயல் செய்யத் துணிதல், *let the cat out of the bag* இரகசியத்தை வெளியிடல், *rain cats and dogs* கடுமையாக மழை பெய்தல், *lead a cat and dog life* எப்போதும் சண்டையிட்டுக் கொண்டேயிருத்தல், *room to swing a cat* மிகக்குறைந்த அளவு இடம் *cat's-paw* *n.* பிறரின் கையாளாக இயங்குபவர், இளம்தென்றல், *cat-call* எதிர்ப்புக்கூச்சல், *Kilkenny cats* ஒருவரை ஒருவர் அழிக்கிறவரை சண்டையிடுபவர், *enough to make a cat laugh* ஈடுபாடில்லார்க்கும் மகிழ்ச்சியூட்டக்கூடிய, *turn the cat in the pan* திறம்படக்கட்சிமாறு.

cataclysm *n.* ஊழிப்பெருவெள்ளம், பிரளயம், அரசியல் கொந்தளிப்பு, சமூகப்புரட்சி, திடீர்மாறுபாடு.

catacomb (கற்றகூம்) *n.* அடி நிலக்கல்லறை.

catafalque *n.* பாடை, பிணம் கொண்டுசெல்லும் ஊர்திவகை

catalepsy *n.* மூடுசன்னி, உயிரிருந்தும் இல்லாதது போன்ற உடல்நிலை.

catalogue (கற்றலொக்) *n.* பெயர்ப்பட்டியல்.

catalysis *n.* தான் மாறுமலேயே மற்றப் பொருள்களின்மாற்றத்துக்குத் துணைசெய்தல்.

catamaran *n.* கட்டுமரம், தோணிவகை, வம்புக்காரி.

catamite *n.* தன்னினச் சேர்க்கைக்காக வைத்திருக்கும் சிறுவன்.

catapult (கற்றபல்ற்) *n.* கவண், எறிபடை, வீச்சுப்பொறி.

cataract *n.* பெரிய நீர்வீழ்ச்சி, கண்படலம்.

catarrh (கற்ரு) *n.* சளிச்சவ்வு அழற்சியினாலுண்டாகும் நீர்க் கோப்பு.

catastrophe *n.* திடீர்ப்பேரழிவு, கதையின் உச்ச உணர்ச்சி நிலைக்கட்டம்.

catch *n.* பற்று, பிடிக்கப்பட்ட பொருள், இசைப்பாடல், *catch phrase* அடிக்கடி பயின்று வரும் சொற்றொடர், சுலோகம்.

catchment *n.* ஆற்றுநீர் வடிகால் அமைப்பு. *catchment -area* நீர்வாங்கு தளம், ஒரு கல்லூரியில் பயிலும் மாணவர் வதிவிடம், ஒருமருத்துவ நிலையம் செல்லும் நோயாளர் வதிவிடம்.

catchy *a.* கவர்ச்சியான.

catechism *n.* கேள்விக்கொத்து, வினாவிடையாக அமைந்தமதக் கோட்பாடு.

categorical *a.* உறுதியான, வெளிப்படையான,

category *n.* பொருள் வகை, வகுப்பு.

cater (கேற்ற) *v.* வழங்கு, உணவு வழங்கு.

caterpillar *n.* பூச்சியினத்தின் முட்டைப் புழு, உழைக்காமல் உண்பவர்.

caterwaul *n.* பூனையின் அலறல்.

cathartic *n.* பேதிமருந்து.

cathedral *n.* மாவட்டத் தலைமைக் கிறித்தவக் கோவில்.

catheter *n.* உடலிலிருந்து நீர் மம் எடுக்கப் பயன் படுத்தும் குழல்.

cathode *n.* எதிர்மின்வாய்;

catholic (கத்லிக்) *n.* ரோமன் கத்தோலிக்கர், *a.* எங்கும் உள்ள, பரந்த, மரபறுத, யாவற்றையும் உள்ளடக்கிய.

catnap *n.* சிறுதுயில்;

cat-o-pine tails *n.* கசைவகை.

catsup, ketchup *n.* காரச்சுவை

cattle *n. pl.* மந்தை

catty *a.* சீனக் கல்லெடையளவு.

catwalk *n.* ஒடுங்குநடைபாதை.

cat-witted *a.* சிறுமைக்குணமுள்ள, செருக்குடைய.

caucus (கோக்கஸ்) *n.* அரசியல் குழு, கட்சிஅமைப்பு, *v.* அரசியற்குழு அமை, கட்சிக் கூட்டம் நடத்து.

caudal *a.* வால் போன்ற.

cauldron *n.* கடாரம், கொப்பரை.

cauliflower *n.* பூக்கோசு.

causative *n.* பிறவினை, *a.* விளைவுண்டாக்குகிற.

cause *n.* காரணம், குறிக்கோள், வழக்கு.

cause celebre *n.* மக்கள் கவனத்தைக்கிளறிவிடும் நீதிமன்ற வழக்கு.

causerie *n.* கலை குறித்து அளவளாவுதல், வீண்பேச்சு.

causeway *n.* மேட்டுப் பாதை.

caustic *n.* கடுங்காரம், அரிக்கும் பொருள், *a.* வெறுப்புத் தருகிற, குத்தலான.

caution *n.* எச்சரிக்கை, வேடிக்கை காட்டுபவன்.

cavalcade *n.* குதிரை வீரர் பவனி.

cavalier *n.* குதிரை வீரன், *a.* வீறுப்பான கவலையற்ற, துணிச்சலான.

cavalry *n.* குதிரைப்படை

cave *n.* குகை, மலைமுழைஞ்சு, கட்சியிலிருந்து பிரிந்துசெல்ல விரும்புங்குழு, *cave in* விழு, விட்டுக்கொடு.

caviare (கவிஆ) *n.* உப்பிட்டு, *n.* உலர்த்திய மீன்சினை, பொது நிலை மக்கள் நுகர முடியாத அரும் பொருள்.

cavil *v.* குதர்க்கம் செய், போலி மறுப்பு.

cavity *n.* பொள்ளல், வெற்றி டம்.

caw *n.* காக்கையின் கரைதல்

cease *v.* முடிவுறு, நிறுத்து, *cease-fire* போர் நிறுத்தம்.

cede *v.* விட்டுக்கொடு, கொடு

ceiling *n.* உட்கூரை, உச்ச வரம்பு.

celebrate *v.* கொண்டாடு, பா ராட்டு, புகழ். celebrated *n.* போர்பெற்ற, celebrity *n*, புகழ் பெற்றவர்

celerity *n.* விரைவு.

celery *n.* உண்ணுதற்காகும் மரக்கறித்தண்டு.

celestial *a.* விண்ணுலக, வானத் து, தெய்வீக.

celibacy *n.* மணமாகாத நிலை

cell *n.* சிறைஅறை, கலம். மீன் கலம், கல்லறை, உயிரணு பொதுவுடைமைக் கொள்கை பரப்பும் கட்சிக் குழு.

cellar *n.* நிலவறை

cello *n.* நான்கு நரம்புள்ள இசைக்கருவி வகை.

celluloid *a.* உயிரணுக்கள் போன்ற

cellulose *n.* மரக்கூறு, *a.* கண் ணறையுள்ள.

celtie *n.* இந்திய செர்மானிய மொழிக் குடும்பப்பிரிவு.

cement *n.* சீமெந்து, *v.* உறுதி யாக இணை.

cemetery (செமிற்'றி) *n.* இடு காடு.

censer *n.* நறும்புகைக்குடம்.

censor *n.* தணிக்கையாளர், பல்கலைக் கழக அலுவலர்.

censure *n.* கண்டனம், பழிப்பு, திட்டு

census *n.* ஆட்தொகைக்கணக்கு, குடிமதிப்புப் புள்ளி விவரத் தொகுதி.

cent *n.* நூற்றில் ஒன்று, *per - cent* நூற்று விழுக்காடு, சத வீதம்.

centenarian *n.* நூருண்டு வாழ்ந் தவர். centenary *n.* நூறு, நூருண்டு, நூருண்டு நிறைவு விழா, centennial *a.* நூற் ருண்டுக் கொரு முறை, நூருண்டு நீடித்த, centesi-mal *a.* நூறிலொரு கூறு.

centigrade *a.* நூறு பாகைக ளாகப் பிரிக்கப் பெற்ற.

centipede *n.* மட்டைத்தேள்.

centre *n.* நடு.

centrifugal *a.* நடுவிலிருந்து விலகிச் செல்கிற.

centripetal *a.* நடுவை நாடி வருகின்ற.

ceutury *n.* நூறு.

cephalic *a.* தலை தொடர்பான.

ceramics மட்பாண்டத் தொழில்.

cereal *n.* கூலம்.

cerebral *a.* மூளைதொடர்பான, அறிவுக்குகந்த *cerebellum* தலை யின் பின்னுள்ள சிறுமூளை, *ce-rebrum* தலையின் முன்னுள்ள பெருமூளை.

ceremony *n.* மரபுவழிப் புறவினை

certain *a.* உறுதியான, தவறுத, முடிவான, நிலையான, ஏதோ ஒரு, ஏதோ சில.

certificate *n.* சான்றிதழ்

certify *v.* உறுதிப்படுத்து, அறிவி.

certiorari *n.* பத்திரம் முன்னிலைப் படுத்த கீழ்மன்றுக்கிடும்ஆணை.

cervix *n.* கழுத்து

cessation *n.* இடை நிறுத்தம்

cesspit *n.* குப்பைக்குழி.

chafe *n.* தேய்ப்பதால் ஏற்படும் சூடு, சீற்றம், *v.* சினங்கொள்,

chaff *n.* உமி, பதர், குப்பை, ஏளனம்,

chagrin (ஷாக்றின்) *n.* துன்பம் தொல்லை, கடும் ஏமாற்றம்.

chain *n.* சங்கிலி, தொடர், விலங்கு, 66 அடி நீளஅளவு.

chair *n.* நாற்காலி, இருக்கை, தலைவர், தலைமை.

chalk *n.* சுண்ணை எழுதுகோல், வெண்சுதைப்பாறை.

challenge *n.* அறைகூவல், எதிர்ப்புத் தெரிவித்தல்.

chamber *n.* அறை, கூடம்,

chamberlain *n.* அரண்மனைக்குப் பொறுப்பான அலுவலர்.

chamber-pot *n.* படுக்கையறைச் சிறுநீர்க்கலம்.

chameleon (கமீலியன்) *n.* பச்சோந்தி, அடிக்கடி மாறுபவர்

champ *v.* ஓசைப்பட சப்பு, பொறுமை யின்மையைக் காட்டு.

champagne (ஷம்பேன்) *n.* திராட்சைக்குடி வகை.

champion *n.* போட்டிகளில் யாவரையும் தோற்கடிப்பவர், வாகைசூடுவோன், பிறருக்காகப் போராடுபவர்.

chance *n.* தற்செயல் நிகழ்வு, *even chance* நிகரான வாய்ப்பு

chancellor *n.* முக்கிய அமைச்சர், உயர்முறைமன்ற முதல்வர், பல்கலைக்கழக வேந்தர்.

chancery *n.* சட்டமேல்மன்றத்துக்கு அடுத்தபடியான நீதித் துறை முதல்வர் மன்றம்.

chancy *a.* உறுதியில்லாத,

chandelier (ஷண்டிலிய) *n.* கொத்து விளக்குச் சட்டம்

chandler (சாண்ட்ல) *n.* மெழுகுத்திரி விற்பவர், மெழுகுத்திரி செய்பவர், பலசரக்கு வணிகர்.

change *n.* மாற்றம், சில்லறை, இறுதி மாதவிடாய், *change colour* நாணுறு, *change of life* மாதவிடாய் நிற்கும் பருவம்.

changeling *n.* மாற்றப் பெற்ற குழந்தை, அறிவுமழுங்கியவர், வளர்ச்சி குன்றியவர்.

channel (சனல்) *n.* வாய்க்கால், சாக்கடை.

chant *n.* இன்னிசை, பண்ணிசை *v.* குதிரை விற்பனையில் ஏமாற்று.

chaos (கேஓஸ்) *n.* பெருங் குழப்பம், ஞாலத் தோற்றத்துக்கு முற்பட்ட காலம்.

chap *n.* இளைஞன், வெடிப்பு, கன்னம்.

chapel *n.* சிறிய கிறித்தவ கோவில், பெரிய கிறித்தவ கோவிலில் சிலருக்கான தொழுமிடம், அச்சுத் தொழிலுக்கான தொழிற்சங்கப்பிரிவு.

chaperon (ஷப்பரோன்) *n.* மணமாகாதஇளமகளின் துணைக்காவற் பெண்.

chaplain *n.* கிறித்தவ கோவில் மதகுரு, போர்க்கட்பல் அல்லது படையினிலுள்ள மதகுரு.

chapter *n.* நூற்பிரிவு, அத்தியாயம், திருச்சபை அலுவலர் குழு, துறவியர் குழு, *chapter and verse* சரியான மேற்கோள் விவரம்.

char *v.* கரியாக்கு, தீய்ந்து போகச் செய்.

character *n.* எழுத்து, பண்பு, நடிப்புறுப்பினர், கதாபாத்திரம்.

charcoal *n.* கரி

charge *n.* தாக்குதல், குற்றச்சாட்டு, பொறுப்பு, விலை, கட்டணம்.

charge d' affaires (ஷாஷேடாபெயா) *n.* துணைத்தூதுவர், சிறிய நாட்டுக்கான தூதுவர்.

charge-sheet *n.* குற்ற அறிக்கை

chariot *n.* தேர்

charisma (கறிஸ்மா) *n.* ஆர்வமளிப்பது.

charity *n.* ஈகை, அறம்,

charlatan (ஷாளற்றன்) *n.* போலி அறிஞன், போலி மருத்துவன்.

charm *n.* அழகு, மயக்கும் ஆற்றல், மருட்சி, தாயத்து, மறைமொழி.

charnel-house *n.* கல்லறை எலும்புக் கிடங்கு.

chart *n.* மாதிரிப்படம், விளக்கப்படம், அட்டவணை.

charter *n.* பட்டயம், சிறப்புரிமைச்சான்று, உரிமையாவணம் *v.* ஒப்பந்த மூலம் வாடகைக்கு விடு, தனி உரிமையளி.

charwoman *n.* வீடு துப்புரவாக்க அமர்த்தப்படுபவள்.

chary *a.* எச்சரிக்கையாயிருக்கிற

chase *v.* துரத்து, *beasts of chase* வேட்டைக்குரியவிலங்கு, *wild-goose chase* பயனிலா முயற்சி, செதுக்கு.

chasm (கஸ்ம்) *n.* செங்குத்தான பக்கங்களைக் கொண்ட ஆழமான பள்ளத்தாக்கு.

chassis (ஷஸி) *n.* ஊர்தியின் அடிச்சட்டம்.

chaste *a.* கற்புடைய, தூய்மையான, எளிமையான, அடக்கமான

chasten *v.* தண்டித்துத்திருத்து, தூய்மைப்படுத்து, மட்டுப்படுத்து, பணியச்செய், அடக்கு.

chastise *v.* தண்டி, கடிந்துகொள், பணியவை.

chastity *n.* தன்னடக்கம், கற்புடைமை தூய்மை, எளிமை.

chat *n.* உரையாடல், நட்புரிமையுடனான உரையாடல், *v.* கலந்துரையாடு.

chattel *n.* தட்டுமுட்டுப்பொருட்கள்.

chatter *n.* வறுமொழி, மடத்தனமான பேச்சு, பயனில்லாத வற்றைப்பற்றித் தொடர்ந்து பேசுதல்.

chatterbox *n.* இடையறுமல் தொண தொணவெனப் பேசு பவர், வாயாடிக் குழந்தை.

chauffeur (ஷோப) *n.* மோட்டார்வண்டி ஓட்டி.

chauvinist (ஷோவினிஸ்ற்) *n.* குறுகிய நாட்டுப்பற்றுடையவர், *male chauvinism* பெண்ணினும் ஆண்மேலானவன் எனும் எண்ணம்.

cheap *a.* மலிவான, எளிதாகக் கிடைக்கிற, இழிவான கீழ்தரமான, cheapiack *a.* தரக்குறைவான, விலை கூறித்திரிபவர், *dirt cheap* கொள்ளை மலிவாக, *feel cheap* தாழ்வு மனப்பான்மை கொண்டிரு.

cheat *v.* ஏமாற்று, *n.* வஞ்சிப்பவர்.

check *n.* தடை, கட்டுப்பாடு, சரிபார்த்தல், *v.* தடு, நிறுத்து, *a.* கட்டங் கட்டமான அமைவுடைய.

cheek *n.* கன்னம், துடுக்குத்தனம், அளவுக்கு மிஞ்சிய தன்னம்பிக்கை, *v.* துடுக்காய் பேசு, *cheek by jowl* அருகருகே, நெருங்கிய தோழமையுடன், cheeky *a.* துடுக்குத்தனமான, ஆணவமான, cheekiness *n.* திமிர்.

cheer *n.* மகிழ்ச்சி, பாராட்டுரை, வரவேற்பு *v.* ஊக்கு, *cheer up* மகிழ்வூட்டு, cheerful *a.* மனநிறைவோடு, cheerio *int.* மகிழ்ச்சியோடு போய்வா !, cheerless *a.* துன்பமான

cheese *n.* பாலாடைக் கட்டி, cheese-paring *n.* மிகமிலிந்தவர், கஞ்சத்தனம்.

cheetah *n.* சிறுத்தைப்புலி வகை.

chef n. தலைமைச் சமையற் காரன்.

chef-d' oeuvre (ஷே'ஜ்வ்ர்) *n.* தலைசிறந்த படைப்பு.

cheiromancy (கைரோமன்சி) *n.* கை பார்த்து குறி சொல்லல், கைரேகை சாத்திரம்.

chemise (ஷெமீஸ்) *n.* மகளிர் உட் சட்டை.

chemist *n.* மருந்து வணிகர், வேதியியல் வல்லுநர், மருந்து செய்பவர், chemistry *n.*

cheque *n.* காசோலை, *blank cheque* தொகை குறிப்பிடாமல் கையெழுத்திடப்பட்ட காசோலை, எல்லையற்ற அதிகாரம் செலுத்தும் உரிமை.

chequered *a.* பல்வகை வேறுபாடுடைய *chequered career* இன்பமும் துன்பமும் கலந்த வாழ்க்கை.

cherish *v.* போற்றி வளர் பேணு, நெஞ்சார விரும்பு.

cheroot (சிறூட்) *n.* சுருட்டு, சாயவேர்.

cherry *n.* செந்நிறக் கனி வகை, இளஞ் சிவப்பு.

cherub *n.* சிறகுடைய ஆவி, தேவதூதன், குழந்தை.

chess *n.* சதுரங்க ஆட்டம்,

chest *n.* நெஞ்சு, பெட்டி,

chest of drawers (செஸ்ற் ஒவ் ட்ரூஸ்) இழுக்கத்தக்க அறைகளுள்ள உடுப்புப் பெட்டி.

chesterfield *n.* பலர் இருக்கக் கூடிய மென்மையான இருக்கை, நீண்ட மேற்சட்டை.

chestnut *n.* மரவகை, செந்நிறம் செந்நிறக் குதிரை, நொடிக் கதை.

chevalier (ஷெவலிய) *n.* குதிரைவீரன், நாகரிகமானவன், *chevalier of industry* எத்தன், பணவேட்டையாடுபன், மோசக்காரன்.

chew *v.* மெல்லு, *n.* சிறிய அளவு; *chew the cud* அசைபோடு, பழையநினைவுகளில் ஆழ்.

chic n. நேர்த்தி, கலைநயத்திறம், *a.* ஒயிலான.

chicanery (ஷி'கேனறி) *n.* ஏமாற்று, போலிவாதம், சொற்புரட்டு.

chick *n.* கோழிக்குஞ்சு பின்னல்வேலை, *chicken hearted* உரமற்ற, கோழைமை மிக்க *chicken - pox* சின்னம்மை.

chide *v.* கடிந்துகொள், குறைகாண், திட்டு.

chief *n.* தலைவர், தலைமையானது

chieftain *n.* பழங்குடித்தலைவன், குலமரபுத்தலைவன்,

chiffon (ஷிபன்) *n.* மெல்லிய ஆடைவகை.

child *n.* குழந்தை, *childs play* மிக எளியது

childermas *n.* டிசம்பர் 28 - ஆம் நாளில் நடைபெறும் குழந்தைகள் விழா.

childhood *n.* குழந்தைமை, *second childhood* முதுமை.

childlike *a.* சூதுவாதற்ற, எளிய.

chill *n.* கடுங்குளிர், *a.* உணர்ச்சியற்ற *v.* வெறுப்பூட்டு.

chilli *n.* மிளகாய்.

chime (சைம்) *n.* மணியொலி, மணிகளின் கூட்டொலி, ஒத்திவைப்பு, உரைப்பாட்டு, *to chime in* பிறர் கதையில் குறுகிடல்.

chimera (கிமீரு) கதம்பப்புலவுருவான விலங்கு, பொருந்தாக் கற்பனை.

chimney *n.* புகைப்போக்கி

chimpanzee *n.* மாந்தன் உருவொத்த குரங்கு.

chin *n.* நாடி, மோவாய். *chin wag n.* உரையாடல்.

china *n.* மங்கு, பீங்கான்.

chink *n.* வெடிப்பு, பிளவு, துளை நாணய ஒலி, திணறல்.

chintz *n.* பல்னிற அச்சுத் துணி.

chip *n.* துண்டு, தழும்பு *chip in* தலையிடு, பணம் வழங்கல், *chip of the old block* தந்தை போல் மகன், *dry as a chip* சுவையற்ற, கவர்ச்சியற்ற, chip board *n.* பெட்டிக்கான அட்டைத்தாள்.

chirp *n.* பறவைக் குஞ்சின் கிறீச்சொலி.

chisel *n.* உளி, கூழாங்கல், தவிடு *v.* ஏமாற்று, தவறான வழியில் பணம் பெறல்.

chit *n.* சிறு பிள்ளை, சிறு குறிப்பு, பணக் குறிப்புச் சீட்டு.

chit - chat *n.* பொழுதுபோக்குப் பேச்சு,

chivalry *n.* சான்றாண்மை, கொடை, மறம், பரிவு போன்ற நல்லியல்புகள்.

chlorine *n.* பாசிகம், இளமஞ்சள் நிறமான கார வளித் தனிமம்.

chloroform *n.* மயக்க மருந்து வகை.

chlorophyl *n.* பசுமையூட்டி.

chock *n.* ஆப்பு, முட்டுக்கட்டை.

choice *n.* தெரிவு, *Hobson's choice* தெரிவுசெய்யும்வாய்ப்பின்மை.

choir *n.* பாடகர் குழு.

choke *n.* அடைப்பு. *v.* மூச்சுத் திணறச் செய், தடைப்படுத்து

cholera *n.* வாந்திபேதி

choleric *a.* எளிதில் சீற்றங்கொள்ளுகிற

cholesterol *n.* நாடியைக் கடினமாக்குவதாகக் கருதப்பெறும் கொழுப்புப்பொருள்.

choose *v.* தெரிவுசெய், விரும்பு, துணி.

choosey *a.* தெரிவுசெய்வதில் நுணுக்கமான, மகிழ்விப்பது கடினமான.

chop *n.* வெட்டுதல், வெட்டுத் துண்டு, விலங்கின் தாடை அடையாளம், மாற்றம், *chop back* மடங்கிச்செல், *chop in* குறுக்கிடு, *chop through* ஊடறுத்துச்செல், *chop and change* கொடுக்கல் வாங்கல், மாறுபாடு, தயக்கம், *chop logic* விதண்டாவாதம். *choppy sea* கொந்தளிப்பான, *chop sticks* சீனர் உணவருந்தப் பயன்படுத்தும் குச்சியிணை.

chord *n.* யாழ் நரம்பு, நாடி, நாளம், நிற இயைபு சுர இயைபு.

chore *n.* இடையிடை செய்யும் வேலை.

choreography *n.* ஆடற்கலை, கூடியாட்டவகை.

chorus *n.* பாடகர் குழு, கூடிப் பாடும் பாடல்.

christ *n.* இயேசு கிறித்து, **christen** *v.* பெயரிடு, திருத்தீக்கை விழாவினால் கிறித்தவனுக்கு, **christian** *n.* கிறித்தவர், **christian science**, மருந்தின்றி கிறித்தவ நம்பிக்கை மூலம் நோய்க் குணம்காண அவாவுதல், **Christian Socialism** கிறித்தவ சமதருமம், **christianity** *n.* கிறித்தவசமயம், **christmas** *n.* டிசம்பர் 25 - ஆம் நாள் கொண்டாடப் பெறும் இயேசு நாதர் பிறந்தநாள் விழா.

chroma *n.* வண்ணப்பண்பு, **chromatic** *a.*

chromosome *n.* இனமரபுப் பண்புகளைக் கொண்ட இனக்கூற்றின் இழைபோன்ற பகுதி.

chronic *a.* நாட்பட்ட

chronicle *n.* காலவரன் முறையில் எழுதப்பெற்ற நிகழ்ச்சிக் குறிப்பு, **chronicler** *n.*, **chronological** *a.*

chrysalis *n.* முட்டைப்புழு, முட்டைப்புழுக்கூடு.

chrysanthemum *n.* இலையுதிர் காலத்திற் பூக்கும் செடிவகை.

chub *n.* திரட்சியான ஆற்று மீன் வகை, **chubby** *a.* உருண்டு திரண்ட.

chuck *v.* எறி, தள்ளு, செல்லமாகத் தாடையின் கீழ்த்தட்டு *chuck out* வெளியேற்று, *chuck up* வெறுத்தொதுக்கு.

chuckle *n.* கொக்கரிப்பு, அமையியான சிரிப்பு, ஏளன நகை, *a.* அருவருப்பான தோற்ற முடைய.

chum *n.* உழுவலன்பன், உடனுறை தோழன்.

chump *n.* தலை, அறிவிலி, குற்றி *of f one's chump* ஆர்வமிகுதியில் தன்னை மறந்து.

chunk *n.* பெருந்துண்டு, போதியளவு.

church *n.* கிறித்தவ கோவில் *church mouse* மிகவும் வறியவர் *churchwarden*, புகைப்பதற்குப் பயன்படுத்தும் மிக நீண்ட சுங்கான்.

churlish *a.* முரட்டுத் தனமான, பண்பாடற்ற. **churl** *n.* கீழ்மகன், நாட்டான், காட்டான்,

churn *n.* மத்து, *v.* கடை.

cicada (சி' காட) *n.* சிள் வண்டு

cider (சைட) *n.* அப்பிள் பழச்சாற்றிலிருந்து செய்யும் குடிவகை.

cigar *n.* சுருட்டு வகை.

cigarette *n.* சிகரெட்டு.

cinchona *n.* கொய்ஞ்சசெடி, சிங்கோனாபட்டை.

cinder *n.* தணல், சாம்பல்,

cinderella *n.* பாராட்டப்பெறுத அழகுடையவர், வெறுத்தொதுக்கப் பெற்றவர், *cinderella dance* நள்ளிரவில் முடியும் நடன நிகழ்ச்சி.

cinema *n.* திரைப்படம், திரைப்படக்கொட்டகை

cineration *n.* சாம்பலாக்கல், எரியூட்டல், *cinerary urn* சாம்பலைக் கொண்டதாழி.

cinnamon *n.* கறுவா, இலவங்கப்பட்டை.

cipher *n.* இன்மைக்குறி, முக்கியத்துவம் இல்லாதவர், சுழி, குறிப்பெழுத்து, மறைகுறியீடு

circa (ஸேக்க) *prep*, ஏறத்தாழ.

circle *n.* வட்டம், குழு, *v.* சூழ், **circuit** (ஸேக்கிற்) சுற்றிவருதல், **circular** *n.* சுற்றறிக்கை, **circulate** *v.* பரப்பு, **circulation** *n.* சுழற்சி, புழக்கம், செய்தித்தாள் விற்பனைப் பரப்பு.

circum-pref. சுற்றி.

circumcise *v.* மறையுறுப்பின் நுனித்தோல் அகற்று, சுன்னத்து செய்.

circumference *n.* சுற்றளவு.

circumflex *a.* அழுத்தக்குறியீடு.

circumlocution *n.* சுற்றிவளைத்துப்பேசல், தட்டிக் கழிக்கும் பேச்சு.

circumnavigate *v.* சுற்றிக் கப்பலோட்டு

circumscribe *v.* சுற்றி வரை, கட்டுப்படுத்து.

circumspect *a.* மிக விழிப்பாயிருக்கிற, எச்சரிக்கையோடு கூடிய.

circumstance *n.* தொடர்புடைய செய்தி, சூழ் நிலை, *under no circumstances* ஒருபோதுமில்லை, *in reduced circumstances* வறிய, **circumstantial** *a.* விளக்கமான, தற்செயலான, முக்கியத்துவமில்லாத, *circumstantial evidence* சூழ்நிலைச் சான்று

circumvent *v.* சுற்றிச் செல், ஏமாற்று, தவிர், நழுவு.

circus *n.* உலாவரு களியாட்டக் குழு.

cirrhosis (ஸிரோஸிஸ்) *n.* ஈரல் நிப்பு நோய்.

cissy *n.* பெட்டைபோல் இயங்கும் பையன்

cistern (ஸிஸ்ரண்) *n.* நீர்த் தொட்டி.

citadel *n.* நகர் அரண், கோட்டை.

cite *v.* நீதிமன்றில் தோன்றுமாறு அழை, சான்றாகக் காட்டு, மேற்கோள் காட்டு.

citizen *n.* நகர வாசி, குடியுரிமையுள்ளவன், *fem* citizen-ess.

citrus *n.* நாரத்தை இனம்.

city *n.* மாநகர், *city fathers* நகர அவை உறுப்பினர், *city state* நகர அரசு.

civet (ஸிவிற்) *n.* புனுகுப் பூனை, புனுகு.

civic *a.* நகரம்சார்ந்த, குடியுரிமைக்குரிய

civics *n.* குடியியல், குடியுரிமை பற்றிய நூல்.

civil *a.* நாகரிகமான, சமுதாயத்துக்குரிய, பொதுத்துறை சார்ந்த, குற்றவியல் சாராத *civil defence* படைத்துறை சாராப் பாதுகாப்பு ஏற்பாடு, *civil disobedience* சட்டமறுப்பு, *civil law* அமைதிக்காலச் சட்டம், உரிமைச் சட்டம், *Civil Law* ரோமன் சட்டம், *civil list* அரசு அலுவலர் பட்டியல், *civil war* உள்நாட்டுக் கலகம்,

civilian *a.* படைத்துறை சாராத.

civility *n.* பண்பு நயம், மரியாதை.

civilization *n.* நாகரிகம்

clad *a.* ஆடையணிந்த.

claim *v.* உருமைகோரு, *n.* உரிமைப்பொருள்.

clairvoyance *n.* தொலைவிலுணர்தல், புலனுகாதவற்றைக் காணும் ஆற்றல்.

clamber *n.* மிகுந்த இடர்ப்பாட்டுடன் ஏறுதல், *v.* தொற்றி ஏறு.

clammy *a.* ஒட்டிக்கொள்கிற, ஈரமான

clamour *n.* உரத்த கூச்சல், பலத்த எதிர்ப்பு

clamp *n.* இறுக்கிப்பிடிப்பதற்கான கருவி, *v.* இறுகப்பற்று, *clamp down on* உறுதியாதல், நிறுத்துதல், நிலம் அதிர நட *n.* குவியல், போர், செங்கற் சூளை

clan *n.* பொது முன்னோனையுடைய குடும்பங்கள், குலமரபு தனிக்குழு.

clandestine *a.* களவாக, வஞ்சகமான

lang *n.* கணீரென்ற பேரொலி

clanger *n.* பெருந்தவறு

clap *v.* கைதட்டு, *clap trap* கைதட்டச் செய்யும் பேச்சின் பகுதி, பிறர் மெச்சுதற்கெனச் செய்யும் போலிச் செயல், பகட்டாரவாரமான.

clarify *v.* தெளிவாக்கு, துப்புரவாக்கு, தெளிவாகு.

clarinet *n.* மரத்தாலான துளையிடப் பட்ட இசைக்கருவி

clarion *a.* உரத்த *n.* எழுச்சியூட்டத்தக்க ஒலி, எக்காளம்.

clarity *n.* தெளிவு.

clash *n.* மோதுதல், கருத்து முரண்பாடு.

clasp *n.* தழுவுதல், பிடித்தல், கைகுலுக்குதல்.

class *n.* வர்க்கம், வகுப்பு, வகை, இனம், சமுதாயப்பிரிவு, *the upper classes* மேல் தட்டுமக்கள், *the middle classes* நடுத்தட்டு மக்கள்.

classic *a.* முதன்மையான, நடை எளிமையான, பண்டைய கிரேக்க உரோம கலை சார்ந்த, *n.* தலைசிறந்த கலைஞர், புகழ்மிக்க படைப்பு, *classic races* ஆண்டுதோறும் நிகழும் ஐந்து முதன்மையான உலகக் குதிரைப்பந்தயங்கள்.

classify *v.* வகைப்படுத்து.

classy *a.* உயர்தரமான.

clatter *n.* பலமான ஓசை, உரத்த பேச்சு, *v.* ஓயாது பேசு, பிதற்று, உரத்த ஒலி எழுப்பு.

clause *n.* சட்ட விதியின் கூறு, சார்புமுற்றுத் தொடர்.

claustrophobia *n.* ஒதுக்கிடத்தில் உண்டாகும் அச்சம்.

claw *n.* கூரிய உகிர், கொடுக்கு, இடுக்கிக் கால் நுனி, மலரிதழின் அடி, *v.* பிறாண்டு, கிழி, கீறு, முகமன் கூறு.

clay *n.* களிமண், மனித உடல், புகைக் குழல்.

clean *a.* துப்புரவான, முழுமையான, தெளிவான, *clean hands* குற்றமற்ற நிலை, *make a clean breast of* தன்தவறு முழுவதையும் சொல்லுதல், *show a clean pair of heels* தப்பியோடு,

clear *a.* தெளிந்த, கறையற்ற தடையற்ற, முழுமையான, விடுபட்ட, *v.* தெளிவாக்கு, தடைநீக்கு, விடுவி, *clear off* விட்டொழி, *clear out* விலக்கு *clear the air* நிலைமையைத் தெளிவாக்கு, *clear up* தெளிவாகு, ஒழுங்குசெய், *clear-cut* திட்டவட்டமான,

cleavage *n.* பிளவு, வேறுபாடு, பிரிவினை.

cleave *v.* பிரி, பிள, ஊடுருவு, விடாது பற்று, துளை, வெட்டு.

clemency *n.* கருணை, தயவு, மன்னிப்பு, கடுமையின்மை, அமைதி.

clench *n.* விடாப்பிடி, *v.* இறுகப்பற்று, முடிவுசெய்.

clergy *n.* மதகுருமார், **clerical** *n.* குருமரபுசார்ந்த.

clerihew *n.* நாலடி நகைச் சுவைப் பாடல்.

clerk *n.* எழுது வினைஞன், மதகுரு.

cleve *n.* செங்குத்தான பாறை, குன்றுசூழ் பகுதி.

clever *a.* திறமையுள்ள.

cliche (க்ளிஷே) *n.* அடிபட்ட சொற்றொடர், வெறுஞ்சொல் துணுக்கு.

click *n.* ஒலி, கொண்டி, *v.* ஒத்துறவாடு.

client *n.* க்ட்சிக்காரர், வாடிக்கைக்காரர், **clientele** *n.* பரிவாரம், வாடிக்கைக்குழு.

cliff *n.* செங்குத்தான பாறை *cliff-hanger* திடுக்குறச்செய்யும் நிகழ்ச்சிகள் கொண்ட கதை. ஊசலாட்டத்தில் முடிவுறும் கட்டம் கொண்ட கதை.

climacteric *n.* உடல்தளர்வுறத் தொடங்கும் 45 - 60 வயது சட்கிடைப்பட்ட காலம், *grand climacteric* நெருக்கடியான 63 - ஆவது வயது.

climate (க்லோமிற்) *n.* தட்பவெப்பநிலை. *climate of opinion* கருத்து நிலை.

climax *n.* உச்சம், *v.* படிப்படியாக உயர்ந்து செல்.

climb (க்லோம்) *n.* ஏறுதல். *v.* ஏறு, *climb down* இறங்கு, விட்டுக்கொடு.

clime *n.* பல்வேறு தட்பவெப்ப நிலையுடைய நிலப்பரப்பு.

clinch *n.* விடாப்பிடி, முடிவுத் தீர்வு, *v.* ஆணியை இறுக்கி நுனியை மடித்துவிடு.

cling *n.* தொங்குதல், *v.* பற்றிக் கொள்.

clinic *n.* நோயாளிகளைப் பரிசோதித்து மருந்துகொடுக்கும் இடம், தனியார் மருத்துவமனை.

clink *n.* 'கிளிங்' என்ற ஒலி.

clinker *n.* கடும்பதமான செங்கல் அல்லது கரிக் குவியல்.

clip *n.* கத்திரித்தல், *v.* கத்திரி.

clique *n.* தனிக்குழு, கும்பல்.

clitoris *n.* பெண்ணுறுப்பினுள்ளே அமைந்துள்ள கந்து எனு முறுப்பு.

cloak *n.* தளர்ச்சியான கையில்லாத மேலுடை, *v.* மூடு,

clock *n.* மணிக்கூடு *clockwise* *a.* வலஞ்சுழித்த, முள்செல்லும் முறையில்.

clod *n.* மண்கட்டி, அறிவிலி clodhopper *n.* நாட்டான்.

clog *n.* தடை, மிதியடி *v.* தடு.

cloister *n.* துறவியர் தங்கிடம்.

close *a.* அடைக்கப்பட்ட, அண்மையான, நெருங்கிய, *n.* முடிவு, *v.* மூடு, *close call* மயிரிழையிற் தப்பு, *close down* செயலற்று நில், *close fisted* *a.* கஞ்சத் தனமான *close season* வேட்டையாடுதல் சட்டப்படிதடுக்கப்பட்டகாலம் *close - up* மிக அருகிலிருந்து எடுக்கப் பெற்ற நிழற்படம், *closewith* இணங்கு, பற்று

closet *n.* சிறு தனியறை, கழிப்பிடம்,

clot *n.* உறை குருதி, அறிவிலி, *v.* கெட்டிப் படு,

cloth *n.* புடைவை, clothe *v.*

cloud முகில், மாரி, *in the clouds* பகற் கனவு காணல், மறை பொருளான, *under a cloud* ஐயுறவுக்காளான, ஆதரவிழந்த நிலையுடைய, clouded *a.* தெளிவில்லாத, இருளடைந்த, cloudy *a.* முகில் மூடிய.

clout *n.* அடி, *v.* துணியால் மூடு.

clove *n.* கராம்பு, உள்ளிப்பல்லு.
clown *n.* கோமாளி.
club *n.* குண்டாந்தடி, கழகம்
cluck *n.* கோழியின் கொக்கரிப்பு
clue *n.* துப்பு, தடம்.
clump *n.* மரச்சோலை, கொத்து, பலத்த அடி. *v.* நிலம் அதிர நட, அடி.
clumsy *a.* அலங்கோலமான.
cluster *n.* கொத்து, குலை, தொகுதி.
clutch *n.* இறுக்கமான பிடிப்பு *v.* பற்று, *n.* முட்டைத் தொகுதி
clutter *n.* இரைச்சல், குப்பை கூளம்.
coach *n.* வண்டி, தனிப்பாடங் கற்பிப்பவர், உடற்பயிற்சி யாசிரியர்
coagulate *v.* கட்டியாகு, உறு திப்படு.
coal *n.* கரி, *blow the coals* உணர்ச்சியைத்தூண்டு.
coalesce *v.* ஒன்றுபடு, கல.
coalition *n.* கூட்டிணைவு.
coarse *a.* கரடுமுரடான, கிழிந்த
coast *n.* கடற்கரை.
coat *n.* மேற் சட்டை, மூடியி ருப்பது, *turn one's coat* கொள்கை மாற்று, தப்பி யோடு. **coating** *n.* மேற்பூச்சு.
coax *n.* இச்சகம் பேசுபவர், *v.* இனிமையாகப்பேசி இணங்கச் செய்.
cob *n.* குதிரைவகை, விதைவகை, உருண்டையான பொருள், சோளக்கதிரின் தாம்பு, கூடை வகை.
cobalt *n.* உலோக வகை.
cobble *n.* உருளைக் கல், *v.* ஒட்டுப் போடு, செருப்புப் பழுது பார், **cobbler** *n.* செம்மான், திருத்தமற்ற வேலையாள், மதுவகை.
cobra *n.* நாகப்பாம்பு.
cobweb *n.* சிலந்திவலை.
cocaine *n.* உணர்விழக்கச் செய்யும் மருந்துச் சரக்கு வகை.
cock *n.* சேவல், குவியல், *cock - and - bull story* நம்ப முடியாத கதை, *cock - a hoop a.* பெருமிதமுள்ள, *cock - eyed* கோணலான *cock - sure* உறுதியாக, *knock into a cocked hat* நை யப்புடை.
cockerel *n.* இளஞ்சேவல், தன்முனைப்பான இளைஞன்,
cockney *n.* லண்டன் நகரத்து பேச்சு வகை.
cockpit *n.* சேவற் சண்டைக் கான இடம், வானூர்தி ஓட்டியின் இருப்பிடம், போர்க்களம், கப்பலின் கீழறை.
cockroach *n.* கரப்பான் பூச்சி.
cockscomb (கொக்ஸ் கோம்) *n.* சேவற் கொண்டை, முட் டாள்.
cocktail (கொக்ரேல்) *n.* பந்த யக் குதிரை, பெரிய மனித ரைப் போல் நடிப்பவன், குடிவகை, உணவின் முன் வழங்கப் பெறும் மதுக்கலவை.
cocky *a.* இறுமாப்புள்ள.

cocoa *n.* கொக்கோ விதை.
coconut *n.* தேங்காய்.
cocoon *n.* புழுக்கூடு.
cod *n.* மீன் வகை, அறிவிலி.
coddle *n.* கோழை *v.* கொஞ்சு, அரைகுறையாக வேகவை, நோயாளிபோல் நடத்து.
code *n.* சட்டத்தொகுப்பு, குழூஉக்குறி.
codger *n.* இழிசினன், சிறுபயல், கிழடு.
codicil *n.* உயிலின் பின்னிணைப்பு.
codify *v.* தொகுத்து முறைப் படுத்து.
co - education *n.* இருபாலரும் இணைந்துகற்றல்.
coefficient *n.* கெழு, குணகம், துணைக்காரணம்.
coerce *n.* அச்சுறுத்திவற்புறுத்து.
coeval (கோஈவல்) *n.* ஒரே காலத்தவர்.
co - executor *n.* உடனிருந்து நிறைவேற்றுபவர்.
coexist *n.* உடனைத்து வாழ்தல்.
coffee *n.* கோப்பி.
coffer *n.* பணப்பெட்டி.
coffin *n.* சவப்பெட்டி.
cog *n.* சக்கரத்தின் பல், கப்பல், படகு, ஏமாற்றல்
cogent *a.* நம்பத்தக்க.
cogitate *v.* நினை, கருது ஆழ்ந்து நினை.
cognac (கோன்யக்) *n.* பிரெஞ் சுக் குடிவகை.
cognate *n.* ஒரே இனத்தவர் *cognate object* வினையகச் செயப்படு பொருள், *cognate word* இருமொழிகளில் ஒரே மாதிரியிருக்குஞ் சொல்.
cognition *n.* அறிவு, அறியும் ஆற்றல்.
cohabit *v.* கணவன் மனைவி போல் வாழ்தல்.
cohere *v.* பொருந்து, **cohesion** (கோஹீஷன்) *n.* வாத இசைவு
cohort *n.* போர்வீரர் குழு, மக்கள் குழு.
coiffeur *n.* முடிஒப்பனையாளர், **coiffure** *v.* முடியழகுசெய்.
coil *n.* சுருள், குழப்பம், *mortal coil* வாழ்க்கைப் புயல்.
coin *n.* நாணயம், *v.* புதிதாகப் புனை, *coin money* விரைவாகப் பணமீட்டு, *pay a man in his own coin* செய்த பாணியிலே யே திரும்பச் செய்.
coincide *v.* தற்செயலாக ஒன்றுபடு, கருத்தில் ஒத்திரு, **coincidence** *n.* தற்செயல் இணைவு.
coir *n.* கயிறு, தென்னை நார்.
coition *n.* கலவி, உடலுறு புணர்ச்சி.
coke *n.* சுட்டநிலக்கரி.
cold *n.* குளிர், தடுமல், *a.* கிளர்ச்சியற்ற, பாசமற்ற, உணர்ச்சியற்ற, *cold feet* ஊக் கம் கெடுத்தல், *cold steel* குத்து வெட்டுப் படைக்கலன், *cold war* சூழ்ச்சிப்போர், *give the cold shoulder to* புறக்கணிப் புக்காட்டு, *in cold blood* உணர்ச்சிவசப்படாமல், மன மார, *leave out in the cold* பராமுகமாயிரு, *throw cold*

water on ஊக்கம் கெடு, *cold hearted a.* உணர்ச்சியற்ற, பொறுப்பற்ற.

colic *n.* கடு வயிற்று வலி, குடல் நோவு.

colitis (கலைற்றிஸ்) *n.* குடல ழற்சி, பெருங்குடல் வீக்கம்

collaborate *v.* உடனுழை.

collapse *n.* தகர்வு, மடங்கல், வீழ்ச்சி, *v.* இடிந்துபோ.

collar *n* சட்டையின் கழுத்துப் பட்டை.

collate *v.* ஒத்துப்பார், அருகருகே வை.

collateral *n.* இணையுறவினர், சமகாலத்தவர், *a.* ஒத்திசை வான, பக்கத்துக்குப்பக்கமான.

colleague *n.* உடனுழைப்பாளர்.

collect *v.* திரட்டு, *n.* சிறுவழி பாடு.

collector *n.* வரிதண்டலாளர்.

college *n.* கல்லூரி.

collide *v.* மோது, முரண்படு.

colliery *n.* நிலக்கரிச் சுரங்கம்.

collocation *n.* ஒழுங்கமைதி, இரட்டைச் சொல்.

colloquial *a.* பேச்சு வழக்கி லுள்ள.

collusion *n.* கூட்டுச்சதி, ஏமாற்று

collyrium *n.* அஞ்சனம், கண்மை.

colon (கோலன்) *n.* முக்காற் புள்ளி.

colon (கோலொன்) *n.* பெருங் குடல்.

colonel (கேணல்) *n.* ஆயிரம் படைவீரர் கொண்ட பிரிவுக் குத் தலைவன்.

colonial *n.* குடியேற்ற நாட்டி னர், வந்தேறு குடி.

colonization *n.* குடியேற்றம், **colonize** *v.* குடியேற்று, **colony** *n.* குடியிருப்பு.

colossal *a.* மிகப்பெரிய.

colour *n.* நிறம், *come off with flying colours* வெற்றிக்கிளிப்பு டன், *come out in one's true colours* உண்மையான தோற் றமளி, *false colours* போலி நடிப்பு, *give colours* நம்பப் பண்ணு, *lose colour* அழகு இழ, *off colour* மங்கிய, *nail one's colours to the mast* கட்சி யில் ஈடுபடு, விட்டுக்கொடுக்க மறு.

colour-blind *a.* சில நிறங்களைக் காண இயலாத.

coloured *a.* நிறமுள்ள, வெள்ளை யரல்லாத.

colt *n.* ஆண் குதிரைக் குட்டி.

columbium *n.* உலோகத் தனி மப்பொருள்.

column *n.* தூண், படையணி வரிசை, செய்தித்தாளின்பத்தி, நரம்பு நாள நடு.

coma (கோம) *n.* உணர்விழந்த ஆழ்துயில் நிலை, தழைக் கொத்து.

comb (கோம்) *n.* சீப்பு, தேன் கூடு, அலையுச்சி, *v.* முழுதும் தேடு, *n.* சிறுபள்ளத்தாக்கு, குன்றின் குடைவு.

combat *n.* சண்டை, *v.* போரிடு, வாதிடு.

combination *n.* இணைதல், **combine** *n.* வணிகச் சங்கங்களின் கூட்டு நிறுவனம், *v.* ஒத்துழை

combustion *n.* எரிதல், மாறுபடல், குமுறல்.

come *v.* வா, நிகழ், ஆகு, *come about* நேரிடு, *come across* தற்செயலாகக் காணல், *come at* அடை, *come by* பெறு, *come down* இழிநிலையடை *come down upon* கண்டனத்துக்கு உட்படுத்து, *come forward* உதவ வருதல், *come of* மரபில் வா, *come of age* உரிய வயதடை, *come off* நிகழ் *come out with* சொல்லு, *come under* உட்படு, *come up* தோன்று, *come upon* தாக்கு, சந்தி, *come to terms* ஒப்பந்தஞ் செய்தல், *to come true* எதிர்பார்த்தபடி நிகழ்தல், *come up with* வழங்கு.

comedian *n.* நகைச்சுவை நடிகன், **comedienne** *n.* நகைச்சுவை நடிகை.

comedy *n.* இன்பியல் நாடகம்.

comely (கம்லி) *a.* அழகான.

comestibles *n. pl.* தின்பண்டங்கள்.

comet (கொமிற்) *n.* வால் வெள்ளி.

comfits *n. pl.* இனிப்பு வகை.

comfort *n.* ஆறுதல், தேறுதல்; *v.* தளர்வகற்று, வாய்ப்பளி, *cold comfort* வசதிக்குறைவு.

comic *n.* நகைச்சுவை, **comical** *a.* கோமாளித்தனமான.

cominform *n.* 1947 இல் நிறுவிய உலகப் பொதுவுடைமை நிலையம்.

comintern *n.* அனைத்துலகப் பொதுவுடைமை அமைப்பு.

comity *n.* மரியாதை, நட்பு, *comity of nations* அனைத்துலகச் சட்ட ஒப்புரவு.

comma (கொம) *n* காற்புள்ளி, **inverted commas** *n.* மேற்கோள் குறிகள்.

command *n.* ஆணை, கட்டுப்பாடு.

commandeer *v.* படைத்துறைக்குக் கைப்பற்று.

commandment *n.* கட்டளை, *the ten commandments* மோசேயின் பத்துக் கட்டளைகள்.

commando *n.* கடுந்தாக்குதல் செய்யும் சிறப்புப் படைப் பிரிவு.

commemoration *n.* நினைவு விழா.

commence *v.* தொடங்கு.

commend *v.* ஒப்படை, பரிந்துரை, புகழ்ந்துரை, அழகுபடுத்து.

commensurate (கமென்ஷறிற்) *a.* ஒரே அளவான.

comment *n.* குறிப்புரை, கருத்துரை, கண்டனம், விளக்கக் குறிப்பு.

commerce *n.* பெருவணிகம்.

commiserate *v.* பரிவு கொள்.

commissar *n.* பொறுப்பாளர்.

commissariat *n.* படைத்துறை உணவுப் பிரிவு, சோவியத் ரஷ்யாவின் அரசியற் பணித் துறை.

commission *n.* செயல், செயலுரிமைக் கட்டளை, பொறுப்பாண்மைக் குழு, தரகு.

commit *v.* குற்றம் செய், ஒப்புவி, செய்.

committee *n.* குழு.

commode *n.* கழிவுக் கலம்.

commodious *a.* இடவாய்ப்பு மிக்க, தகுதியான.

commodity *n.* சரக்கு.

commodore *n.* கடற்படை உயர் அலுவலர்.

common *n.* பொதுப்படையான, வழக்கமான *common gender* பொதுப்பால், *common noun* பொதுப் பெயர், *common sense* பொது அறிவு, *common person* நாகரிகமில்லாதவன்.

commoner *n.* பொது மக்களில் ஒருவர்.

commonplace *n.* நன்கு பழக்கப்பட்டது, பொதுச்செய்தி.

commons *n. pl.* பொது மக்கள், *House of commons* பொது மக்களின் பிரதிநிதித்துவ மன்றம், *on short commons* சிறு தளவு உணவு பெறும்.

commonwealth *n.* மக்கட் பொதுவுரிமை அரசு, பொதுநலவாயம்.

commotion *n.* குமுறல், சந்தடி, கொந்தளிப்பு.

communal *a.* வகுப்பிற்குரிய, சமூகத்தைச்சேர்ந்த.

commune *n.* தன்னுட்சி நகரப் பகுதி, சிறுநில ஆட்சிப்பகுதி, உரையாடல், *v.* ஆன்மிகக் கூட்டுறவு கொள்.

communicate *v.* அறிவிலி, தொடர்பு கொள்.

communion *n.* ஆன்மிகக் கூட்டுறவுத் தோழமை, கலந்துரையாடல், இயேசுவின் இறுதி விருந்து தொடர்பான சமய விழா.

communique (கம்யூனிக்கே) *n.* பணித்துறை அறிவிப்பு.

communism *n.* பொதுவுடைமைக் கொள்கை.

community *n.* சமுதாயம், பொது மக்கள் குழு.

commute *v.* மாற்றீடு செய், மாற்றி அமை, தண்டனையைக் குறை.

compact *a.* நெருக்கமாக வைக்கப் பெற்ற, உறுதியான, சுருக்கமான, *n.* உடன்படிக்கை, கூட்டுக் குழு.

companion *n.* கூட்டாளி.

company *n.* வணிக நிறுவனம், மக்கள் கூட்டம்.

compare *n.* ஒப்பீடு, *v.* ஒப்பிடு.

compartment *n.* பிரிவு, தொடர் வண்டிப் பெட்டி.

compass *n.* திசைகாட்டி, எல்லை, வட்டாரி.

compassion *n.* பரிவு, இரக்கம்.

compatible *a.* இணையக் கூடிய, ஒரே தன்மையுள்ள.

compatriot *n.* ஒரே நாட்டவர்.

compeer (கொம்பிய) *n.* சமமானவர், தோழர்.

compel *v.* கட்டாயப்படுத்து.

compendium *n.* நூல்பற்றிய சுருக்கக்குறிப்பு, **compendious** *a.* சுருக்கச் செறிவான.

compensate *v.* இழப்பீடு செய்.

compere *n.* சூத்திரதாரர், காட்சிமேடை அமைப்பாளர், நடிகரை அறிமுகஞ் செய்பவர்.

compete *v.* போட்டியிடு.

competence *n.* தகுதி, திறன், சட்ட உரிமை, **competent** *a.*,

compile *v.* தொகு, திரட்டு.

complacent *a.* மன நிறைவுடைய.

complain *n.* முறையீடு, *v.* குறை தெரிவி complainant *n.* வழக் காடுபவர், வாதி,முறையிடு வோன், complaint *n.* குற்றச் சாட்டு, பிணி, வழக்கு, மனக் குறை, இரங்கற்பா.

complaisant *a.* அன்பாதரவான, மன்னிக்கும் பாங்குடைய,விட் டுக் கொடுத்து மகிழ்விக்கும் ஆர்வமுடைய.

complement *n.* முழுமையாக்கு வது, *v.* குறைநிரப்பு.

complete *a.* முழுமையான, *v.* படி, நிறைவேற்று.

complex *n.* சிக்கலானமுழுமை, *a.* எளிதற்ற, பல பகுதிகளு டைய. *complex sentence* கலப் பு முற்றுத்தொடர், *inferiority complex* தாழ்வு மனப்பான் மை, *superiority complex* உயர் வு மனப்பான்மை.

complexion *n.* முகநிறம், முகத் தோற்றம், மனநிலை, பண்பு.

compliance *n.* உடன்பாடு, விட்டுக் கொடுத்தல், கீழ்ப்ப டிதல், compliant *a.*

complicate *a.* சிக்கலான, புரிய முடியாத.

complicity *n.* குற்றச் செயலில் பங்கு.

compliment (கொம்ப்ளிமென்ற்) *n.* முகமன், புகழுரை, வாழ்த் துரை, பரிசில், *left handed compliment* போலிப் பாராட் டுரை, complimentary *a.* இலவசமான.

compline (கொம்ப்ளின்) தூயில் முன் ஓதும் செபம்.

comply *v.* உடன்படு.

component *n.* ஆக்கக்கூறு.

comport *n.* நடத்தை, *v.*இணங்கு.

compose *v.* ஒன்றிணை, பாட்டி யற்று, அச்சுக்கோத்திணை, composed *a.* அமைதியான.

composite *n.* பல பகுதிகளா லானபொருள், மலர்ச்செடி.

composition *n.* கலவை, கட்டு ரை,இசைப்பா, கலைப்படைப்பு கடன் தீர்ப்பதற்கான உடன் பாடு.

compos mentis *a.* மனக்கோளா றற்ற.

composure *n.* அமைதி.

compound *n.* பல் பொருட் கூட்டு, *compound interest* கூட்டு வட்டி, *compound sent- ence* கூட்டு முற்றுத் தொடர் *v.* உடன்பாட்டுக் கிசை, ஒன்றுபடுத்து, *n.* வளாகம், வளவு.

comprehend *v.* புரிந்துகொள், comprehensive *a.*, *comprehen- sive school* பல்வகைப் பயிற் சிகளுடைய உயர்நிலைக் கல் லூரி.

compress *n.* காயத்துக்குக்கட் டும் ஈரத்துணி, *v.* திணி, நெருக்கி அழுத்து.

comprise *v.* உட்கொண்டிரு.

compromise *n.* விட்டுக் கொடுத்து ஏற்படும் உடன் பாடு, சமாதானம்.

comptroller (கன்'ட்ரோலர்) *n.* கணக்குப் பரிசோதகர்.

compulsory *a.* வலுக்கட்டா யமான.

compunction *n.* கழிவிரக்கம்,

compute *v.* கணக்கிடு, compu- ter *n.* கணனி,

comrade *n.* தோழன்

con - *pref.* உடன்

con *v.* மனப்பாடம் செய், வழி காட்டு, கருத்தூன்றிப் படி, *n.* எதிராக உள்ளது, *prep.* எதிராக, *pros and cons* சார் பாகவும் எதிராகவும் உள்ளது, *v.* ஏமாற்று, *con game* மோச டி *con man* ஏமாற்றுக்காரன்.

concatenation *n.* தொடர், தொகுதி.

concave *a.* உட்குழிவான, பள் ளமான.

conceal *v.* மறை, மாற்றுருக் கொள்.

concede *v.* ஒத்துக்கொள், விட் டுக்கொடு, ஏற்றுக்கொள்.

conceited *a.* போலித் தற்பெரு மையுடைய, தன்முனைப்புள்ள.

conceive *v.* கருக்கொள், கரு , எண்ணிப்பார்.

concentrate *v.* மனத்தை ஒரு முகப்படுத்து, ஓரிடத்தில் குவி, கெட்டியாக்கு, **concentration**- *n.* ஒருமுகப்படுத்தல், *con centration camp* அரச எதிர்ப் பாளர்க்கான குடியேற்றப் பகுதி.

concentric *a.* பொது மையம் கொண்டுள்ள.

concept *n.* கருத்துப்படிவம், எண்ணம்.

concern *n.* தொடர்பு, அக்கறை தொழில் நிறுவனம், *a going concern* செயல்திறமுடைய, வணிகம், *a paying concern* வெற்றிகரமான வணிகம்.

concert *n.* இசை நிகழ்ச்சி, உடன்பாடு, *v.* ஒன்றுசேர்ந்து திட்டமிடு, சரிசெய்.

concession *n.* விட்டுக்கொடுப்பு, ச லுகை, பொருளுதவி.

conch (கொங்க்) *n.* சங்கு, புறச் செவி.

conciliate *v.* இணக்கப்படுத்து, நட்பைப் பெறு.

concise *a.* சுருக்கமான, அடக்க மான.

conclave(கொங்க்ளேவ்) *n.* தனிக் கூட்டுக்குழு, கலந்துரையாடற் கான கூட்டம்.

conclude *v.* முடிவு செய், முடி வுக்குக் கொண்டுவா.

concoct (கொங்கொக்ட்) *v.* இட்டுக்கட்டு, புனைந்தியற்று, சதி, திட்டமிடு.

concomitant *a.* உடனியங்குகிற, இணைந்த.

concord *n.* உடன்பாடு, இணக் கம், சொற்களிடை பால் - எண் - இடம் பற்றிய ஒத்திசைவு.

concourse *n.* கூட்டம், பலர் ஒன்று கூடல்.

concrete *n.* பருப்பொருள், *a.* மெய்யான, *v.* கெட்டிப்ப டுத்து, *concrete noun* மெய் யான பொருளுக்கான பெயர்.

concubine *n.* வைப்பாட்டி, காமக்கிழத்தி.

concupiscence *n.* சிற்றின்ப வேட்கை, உலகியற்பற்று.

concur *v.* ஓரிடத்திற்கூடு, உடன் படு.

concussion *n.* தாக்குதல், கலக் கம், கட்டாயப் படுத்துதல், நெருக்கடி ஏற்படுத்தல்.

condemn *v.* கண்டி, குற்றத் தீர்ப்பளி.

condense *v.* சுருக்கு, கெட்டிப் படுத்து.

condescend *v.* பணிந்துபோ, தகாதன செய், உடம்படு.

condign (கன்'டைன்) *a.* ஏற்ற, தகுதி வாய்ந்த, போதிய.

condiment *n.* சுவையூட்டுப் பொருள்.

condition *n.* நிலைமை, கட்டுப் பாடு, முன்னீடு, conditional *a.* *conditional clause* நிபந்தனைச் சார்புத் தொடர், *conditioned reflex* முன் அனுபவத்தை யொட்டி உள்மனத்தில் இயல் பாக ஏற்படும் எதிர்த் தூண் டுதல் குறிப்பு.

condole *v.* வருத்தந் தெரிவி.

condom *n.* கருத்தடை உறை.

condone *v.* மன்னித்து விடு.

conducive *a.* உகந்த, நன்மை தரவல்ல.

conduct *n.* நடத்தை, *v.* வழி காட்டு, வழியாயமை.

conduit (கொண்டிற்) *n.* நீர் செல் குழாய், மின் கம்பியின் காப்புக் குழாய்,

cone *n.* கூம்பு, கிளிஞ்சல் வகை.

confabulate *v.* கூடிப்பேசு.

confectionary (கன்பெக்ஷன்றி) *n.* தின்பண்டம் விற்பவர், இனிப்புப் பண்டம்.

confederate *n.* கூட்டாளி, குற்ற உடந்தையாள், *a.* நேசக் குழுவில் இணைந்த,

confer *v.* கொடு, உரையாடு, கலந்தாய், அறிவுரை கோரு, conference *n.* மாநாடு, கலந் துரையாடல்.

confess *v.* குற்றத்தை ஒத்துக் கொள்.

confide *v.* நம்பு, confidant *n.* பாங்கன், *fem.* confidante, *confidence trick* நம்பவைத்து ஏமாற்றுதல்.

configurate *v.* உருவங் கொடு,

confine *n.* கட்டுப் பாடு, சிறை *v.* கட்டுப்படுத்து, confine ment *n.* வரையறை, பிள்ளைப் பேற்று நிலையிலிருத்தல்.

confirm *v.* உறுதிசெய், confirmed *a.* நன்குஊன்றிய.

confiscate *a.* பறிமுதலாக்கப் பெற்ற, *v.* கைப்பற்று.

conflagrat *v.* எரித்தழி.

conflict *n.* பிணக்கு, சண்டை, முரண்பாடு.

confluence *n.* கூடல்.

conform *v.* இணங்கு, ஒத்திரு.

confound *v.* தோல்வியுறச்செய், சீர்குலை, அலங்கோலமாக்கு திகைப்பூட்டு, *confound you int.* பாழாய்ப் போக!

confront *v.* எதிர்ப்படு, எதிர்த்து நில்,

confuse *v.* குழப்பு, அலங்கோல மாக்கு, வெட்கச் செய்.

confute *v.* தவறென நிறுவு, மறுத்துரை.

congeal (கொன்ஜீல்) *v.* உறை யச்செய், இறுகு.

congenial *a.* உகந்த, ஏற்ற.

congenital *a.* பிறப்பொடுபட்ட.

congested *a.* அடர்த்தியான, நெருக்கடியான.

conglomerate *n.* கதம்பத்திரள், *a.* உருண்டு திரண்ட, *v.* உருண்டு திரண்டு உருவாகு.

congratulate *v.* பாராட்டுத் தெரிவி, மகிழ்ச்சி தெரிவி.

congregate *v.* கூட்டங்கூடு, ஒருங்கு கூட்டு, congregation *n.* குழாம் ஒன்று கூடுதல்.

congress *n.* ஒன்றுகூடுதல், பேரவை, அமரிக்க கூட்டரசின் சட்டமாமன்றம்.

congruent *a.* முழுதொத்த, ஏற்ற படியான

conical *a.* கூம்பு வடிவான.

conjecture (கன்ஜெக்ச) *n.* உய்த்துணர்வு, ஊகம், எண்ணம் *v.* உய்த்துணர்.

conjoin *v.* ஒருங்கிணை, ஒன்று படு.

conjugal *a.* மண வாழ்க்கைக் குரிய, conjugal rights கணவன் மனைவியர் உரிமைகள், conjugation *n.* ஒன்றிணைத்தல் வினைமாற்றவகுப்புப் பட்டி.

conjunction *n.* இணைப்பு, இணைவு, இணையிடைச் சொல்.

conjunctivitis *n.* இமையிணைப் படலத்தின் அழற்சி.

conjure *v.* சாலவித்தை செய், மாயத்துக்குட் படுத்து, செப்பிடு வித்தைகளால் விளைவி, மனமார வேண்டிக் கொள், மன்றாடிக் கேள். conjurer *n.* செப்பிடு வித்தைக்காரன்.

conjuror *n.* பிறருடன் ஒத்து ஆணைவழிக் கட்டுப்பட்டவர்.

conk *v.* சீர்கேடுறு, *n.* மர நோய் வகை.

connect *v.* இணை, தொடர்பு படுத்து, connective. இணைப் பிடைச் சொல், connection *n.* இணைப்பு, தொடர்பு, உறவினர்.

connive *v.* குற்றஞ்செய்பவர்க்கு மறைமுக ஆதரவுகொடு, கண்டுங்காணாதது போலிரு.

connoisseur (கொனி'ஸேர்) *n.* கலை – பண்பாடு – சுவை வல்லுநர்.

connote *v.* நேர்பொருள் தவிர வேறுபொருள் உணர்த்து.

connubial *a.* திருமணத்துக்குரிய.

conquer *v.* வலிமையினால்வெல், கீழ்ப்படுத்து.

consanguineous *a.* குருதிக்கலப் புடைய, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த.

conscience (கொன்ஷன்ஸ்) *n.* உளச்சான்று, *conscience money* மனவுறுத்தலைத் தவிர்க்க செலுத்தப்படும் பணம், *case of conscience* மனச்சான்று கொண்டு முடிவு செய்ய வேண்டிய செய்தி, *conscience clause* மனச்சான்றுக்கு மதிப்பளிக்கும் சட்ட வாசகம்.

conscious (கொன்ஷஸ்) *a.* உணர்வுநிலையுடைய, தெரிகிற.

conscript *v.* படைத்துறைக்குக் கட்டாயநிலையில் சேர்.

consecrate *a.* நேர்ந்துவிடப் பட்ட, தெய்விகமாக்கப்பெற்ற *v.* நேர்ந்துவிடு, தெய்வப் பண்புள்ள தாக்கு.

consecutive *a.* இடைவிடாது தொடர்கிற, விளைவைத் தெரிவிக்கிற.

consensus *n.* கருத்து ஒருமைப் பாடு, இசைவு.

consent *n.* உடன்பாடு, ஒப்புதல், *age of consent* சட்டப்படி இணக்கம் தெரிவிக்கவல்ல வயது.

consequence *n.* விளைவு, *of no consequence* முக்கியத்துவமற்ற.

conservancy *n.* பாதுகாப்பு, பாதுகாப்புக் குழு, **conservation** *n.* பேணுகை, *conservation of energy* தனியமைப்பில் உள்ள முழு ஆற்றலும் நிலை பெயராத் தன்மையது என்னும் கொள்கை, *conservation of matter* இயற்பொருள் அழியாத் தன்மையது என்னும் கொள்கை.

conservative *a.* மாறுதல் விரும்பாத, பாதுகாக்கும் இயல்புடைய, *n.* பழமைப் பற்றுளர்.

conservatory *n.* களஞ்சியம், இசைக் கல்லூரி, செடி கொடி வளர்க்கும் கண்ணாடி வீடு.

conserve *n.* பாதுகாத்து வைக்கப்பட்ட பொருள், *v.* பழுதுபடாமல் பேணு, பாதுகாத்து வை, சேமித்து வை, *n.* பழப்பாகு.

consider *v.* எண்ணிப் பார், **considerable** *a.* எண்ணத்தக்க, பெரிய, இன்றியமையாத, மிகுதியான, **considerate** *a.* விட்டுக் கொடுக்கும் பண்புடைய, முன் கவனமான, **consideration** *n.* சலுகை, ஆராய்வு, நோக்கம், இழப்பீடு, பரிசில், உடன்பாட்டின் அடிப்படை.

consign *v.* நம்பகமாக ஒப்படை, அனுப்பு பொறி இடு, கையெழுத்து வை, மாறு பாடு செய், **consignee** *n.* சரக்கை ஏற்றுக் கொள்பவர், பொருள் ஒப்படைக்கப் பட்டவர், **consignment** *n.*

consist *v.* கொண்டிரு.

consistency *n.* உடன்பாடு, நிலையாயிருத்தல், **consistent** *a.* ஒத்திருக்கிற, மாறுத.

consistory *n.* பேரவை கூடும் இடம்

console *v.* தேற்று, ஆறுதலளி,

consolidate *a.* ஒன்றுக்கப்பட்ட, *v.* திடமாக்கு.

consonance *n.* இசைப்பொருத்தம், உடன்பாடு.

consonant *n.* மெய்யொலி, *a.* முரண் இல்லாத,

consort *n.* வாழ்க்கைத்துணை, பங்காளி, கூட்டுக்குழு, உடன்பாடு, *v.* கூடச்செல், ஒப்புக் கொள், **consortium** *n.* அனைத்து நாட்டு வங்கி அல்லது நிதியின் கூட்டிணைப்பு.

conspicuous *a.* தெளிவாகத் தெரிகிற, முனைப்பான.

conspiracy *n.* சதித்திட்டம், **conspire** *v.* திட்டமிடு.

constable *n.* பொலீஸ்காரர், ஊர்க்காவலர், *outrun the constable* விரைந்து செல், கடனுளியாகு, **constabulary** *n.* பொலீஸ்படை.

constant *a.* நிலையான, தொடர்ச்சியுள்ள.

constellation *n.* விண்மீன்குழு.

consternation *n.* பெருவியப்பு, அச்சம்

constipate *v.* தடைப்படுத்து, மலச்சிக்கல் உண்டாக்கு.

constituency *n.* வாக்காளர் தொகுதி, தேர்தல் தொகுதி, constituent *n.* ஆக்கக்கூறு, முக்கிய பகுதி, constituent assembly அரசியல் நிண்ணய அவை.

constitute *v.* உருவாக்கு, நிறுவு அமை, ஏற்படுத்து, constitution *n.* நிறுவுதல், அமைப்பு-யாக்கை, அரசியல் அமைப்பு, constitutional *n.* உடல்நலத்துக்கான உலாவரவு. *a.* இயல்பான, உடலமைப்புக்குரிய, அரசியலமைப்புக்குகந்த நடைமுறைச் சட்டத்தைப் பின்பற்றிய, *constitutional government* அரசியலமைப்போடு இசைவான ஆட்சி.

constrain *v.* வற்புறுத்து, கட்டாயப்படுத்து, கைப்பற்று, constrained *a.* வலிந்து உண்டு பண்ணப்பட்ட, *constrained manner* குழம்பிய நடை, *constrained voice* இயல்பல்லாத குரல், constraint *n.*

constrict *v.* நெரி, ஒடுக்கு, இறுக்கு, சுருக்கு.

construct *v.* கட்டு, ஆக்கு, இயற்று construction *n.* கட்டுதல், கட்டடம், உருவமைதி.

construe *n.* பொருள்கோள், மொழி பெயர்ப்புக்கான பகுதி, *v.* மொழிபெயர், விளக்கு, உய்த்துணர். இலக்கண நெறி பிறழாது இணை.

consul *n.* வெளிநாட்டில் வாழும் குடிமக்கள் நலக் காவலர், consular *n.*, consulate *n.*

consult *v.* அறிவுரை அல்லது தகவல் கேள், *consult one's pillow* இரவு முழுதும் சிந்தனையில் கழி, consultant *n.*, consultation *n.*

consume *v.* சுட்டெரி, பயன்படுத்து, நுகர், consumer *n.* நுகர்வோர், consumerism *n.* நுகர்வோர் நலன் காத்தல்.

consummate (கொன்ஸமேற்) *v.* முழுமையாக்கு, செய்துமுடி, மணவுறவு நிறைவு செய், (கன்ஸமிற்) *a.* முழுமையான, நிறைவான, *consummate ass* முட்டாள்.

consumption *n.* நுகர்ந்த அளவு, நுகர்வு, தேய்வு, மெலிவு, என்புருக்கி நோய், consumptive *n.* என்புருக்கி நோயுடையவர்.

contact *n.* தொடர்பு, தொடு நிலை, *contact man* தொடுப்பவன், தரகன்.

contagious (கன்ரேஜஸ்) *a.* தொற்றக்கூடிய.

contain *v.* உட்கொண்டிரு, தடுத்து நிறுத்து, container *n.* கொள்கலம்.

containment *n.* எதிரியைத் தாக்குக் காட்டித் தன்வலிமை வளர்த்துக் கொள்ளும் சூழ்ச்சி

contaminate *a.* மாசுபடுத்தப் பெற்ற, *v.* கறைப்படுத்து, தூய்மை கெடு, contamination *n.*

conte *n.* சிறுகதை இலக்கியத் துறை.

contemn *v.* ஏளனமாய்க் கருது. மதிப்புக் குறைவாக நடத்து, பயனற்றதாய்க் கருது.

contemplate *v.* எண்ணு, ஆழ்ந்து நினை, கூர்ந்து ஆராய், *contemplative life* ஆன்மிக வாழ்வு.

contemporaneous *a.* ஒரே காலத்துக்குரிய.

contemporary *n.* ஒரே காலத்தவர்.

contempt *n.* இகழ்ச்சி, வெறுப்பு அவமதிப்பு, புறக்கணிப்பு, *contempt of court* நீதி மன்ற அவமதிப்புக் குற்றம், contemptible *a.* வெறுக்கத்தக்க

contend *v.* போராடு, போராடி தன்மதம் நிறுவ முயல்.

content *n.* உட்பொருள், உள்ளடக்கம், மனநிறைவு, *a.* மனநிறைவுடைய, *v.* அமைதிப் படுத்து, மகிழ்வூட்டு.

contention *n.* பூசல், சண்டை, கருத்து.

contest *n.* போட்டி, வாதம், சண்டை, *v.* தேர்தலில்போட்டியிடு.

context *n.* கட்டம், சந்தர்ப்பம் தருவாய்.

contiguous *a.* அருகிலுள்ள, அடுத்துள்ள, ஒட்டியுள்ள, contiguity *n.* அணிமை.

continence *n.* நுகர்வடக்கம்,

continent *n.* கண்டம், *a.* கட்டுப்பட்ட, சிற்றின்ப நுகர்வுநீக்கிய.

contingent *n.* படைப்பிரிவு, பின்னிகழ்ச்சி, *a.* சார்ந்திருக்கிற, நிகழக்கூடிய, உறுதியில்லாத, contingency *n.* தற் செயல் நிகழ்வு, நெருங்கிய தொடர்பு.

continue *v.* தொடர், மீண்டும் தொடங்கு, continual *a.* மீண்டும் மீண்டும் நிகழ்கின்ற, continuous *a.* இடையறாத

contort *v.* முறுக்கு, திருகு, உருமாற்று.

contour *n.* உருவரை, நிலப் படத்தில் ஒரேயளவு உயரமுள்ள நாட்டின் பல்வேறு பகுதிகளையும் காட்டும் கோடு.

contra - *pref.* எதிர்.

contraband *n.* தடைச் சரக்கு, கடத்தல் பொருள்.

contraception *n.* கருத்தடை, contraceptive *n.* கருத்தடைக் கருவி.

contract *n.* உடன்படிக்கை, குத்தகை, மண ஒப்பந்தம், *v.* சுருக்கு, பிணியுறு.

contradict *v.* மறுதலி, முரண்படு.

contralto *n.* பெண்ணின் குறைந்த இசைஒலி.

contrary *n.* எதிர்நிலை, *a.* எதிர் மறையான, முரண்பாடான, தவருனவழியில் செல்கின்ற, *v.* எதிர்த்துநில், மறுத்துப் பேசு, தொந்தரவுசெய்.

contrast *n.* ஒப்பீட்டடிப்படையில் வேறுபாடு, மாறுபட்ட தன்மை மாறுபடும் பொருள் மாறு பட்ட இயல்புகளை அருகருகே காட்டல்.

contravene *v.* மீறிநட, முரண்படு, **contravention** *n.* எதிரிடை நடப்பு, மீறுகை.

contribute *v.* கொடு, பொதுப் பணிக்குதவு, **contribution** *n.* பங்களிப்பு.

contrite *a.* செய்த தவற்றுக்கு வருந்துகிற, **contrition** *n.*

contrive *v.* திட்டமிடு, கண்டுபிடி தோற்றுவி, செயற்படுத்து. செய்துமுடி, சூழ்ச்சி செய், சதி செய், **contrivance** *n.*

control *n.* கட்டுப்பாடு, தடுப்பாற்றல், கட்டுப்பாட்டுநிலையம், *v.* கட்டுப்படுத்து, தடுத்தாள், இயக்கு.

controversy *n.* சொற்போர், வாதஎதிர்வாதம், கருத்து மாறுபாடு, **controversial** *a.*

controvert *v.* மறுத்துரை, எதிர்வாதிடு, கருத்து மாறுபாடு தெரிவி.

contumacious *a.* விடாப்பிடியான, கீழ்ப்படிய மறுக்கின்ற, **contumacy** *n.* கீழ்ப்படியாமை, **contumely** *n.* ஆணவ மிக்க நடத்தை, அவமதிப்பு.

contuse *v.* அடி, இடி, **contusion** *n.* அடிபட்ட காயம்.

conundrum *n.* விடுகதை, நொடி.

convalesce *v.* நோய் நீங்கி உடல் தேறுதல் அடை.

convene *v.* ஒன்றுசேர், கூட்டு, அழை.

convenient *a.* தகுந்த, வசதியான, **convenience** *n.* வாய்ப்பு வசதி, கழிப்பிடம். *a marriage of convenience* காதலுக்காகவன்று, வசதியளிக்கும் பயனுள்ள பொருள்.

convent *n.* பெண் துறவியர் தங்கிடம்.

conventicle *n.* புறச் சமயக் குழு கூடுமிடம்.

convention *n.* பல நாள் தொடரும் பெருங் கூட்டம், தற்காலிக உடன்படிக்கை, எழுதாச் சட்டம், புலனெறி வழக்கம், வழக்கு, நடைமுறை **conventional** *a.*

converge *v.* குவி, சென்று கூடு.

conversant *a.* பரவலாக அறிந்துள்ள, பழக்கப்பட்ட, ஈடுபாடுள்ள.

conversation *n.* உரையாடல், பழக்கம், பாலுறவு, **converse** *n.* தோழமைத் தொடர்பு. உரையாடல், *v.* உரையாடு, உறவாடு.

converse *n.* மறுதலை, *a.* எதிர்நிலையான, நேர் எதிர் மாறான, தலைமாறிய.

conversion *n.* மாற்றம், உருத்திரிபு.

convert *n.* சமயம் மாறியவர், *v.* நிலைமாற்று

convex *n.* குவிந்த உரு, *a.* புறவளைவான, புறங்குவிந்த, குவடான.

convey *v.* ஏற்றிச்செல், அறிவி, தெரிவி, சட்டப்படி ஒப்படை, கொண்டு செல், **conveyance** *n.* வண்டி, உடைமை மாற்றம், மோசடி,

convict *n.* குற்றவாளி, தண்டக் கைதி, *v.*,**conviction** *n.* குற் றத்தீர்ப்பு, பற்றுக்கோள்.

convince *v.* நம்பவை, மெய்ப் பித்துக்காட்டு convincing *a.* உறுதிப்பாடான, நம்பத்தக்க.

convivial (கன்'விவியல்) *a.* மகிழ்ச்சியான கூடி மகிழ்கிற மது அருந்துகிற.

convocation *n.* ஒருங்கழைப்பு, பேரவை, பல்கலைக்கழகப் பட் டமளிப்புப் பேரவை. convoke *v.* ஒருமிக்க அழை.

convolution *n.* சுருளல், மடிப்பு, மூளை மேற்பரப்பின் மடிப்பு, convoluted *a.*

endow (இன்டௌ) *v.* அறக்கொடை வழங்கு, நிலையான வருமானத்துக்கு வழிசெய், மானியமாகக்கொடு, இயற்பண்பாக அமைவி, endowment *n.*

endue *v.* அணிவி, வழங்கு.

endure *v.* நீடித்திரு, நீடித்துழை, தாங்கு, பொறு.

enema *n.* குடல்கழுவுதல், குடல் கழுவும் கருவி.

enemy *n.* எதிரி.

energetic (எனஜெற்றிக்) *a.* ஊக்கமுள்ள, ஆற்றலுடைய, சுறுசுறுப்புள்ள energy *n.* ஆற்றல், வலிமை, எரிபொருள்.

enervate *a.* ஊக்கம் குறைந்த, *v.* வலுவிழக்கச் செய்.

enfant terrible *n.* தொல்லைதரும் நடத்தையுள்ளவன், பொறுப்பின்றி நடப்பவன்

enfeeble *v.* வலுக்குறைவாக்கு

en fete *a.* விழாக்கோலம் பூண்ட, *adv.* விழாக்கோலம் பூண்டு

enfold *v.* தழுவு, மடி

enforce *v.* கட்டாயப்படுத்து, செயற்படுத்து

enfranchise *v.* வாக்குரிமை கொடு

engage (இன்கேஜ்) *v.* வேலையிலமர்த்து, வாக்குறுதி கொடு, பங்கு கொள், கவனத்தைக் கவர், போரில் ஈடுபடு, ஒதுக்கு பிணை engaging *a.* கவர்ச்சியான

engender *v.* உண்டுபண்ணு, தோற்றுவி

engine (என்ஜின்) *n.* பொறி, எந்திரம்.

engineer (என்ஜினிய) *n.* பொறியறிஞர்

engorge *v.* விழுங்கு, திணி.

engraft *v.* ஒன்றுபட இணை

engrain *v.* ஆழமாகப் பதியும்படி செய்வி.

engrave *v.* செதுக்கு,

engross *v.* கவனத்தைக்கவர், பெரிதாய் எழுது, இருப்பு முழுவதையும் வாங்கு, நேரம் முழுவதையும் தனதாக்கிக்கொள் முழுமனதாக ஈடுபடு.

engulf *v.* விழுங்கு, அமிழ்த்துவி.

enhance *v.* உயர்த்து, பெருக்கு, மேம்படுத்து.

enigma *n.* புதிர், விசித்திரபண்புடையவர்.

enjoin *v.* கட்டளையிடு, வற்புறுத்திக்கூறு.

enjoy *v.* துய்த்து மகிழ்.

enlarge *v.* பெரிதாக்கு

enlighten *v.* தெரிவி, அறிவுறுத்து, அறியாமை அகற்று.

enlist *v.* துணையாகப் பெறு, படையில் சேர்.

enliven (என்லிவன்) *v.* ஒளிரச் செய், உணர்ச்சி யூட்டு

en masse (ஒங்மஸ்) *adv.* மொத்தமாக.

enmesh *v.* வலையில் சிக்கவை.

enmity *v.* பகைமை.

ennui (ஒன்வீ) *n.* மனச்சோர்வு

enormity *n.* மாபெருங்குற்றம்.

enormous *a.* மிகப்பெரிய.

enough (இனப்) *a.* போதுமான

enounce *v.* தெளிவுபடக்கூறு.

en passant (ஒம்' பஸொங்) *adv.* போகிற போக்கில்.

enquire (இங்'க்வைய) *v.* உசாவு, கேள், விசாரி, enquiry *n.* விசாரணை.

enrage (இன்றேஜ்) *n.* சினமூட்டு

en rapport *adv.* தொடர்புறுத நிலையில்.

enrapture (இன்றப்ச்ச) *v.* களிப்பூட்டு, மகிழ்வி.

enrich *v.* செல்வம் பெருக்கு, வளமூட்டு.

enrol, enroll *v.* உறுப்பினனாக்கு, பட்டியலில் சேர்

en route (ஒன்றூற்) *adv.* போகிற வழியில், தொடங்கு.

ensconce *v.* பாதுகாப்பாக தங்கவை, வசதியாக தங்கவை.

ensemble *n.* மொத்த மதிப்பு. இசைக்குழு.

enshrine *v.* கோவில் கொள்ளுவி

enshroud *v,* போர்த்திமூடு

ensign (என்ஸைன்) *n.* படையின் கொடி.

enslave *v.* அடிமைப்படுத்து.

ensnare *v.* சிக்கவை

ensue (இன்,ஸ்யூ) *v.* பின் நிகழ்வாகு.

ensure (இங்ஷ அ) *v.* உறுதிப்படுத்து.

entail (இன்ரேல்) *v.* இன்றியமையாததாக்கு, கொடுக்கவோ விற்கவோ முடியாத படி கால் வழியினருக்கு விட்டுச் செல்.

entangle *v.* சிக்கவை, சிக்கலாக்கு

entente (ஒன்ரொன்ற்) *n.* நாடுகளிடையேயான நட்புறவு

enter *v.* நுழை, பதிவுசெய், சேர் தெரிவி.

enteric *n.* குடற்காய்ச்சல், *a.* குடல்சார்ந்த.

enterprise *n.* துணிவான முயற்சி, வணிக நடவடிக்கை.

entertain *v.* மகிழ்வி, வரவேற்பளி, மனங்கொள், ஏற்றுக்கொள்.

enthral *v.* அடிமைப்படுத்து, மயக்கு.

enthrone *v.* அரியணையிலமர்த்து

enthuse *v.* ஆர்வங்கொள்.

enthusiasm *n.* ஆர்வம்.

entice (இன்ரைஸ்) *v.* கவர்ச்சியூட்டி சிக்கவை

entire *a.* முழுமையான.

entitle *v.* உரிமையளி, பெயர் இடு

entity *n.* உண்மையான பொருள், புறம்பான பொருளாக இருப்பது.

entomb *v.* கல்லறையில் இடு.

entomology *n.* பூச்சி நூல்

entourage *n.* சுற்றுப்புறம், ஆயம், கூடச்செல்பவர்

entracte *n.* கூத்து நிகழ்ச்சிகளின் இடைவேளை

entrails *n. pl.* குடல்

entrammel *v.* சிக்கவை.

entrance *n.* வாயில் *v.* பெருமகிழ்ச்சிக்குள்ளாக்கு, பரவசப்படுத்து.

entrap *v.* பொறியிலகப்படுத்து.

entreat *v.* கெஞ்சிக்கேள்.

entree (ஒன்ற்'றே) *n.* நுழைவுரிமை, கறி சுதிகூட்டுதல்.

entrench *v.* வலிதாக்கிக்கொள்

entrenous (ஒன்ரா'ந்யூ *adv.* இரகசியமாக.

entrepot *n.* களஞ்சியம்

entrepreneur (ஒன்ற்'றப்றனே) *n.* கூலி நிகழ்ச்சி அமைப்பாளர், தொழிற்றுறை அமைப்பாளர்

entrust *v* பொறுப்பை ஒப்படை நம்பிக்கையாக வை'

entry *n.* நுழைதல், வாயில், பதிவு, சந்து, போட்டியிடுபவர் பெயர்வரிசை.

entwine *v.* சுற்று, கோத்துப் பின்னு.

enumerate *v.* எண்ணு, ஒவ்வொன் றாகக் குறிப்பிடு.

enunciate (இனன்ஷிஏற்) *v.* தெளி வாகக்கூறு.

enure *v.* பழக்கு

envelop(இன்வலப்) *v.* மூடு, சூழ், உறையிலிடு.

envelope (என்விலோப்) *n.* கடித உறை, உறை.

enviable *a.* பொறுமையுறத்தக்க,

environs (என்விறன்ஸ்) *n. pl.* சுற்றுப்புறம். environment (இன்வை ன்மன்ற்) *n.* சூழல், சுற்றுடல்.

envisage *v.* கருது, எதிர் பார்

envoy *n.* தூதுவர்.

envy (என்வி) *n.* பொறுமை.

enzyme (என்ஸைம்) *n.* செரி மானப் பொருள்

eolithic *a.* பழங்கற் காலத்துக்கு முற்பட்ட

eon *n.* ஊழி

epaulet (எபலெற்) *n.* படை வீரர் தோட்சட்டை யணி.

ephemeral (இபெமறல்) *a.* குறுகி யகாலம் நிலைத்திருக்கிற.

ephemeris *n.* நாளேடு, பஞ்சாங் கம், ஐந்துறுப்பி.

epic *n.* வீரகாவியம், தொடர் நிலைச் செய்யுள்.

epicedium *n.* கையறுநிலைப் பாடல்

epicene *n.* பலர்பால், ஆண்பெண் பாற் பொது.

epicentre *n* நிலநடுக்கமுனை.

epicure *n.* உண்டு குடித்து இன் புறுவதில் நாட்டமுடையவர், epicurean *n.* இன்பந்தருவது நல்லது துன்பந்தருவது தீயது என்னும் கோட்பாட்டினர். epicureanism *n.* இன்பவாதம்

epidemic *n.* தொற்று நோய்.

epidermis *n.* மேந்தோல்.

epigram *n.* சாதுரியப்பேச்சு, அங்கதம்

epigraph *n.* கல்வெட்டு.

epilepsy *n.* காக்காய் வலிப்பு.

epilogue *n.* முடிவுரை.

Epiphany *n.* குழந்தை இயேசு வைக் காண அறிவர் வந்ததை நினைவு அறிவுறுத்த ஜனவரி 6 இல்விருந்து

episcopal *a.* மேற்றிராணியைச் சார்ந்த.

episode *n.* கிளைக்கதை, தொட ரில் ஒன்று.

epistle *n.* கடிதம்.

epitaph (எப்பிற்ரூப்) *n.* கல் லறைக் கல்வெட்டு.

epithet *n.* அடைமொழி.

epitome (இபிற்றமி) *n.* சுருக்கம்

epoch (ஈபொக்) *n.* ஊழிப்பிரிவு, குறிப்பிட்டகாலம், epoch-making மிகமுக்கியமான

equable *a.* மட்டான, ஒரு சீரான

equal *a.* ஒத்த, ஈடான, சமமான

equanimity *n.* மனஅமைதி.

equation *n.* சரியீடு, சமன் தொடர்

equator *n.* நிலநடுக்கோடு.

equerry *n* அரச குதிரைவீரருக் குப்பொறுப்பானவர், அரசகு டும்ப அலுவலர்.

equestrian *n.* குதிரைவீரர்,

a. குதிரையேற்றஞ் சார்ந்த.

equilateral *a.* எல்லாப்பக்கங் களும்ஒத்த.

equilibrist *n.* கயிற்றின்மீது நடப் பவர், கழைக்கூத்தாடி.

equilibrium *n.* நடுநிலை அமைதி, சமநிலை.

equine (ஈக்வைன்) *a.* குதிரை சார்ந்த.

equinox *n.* அல்லும் பகலும் சம மாகவுள்ளகாலம்,

equip *v.* தேவையை வழங்கு, equipment *n.* தேவையானவை

equipoise (ஈக்விபொய்ஸ்) *n.* அ மைதிநிலை, பக்கஞ்சாரா மன நிலை.

equitable (எக்விற்றபிள்) *a.* நேர் மையான.

equitation *n.* குதிரையேற்றத் திறம்

equivalent *n.* சமமதிப்பு, சம அளவு

equivocal *a.* தெளிவில்லாத ஐயத்திற்கிடமான equivocate *v.* மழுப்பிப்பேசு, மயங்கக்கூறு

equivoke, equivoque *n.* சிலேடை

era (இஅரு) *n.* ஊழி

eradicate *v.* அடியோடழி, வேருடன் பறித்தெறி.

erase (இறேஸ்) *v.* அழி.

ere(எய) *prep.* முன்பு, விரைந்து.

erect (இறெக்ட்) *a.* நிமிர்ந்த. சாயாத, *v.* நிமிர்த்து, கட்ட டம்எழுப்பு, erectile *a.* விறைப் பாக்கிஎழுப்பக்கூடிய, erection *n.* கட்டடம், கட்டிஎழுப்புதல்.

eremite *n.* ஆண்டி, துறவி, ஒதுங் கிவாழ்பவர்.

erg (ஏர்க்) *n.* வேலைக்கூறு.

ergo adv. ஆகையால்.

ermine *n.* கீரியின உயிரி.

erne *n.* கழுகின வகை.

erode (இரோட்) *v.* படிப்படியாக அழி, erosion *n.* அரித்துத் தின்னுதல், அரிப்பு.

Eros (எரொஸ்) *n.* காதல் தெய் வம், காமன்.

erotic (இரொற்றிக்) *a.* காமம் சார்ந்த.

err (ஏர்) *v.* தவறுசெய், பாவம் செய்.

errand *n.* செய்தி கொண்டு போதல், தூதுரை.

errant *a.* அலைந்துதிரிகிற, தவறு செய்கிற.

erratic *a.* ஒழுங்கற்ற,ஏறுமாறான

erratum (இறேற்றம்) *n.* எழுத் துப்பிழை, errata *n. pl.* அச்சுப் பிழைப்பட்டியல்.

erroneous *a.* தவறான.

error *n.* தவறு.

erstwhile *a.* முன்னைய, *adv.* முன்னாட்களில்.

eructation (ஈறக்ரேஷன்) *n.* வாய் வுவாயால் வெளிவிடல்

erudite (எறுடைற்) *a.* புலமை மிக்க.

erupt (இறப்ற்) *v.* வெளிப்படு, வெடித்துக்கிளம்பு, eruption *n.* எரிமலைவெடிப்பு, பொக்குளம், திடீர்த்தோற்றம்.

escalade *n.* ஏணிவைத்து மதில் ஏறுதல்

escalate *v.* வேகஅதிகரிப்பு, அள வுஅதிகரிப்பு.

escalator *n.* இயங்கும் படிக்கட்டு

escalope *n.* எலும்பில்லாத இறைச்சித்துண்டு.

escapade *n.* தவறுன நடத்தை, தப்பியோடல்.

escape *v.* தப்பிச்செல், நழுவு, ஒழுகு. தவிர், escape clause தப்பித்துக்கொள்ளக் கூடிய பிரிவு, escapee *n.* தப்பியோடுபவர்.

escapism *n.* வாழ்வின் உண்மைகளிலிருந்தும் தப்புதல், escapist *n* & *a.*

escarpment *n.* நேர்ச்செங்குத்தான சரிவு.

eschew (இஸ்ச்யூ) *v.* தவிர், விலக்கு.

escort *n.* வழித்துணை, மெய்க்காவல், துணைபோ.

esoteric *a.* மறைபொருளான சிலருக்கு மட்டுமே விளங்கக் கூடிய

especial *a.* தனிச்சிறப்புள்ள

Esperanto *n.* அனைத்துலகப் பயன்பாட்டுக்கென ஆக்கப் பெற்ற பொது மொழி.

espionage *n.* வேவு பார்த்தல்

esplanade *n.* கடலோர அகன்ற, உலாவிடம்.

espouse *v.* மணஞ்செய், துணையாயிரு.

esprit de corps (எஸ்ப்றிடகோ) குழு உறுப்பினரிடையேயுள்ள மதிப்புணர்ச்சி, *esprit fort* திண்ணிய நெஞ்சினர், தற்சிந்தனையாளர்.

espy *v.* உற்றுப்பார், கண்டுபிடி.

esquire *n.* முகவரியிலிடும் மரியாதை அடைமொழி.

essay *n.* முயற்சி, கட்டுரை

essence *n.* சாறு, நறுமணப்பொருள், சாரம், இயல்பு, essential *n.* இன்றியமையாத பொருள்.

establish *v.* நிலைநாட்டு, உறுதிப்படுத்து, establishment *n.* நிறுவுதல், தொழிலகம்.

estate *n.* சொத்து, பதவி, பெருந்தோட்டம், *real estate* வீடுகளும் காணியும்.

esteem (இஸ்ரீம்) *n.* மதிப்பு, சார்பான கருத்து, *v.* உயர்வாகக் கருது.

estimable *a.* மதிக்கத்தக்க.

estimate *n.* மதிப்பீடு, *v.* மதிப்பிடு, அளவிடு.

estrange *v.* நட்பைக்கெடு, மனத்தாங்கல் உண்டாக்கு, estranged *a.* மனமுறிவுகொண்ட

estuary (எஸ்ச்யுஅறி) *n.* கழிமுகம்

etch (எச்) *v.* செதுக்குவேலை செய்.

eternal *a.* நிலைபேறுடைய.

eternity *n.* எல்லையில்லாதகாலம், பேரூழி, இறப்பின் பின்னை வாழ்வு.

ether (ஈத) *n.* விசும்பு, மயக்க மருந்து, வெளியூடு நிறைந்துள்ள நுண்பொருள்.

ethereal *a.* நொய்தான, ஆவி போன்ற.

ethics (எதிக்ஸ்) *n. pl.* ஒழுக்கவியல்

ethnic (எத்நிக்) *a.* இனத்துக்குரிய

ethnology *n.* பண்பாட்டுச்சார்பான மனிதவின சார்பு நூல்

ethos *n.* தனிப்பண்பமைதி.

etiquette (எற்றி'கெற்) *n.* நன்

நடத்தை விதிமுறை.

etymology *n.* சொல்லாக்க வரலாறு, சொல்லியல்.

etymon *n.* வேர்ச்சொல்.

Eucharist *n.* இயேசுவின் இறுதி விருந்துச் சடங்கு.

Euclid (யூக்லிட்) *n.* வடிவியல் வகை.

eugenics (யூஜெனிக்ஸ்) *n.* இன மேம்பாட்டியல்.

eulogy (யூலஜி) *n.* புகழுரை.

eunuch (யூநக்) *n.* அலி, விதையகற்றப்பெற்றவன்.

euphemism *n.* மங்கலவழக்கு, இடக்கரடக்கர்.

euphony *n.* இன்னிசை.

euphoria *n.* இன்னுணர்வு, நன்னிலையுணர்வு.

euphuism *n.* அணிகள் மலிந்த செயற்கை மொழிநடை.

eureka (யுறீக்க) *n.* புதிது கண்ட எக்களிப்பு, *int.* கண்டுகொண்டேன்.

euthanasia (யூதநேஸிய) *n.* நோவில்லாச்சாவு.

evacuate (இவக்யுஏற்) *v.* வெளியேற்று, வெறுமையாக்கு evacuee *n.*

evade (இவேட்) *v.* தவிர், நழுவு தட்டிக்கழி.

evaluate *v.* கணி, மதிப்பிடு.

evanesce *v.* மறை, evanescent *a.* மறைகிற.

evangelist (இவன்ஜெலிஸ்ற்) *n.* நற்செய்தி உரைப்பவர், விவிலியநற்செய்தி எழுதிய நால்வரில் ஒருவர், evangelism *n.*

evaporate *v.* ஆவியாய்மாறு, மறைவுறு.

evasion (இவேஷன்) *n.* தப்புதல், தட்டிக்கழிப்பு.

Eve *n.* மனிதஇன முதற்பெண், ஏவாள்.

eve *n.* மாலைவேளை, விழாவின் முதல்நாள்.

even *a.* சரிமட்டமான, ஒருசீரான, சமனான, அமைதியான, இரட்டைப்படையான *v.* சரிசமமாக்கு, ஒப்பிடு, *adv.* சரியாக, ஒருவேளை, கூட, பழிக்குப்பழி.

evening (ஈவினிங்) *n.* மாலை, இறுதிக்காலம்.

event *n* நிகழ்ச்சி, பயன்.

eventful *a.* நிகழ்ச்சிகள் நிறைந்த.

eventide *n.* மாலைப்பொழுது.

eventual (இவன்சுஅல்) *a.* இறுதியாக, eventuality *n.* நடக்கக்கூடிய நிகழ்ச்சி.

ever *adv.* எப்போதும், எவ்வேளையிலும், *ever and anon* அவ்வப்போது, *ever so* எவ்வளவோ.

evergreen *a.* என்றும் பச்சையாக இருக்கின்ற, இலையுதிர்க்காத.

everlasting *a.* எக்காலத்துமுள்ள

evermore *adv.* எப்பொழுதும்.

every *a.* ஒவ்வொரு, ஒவ்வொன்றுகளல்லா, *every now and again* அடிக்கடி.

everybody *pron.* ஒவ்வொருவரும்

everyday *a.* ஒவ்வொருநாளும், வழக்கமான, யாவருமறிந்த, **everyone** *pron* ஒவ்வொருவரும், every thing *pron* எல்லாப்பொருட்களும் every where *adv.* ஒவ்வோரிடத்தும்

evict (இவிக்ற்) *v.* வெளியேற்று, eviction *n*, அப்புறப்படுத்துதல்

evidence *n.* சான்று, அடையாளம், தடம், evident *a.* தெளிவான

evil *a.* தீங்கான, *evil eye* கண்ணேறு, *n.* கேடு, தீவினை.

evince (இவின்ஸ்) *v.* காட்டு.

evirate *v.* விதையடி, ஆண்மை போக்கு.

eviscerate(இவிஸறேற்) *v.* குடலையகற்று.

evoke *v.* வரவழை, வெளிவரச் செய், evocation *n.*

evolution *n.* பரிணம வளர்ச்சி, உள்ளது சிறத்தல் கூர்தல்அறம்

evolve *v.* வெளிப்படச்செய், வெளிப்படு.

ewe (யூ) *n.* மறியாடு

ex prep. இல்லாமல், இருந்து வெளியே.

ex-pref முன்னுள், முன்பிருந்த.

exacerbate *v.* எரிச்சலூட்டு, கசப்புணர்வு கூட்டு.

exact *a* சரியான, முழுவிவரமுந்தருகின்ற, *v.* வலியுறுத்திப்பெறு, exacting *a.* கடுமுயற்சி தேவைப்படுகிற, exactitude *n.* exactly *adv.* அவ்வாறே, மிகநுட்பமாக

exaggerate *v.* பெரிதாக்கு, மிகைபடக்கூறு.

exalt *v.* உயர்த்து, புகழ், மகிழ்வி

examine *v.* கூர்ந்து ஆராய், விசாரணைசெய், கண்சாணி, examinee *n.* பரிசோதிக்கப்படுபவர் examiner *n* பரிசோதிப்பவர் examination *n.* தேர்வு, பரிசோதணை.

example *n.* எடுத்துக்காட்டு.

exasperate *v.* சினமூட்டு, மேலும் மோசமாக்கு, எரிச்சலூட்டு.

ex cathedra a. அதிகாரபூர்வமான, *adv.* தனி அதிகாரத்துடன்.

excavate (எக்ஸ்கவேற்) *v.* அகழ், தோண்டு, excavatin *n.* அகழ்வாய்வு.

exceed *v.* எல்லைகட, விஞ்சு, மேம்படு.

excel *v.* மேம்படு, சிறபபுறு, excellence *n.* சிறப்பு, excellent *a.* மிகச்சிறந்த.

excelsior n. மிகவும் உயாந்தது, மரச்சீவல்.

except *prep.* நீங்கலாக, *conj.* என்றுலல்லாமல், *v.* விதிவிலக்காக்கு, exception *n.* விதிவிலக்காக்கு, *take exception to* எதிர்ப்புத்தெரிவி.

excerpt (எக்ஸேப்ற்) *n.* நூலிலிருந்து எடுத்தபகுதி

excess (இக்ஸெஸ்) *n.* மிகுதி, வரம்புகடந்த, அட்டூழியம் excesses *n. pl.* மட்டுமீறியகுடிமீதூண்.

exchange *n.* பரிமாற்றம், நாணயமாற்று, தொலைபேசி இணைப்பகம், *bills of exchange* நாணயமாற்றுச்சீட்டுக்கள்.

exchequer *n.* கருவூலம், கைவசமுள்ளநிதி, அரசநிதித்துறை, *chancellor of the exchequer* பிரிட்டனின் நிதி அமைச்சர்.

excise *n.* தீர்வை, வரி, *v.* வெட்டியெடு

excite *v.* ஊக்கு, விரைவு படுத்து, பரபரப்பூட்டு, சினமூட்டு, அவாத் தூண்டு.

exclaim *n.* கூக்குரல், *v.* கூவு, வியந்துரை, குரலெழுப்பு, exclamation *n.*, exclamatory *a.*

exclude *v.* விலக்கு, தவிர், இயலாதபடிசெய், exclusion *n.*

exclusive *a.* வேறெங்கும் கிடையாத, பிறரைத்தவிர்த்து, தேர்ந்தெடுத்த சிலருக்கேயான, செல்வருக்குமட்டும் வழங்குகிற.

excogitate (இக்ஸ்' கொஜி,ரேற்) *v.* சிந்தித்துக்கண்டுபிடி, excogitation *n.* கடுஞ்சிந்தனை

excommunicate *v.* குழுவிலிருந்து நீக்கு, திருச்சபை உறுப்பினரின் சிறப்புரிமைகளை நீக்கு, திருச்சபைத் தொடர்பினின்றும் விலக்கு.

excoriate *v.* தோல் வெட்டிவிடு அல்லது தேய்.

excrement *n.* மலம், எரு, சாணம்.

excrescence *n.* திடீர் வளர்ச்சி, தசைத்திரட்சி, கழலை.

excrete *v.* எச்சம் கழி, உடலினின்றும் வெளியேற்று, **excreta** *n. pl.* மலசலம்

excruciating *a.* கடுமையான நோவு தருகிற, excruciate *v.* excruciation *n.* துன்பம்

exculpate *v.* குற்றச்சாட்டிலிருந்து விடுவி.

excursion *n.* சுற்றுலா.

excuse *v.* மன்னி, கடமையினின்றும் விடுவி, பொறுத்தருள், சாக்குப்போக்குக்கூறு.

execrable *a.* வெறுக்கத்தக்க, **execrate** *v.* வெறு, நிந்தி, தெறுமொழி கூறு.

execute *v.* நிறைவேற்று, செயலாற்று, தூக்கிலிடு, executioner *n.* தூக்கிலிடுபவர்.

executive *n.* நிறைவேற்றுத்துறை, செயலாட்சித் தலைவர்

executor *n.* நிறைவேற்றுபவர், விருப்ப ஆவண நிறைவேற்றத்திற்கு அமர்த்தப்படுபவர் executrix *n. fem.*

exegesis *n.* விவிலிய விளக்கம், விரிவுரை.

exemplary *a.* பின்பற்றத்தக்க, எச்சரிக்கையாக பயன்படுகிற, உயர்வான,

exemplify *v.* முன்மாதிரியாயிரு.

exempt *n.* விலக்குரிமை பெற்றவர் *a.* கட்டுப்பாடுகட்கு உட்படாத, *v.* நீக்கு, விலக்களி.

exercise *n.* பயிற்சி, உரிமையைப் பயன்படுத்தல், *v.* பயன்படுத்து

exert *v.* ஈடுபடுத்து, முயல், exertion *n.* கடுமுயற்சி

exeunt (எக்ஸியன்ற்) *v.* நடிகர் மேடையைவிட்டுச் செல்கிறார்கள்.

ex gratia சலுகையாக.

exhale (இக்ஸேல்) *v* மூச்சுவிடு

exhaust (இக்ஸோஸ்ற்) முற்றும் பயன் படுத்து, களைத்துப்போ,

n. புறம்போக்கி, கழிவுக்காற்று வெளியேற்றுதல், - கழிவுக் காற்று, exhaustive *a.* முழு மையாக.

exhibit (இக்ஸிபிற்) *v.* காட்சிக்கு வை, திறந்துகாட்டு, *n.* காட் சிப் பொருள், exhibition *n.* பொருட்காட்சி, *make an exhibition of oneself* பிறர் ஏளனத் துக்கிடமாக நடந்து கொள்.

exhibitioner *n.* பல்கலைக்கழக உத விப்படிபெறுபவர்.

exhibitionism *n.* பிறர்கவனத்தை ஈர்க்கும் வகையில் நடத்தல்,

exhilarate (இக்ஸிலரேற்) *v.* மகிழ்வி, உயிர்ப்பூட்டு.

exhort (இக்ஸோர்ட்) *v.* தூண்டு, அறிவுரைகூறு.

exhume (இக்ஸ்யூம்) *v.* தோண்டி யெடு.

exigency *n.* உடனடித்தேவை, அவசரத்தேவை, exigent *a.* மிகவும் வறிய.

exiguous (இக்ஸிக்யுஅஸ்) *a.* மிகச் சிறிய.

exile (எக்ஸைல்) *v.* நாடுகடத்து, *n.* நாடுகடத்தும் தண்டனை, நாடுகடத்தப்பெற்றவர்.

exist (இக்ஸிஸ்ற்) *v.* உளதாயிரு, வாழ், காணப்பெறு

existentialism *n.* இருத்தலியல் கோட்பாடு, தன்செயலைத் தெரி வு செய்யும் சுதந்திரம் மனி தனுக்குண்டு எனவலியுறுத்து வது இது.

exit (எக்ஸிற்) *n.* வெளியேறுதல். இறப்பு, வெளிச்செல்லும் வழி

ex libris (எக்ஸ்லிப்றிஸ்) *n.* பொத்தக உரிமைச்சீட்டு.

exodus (எக்ஸடஸ்) *n.* பலரின் வெளியேற்றம்.

ex officio *a.* பதவிகாரணமாக.

exogamy *n.* குலமில்வழிகலக்கும் மரபு.

exonerate *v.* குற்றமில்லையெனக் காட்டு, குற்றச்சாட்டிலிருந்து விடுவி.

exorbitant *a.* மிகக்கூடுதலான.

exorcise (எக்ஸோஸைஸ்) *v.* பே யோட்டு.

exordium *n.* தொடக்கம் முகப்பு ரை, *pl.* exordia.

exotic (இக்ஸொற்றிக்) *a.* வெளி யிலிருந்து கொணரப்பெற்ற, புதிதான, பன்னிறமான.

expand *v.* பரப்பு, விரித்துரை, விரி, பெரிதாகு, விரித்தெழுது expanse *n.* அகலிடம், expansive *a.* விரியக்கூடிய, விரிவான, தாராளமாகப் பழகுகிற, இன் னியல்புள்ள.

ex parte (எக்ஸ் பாட்டி) *a.* ஒரு பக்கச்சார்பான, *adv.* ஒருதலை யாக

expatiate (இக்ஸ்பேஷிஏற்) *v.* விரிவாகச்சொல்.

expatriate *v.* நாடுகடத்து.

expect *v.* எதிர்பார், எண்ணு கருது, expectant *n.* எதிர்பார்த் திருப்பவர், *a.* காத்திருக்கிற, **expectant mother** சூலி, கரு வுற்றபெண்.

expectorate *v.* துப்பு, இரு மி சளி

வெளியேற்று.

expedient *a.* தகுந்த, நலமிக்க, expediency *n.*

expedite (எக்ஸ்பிடைற்) *a.* விரைவான, *v.* விரைவு படுத்து.

expedition (எக்ஸ்பிடிஷன்) *n.* படையெழுச்சி, தனிநோக்கத்துக்கான பயணம், விரைவு, **expeditious** *a.* உடனடியாகச் செய்கிற.

expel *v.* வெளியேற்று.

expend *v.* செலவிடு, பயன்படுத்து, expenditure *n.* செலவினம் expense *n.* செலவு, expensive *a.* மிகுவிலையுள்ள.

experience *n.* அனுபவம், பட்டறிவு, *v.* நுகர், பட்டறி, experienced *a.* தேர்ந்த.

experiment *n* செய்முறை.

expert *n.* வல்லுநர், நிபுணர், *a.* கைதேர்ந்த.

expertise (எக்ஸ்பேட்டீஸ்) *n.* சிறப்புத்திறமை.

expiate (எக்ஸ்பிஏற்) *v.* கழுவாய்செய், ஈடுசெய், பரிகரி

expire *v.* மூச்சுவிடு, இற, முடிவுறு,

explain *v.* விளக்கு, காரணங் கூறு,

expletive *n.* வெற்றுரை, சாரியை, வியப்புரை.

explicit *a.* தெளிவான, வெளிப்படையான, *explicit v.* முற்றிற்று.

explode *v.* திடீரெனவெடி, வெடிக்கச்செய், தவறெனக் காட்டிமறு, திடீரென உயர்த்து.

exploit *n.* வீரச்செயல், சுரண்டிப்பிழை, நன்முறையிற் பயன்படுத்து.

explore *v.* ஆய்வுசெய், அறியும் நோக்குடனை பயணம்.

exponent *n.* விளக்குபவர், திறமை மிக்கவர், ஆதரவாளர், மாதிரி

export *n.* ஏற்றுமதிப்பண்டம், *v.* ஏற்றுமதிசெய்.

expose (எக்ஸ்போஸே) *n.* வெளிப்படுத்தல்,

expose *v.* வெளிப்படவை, வெளிப்படுத்து, பாதுகாப்பின்றி வை, ஒளிபடவிடு.

exposition *n.* விளக்கிக் காட்டுதல், விளக்கம், பொருட்காட்சி.

expostulate *v.* இடித்துரை, எதிர்ப்புத்தெரிவி.

expound *v.* விரிவாக விளக்கு.

express *n.* கடுகதிவண்டி, *a.* தெளிவான, திட்டவட்டமான, வெளிப்படையாகக்கூறப்பெற்ற, *v.* வெளிக்காட்டு, சொல்லு, அடையாளப் படுத்தித்தெரிவி, பிழிந்து வெளியேற்று.

expression *n.* சொல்லுதல், சொல் அல்லது சொற்றொடர், முகபாவம்.

expressionism *n.* ஓவியப்பாங்கு, நாடகப்போக்கு, உணர்வைப் புலப்படுத்தும் கலைப்பாங்கு.

expressive *a.* வெளியிடுகிற உணர்ச்சி விளக்கமான பொருள் பொதிந்த.

expressly *adv.* தெளிவாக, குறிப்பிட்ட நோக்கத்திற்காக.

expropriate *v.* பறி.

expulsion *n.* வெளியேற்றல்.

expunge *v.* அகற்று, அடியோடழி.

expurgate *v.* வேண்டாதன நீக்கு

exquisite (எக்ஸ்க்விஸிற்) *a.* மிகு நேர்த்தியான, நுணுக்கமிக்க.

exsanguine *a.* குருதிக்குறைபாடுடைய.

exscind (எக்ஸின்ட்) *v.* வெட்டு.

exsert *v.* முந்துறநீட்டு.

ex-service *a.* முன்னாட்படைத் துறையினன்.

extant *a.* இப்பொழுதும் இருக்கின்ற, நடப்பிலுள்ள

extempore (இக்ஸ்ரெம்பறி) *a.* முன்னேற்பாடின்றி.

extend *v.* நீட்டு, விரிவுபடுத்து நீண்டிரு, நீடி, வழங்கு, மதிப்பிடு, கைப்பற்று.

extent *n.* பரப்பு, அளவு, பரவெல்லை, நிலமதிப்பீடு.

extenuate *v.* குறைத்துக்காட்டு, தளர்வுறச்செய்.

exterior *a.* வெளிப்பக்கமுள்ள, *n.* வெளிப்புறம்.

exterminate *v.* பூண்டோடழி.

external *n.* வெளிப்புறம், *a.* புறத்தேயுள்ள.

extinct *a.* அழிந்த, தொடர்பற்றுப்போன.

extinguish *v.* அணை, அழி.

extirpate *v.* பூண்டோடகற்று

extol *v.* புகழ், மெச்சு, பாராட்டு.

extort *v.* அச்சுறுத்திப்பெறு. வலிந்துபெறு.

extortionate *a.* மட்டுமீறிய கடுமையான, வலிந்து பெறுகின்ற

extra *a.* மிகைப்படியான, புறம்பான.

extract *n.* வடிசாறு, பொத்தகத்தினின்றும் எடுக்கப் பெற்ற பகுதி, *v.* வலிந்து பெறு, பிடுங்கு, உறிஞ்சியெடு, **extraction** *n.* இனக்கூறு, மரபு பிடுப்புதல் பிழிவு.

extradite *v.* குற்ற வாளியை தாயகத்துக்கு அனுப்பி வைத்தல்,

extraneous *a.* புறம்பான, தொடர்பற்ற

extraordinary *a.* வழக்கமீறிய வியக்கத்தக்க, மிகையான.

extrapolate *v.* கிடைக்கக்கூடிய தரவின் அடிப்படையில் மதிப்பிடு.

extravagant *a.* ஊதாரித்தனமான, தாராளமான, அளவுமீறிய, மடைத்தனமான

extravaganza *n.* புதுமையான கருத்துக்கள் கொண்ட படைப்பு, மரபுக்குட்படாத கற்பனைப் படைப்பு.

extreme *n* தொங்கல், *a.* கடைசியான, மிகுதியான, கடுமையான, தீவிரமான.

extricate *v.* சிக்கலிலிருந்து விடுவி

extrovert *n.* புறவுலக ஈடுபாடுமிக்கவர்.

extrude *v.* புறந்தள்ளு, பிழிந்தெடு.

exuberant *a.* செழித்துவளர்கிற, வளமிக்க, உணர்ச்சிபொங்குகிற, **exuberate** *v.* பொங்கிவழி

exude *v.* கசி, வெளிவிடு.

exult (இக்ஸல்ற்) *v.* மகிழ் பெருமிதங்கொள்.

exuviate *v.* தோலுரி, சட்டை கழற்று

ex voto n. நேர்ச்சிக் கடன் படையல், *adv.* நேர்ச்சிக்கடனாக.

eye *n.* கண், சிறுதுளை, மதிப்பிடும் ஆற்றல், *v.* நோக்கு *be all eyes* முழுக்கவனம் செலுத்து, *cry one's eyes out* நிரம்ப அழு, *give an eye to* கவனி, *have an eye to* நோக்கமாகக் கொண்டிரு, *in the eye of* கருத்தின்படி, *in the mind's eye* கற்பனையில் *keep an eye on* கவனி, *keep one's eye skinned* மிகு விழிப்புடனிரு, *make eyes at* காதற் பார்வை பார், *make him open his eyes* வியப்படையச் செய், *to do him in the eye* ஏமாற்று *sheep's eyes* காதற்பார்வை. *see eye to eye* ஒத்தகருத்துக் கொள், *turn a blind eye on* பாசாங்குசெய், *under the eye of* பராமரிப்பில் *up to the eyes* முழுதும், ஈடுபட்டு.

eyeball *n.* கண்விழி.

eyebrow (ஐப்றௌ) *n.* புருவம்,

eyelash *n.* இமை மயிர்.

eyelet *n.* சிறுதுளை.

eyelid *n.* கண்மடல்.

eye opener *n.* வியப்பூட்டும் செய்தி, உண்மையையுணர்த்தும் செய்தி.

eye servant *n.* மேலாள் பார்க்கும்போது மட்டும் வேலை செய்பவன்.

eyeshot கண் எட்டும் தொலை, விரைநோக்கு

eyesight *n* பார்வையாற்றல்.

eyesore *n.* கண்ணறுவி.

eyetooth. *n.* கோரைப்பல்.

eyewash *n.* கண்துடைப்பு.

eyewitness *n.* நேரில் கண்டவர்.

eyre *n.* சுற்றுப்பயணம், சுற்று நீதி மன்றம்.

eyrie (எய்றி) *n.* கழுகின்கூடு, உயரத்திலுள்ள வீடு.

F

fabaceous *a.* அவரை போன்ற.

Fabian *n.* இங்கிலாந்தில் 1884 இல் நிறுவப்பெற்ற பேபியன் கழக உறுப்பினர், *a.* அரசியல மைப்புச் சோசலிசதோட்பாடுடைய.

fable *n.* கட்டுக்கதை.

fabliau *n.* செய்யுள் வடிவான பழங்கதை.

fabric *n.* துணிவகை, கட்டுமானம், அமைப்பு.

fabricate *v.* கட்டு, உண்டுபண்ணு, பூனை.

fabulous *a.* கட்டுக்கதையிலுள்ள நம்பத்தகாத, மிகைப்படுத்தப் பட்ட. அற்புதமான, **fabulist** *n.* கட்டுக்கதையாளர், பொய்யர்.

facade (பஸாட்) *n.* கட்டட முகப்பு, புறத்தோற்றம்.

face *n.* முகம், துணிச்சல், *v.* எதிர்ப்படு. *face to face* நேருக்குநேரான, *fly in the face of* வெளிப்படையாகக் கீழ்ப்படியாமறு, *have the face* வெட்கத்தை உதிர்த்து நில், *in face of* இருந்தபோதிலும், *lose face* மதிப்பிழ, *make a face* முகத்தைச்சுளித்துக் காட்டு, *on the face of it* புறத்தோற்றம் கொண்டுமதிப்பிடும் போது, *pull a long face* சோர்வுற்றிரு, *put a bold face on matter* உறுதியாகக் காட்சியளி, *put a new face on* தோற்றம் முழுதும் மாற்று, *save one's face* மானத்தைக் காப்பாற்றிக்கொள், *set one's face against* உறுதியாக எதிர்த்து நில், *show one's face* காட்சியளி, *put a brave face on* அச்சமில்லாததுபோல் பாசாங்கு செய், *to face the music* தண்டனையனுபவிக்கத் தயாராகு

facelift *n.* முகப்புக் கவர்ச்சிக்கான திருத்தம்

face-value *n.* முகமதிப்பு.

facer *n.* திடீரெனத் தோன்றும் பேரிடர்.

facet *n.* வைரத்தின் பட்டை, ஒருபக்கம்.

facetious (பஸீஷஸ்) *a.* மகிழ்விக்கிற, கிண்டலான.

facial *a.* முகம் சார்ந்த.

facile *a.* எளிதாகச்செய்யக் கூடிய, எளிதான, திறமையான.

facile princeps (பஸிலி ப்ரின்ஸெப்ஸ்) *a.* எளிதில் முதன்மையான.

facilitate *v.* எளிதாக்கு, ஊக்கு, உதவு.

facilities *n. pl.* வாய்ப்பு நலன்கள்

facility எளிமை, தடங்கலின்மை இக்கட்டின்மை, தனித்திறமை, வாய்ப்பு.

facing *n.* மேற்பூச்சு, மேலீடு, சந்திப்பு.

facsimile (பக்ஸிமிலி) *n.* உருவ நேர்படி, நகல், *v.* சரிமாதிரி செய், படி எடு.

fact *n.* உண்மை, *as a matter of fact* மெய்யாக, *in fact, in point of fact* மெய்யாகவே.

faction *n.* உட்கட்சி, சண்டை, இணங்கிப் போகாத கும்பல்.

factitious *a.* செயற்கையான,

factitive *a.* பிறவினைப் படுத்துகிற, factitive verb செயப்படுபொருளுடன் பயன்நிரப்பு அடையினையும் ஒருங்கே ஏற்கிற வினைச் சொல்.

factor *n.* காரணஎண், தரகு வணிகர், காரணக்கூறு.

factory *n.* தொழிற்சாலை, தொழிலகம்.

factotum *n.* பல பணிகளும் செய்பவர்.

factual *a.* உள்ளபடி.

factum *n.* நினைவுக் குறிப்பேடு, செய்திப்பட்டியல்.

faculty *n* வினைத்திறம், பல்கலைக் கழகத்துறை.

fad *n* பித்து, குறுகிய காலமே நீடிக்கும் பழக்கம், பகுத்தறிவுக் கொவ்வாத பழக்கம், faddy *a.* விருப்பு வெறுப்புள்ள

fade *v.* வாடு, மங்கு, படிப்படியாக மறைவுறு.

faeces (பீஸீஸ்) *n. pl.* மலம்

fag *v.* கடுமையாக உழை, களைப்புறச் செய், *n.* களைப்பு, மேல் நிலை மாணவர்க்குப் பணி புரியும் கீழ்நிலை மாணவன், சிகரெட், கடுமுழைப்பு, *fag end* இறுதிப்பகுதி, பயனற்ற எச்சம் fagged *a.* களைத்த.

faggot *n.* சுள்ளிக்கட்டு, வாட்டிய ஈரல் துண்டு, *v.* கற்றையாகக் கட்டு

fahrenheit (பாறன்ஹேற்) *a.* பாரன்ஹேற் வெப்பமானி சார்ந்த, *fahrenheit thermometer* உறைநிலை 32பாகையாகவும் கொதிநிலை 212 பாகையாகவும் கொண்ட வெப்பமானி வகை.

faience *n.* ஒப்பனை மட்பாண்டம்.

fail *v.* தோல்வியடை, தளர்வுறு, நொடித்துப்போ, செய்யாதொழி, கைவிடு, ஏமாற்று.

failing *n.* தவறுதல், தளர்ச்சி, *prep.* இல்லாவிடில், தவிர்த்து.

failure *n.* தோல்வி, நிகழாமை, வராமை, தளர்வு, நொடிப்பு, குறைபாடு, ஏலாமை.

fain *adv.* மகிழ்வுடன், விருப்புடன், மாற்று வழியில்லாமையால் உடன்படுகிற.

faint *a.* தளர்ந்த, மங்கலான, தெளிவில்லாத *v.* மயக்கமடை, *n.* மயக்கம், *faint hearted* துணிவுகுன்றிய.

fair *n.* சந்தை அங்காடி, வணிகப்பொருட்காட்சி, *a day after the fair* காலங்கடந்து, *a.* அழகான, சீரான, நீதியான, நடுநிலையான, மட்டான, *adv.* வழுவின்றி, நேராக, நன்கு, நடுநிலை தவறுமல், அமைதியாக by *fair means* நேரான வழியில், *fair play* நடுவு நிலை போடாமை, *the fair sex* பெண்டிர், *fair and square* நேர்மையான, *fair spoken* மரியாதையாகப் பேசுதல்.

fairway *n.* போக்கு வரவுக்குரிய கால்வாய் அல்லது தெரு.

fairy *n.* தேவதை.

fairyland *n.* அழகான இடம்.

fait accompli n. செய்து முடிக்கப் பட்ட வினை.

faith *n.* நம்பிக்கை, கடவுட்பற்று *faith healing* வழிபாடுமூலம் குணமாக்கல்,

faithful *a.* சமயப்பற்றுடைய, நம்பத்தகுந்த, உண்மையான, சரியான.

fake *n.* போலி, மோசடி, *v.* போலியாகச்செய், பாவனை செய், நடி, *a.* போலியான, faker *n.*

fakir *n.* பக்கிரி, ஆண்டி.

falchion (போல்ச்சன்) *n.* கொடுவாள்.

falcon (போல்க்கன்) *n.* வல்லூறு, இராசாளி.

fall *n.* வீழ்ச்சி, இலையுதிர்காலம்,

v. விழு, *fall out* நிகழ், சண்டை யிடு, *fall through* தோல்வி யடை, வீணாகு, *fall upon* தாக்கு, தற்செயலாக நிகழ்வுறு, *fall back on* பின்வாங்கு, *fall for* காதலி, ஏமாற்றப்படு, *fall in* முடிவுறு, *fall in with* தற் செயலாக எதிர்ப்படு, உடன்படு *fall off* குறைதல், சீரழிதல் *fall short* போதாமை, *fall to* தொடங்குதல்.

fallacy *n.* போலிவாதம், குறை பாடு, மருள். *a popular fallacy* பலரும் உண்மையென நம்பும் பொய்.

fallible *a.* தவறும் இயல்புள்ள.

fallow *n.* தரிசு நிலம், மண்ணி றம், பயிரிடப்படாத, *to lie fallow* ஆறுதல்.

false *a.* பொய்யான, தவறான, ஏமாற்றுகின்ற, நம்பிக்கைக் கேடான, போலியான உண்மையல்லாத, *sailing under false colours* ஏமாற்றுகின்ற, *play one false* நம்பிக்கை மோசம் செய்.

false-face *n.* பொய்ம்முகம், முகமூடி.

false hood *n.* பொய்.

falsetto (போல்செற்ரோ) *n.* உச்சக்குரல்.

falsify *v.* மாற்றி மோசடி செய், மாறுட்டம் செய், பொய்யாக்கு, falsification *n.*

falter *v.* இடறு, தள்ளாடு, தயங்கு, தடுமாறு, வலுவிழ, திக்கிப் பேசு.

fame *n.* புகழ், நன்மதிப்பு, *ill fame* கெட்டபெயர்.

familiar *a.* நன்குபழக்கமுள்ள, தாராளமாகப் பழகுகிற, நன்கு தெரிந்த, அடிக்கடி காணுகிற familiarity *n.* familiarize *v.* பழக்கப்படுத்து.

family *n.* குடும்பம், *family tree* குடும்ப விளக்கப்படம், *in the family way* சூலுற்ற நிலையில்

famine *n.* பஞ்சம்.

famished, famishing *a.* கடும்பசியில் உழல்கின்ற.

famous *a.* புகழ்பெற்ற, மிகச் சிறந்த.

famulus *n.* செப்பிடுவித்தைக் காரனின் பணிபாள்.

fan *n.* விசிறி, ஆர்வலர், *v.* தூண்டு, வீசு, தூற்று, *fan light* கதவின் மேலுள்ள விசிறி வடிவிலான சிறுயன்னல் *fan mail* ஆர்வலரிடமிருந்து கடிதங்கள்.

fanatic *n.* உணர்ச்சி வெறியர், அளவுமீறிய ஆர்வலர், கொள்கைப் பிடிப்பர், fanaticism *n* fanatical *a.*

fancier *n.* செடி கொடி விலங்குப் பற்றாளர், பொழுதுபோக்காக புத்தினங்களை உருவாக்குபவர்.

fancy *n.* கற்பனை, விருப்பம், *a.* அழகான, மனம்போன போக்கான, *v.* கற்பனைசெய், விரும்பு, *fancy dress* விநோதமான உடை *fancy free* மணவிருப்பில்லாத

fancy work *n.* சித்திரத்தையல் வேலை.

fane (பேன்) *n.* கோவில், புனித கட்டடம்.

fanfare *n.* எக்காளமுழக்கம்.

fang *n.* நீண்டகூரியபல், பாம்பின் நச்சுப்பல்.

fantasia *n.* கற்பனைச் செய்யுள் வகை.

fantasize *v.* பகற்கனவுக் காண்

fantastic *a.* அற்புதமான, மிகச் சிறந்த, கற்பனையான, நம்ப முடியாத.

fantasy *n.* கற்பனை, மனக்கண் வடிவம், விசித்திரப்படைப்பு

far *a.* தொலைவிலுள்ள, *n.* தொலைவிடம், *adv.* தொலை விடத்தில், *far fetched a.* தெளி வில்லாத, நடக்கமுடியாத, மடத்தனமான, *far cry* நெடு வழி, *far and near* எங்கும்.

farce *n.* நகைச்சுவை நாடகம், பயனற்ற நிகழ்ச்சி பாசாங்கு.

fare *n.* பயணச் செலவு, பயணி, உணவு, *v.* முன்னேற்றம், செல், தேறு, *a Biil of Fare* உணவுப்பட்டியல்

farewell *n.* பிரியாவிடை, *int.* போய்வா!

farinaceous *n.* மாப்பண்டம்.

farm *n.* பண்ணை, தோட்டம், *v.* குயிரிடு, farmer *n.* உழவர், farmstead *n.* பண்ணையும் அதன் கட்டடங்களும்.

farrago *n.* கதம்பம்.

far reaching *a.* பரந்த செயல் விளைவுடைய

farrier *n.* குதிரைக்கு இலாட மடிப்பவர், குதிரை மருத்துவர்,

farrow *v.* பன்றிக்குட்டிகளை ஈனு, *n.* ஓரீற்று பன்றிக் குட்டிகள்

far-seeing, far-sighted *a.* வருவ துணர்கிற, வருங்கால நோக் குடைய.

farther *a.* மிகு தொலைவிலுள்ள.

farthing *a.* கால் பென்னி மதிப் புள்ள பழைய ஆங்கில நாண யம்

fascicle *n.* பகுதிபகுதியாக வெளிவரும் பொத்தகத்தின் ஒரு பகுதி.

fascinate *v.* கவர், வசீகரி.

Fascism *n.* பாசிசம், வலதுசாரி சர்வாதிகார அமைப்பு.

fashion *n.* விதம், பாணி, நடப்பு வழக்கு, *v.* உருவாக்கு.

fast *n.* நோன்பு, *v.* நோன்பிரு, *a.* அழியாத, ஆழ்ந்த, விரை வான, ஊதாரியான, *adv.* உறு தியாக, விரைவாக, இறுக்க மாக, *the fast set* இன்பநாட்ட முடன் பணவிரையஞ்செய்யும் குழு, fast-handed *a.* கஞ்சத் தனமான, *a fast woman* ஊதாரி, *to lead a fast life* இன்பமே குறியாய்வாழ், *a fast friend* உண்மையான, *to play fast and loose* பழக்கத் தை அடிக்கடி மாற்று.

fasten *v.* இறுக்கு, இணை, கட்டு, பூட்டு, fastener, fastening *ns.*

fastidious *a.* நல்லதையே தெரிவு செய்கிற, எளிதில் வெறுப் படைகிற, நுணுக்கம் பார்க் கிற, மனநிறைவு செய்ய முடி யாத.

fastness *n.* கோட்டை, விரைவு

fat *n.* கொழுப்பு, *a.* கொழுத்த, தடித்த, மக்கான, ஆதாய மிக்க, வளமான, *fat head* முட் டாள், *a fat lot* மிகவும் கொஞ் சம், *the fat is in the fire* தொல்லை தருஞ் செயல், *to live on the fat of the land* வளவாழ்வு.

fatal *a.* சாவு தருகிற, அழிவு

தரும், ஊழின்பயனை, fatalism *n.* ஊழ்வலிக்கோட்பாடு fatalist *n.* நடப்பது நடக்கும் தவிர்க்கமுடியாது என்பவர் *fatal shears* சாவு, *fatal sisters* பிறப்பு வாழ்வு இறப்பு ஆகிய ஊழின்முக்கூறுகளையும் வரையறுக்கும் மூன்று தெய்வங்கள், *fatal thread* வாழ்நாள்.

fate *n.* விதி, ஊழ், fated *a.* ஊழ் வகுத்த, விதிக்கப்பட்ட.

father *n.* தந்தை, மதிப்புக்குரியவர், முதல்வர், father-in-law மணவழி மாமன், fatherland *n.* பிறந்த நாடு.

fathom *n.* ஆறடியளவு, *v.* ஆழம் பார், காரணம் கண்டுபிடி, ஆழ்ந்தறி.

fatigue *n.* களைப்பு, அயர்வுதரும் வேலை, உலோகமெலிவு, *v.* களைப்புறச் செய்.

fatuity *n.* மடத்தனம், fatuous *a.*

faucet *n.* நீர்க்குழாய்த் திறப்பு.

fault *n.* தவறு, குறை

faun *n.* வனதேவதை

fauna *n. pl.* ஒரு நிலத்துக்குரிய விலங்கினம்

faux pas (போ'பா) தொல்லை விளைக்கும் பெருந்தவறு, சொல்லிழுக்கு.

favour *n.* விருப்பம், ஒப்புதல், உதவி, அன்புச் செயல், ஒருபக்கச்சார்பு, சலுகை, ஆதரவுச் சின்னம், *v.* சலுகையளி, ஒத்திரு, விரும்பு, *the child favours his father* தந்தைபோலிருத்தல், *to curry favour* நட்பைப்பெறல் அன்புச்செயல், *your favour of the 14th inst.* 14ந் தேதியிட்ட கடிதம்.

fawn (போன்) *n.* மான்கன்று, *a.* இளமஞ்சள் நிறமான, *v.* அன்பு காட்டு, கெஞ்சி ஆதரவு பெறு.

fay *n.* தேவதை.

fealty *n.* கடப்பாடு.

fear *n.* அச்சம், அச்சமதிப்பு, *v.* அஞ்சு, நினை.

fearful *a.* அச்சந்தருகிற, மிகவும் பெரிய.

feasible *a.* செய்யக்கூடிய.

feast *n.* விருந்து, விழா, *v.* விருந்தளி.

feat *n.* அருஞ்செயல், குறிப்பிடத்தக்க சாதனை.

feather *n.* இறகு, *birds of a feather* ஒரே வகையினர், *feather in one's cap* பெருமிதம் கொள்ளக்கூடிய, *in high feather* பெருமகிழ்ச்சியுடன், *feather one's nest* செல்வப்பெருக்கு, தவறுன வழியில் பணம் ஈட்டல், *show the white feather* கோழைமை காட்டு, *crop one's feather* மதிப்புக்குறை, feather-bed *v.* எளிமையாக்கு, feather-brained *a.* மடத்தனமான.

featherweight *n.* பளுக்குறைந்தவர், இலேசானபொருள், குத்துச்சண்டையில் 58 கில்லோகிராம் எடையுள்ளவர்.

feature *n.* முகத்தோற்றம், சிறப்புத்தன்மை, செய்தித்தாளின் முக்கிய பகுதி.

febrile (பிப்றைல்) *a.* காய்ச்சல் சார்ந்த.

February *n.* ஆங்கில ஆண்டின் இரண்டாம் மாதம்.

fecit *v.* இதனை வரைந்தவர், *v. pl.* *fecer'unt.*

feckless *a.* திறனற்ற, பொறுப்பற்ற, கவனக்குறைவான, சிந்தனையற்ற.

fecund (பீகண்ட்) *a.* பயனுள்ள, இனப்பெருக்க வளமுள்ள, செழிப்பான.

fed *a. fed up* சலிப்புற்று.

federal *a.* சமஷ்டி முறை சார்ந்த federate *v.* federation *n.* கூட்டிணைப்பு.

fee *n.* சிறப்புப்பணிக்கான கட்டணம்.

feeble *a.* வலுக்குறைந்த, பயனற்ற, feeble-minded *a.* மன வளர்ச்சிகுன்றிய.

feed *v.* ஊட்டு, வழங்கு, ஊட்டமளி, கொடு, *n.* உணவு, கால்வாய், குழாய்.

feedback *n.* உற்பத்தியின் ஒரு பகுதியை பிறப்பிடத்துக்கு வழங்கல், வழங்குநருக்கு உற்பத்திபற்றிய தகவலை அளித்தல்.

feeder *n.* ஊட்டுபவர், பாற்புட்டி கிளையாறு, எந்திரத்துக்கு பொருள் வழங்கும் கருவி, கிளை இருப்புப்பாதை, கிளைத்தெரு.

fee-faw-fum *n.* குழந்தைகளை அச்சுறுத்தும் பொருளற்ற சொல்.

feel *v.* உணர், கருது, இரங்கு, தெளிவற்ற மனப்படிவு, படு, புரிந்து கொள், feelers *n.* பூச்சியின் உணர் கொம்பு. *feel for*, *feel after* தேடு. *feel like* விருப்பம், *feel one's feet* உறுதியாக நில், *feel one's way* தடவிக் கண்டுபிடி, சவனமாகமுன் செல்லல், *feel the pulse of* உள்ளப்போக்கு அறிதல்.

feeler *n.* உயிரிகளின் உணரிழை, வேவுப்படைஞர், எதிரியின் மனநிலையறிய உதவும் கருத்துரை.

feeling *n.* தொட்டறி உணர்ச்சி, மனவுணர்வு, நம்பிக்கை, கருத்து, இரக்கம்.

feign (பேன்) *v.* பாசாங்குசெய்.

feint (பேன்ற்) *n.* திசைதிருப்புதற்கான போலித்தாக்குதல், நடிப்பு. *a.* மங்கலான

feldspar, felspar *n.* செம்பாறை வெண்பாறை.

felicitate *v.* பாராட்டு, மகிழ்ச்சி தெரிவி.

felicitous *a.* சந்தர்ப்பத்துக்கேற்ற, நன்குதெரிவு செய்யப்பெற்ற, பொருத்தமான.

felicity *n.* மகிழ்ச்சி, நயத்திறம்.

feline (பீலைன்) *a.* பூனைசார்ந்த.

fell *v.* வெட்டி வீழ்த்து, தட்டி விழுத்து, தையல்போடு, *n.* குன்று, சதுப்புநிலம், *a.* கொடிய, அச்சுறுத்துகிற.

fellah (பெலா) *n.* எகிப்துநாட்டு உழவர். *pl* fellaheen, fellahs.

felloe *n.* சில்லின் புறவிளிம்பு.

fellow *n.* கூட்டாளி, ஒத்தவர், ஒத்தது, படித்த சமூகஉறுப்பினர், பல்கலைக்கழக ஆட்சியுறுப்பினர், ஆள், எபயன், *fellow traveller* பொதுவுடைமைக் கொள்கை அனுதாபி.

fellowship *n.* தோழமை, கழகம், புத்தாய்வு மாணவர் நிலை.

felo-de-se (பீலோடிஸீ) *n.* தற்கொலை செய்பவர்.

felony *n.* பெருங்குற்றம், felon *n.* பாதகன், நகச்சுற்று.

felt *n.* கம்பளத்துணி.

female *n.* பெண்.

feminine *a.* பெண்ணுக்குரிய, **feminist** *n.* ஆண் பெண் சம உரிமைக்கோரிக்கையை ஆதரிப்பவர்.

femur (பீம) *n.* தொடையெலும்பு.

fen *n.* தாழ்ந்த சேற்று நிலம், வெள்ளம் நிற்கும் நிலம்.

fence *n.* வேலி, திருட்டுப்பொருள் வாங்கி விற்பவர், வாட்பயிற்சி நேர்விடையளிக்காமல் மழுப்புதல், *sit on the fence* நடுநிலைவகி **fencer** *n.* வாட்பயிற்சி பெறுபவர்.

fend *v.* தவிர், விலக்கு, பாதுகாப்புச்செய் *fend for* வாழ்வுக்கு வழிசெய், *fend off* தவிர்.

fender *n.* பாதுகாப்பளிப்பது.

feoff *n.* நிலமானியம், நிலவுரிமை

feral *a.* இயற்கைநிலையிலுள்ள, பண்படாத, இழவுக்குரிய.

ferial *a.* விடுமுறை நாளுக்குரிய.

ferment *v.* புளித்துப்பொங்கு, ஒத்தடங்கொடு, கிளறு, *n.* புளிப்பு, கிளர்ச்சி.

fern *n.* செடிவகை.

ferocious *a.* அச்சந்தருகிற, கொடிய, முரட்டுக்குணமுள்ள.

ferret *n.* மரநாய்வகை விலங்கு, *v.* தேடு, *ferret out* தேடிக்கண்டுபிடி.

ferric, ferrous *a.* இரும்புசார்ந்த.

ferrule *n.* குழாய் முகப்புப்பூண், கைத்தடிப்பூண்.

ferry *n.* தோணித்துறை, படகு *v.* படகில் ஏற்றிச் செல்.

fertile *a.* செழிப்பான, வளமான, இனப்பெருக்க வளமிக்க **fertility** *n.* செழுமை, கருவளம்

fertilize *v.* வளப்படுத்து, உரமூட்டு, சினைப்படுத்து **fertilization** *n.* கருவுறல், உரவளம்.

fertilizer *n.* உரம், எரு.

fervent *a.* ஆர்வமிக்க, வெப்பமான.

fervid *a.* மிகு வெப்பமான, ஆவலுடைய, உணர்ச்சி வாய்ந்த.

fervour *n.* உணர்ச்சிவேகம், தணியாப்பாசம், மிகு வெப்பம்.

festal *n.* விழா, கொண்டாட்டம், *a.* விருந்துக்குரிய.

fester *n.* நச்சுநீர்வடித்தல், நச்சாதல், அழுகுதல், சிதைவு, *v.* புண்ணாகு, சீற்றங்கொள், நீர்வடி, அழுகு.

festival *n.* விழா, தொடர்கலை நிகழ்ச்சிகள், **festive** *a*, **festivity** *n.* விழா நடைமுறைகள்.

festoon *n.* தோரணம், பூத்தொங்கல், *v.* தோரணங்களால் அழகுசெய்.

fetch *v.* கொண்டுவா, தருவி, விலையாகப்பெறு, **fetching** *a.* மகிழ்விக்கிற, கண்ணைக் கவர்கிற.

fete (பேற்) *n.* விழா, களியாட்டம்.

fetid, foetid (பீற்றிட்) *a.* கெட்ட மணமுடைய.

fetish *n.* மூடபக்தி, மூடநம்பிக்கை, ஆதிகால மக்களின் வழிபாட்டுப் பொருள்.

fetlock *n.* குதிரைக்காலடி

fetter *n.* கால்விலங்கு.

fettle *n.* நிலைமை, ஒழுங்கு.

feud (ப்யூட்) *n.* ஓயாச்சண்டை, நிலமானியம்.

feudal *a.* நிலப்பண்ணைமுறை சார்ந்த, *feudal system* பண்ணை

நிலவுரிமைமுறை, feudalism *n.*

fever *n.* காய்ச்சல், பரபரப்பு, feverish *a.* பரபரப்பு மிக்க.

few (ப்யூ) *a.* சில, few (பே) விரைவில் சாக விதிக்கப்பட்ட, திடீர்ச்சாமுன்ஏற்படும் பரபரப்பு.

fez *n.* துருக்கித்தொப்பி.

fiance (பி'ஆன்ஸே) *n.* மணஉறுதி செய்யப்பட்டவன், *fiancee n.* fem.

fiasco *n.* பெருந்தோல்வி, முறிவு, நகைப்புக்கிடமான முடிவு.

fiat (ஐ.அத்) *n.* கட்டளை, தீர்ப்பு, உரிமையளிப்பு.

fib *n.* சிறுபொய், குத்து, fibbing *n.* fibber *n.*

fibre *n.* நார்ப்பொருள், நார், உறுதியான நடத்தை.

fibroid *a.* நாரியல் அமைப்புடைய, *a fibroid* உடலிற்தோன்றும் கட்டி.

fibula *n.* முழங்காலுக்கும் பாதத்திற்கும் இடைப்பட்ட புறவனலும்பு.

fichu *n.* (பீஷூ) *n.* மகளிர் தோளிலணியும் துணி.

fickle *a.* அடிக்கடி மாறுகிற, ஒழுக்கம் குன்றிய.

fiction *n.* புனைகதை, நாவல், கற்பனைப்பொருள், fictitious *a.* கற்பனையான.

fiddle *n.* வயலின் கருவி, *with a face as long as a fiddle* துயரார்ந்தமுகம், *to play second fiddle* பிறரால் வழி நடத்தப்படுகிற, *fit as a fiddle* நன்னிலையில், *v.* வாளா இரு, வறிது காலம் போக்கு, வினையாட்டுத்தனமாக இரு, ஏமாற்று, களவெடு.

fiddle-dee-dee *n.* முட்டாள்தனம், மடத்தனம்.

fiddlesticks *n.* மடத்தனம்.

fidelity (பைடலிற்றி) *n.* கடமைதவறுமை, நம்பிக்கை உறுதி, சரியாயிருத்தல்.

fidget *v.* (பிஜிற்) அமைதியின்றி அலை, தொல்லை கொடு, கவலைப்படு, fidgety *a.*

fiduciary *n.* பொறுப்பாளர்

fie (பை) *int.* சீ! சீ! கேவலம்!, *fie upon you!* உன்னையிட்டு நீ வெட்கப்படவேண்டும்.

fief (பீப்) *n.* நிலமானிய அமைப்பின் கீழ் நிலம்.

field *n.* வயல், போர்க்களம், விளையாட்டுக்களம், செயற்களம், கனிப்பொருள் வயல், விளையாட்டுவீரர், *field day* வேலை மிகுதியான நாள், *field-events* ஓட்டம் தவிர்ந்த ஏனைய விளையாட்டுப் போட்டிகள், *field glasses n. pl* இரட்டைத் தொலைநோக்காடி, *Field Marshal* படை உயர்அதிகாரி.

fieldwork *n.* வெளிக்களவேலை.

fiend (பீன்ட்) *n.* தீய ஆவி, கொடுமைக்காரன்

fierce *a.* மூர்க்கமான, ஆர்வமுள்ள, கொடிய.

fiery (டபேறி) *a.* தீப்போன்ற, சடுஞ்சிவப்பு, சடுஞ்சூடு, வெடுவெடுப்புடைய.

fiesta (பி'எஸ்ற்ரு) *n.* விழா.

fife (பைப்) *n.* சிறு குழல்வகை.

fifteen *n.* பதினைந்து.

fifth *n.* ஐந்தாவது, ஐந்தில் ஒரு கூறு, *fifth column* ஐந்தாம் படை.

fifty *n.* ஐம்பது, fifty-fifty *a.* சமனாக, fiftieth *n.* ஐம்பதாவது

ஐம்பதில் ஒருகூறு, **fifties** *n. pl* 50-59 ஆம் ஆண்டுகட்கிடைப் பட்ட காலப் பகுதி.

fig *n.* அத்திமரம், *don't care a fig* சிறிதுகூட பொருட்படுத்தாதே.

fight *v.* சண்டையிடு, *fight shy of* தவிர்.

figment *n.* கற்பனைப்பொருள்.

figurative *a.* உவம உருவகமான, உருவமைப்புச் சார்ந்த, அணி வளமிக்க, குறித்துக்காட்டுகிற

figure *n.* உருவம், ஆள், எண் உடலமைப்பு, வடிவம், (*pl.*) எண் கணிதம், *v.* கற்பனை செய், இலக்கமிடு, குறிப்பிடு, *figure of speech* சொல்லணி, *cut a poor figure* முட்டாள் போல் தோற்றமளி, *cut a brilliant figure* சிறந்த தோற்றமளி, *at a high figure* மிகுவிலைக்கு, *at a low figure* மலிவாக

figurehead *n.* உரிமையற்ற தலைவர், கப்பல் முகப்பு, உருவத் தலை.

figurine *n.* சிறு உருவச்சிலை.

filament *n.* மெல்லிய நூல், மின் குமிழ் இழை.

filch (பில்ச்) *v.* திருடு.

file *n.* அராவுதற்கான கருவி கோப்பு, அணிவரிசை, ஆள் வரிசை, வரிசை, *single file* ஒரு வர்பின் ஒருவரான வரிசை, *rank and file* யாவரும், *file away* சமட்டுத்து, வரிசையாகச் செல், *v.* அராவு, சமட்டுத்து பதிவுசெய், வரிசையாகச்செல்.

filial *a.* பிள்ளைகள் சார்ந்த, *filial piety* பெற்றோருக்குப் பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமை.

filibuster *n.* இடையறாது தொடர்ந்து பேசி சட்டமாவதைத் தடுப்பவர், தன்னலனுக்காகப் பிறநாட்டுடன் சண்டையிடுபவர்.

filigree *n.* சரிகைப்பூவேலை.

filings *n. pl.* அராவல் தூள்.

fill *n.* நிறைவளிக்கும் அளவு, *fill in* நிரப்பு, அறிவி, பதிலியாயமை, *fill out* பெருப்பி, *fill up* நிறை, *v.* நிரப்பு, *fill the bill* தேவையை நிறைவு செய்.

fille de chambre n. வீட்டுப்பணிப் பெண்.

fille de joie n. பொதுமகள், விலைமகள்.

fillet *n.* தலைப்பட்டி, மெல்லிய நாடா, எலும்பில்லா இறைச்சி அல்லது மீன்துண்டு.

fillip *n.* தூண்டுதல், விரலால் அடித்தல்.

filly *n.* பெண் குதிரைக்குட்டி.

film *n.* மென் படலம், நிழற்படச் சுருள், திரைப்படம், *film star* திரைப்படநடிகர், **filmy** *a.*

filter *n.* வடிகட்டி, *v.* வடிகட்டு

filth *n.* அழுக்கு, இழிமொழி.

fin *n.* மீன் துடுப்பு, வானூர்தி உறுப்பு.

finagle *v.* நேர்மை தவறி நட.

final *a.* இறுதியான, கடைசி, **finals** இறுதித்தேர்வு.

finale (பினாலி) *n.* நாடகஇறுதிப்பகுதி, இசைமுடிப்பு, மங்களம்.

finance (பைனான்ஸ்) *n.* பொது நிதியாட்சி, பொருள்வரு வாய்த்துறை, *v.* பணங்கொடு

finch *n.* சிறுகுருவிவகை.

find *v.* கண்டுபிடி, பெறு, வழங்கு, முடிவுசெய்து அறிவி, *n.* கண்டுபிடிப்பு, கண்டுபிடித்த பொருள், *find out* கண்டுபிடி, தகவல்பெறு, *to find oneself* தன் ஆற்றலைக் கண்டறி, ஆற்றலைப்பயன்படுத்தும் வாய்ப்புப் பெறு, *find one's feet* நன்முகச் செயற்படும் வாய்ப்புப்பெறு finding *n.* தீர்ப்பு.

fine *n.* குற்றப்பணம், *a.* உயர்ந்த, அழகான, நேர்த்தியான தெளிவான, ஒல்லியான, மென்மையான, துகளான, தூய, நல்ல, *fine arts* நுண்கலைகள்.

finery *n.* பகட்டணிமணி, ஆலை, உலைக்களம்

finesse (பிநெஸ்) *n.* சூழ்ச்சி நுட்பம்.

finger *n.* விரல், *to have the business at one's finger tips* சிறிதளவே தெரிந்த, *a light fingered person* கள்வன்.

finger-post *n.* கைகாட்டு மரம்

finger-stall *n.* விரலுறை.

finicking *a.* முக்கியமற்ற செய்திகளில்மிகுந்த அக்கறை காட்டுகிற.

finis (பைநிஸ்) *n.* இறுதி

finish *n.* இறுதிக்கட்டம், முடிவுற்றநிலை, முடிவு, *v.* செய்துமுடி, அழி, முடிவுக்குக்கொண்டுவா, நிறைவுசெய்.

finite (பைநைற்) *a.* வரையறைக்குட்பட்ட, வினைவகையில் முற்றான.

fjord (ப்யோர்ட்) *n.* மலைப்பாறை சட்கிடையேயுள்ள இடுக்கமான கடற்கால்.

fir *n.* ஊசியிலைச்செடிவகை.

fire *n.* நெருப்பு, வேட்டு, சினம் *v.*, எரியூட்டு, வெடிக்கவை, வேகவை, வெளியேற்று, வேட்டுத்தீர், சினமூட்டு, *fire away* தொடங்கு, *fire brigade* தீயணைப்புப்படை *fire-escape* *n.* தப்புவழி, *catch fire* தீப்பற்றிக்கொள், கிளர்ந்தெழு, *fire an employee* பதவிநீக்கு, *fire and brimstone* சினக்குறிப்பு, *fire off* தொடர்ந்து விடுவு, *set fire to* தீக்கொளுவு, *set Thames on fire* குறிப்பிடத்தக்க செயல் செய்.

fire arm *n.* சுடுபடைக்கலன்.

fire brand *n.* குழப்பம் தூண்டுபவர்.

fire damp *n.* சுரங்க எரியாவி.

fire-dog *n.* விறகு அணை.

fire eater *n.* சண்டைப்பிரியர்

fire-fly *n.* மின்மினிப்பூச்சி.

fire-walk *n.* தீ மிதித்தல்.

firm *n.* வணிக நிறுவனம், *a.* உறுதியான.

firmament *n.* வானம்.

first *a.* முதலாவதான, *n.* முதலாவது, *adv.* முதலில், *first hand* நேரடியான, *first blush* பார்த்தவுடன், *First Cause* முதற்காரணம், கடவுள்.

first-aid *n.* முதலுதவி.

first-rate *a.* முதல்தரமான.

firth *n.* கடற்கழி, ஆற்றின் கழிமுகம்.

fiscal *a.* அரசு வருமானத்துக்குரிய.

fish *n.* மீன், *v.* மீன்பிடி, தேடு,

வெளிக்கொணர், பெறமுயல், *feeling like a fish out of water* ஒவ்வாத சூழலில் சிக்கித்தவிப் பவர், *a poor fish* மடையன், பயனற்றவன், *other fish to fry* வேறு முக்கிய வேலைகள், *a pretty kettle of fish* தாறுமா றான நிலை, *cry stinking fish* விற்பனைக்கு ஊறு செய்தல், *to fish in troubled waters* குழப்ப நிலையில் தன்னலம் பெருக்கல், *drink like a fish* அளவு மீறிக் குடி, *queer fish* விந்தைமிகு பழக்கமுடையவர்

fish-fag *n.* மீன் விற்பவள்.

fish-hatchery *n.* மீன் வளர்க்கும் பண்ணை.

fish-monger *n.* மீன் விற்பவர்.

fish-plate *n.* தண்டவாள இணைப்பு.

fishy *a.* மீன் சார்ந்த, ஐயமுண்டு பண்ணுகிற, *sounds fishy* பொய் யான, நேர்மையற்ற, *fishy-eye* ஒளியற்ற பார்வை, கருத் தில்லா நோக்கு.

fissydactyl *a.* பிளவுண்ட விரல் களுடைய.

fissile *a.* பிளவு படக்கூடிய.

fissilingual *a.* பிளவுண்ட நாக்கு டைய.

fission *n.* அணுப்பிளப்பு.

fissiparous *a.* பிளவுபடுகிற.

fissure *n.* வெடிப்பு, பிளவு.

fist *n.* கைமுட்டி, *close-fisted* கஞ்சத்தனம், *fist law* வல்லான் வகுத்தது.

fisticuffs *n. pl.* கைக்குத்துச் சண்டை.

fistula *n.* புரையோடிய புண்.

fit *n.* வலிப்பு, திடீர் உணர்வு ழப்பு, *to do things by fits and starts* விட்டு விட்டுச் செய்தல்· *a.* பொருத்தமான, போதியள வான, *Law of survival of the fittest* சூழலுக்குப் பொருந்த வாழ்பவை வாழ்ந்து பெருகும் எனும் கோட்பாடு, *fit to drop* நன்றாகக் களைத்த, *to be as fit as a fiddle* உடல் நலத்து டன்.

fitful *a.* விட்டுவிட்டு இயங்குகிற.

fittings *n. pl.* துணைக்கருவிகள், தளபாடங்கள்.

five *n.* ஐந்து.

fiver *n.* ஐந்துபவுண் தாள் நாண யம்.

fives *n. pl.* பந்தாட்ட வகை.

fix *v.* பொருத்து, உறுதிப்படுத்து, பதியவை, திருத்து, ஒழுங்கு படுத்து, போதைப் பொருள் உட்செலுத்து, *n.* இக்கட்டு நிலை, போதைப்பொருள் அளவு, *fix up a quarrel* தீர்த்து வை, *in a bad fix* இக்கட்டுநிலை யில்.

fixed *a.* நிலையான, உறுதியான, *fixed capital* இயந்திரம் தள வாடம் முதலிய முதலீடு, *fixed property* நிலைப் பொருளுடமை *fixed deposit* நிலையானவைப்பு

fixture *n.* பொருத்தப்பட்ட பொருள், குத்தகத்துக்குக் குறிப்பிட்ட நாள்.

fizgig *n.* காதலாட்டம் ஆடித்தி ரிபவள், வாணவெடி, அற்பப் பொருள், *a.* நிலையற்ற, துடிப் புப் போக்குடைய

fizz *n.* குபுவகை, 'உஸ்' எனும் ஒலி.

fizzle *v.* 'உஸ்' என ஒலிசெய்

fizzle out புசுபுசுத்துப்போ, தோல்வியுறு.

flabbergast *v.* வியப்புறச் செய்.

flabby *a.* உறுதியில்லாத, மொத்தமான, மனத்திட்பமில்லாத, மென்மையான.

flaccid (ப்ளக்ஸிட்) *a.* நிலையில்லாத, தளர்ந்த, சுருக்கம் விழுந்த, தொங்குகிற.

flag *n.* அடையாளக்கொடி, தளவரிசைக்கல், செடிவகை, இறகிலைலான எழுதுகோல், *v.* கொடிகட்டு வலுவிழக்கப் பெறு, வாடு, சோர்வுறு, *black flag* கடற் கொள்ளையர் கொடி, *white flag* போர் நிறுத்த அறிகுறிக் கொடி, *yellow flag* கப்பலில் தொற்று நோயுள்ளதை அறிவிப்பது.

flagellate (ப்ளஜிலேற்) *v.* சவுக்கடி.

flagitious *a.* தவறுன, வெட்கக்கேடான.

flagrant (ப்ளேக்றன்ற்) *a.* படுமோசமான, பெரிய, *a flagrant wrong-doer* கெட்டமின்றி வெளிப்படையாகத் தவறு செய்பவன்.

flagstone *n.* நிலத்திற் பதிக்கும் கல்.

flail *n.* கூடடிக்கும் கோல்.

flair *n.* இயல்பான திறமை, விருப்பு.

flak *n.* விமானஎதிர்ப்புவேட்டு.

flake *n.* அடுக்குநிலை, சட்டம், சிறுபென் துண்டு, *flake out* மயக்கம், களைப்பினால் ஏற்படும் தூக்கம்.

flambeau (ப்ளம்போ) *n.* தீப்பந்தம்.

flamboyant *n.* பகட்டான, ஆர்ப்பாட்டமான, *n.* செந்நிற மலர்வகை.

flame *n.* தீப்பிழம்பு, கடுஞ்சிவப்பு, *old flame* முன்னைட்காதலி, *she is a flame of his* அவனுல் காதலிக்கப்படுபவள்.

flamingo *n.* செந்நிறநீர்ப்பறவை

flan *n.* பணியாரவகை.

flange (ப்ளன்ஜ்) *n.* நீட்டிக் கொண்டிருக்கும் விளிம்பு.

flank *n.* பக்கம், *v.* பக்கத்தில் இடம் பெறு.

flannel *n.* கம்பளித்துணிவகை.

flap *v.* மேல்கீழாய் அசை, 'ப்ளப்' எனும் ஓசையுடன் அசை, தட்டு, *n.* தொங்குதல், கிளர்ச்சி, *in a flap* பரபரப்பு.

flapdoodle *n.* பித்தலாட்டம்.

flapjack *n.* பணியாரவகை.

flapper *n.* பதினருட்டைப் பருவத்தள்

flare *v.* திடீரென எரி, சினங்கொள், புடை, *n.* எரிதல், புடைத்துநிற்றல், *a flare up* திடீரென ஏற்படும் பயங்கர சண்டை.

flash *n.* திடீரொளி, திடீருணர்ச்சி, குறுகியநேரம், செய்தித்துணுக்கு, *flash flood* அழிவு செய்யும் திடீர் வெள்ளம், *v.* மின்னிடு, பளிச்சிடு, விரை, திடுபெனத் தோன்று *flash-back* முன்னிகழ்ன்வச்சுறல்

flashy *a.* பகட்டான.

flask *n.* புட்டிவகை, வெந்நீர்ப் புட்டி.

flat *a.* தட்டையான, முழுமையான, சலிப்புத்தருகின்ற,

வலுவிழந்த, மென்மையான, கிடையான, *adv.* முழுமையாக, சரியாக, மந்தமாக, *n.* மட்டமான நிலம், தட்டையான பொருள், மாடிவீடு, தொனி குறைக்கப் பெற்ற இசை மானம், *flat rate* ஒரேவீதம். *fall flat* சுவையின்றிபிரு, *tell him flat* தெளிவாகக்கூறு.

flatter *v.* முகப்புகழ்ச்சி செய், மிகைபடக்கூறு. பெருமை படப்பேசு, மிகைப்படுத்திக் காட்டு, *the picture flatters her* அழகை மிகை படக்காட்டுதல்.

flatulence *n.* வயிற்றுப்பொருமல், **flatulent** *a.* உப்பலான.

flaunt (ப்ளோன்ற்) *n.* வீறுப்பு, *v.* ஆர்ப்பரி.

flautist (ப்ளோற்றிஸ்ற்) *n.* வேய்ங்குழலூதுபவர்.

flavour *n.* தனிச்சுவை, நறுமணம் *v.* நறுஞ்சுவையூட்டு, **flavouring** *n.*

flaw *n.* களங்கம், பிளவு, குறைபாடு. *v.* பிள, கெடு.

flax *n.* சணல்வகை, **flaxen** *a.* மென்மஞ்சள் நிறமான.

flay *v.* தோலுரி, கடுமையாகக் கண்டி.

flea *n.* தெள்ளுப்பூச்சி, *flea-market* தெருச்சந்தை, *flea-bite* அற்ப பொருள், தெள்ளுக்கடி.

fleek *n.* மறு, வண்ணப்புள்ளி.

fledged *a.* முழுவளர்ச்சியுள்ள இறக்கையுடைய, பறக்கக்கூடிய, நன்கு பயிற்சி பெற்ற, *newly fledged doctor* தொழில் புரிய புதிதாக உரிமை பெற்றவர், *full fledged* முழு உரிமை பெற்றவர்,

fledgling *n.* புதிதாகச் சிறகு முளைத்த குஞ்சு, உலக அனுபவமற்றவர்.

flee *v.* தப்பி ஓடு.

fleece *n.* கம்பளியாட்டு மயிர், *v.* ஏமாற்றிப் பறி.

fleer *n.* ஏளனம், குத்தல் *v.* கிண்டல் செய்.

fleet *n.* கடற்படை, கப்பற்கூட்டம், ஊர்திகளின் தொகுதி *a.* விரைந்து செல்லுகின்ற, *fleet-footed* விரைந்தோடக் கூடிய.

Fleet Street பெரும்பாலான செய்தித்தாள்கள் வெளிவரும் லண்டன் தெரு.

flesh *n.* இறைச்சி, உடல், பழச்சதை, *flesh and blood* மனித இயல்பு, உறவினர், *appear in the flesh* தானே வருதல், *put on flesh* பருமனாகு, *lose flesh* இளைத்துப்போ.

flex *v.* வளை, *n.* வளையக்கூடிய மின்கம்பி, **flexible** *a.* வளையத்தக்க, மாற்றக்கூடிய, **flexibility** *n.* நெகிழுந்தன்மை

flibbertigibbet *n.* ஒழுக்கஉரமற்றவர்.

flexitime *n.* நெகிழ்ச்சியான வேலைநேர அமைப்பு.

flick *n.* சடாரென மெல்லமாய் அடித்தல், திரைப்படம், சுண்டுதல்.

flicker *v.* நடுங்கு, விட்டுவிட்டெரி, *n.* குறுகிய நிகழ்வு, ஒளி நடுக்கம்.

flight *n.* பறத்தல், ஓட்டம்.

flighty *a.* உறுதியில்லாத, நம்ப முடியாத.

flimsy *a.* மெல்லிய, உடையக் கூடிய, எளிதில் அழிக்கக்கூடிய, உறுதியில்லாத, நம்பவைக்க முடியாத.

flinch *v.* தயங்கு, பின்வாங்கு, பின்னிழு.

flinders *n. pl.* சிதறல்கள்.

fling *v.* எறி, விரை, *have a fling at* முயல்தல், *in full fling* உச்சக்கட்டத்தில்.

flint நெருப்புண்டுபண்ணக்கூடிய கல்.

flip *v.* சுண்டிவிடு, *n.* இலேசான அடி, அவசர சுற்றுலா, குறுகிய வான் செலவு.

flippant *a.* பொறுப்பற்ற, கவலையற்ற, மேற்போக்காக எண்ணுகின்ற.

flirt *n.* திடீர்க்குலுக்கு, காதலிப்பதுபோல நடிப்பவர், *v.* போலிக்காதல் புரி, அங்குமிங்கும் அசை.

flit *n.* இடம்பெயர்தல், *v.* களவாக நழுவு, விரைந்துசெல், *do a moonlight flit* கடன் கொடுக்காமல் தப்புவதற்காக இரகசியமாக வீட்டைவிட்டு வெளியேறல்.

flitch *n.* பன்றியின் விலா இறைச்சி.

float *v.* மிதக்கச் செய், தொடங்கு, பரவச்செய், *n.* வண்டில், பணம், மிதவை, *floating voter* கட்சி சார்பற்றவர்.

flock *n.* குழாம், கூட்டம், மயிர்க்கற்றை *flower of the flock* குடும்பத்தில் தலையாய பிள்ளை

floe *n.* மிதக்கும் பனிப்பாளம்.

·og *v.* பிரம்பினலடி, விற்பனை செய்.

flood *n.* வெள்ளம், *flood-tide* முன்னேறும் கடல் வெள்ளம், Noahs Flood நோவா காலத்திய ஊழி வெள்ளம்.

floor (ப்ளோ) *n.* வீட்டின் நிலத்தளம், மாடி, தளம், *v.* விழுத்து, திகைக்கவை, *he was floored* வினவுக்கு விடையளிக்கத் தவறினான், *he has the floor* பேசப்போகிறான்.

flop *v.* தொப்பென விழு, தோல்வியுறு, floppy *a.*

flora *n. pl.* ஓரிடத்துப்பயிர், ஒரு காலத்துப்பயிர், *flora and fauna* பயிர்களும் விலங்குகளும்.

floral *a.* மலர்சார்ந்த.

florescent *n.* பூக்கும் பருவம்.

floriculture *n.* பூச்செடிவளர்ப்பு.

florid *a.* பூவொத்த, அணிசெய்யப்பெற்ற, செக்கச்சிவந்த, *florid speech* நயமிக்கபேச்சு.

florin *n.* பிரித்தானிய நாணய வகை.

florist *n.* பூவிற்பவன், மலர்ப்பண்ணையாளர்.

floss *n.* பட்டு நூற் திரள்.

flotilla *n.* சிறுகப்பற்படை, ஒரே வகைப்போர்கப்பல்கள்.

flotsam *n.* உடைந்தகப்பலின் மிதக்கும் பொருள்கள் *flotsam and jetsam* எச்சமிச்சங்கள்

flounce *v.* பொறுமையிழந்து சினமுற்றவர்போல் நட, கொய்சகம், தொங்கல்.

flounder *v.* தடுமாறு, தள்ளாடிச்செல், *n.* தட்டையான சிறு மீன் வகை.

flour (ப்ளவர்) *n.* மாவு.

flourish (ப்ளறிஷ்) *v.* தழைத் தோங்கு, வளங்கொழி, வெற் றிபெறு, சுறுசுறுப்பாயிரு, சுழற்று, *n.* அணிவகாவு, நாட கபாணி, செழுமை, பல்லிய முழக்கம்.

flout *n.* ஏளனம், அவமதித்தல், மறுத்தல்.

flow *v.* நீரோட்டம் போலச் செல், தடங்கலின்றிச்செல், பாய்ந்து செல்.

flower (ப்ளவர்) *n.* பூ, மிகச்சிறந் த பகுதி, *the flower of life* புலன்கள் நன்னிலையிலுள்ள காலம், *flower of the flock* குடுமபத்தில் தலையாய பிள்ளை.

flu (ப்ளூ) *n.* தடிமல்.

fluctuate *v.* மாறுபடு, நிலையற் றிரு, ஏறியிறங்கு, fluctuation *n.* ஏற்றஇறக்கம்

flue *n.* புகைபோக்கி குழாய், தும்புதூசு.

fluent *a* தங்குதடையின்றி, ஆற்றொழுக்கான, fluency *n.*

fluff *n.* மென்மையான பொருள் *v.* மென் திரளாக்கு, fluffy *a.*

fluid (ப்ளூட்) *a.* ஒழுகியல்பு டைய, உறுதியற்ற, மாறுபடு கிற, *n.* ஒழுகியற் பொருள்.

fluke *n.* எதிர்பாரா வெற்றி, நங்கூரக்கொக்கி, திமிங்கில வால் அலகு, தட்டை மீன் வகை, உருளைக்கிழங்கு.

flummery (ப்ளமறி) *n.* பிதற்றல், இனிப்புப்பணியாரவகை.

flummox (ப்ளமக்ஸ்) *v.* இடருண் டாக்கு, வியப்பிலுல் பேச்சற் றிரு, விடையளிக்கமுடியாதிரு.

flunk *v.* தவறு, தோல்வியுறு.

flunkey *n.* சிறப்புடையணிந்த ஏவலன், சலுகைபெறுதற்காக பணிவிடைசெய்பவன்.

fluorescent *a.* மின்னொளிகாலு கிற.

fluoride *n.* பற்சிதைவு தடுக்கும் பொருள்.

fluoroscope *n.* என்புருகாட்டும் கருவி.

flurry (ப்ளறி) *n.* பனிப்புயல், சிறுபுயல், திடீர்மழை, பரப ரப்பு, குழப்பம்.

flush *v.* முகஞ்சிவப்பாகு, பெரு மிதமுறு, வெள்ளக்காடாக்கு, வெளியேற்று, *n.* முகஞ்சிவத் தல், உணர்ச்சிப் பெருக்கு, நீர்ப்பெருக்கு, பயிர்வகை மலர்ச்சி, *a.* மட்டமான, நிறை வளமுடைய.

fluster *v.* பரபரப்புறு, குழப்ப மடை, *n.* குழப்பம்.

flute *n.* வேய்ங்குழல், தூண் ஒப் பனை.

flutter *v.* சிறகடித்துக் கொள், இருதயத்துடிப்பு ஒழுங்கற் றிரு, *n.* படபடப்பு, கலக்கு.

fluvial *a.* ஆறு சார்ந்த.

flux *n.* பாய்வு, தொடர்ந்தமாறு பாடு.

fly *n.* ஈ, திரைமறைப்பு, ஒற் றைக் குதிரை வண்டில், பறத் தல், *v.* பற, பறக்கவிடு, விரைந்துசெல், *a.* நுண்ணறி வுடைய, சூழ்ச்சித்திறமுடைய, *a fly in the ointment* மதிப்பி றக்கம் செய்யும் அற்பபொ ருள், *a fly on the wheel* தானின்றி அமையாது என

கருதும் முக்கியத்துவமற்றவன், *to fly high* உயர்நோக்கங்கொண்டிரு, *return with flying colours* பெருவெற்றியுடன் திரும்பு.

flyblown *a.* ஈ எச்சத்தால் மாசுற்ற.

fly-by-night *n.* இரவில் வீணுயலுபவர், கரந்துறையும் கடனாளி.

flyer *n.* பறவை, வானூர்தி ஓட்டி.

flying *a.* பறக்கக்கூடிய, *flying squad* விரைந்தியங்கும் பொலீஸ் பிரிவு,

flyleaf *n.* பொத்தகத் தொடக்கத்தில் அல்லது முடிவில் அமைந்த வெற்றுத்தாள்.

flyweight *n.* குத்துச் சண்டை நிறை (51 கில்லோ கிராம்).

foal *n.* குதிரையினத்தின் குட்டி, *v.* ஈனு, *in foal* கருவுற்ற.

foam *n.* நுரை, *to foam at the mouth* சீற்றங் கொண்டு.

fob *n.* கடிகாரச் சங்கிலி, *to fob a person off with* தரக்குறைவான பொருளை ஏமாற்றி ஏற்கவை.

focal *a.* குவிமையம் சார்ந்த, **focus** *n.* குவிமையம், தெளிவாக, உருவம் தோன்றும் தொலை, செயல்மையம், *v.* ஒருமுகப்படுத்தும்.

fodder *n.* உலர்ந்த விலங்குணவு, வைக்கோல்.

foe *n.* எதிரி.

foetid (பீற்றிட்) *a.* கெட்டமணமுள்ள,

foetus (பீற்றஸ்) *n.* முதிர்கரு

fog *n.* மூடுபனி, *v.* குழப்பமாக்கு, மூடுபனியால்மறை, **foggy** *a.* பனிகவிந்த, தெளிவற்ற.

fogey *n* (போகி) பழமைக் கருத்துள்ளவர், (*pl.* -*gies*)

foible *n.* நடத்தைக்குறைபாடு.

foil *n.* மென்தகடு, தோல்வி, மொட்டை வாள்வகை, தோல்வியுறச்செய்.

foist *v.* ஏற்கச்செய்.

fold *n.* ஆடடைக்கும் பட்டி, மந்தை, மடிப்பு, *v.* பட்டியில் அடை, மடி.

folder *n.* மடிப்பவர், துண்டுப்பிரசுரம், மடிப்பதற்கான கருவி.

folderol *n.* பழம்பாடல்களில் வழங்கும் கருத்தற்ற சொற்கள்.

foliage *n.* இலைகள்.

folio *n.* பெரிய அளவிலான பொத்தகம், பக்க எண்.

folk *n.* மக்கள், உறவினர், *folk-dance* நாட்டார் ஆடல், *folk song* நாட்டார் பாடல், *folk-lore* மரபுவழிக் கதைகளும் நம்பிக்கைகளும், *folk tale* மரபுக்கதை.

follicle *n.* மயிர்ப்புழை விதைப்பை.

follow *v.* பின்தொடர், கூர்ந்து பார், பொருள்புரிந்துகொள், முன்னேற்றத்தில் அக்கறை கொள், அமைந்து நடபயனுகு, விளைவாய் அமை. *follow suit* பின்பற்றிச் செய், *follow the sea* கப்பலோட்டியா

யிரு, *follow your nose* நேரே செல்.

following *n.* ஆதரவாளர்குழு, *a.* பின்வருகின்ற *prep.* பினவாக.

folly *n.* மடமை, மடச்செயல் பயனற்ற அழகு மாளிகை.

foment *v.* ஒற்றடங்கொடு, தொல்லை கொடு, தூண்டு, **fomentation** *n.*

fond *a* விருப்புள்ள, அளவுமீறிய அன்புகொண்ட, *a fond mother* அளவுமீறிய அன்பினால் பிள்ளை கட்கு தீமைசெய்யக்கூடிய தாய்.

fondle *v.* அன்பாகத்தட்டு, தடவிக் கொடு.

fondue *n.* நறுமணமூட்டிய உருகிய பாற்கட்டி.

font *n.* ஞானஸ்நான நீர்த் தொட்டி.

food (பூட்) *n.* உணவு, **food-stuff** *n.* உணவுப்பண்டம்.

fool (பூல்) *n.* அறிவிலி, பேதை, கோமாளி, பழச்சுவையூட்டிய களி, *fool away one's time* வீணுப்பொழுது போக்கு *All Fools' day* ஏப்ரல் முதல் நாள், *fool's-cap* படியாத பிள்ளைக்குப் போடும் வெண் தாள் தொப்பி *foolscap.* 17"x13½" அளவானதாள்

foolery *n.* மடச்செயல்.

foolhardy *a.* மடத்துணிவுடைய.

foolproof *a.* எளிதாகப்பயன் படுத்தக்கூடிய, தவறேற்படாத.

foot (புட்) *n.* பாதம், அடி, கீழ்ப்பகுதி, *to set a plan on foot* தொடங்கு, *to stand on your own feet* உன் ஆற்றலையே நம்பு, *carried them off their feet* எழுச்சியூட்டு *to foot the bill* பணங்கொடு,

footage *n.* அடியளவு.

football *n.* காலடியோசை.

foothills *n pl* மலையடிக்குன்றுகள்

foothold *n.* ஏறுதற்கு காலடி வைக்கக்கூடிய இடம், மேற் செல்லுதற்கான தொடக்கம்.

footing *n.* கால்வைப்பு, சமநிலை நிலைமை, மதிப்பு.

footlights *n. pl.* மேடைத்தள விளக்கு வரிசை.

footling *a.* மிகச்சிறிய.

footloose *n.* கட்டுப்பாடற்ற, பொறுப்பில்லாத.

footmark *n.* அடிச்சுவடு.

footnote *n.* அடிக்குறிப்பு.

footpad *n.* வழிப்பறித் திருடன்.

footpath *n.* நடைபாதை.

footsure *a.* நடப்பதால் ஏற்படும் அடிப்புண்ணுடைய.

footstep *n* அடி, படிக்கட்டு, *in one's foot steps* பின்பற்றிநட.

footwear *n.* பாத அணி.

foozle *n.* பந்தைச் சரியாக அடியாமை, வேலை அரைகுறையாய்ச் செய்தல்.

fop *n.* பகட்டாய்த் திரிபவன், உடைப்பிரியன்.

for *prep.* ஆக, பொருட்டு, *conj.* ஏனெனில்.

forage *n.* கால்நடை உணவு தேடுதல், *v.* தேடு.

foray *n.* திடீர்த்தாக்குதல், திடீர்ச்

சோதனை.

forbear *v.* தவிர்த்திரு.

forbearance *n.* பொறுமை, பொறுத்தல்.

forbid *v.* தடையாணையிடு, இசைவுமறு, தடு forbidden *a.* தடுக்கப்பெற்ற.

forbidding *a.* கவர்ச்சியற்ற, கடுமையான, கொடிய.

force *n.* வலு, கடுமுயற்சி, தாக்காற்றல், படைஞர், வற்புறுத்தல், *v.* கட்டாயப்படுத்து, தகர்த்தெறி, முதிர்ச்சியடையச்செய், கடுமையாய் உழை.

force-feed *v.* விருப்பத்துக்குமாறுக ஊட்டு.

forceful *a.* ஆற்றல்மிக்க.

force meat *n.* சிறிதாக அரிந்து பக்குவப்படுத்திய இறைச்சி.

forceps *n. pl.* இடுக்கி, குறடு.

ford *n.* ஆற்றினூடு நடந்துசெல்லக்கூடிய பகுதி.

fore-*pref* முன், *fore and aft* முன்னும் பின்னும்.

fore *n.* முற்பகுதி, *a.* முன்புறமுள்ள, *adv.* முன்னல், *prep.* முன்னிலையில்.

forearm *n.* முன்கை, *v.* முன்னெச்சரிக்கையாயிரு.

forebears *n. pl.* மூதாதையர்.

foreboding *n.* தீக்குறி, இடர்வரப்போவதை முன்கூட்டியே உணர்தல், forebode *v.*

forecast *v.* வருவதுரை, குறிசொல், *n.* முன்கணிப்பு, வானிலை அறிவிப்பு.

foredoom *v. foredoomed to failure* தோல்வி முடிவுசெய்யப்பட்டது.

fore fathers *n. pl.* மூதாதையர்.

foregoing *a.* முந்தைய.

foregone *a. foregone conclusion* முன்கூட்டியே அறியக்கூடிய முடிபு.

forehead (பொறிட்) *n.* நெற்றி.

foreign (பொறின்) *a.* வெளிநாட்டுக்குரிய, புறம்பான, foreigner *n.* வேற்றுநாட்டவர்.

foreleg *n.* விலங்கின்முன்னங்கால்.

forelock *n.* நெற்றிமயிர்.

foreman *n.* பிறரைக்கண்காணிக்கும்வேலையாள், ஜூரர்தலைவர்

foremost *a.* முற்பட்ட, முதன்மையான, முக்கியமான.

forenoon *n.* முற்பகல்.

forensic *a.* வழக்குமன்றஞ்சார்ந்த, *forensic medicine* சட்டஞ்சார்ந்த மருத்துவ அறிவு.

forerdain *v.* முன்னரே அறுதியிடு.

forerunner *n.* முன்னோடி.

foresee *v.* முன்னுணர், முன்னறி.

foreshadow *v.* முன்னிழலிடு, முன்குறித்துக்காட்டு.

foresight *n.* முன்னோக்கு, முன்னறிதிறம்.

foreskin *n.* ஆண்குறி நுனித்தோல்.

forest *n.* காடு.

forestall *v.* முன்னடவடிக்கையெடுத்து தடு.

forestry *n.* காட்டியல், காடு வளர்க்கும் கலை.

foretaste *n.* முன்னுகர்வு, முன்னனுபவம்.

foretell *v.* வருவதுரை, முன்கூறு.

forethought *n.* முன்னறிவு.

forever *adv.* என்றென்றைக்கும், எல்லாக்காலத்துக்கும்.

forewarn *v.* முன்கூட்டி எச்சரிக்கை செய்.

foreword *n.* முன்னுரை.

forfeit (போபிற்) *n.* தண்டம், பறிமுதல், *v.* இழ, தண்டம் செலுத்து.

forfend *n.* தவிர், வேறுபக்கந் திருப்பு.

forgather *v.* ஒன்றுசேர்.

forge *v.* முயன்று முன்னேறு, உருவாக்கு, போசடிசெய், *n.* கொல்லன் உலைகளம், forgery கள்ளப்பத்திரம் எழுதுதல், பொய்க் கையெழுத்திடல்.

forget *v.* மற, நினைக்காமலிரு, forget-me-not *n.* மலர்ச்செடி வகை.

forgive *v.* மன்னித்துவிடு, பொறுத்தருள்.

forgo *v.* விலக்கிவாழ், கைவிடு,

fork *n.* முட்கரண்டி, கவைமுள். கவர், மண்வாரி, பிரிவு *v.* கவைக்கோலால் கிண்டு, கிளை விடு, கிளைவழிச்செல் *fork out* பணங்கொடு.

forlorn *a.* கைவிடப்பெற்ற, மகிழ்ச்சியற்ற, *forlorn hope* அரைகுறைநம்பிக்கை.

form *n.* வடிவம், தோற்றம், வகுப்பு, உருவகை, அமைப்பு, முறைமை, பத்திரம், நிலை. முயல் மயிர், *v.* வடிவம்கொடு உருவாக்கு, உருவாகு, விருத்தி செய், கட்டமை.

formal *a.* ஒழுங்குநவருந, வடிவம் சார்ந்த, மரபொத்த, சம்பிரதாயமான, வழக்கமான formality *n.*, formalize *v.*

format n. பொத்தக அளவும் வடிவமும்.

forme *a.* முற்றிய, *pron.* முந்தியது, formerly *adv.* முன்னாளில்,

formidable *a* எதிர்க்கமுடியாத. அச்சந்தரும், பயபத்தி உண்டு பண்ணுகிற, கடினமான.

formula *n.* குறியீடு, வாய்பாடு, சேர்மானப்பட்டியல், formulate *v.* தெளிவாக்கு.

fornication *n.* மணமாகா ஆண் பெண்கலவி, fornicate *v.* மணமாகா முன் புணர்ச்சி செய்.

forsake *v.* துற, துணைமறு, விலக்கு, கைவிடு.

forsooth *adv.* உண்மையாக,

forswear *v.* துற, வாக்குறுதியை, பொய் ஆணையிடு.

fort *n.* கோட்டை, *v.* அரண்செய். *forte* (போட்டி) உரத்த, *n.* தனித்திறன்.

forth *adv.* வெளி, முன், முன்னோக்கி, *back and forth* அங்குமிங்கும்.

forthcoming *a.* வரவிருக்கிற, கிடைக்கக்கூடிய, தயாராகவுள்ள, பயன்தருகிற, தகவல் தருகிற.

forthright *a.* வெளிப்படையாகச் சொல்கிற, ஒளிவுமறைவின்றி நேர்மையான.

forthwith *adv.* உடனே.

forties *n. pl.* 40 ற்கும் 49 ற்கும் இடைப்பட்ட பத்தாண்டுப் பகுதி, *Hungry Forties* இங்கிலாந்தில் வறுமை நடமாடிய 1840 க்கும் 1849 க்கும் இடைப்பட்ட ஆண்டுக்காலம், *roaring forties* தென்னேர்கோடு 40

பாகைக்குத் தெற்கே மேற் புயல் வீசும் கடற்பகுதி

fortify *v.* பலப்படுத்து, உறுதிப் படுத்து, உரமூட்டு, **fortification** *n.* காப்பரண்.

fortissimo *adv.* மிக உரத்த.

fortitude *n.* மனவலிமை.

fortnight *n.* பதினான்குஇரவு, இருவாரம்.

fortnightly *adv.* இருவாரத்துக் கொருமுறையாக, *a* இருவாரத்துக்கொருதடவை நிகழ்கிற

fortress *n.* அரண் செய்யப் பெற்ற நகர், கோட்டை.

fortuitous *a.* தற்செயலான.

fortunate *a.* நற்பேறுடைய, அதிட்டமான.

fortune *n.* நல்வாய்ப்பு, ஊழ், பெருவளம், வெற்றி, செழுமை, *fortune teller* வருவதுரைப்பவர், *fortune hunter* பெருஞ்செல்வரை மணமுடித்து பணம் பெற முயல்பவர்.

forty *a.* நாற்பது, *forty winks* சிறு துயில், *the Forty-five* 1745 ஆம் ஆண்டின் ஜக்கோபைட் கிளர்ச்சி.

forum *n.* பட்டிமன்றம், கருத்தரங்கு.

forward *n* முன்வரிசைப்பந்தாட்டக்காரர், *a.* முனேக்கிய, முந்திச்செல்கிற, *adv.* முனேக, வருங்காலத்தில் *v* அனுப்பிவை முனேற்றத்துக்குதவு.

fosse (பொஸ்) *n.* அரணுய் அமையும் அகழ.

fossil *n.* புதைபடிவம், *an old fossil* தனகருத்தை மாற்ற மறுக்கும் முதியவர்.

foster *v.* வளர்ச்சிக்கு துணையாயிரு, வளர், *foster child* வளர்ப்புக்குழந்தை, *foster mother* வளர்ப்புத்தாய்.

foul *a.* வெறுப்புத்தருகிற, தவறான, அழுக்கான, சிக்கலான, நேர்மையற்ற, *n.* தவறான ஆட்டம், *v.* தடு, தவறுசெய், சிக்கவை, மாசுபடு, *foulmouthed* இழிசொல் பேசுகிற, *foul play* தீய செயல், *fall foul of* சண்டைபிடி, *play foul* ஏமாற்று, தவறுக ஆடு.

foulard (பூலாட்) *n.* மென்பட்டு வகை.

found *v.* நிறுவு, அடிப்படையிடு, தொடங்கிவை, கட்டு, பணம் வழங்கு, அடிப்படையாய்க் கொள், உருக்கு, உருக்கிவார், **founder** *n.*, **foundress** *n. fem.*

foundation *n* அடிப்படை, அடிப்படைக்கோட்பாடு, நிறுவனம், அறநிலையம்.

founder *v* விழு, அமிழ், இடறு, தோல்வியுறு, *n.* நிறுவுபவர், அறக்கொடை அளிப்பவர், வார்ப்புவேலை செய்பவர்.

foundling *n.* கைவிடப்பெற்ற குழந்தை, எடுப்புப்பிள்ளை.

foundry *n.* வார்ப்படக்களம்.

fount *n.* ஊற்று, மூலம், ஒரே சீரான அச்சுரு.

fountain *n.* ஊற்று, *fountain-head* ஆற்றுத்தோற்றுவாய், தொடக்கம்.

four *n.* நான்கு, *the Four Freedoms* 1941 இவ் ரூஸ்வெல்ட் வகுத்த பேச்சுரிமை வழிபாட்டுரிமை வறுமைகாப்புரிமை அச்சுக்காப்புரிமை, ஆகியன

four-in-hand *n.* நான்கு குதிரை பூட்டிய வண்டி.

foursome *n.* நால்வர்குழு.

fowl *n.* கோழி, பறவை பறவை இறைச்சி.

fox *n.* நரி, சூழ்ச்சிக்காரன், *v.* ஏமாற்று, தந்திரமாகச் செயற்படு, foxed *a.* வெறிமயக்க முள்ள, புள்ளி விழுந்த, உரு வழிந்த

foxglove *n.* பூச்செடிவகை.

fox-terrier *n.* நாய்வகை, fox trot கூத்துவகை.

foyer *n.* வாயிலிலமையும் அறை

fracas *n,* அமளி, குழப்பம், சண்டை, *pl.* fracas.

fraction *n.* பின்னம், கூறு *improper fraction* தகாப்பின்னம். *proper fraction* தகுபின்னம் *Vulgar fraction* பொதுநிலைப் பின்னம், *a fraction of a second* மிகக் குறுகிய நேரம்.

fractious *a.* சடுசிடுப்பான.

fracture *n.* முறிவு, *v.* முறிவுண்டாக்கு, வெடிப்புறு.

fragile *a.* உடையக்கூடிய, வலுவற்ற.

fragment *n.* உடைந்த துண்டு, தனிமைப்படுததப்பட்ட பகுதி *v.* நொருங்கு,

fragrance *n.* நறுமணம்.

frail *a.* வலுவற்ற, மெலிந்த. frailty *n.* நாணற்புல்.

frame *n.* சட்டம், உடலமைப்பு, பெட்டிச்சட்டம், *v.* சட்டமிடு, கூடு, சொல்லில் வடி, உருவாக்கு.

franc *n.* பிரெஞ்சு நாணயம்.

franchaise *n.* வாக்குரிமை, விற்பனையுரிமை.

Franciscan *n.* தூய பிரான்சிஸ் மடத்துத் துறவி.

frank *a* ஒளிவு மறைவில்லாத, நேர்மையான, *v.* கடிதமீது பொறிவை.

Frankenstein *n.* தன்படைப்பால் தனக்கே அழிவுதேடுபவர், *Frankenstein's monster* ஆக்கியவர்க்கே அழிவு தருவது.

frankincense *n* குங்கிலியம், சாம்பிராணி.

frantic *a.* வெறிபிடித்த.

fraternal *a.* உடன் பிறப்புப் போன்ற, fraternity *n* fraternize *v.* நட்புக்கொள்

fratricide *n.* உடன்பிறப்பைக் கொல்லுதல்.

fraud (ப்ரோட்) *n.* ஏமாற்றுக்குற்றம், ஏய்ப்பு, போலி.

fraudulent *a.* ஏமாற்றும் இயல்புடைய.

fraught *a* சுமையேற்றப்பெற்ற, *n* சுமை, *v.* நிரப்பு *fraught with* நிரப்பப்பெற்ற, உள்ளாகின்ற.

fray *n.* சண்டை, அமளி, *v.* இற்றுப்போ.

frazzle *n.* களைப்புற்றநிலை, தேய்ந்துபோன நிலை.

freak *n.* இயற்கைப்பிறழ்வு, அலங்கோலமாய் உடுப்பவர், freakish *a.* மனஉறுதியற்ற

freckle *n.* தோலிலமையும் மண்ணிறப்புள்ளி, *v.* புள்ளிகளுடையதாகு.

free *a.* அடிமையற்ற, கட்டுப்பாடற்ற, விலையற்ற, தாராளமான, தன்னுரிமையுடைய,

கட்டற்ற, *v.* விடுவி, *free hand* விரும்பியபடி செய்தல், கருவி களின்றி வரையப்பெற்ற, *free-fight* எல்லாரும் சேரும் சண்டை, *freelance* கட்டற்றவர், பொது எழுத்தாளர், *free trade* கட்டற்ற வணிகம், *free verse* யாப்பில்க்கணக் கட்டுபபாடற்ற செய்யுள், *free-will* வாழ்வு ஊழ்க் கட்டுப்பாடற்றது என்னும் கருத்து.

freebooter *n.* கடற்கொள்ளையர், களவு எடுப்பதற்காக சண்டை யிடும் போர் வீரர்,

freedom *n.* கட்டற்றநிலை, விடுதலை, சார்பின்மை.

freehold *n.* முழுஉரிமையுள்ள நிலம்.

free-love *n.* மணக்கட்டுப்பாடற்ற காதல் வாழ்வு.

freemasonry *n.* ஒத்த பண்புடையாரின் கூட்டுறவு.

freethinker *n.* பகுத்தறிவாளர், சமயநம்பிக்கையில் பழமையாளரின் பிடியினின்றும் விடுபட்டவர்.

freeze *v.* கடுங்குளிரால் கட்டியாகு அச்சத்தால் நடுக்குறுத்து, கடுங்குளிரால் விறைப்பாகு, குளிர்காப்பு முறையால் பாதுகாத்துவை, விலையை ஒருநிலைப்படுத்து, ஊதியத்தை நிலைவரப்படுத்து, சொத்துக்களைப் பெறமுடியாமற் செய், *freeze prices* விலை ஒருநிலையில் வை, *freeze on to* இறுகப்பிடித்தல்.

freezer *n.* குளிர்பெட்டி.

freight (ப்றேற்) *n.* கப்பற்சரக்கு, சுமை, சரக்கேற்றிச் செல்லுதல், சுமைக்கட்டணம், *v.* சரக்கேற்று, *a freight train* சரக் கேற்றிச் செல்லும் தொடர் வண்டி.

freighter *n.* சரக்கேற்றும் கப்பல்

french *n.* பிரெஞ்சு மொழி, *french leave* இசைவு பெறாது நிற்றல்.

frenzy *n.* கடுஞ்சீற்றம், மூளைக் கோளாறு.

frequency *n.* அடிக்கடி நிகழ்தல்.

fresco *n.* சுவர் ஓவியம்.

fresh *a.* புதிய, வாடாத, அனுபவமில்லாத, கலைக்காத, உப்புத்தன்மையற்ற, புத்துணர்வு தருகிற.

freshet திடீர் ஆற்றுப்பெருக்கு, கடலிற்பாயும் நன்னீர் அருவி.

freshwater *a.* கடல்சாராத, நன்னீர்சார்ந்த.

fret *n.* நரம்புக்கருவியின் விரற் கட்டை, *v.* தொல்லைகொடு, சினங்கொள், தேய்த்தழி, *fret-and fume* பதற்றங்கொள்.

fretful *a.* கவலைப்படுகிற, அழுகிற.

fretsaw *n.* சிறுஅரிவாள், ஓடுங்கிய இழைவாள்.

fretwork *n.* சித்திர அறுப்புவேலை, வலைப்பின்னல் வேலை.

Freudian (ப்ரொய்டியன்) *a.* சிக்மண்ட்பிராய்டின் உளப்பாங்காய்வுக் கொள்கைகளைப் பின்பற்றுகின்ற.

friable *a.* எளிதில் தகர்ந்துவிழக் கூடிய, நொருங்கக்கூடிய.

friar *n.* சமயக்குழு உறுப்பினர்.

fricassee *n.* இறைச்சிக்கறி.

friction *n.* தேய்ப்பு, கொள்கைப் பிணக்கு, உராய்வு.

Friday *n.* வெள்ளிக்கிழமை, *Good Friday* இயேசுநாதரின் சிலுவைப்பாட்டு நாளினமுன் வரும் வெள்ளிக்கிழமை.

fridge *n.* குளிர்ப்பெட்டி.

friend *n.* நண்பர், friendship *n.* நட்பு.

frig, frigidaire *n.* உணவைக் குளிர்நிலையில் வைத்திருக்கும் பொறி.

frigate *n.* சிறுபோர்க்கப்பல்.

fright *n.* திடீரச்சம், கோர உருவினர், frighten *v.* அச்சுறுத்து, frightful *a.* அச்சுறுத்துகிற, அருவருக்கத்தக்க, மிகப்பெரிய

frigid *a.* கடுங்குளிரான, ஆர்வமற்ற, பாலியற் கிளர்ச்சியற்ற, frigidity *n.*

frill *n.* ஓரத்தொங்கல், தேவையற்றபொருள்.

fringe *n.* விளிம்பு, நூல்தொங்கல், நெற்றியில் தொங்கும் மயிர், *v.* விளிம்பிடு, *fringe benefits* சம்பளம் தவிர்ந்த கொடுப்பனவுகள்.

frippery *n.* தேவையற்ற அணிமணி.

frisk *n.* துள்ளிக்குதித்தல், *v.* துள்ளு, ஒளித்துவைத்துள்ள கருவிகளை கைவிட்டுத் தேடு, frisky *a.*

fritter *v.* வீணக்கு, விரையஞ் செய், *n* துணுக்கு.

frivolous *a.* விளையாட்டுத்தனமான, மடத்தனமான, பகட்டாரவாரமான frivol *v.* காலத்தை வீணாக்கழி.

friz, frizz *v.* சுருட்டு, சுருளச் செய்.

frizzle *v.* நன்முகப்பொரி, சூட்டிலில் சுருளச்செய்

fro *adv.* மீண்டும், *to and fro* அங்குமிங்கும்.

frock *n.* மகளிர் மேற்சட்டை, நீண்ட மேலுடை.

frog *n.* தவளை, *frog in ones throat* கரகரப்பான குரல், *to frog march* முகம் கீழாகக் கை கால்களை நால்வர் பிடித்துச்செல்லுதல், குதிரையடியின் மென்பகுதி, வாள் தொங்கவிடும் தோல்வளையம்.

frogman *n.* நீரடி நடவடிக்கையில் நீண்டநேரம் ஈடுபடுபவர்.

frolic *n.* கும்மாளம், *v.* துள்ளி விளையாடு.

from *prep.* இருந்து.

frond *n.* செடிகளில் இலைபோன்ற உறுப்பு.

front *n.* முன்புறம், போர்முனை, முகப்பு, *come to the front* புகழுடன் விளங்குதல், *go to the front* போர்முனைசெல்.

frontage *n.* கட்டடமுகப்பு, தெருவோரநிலம்.

frontier *n.* நாட்டின் எல்லை.

frontis piece *n.* பொத்தக முகப்புப்படம்.

frost *n* உறைபனி, *v.* உறைபனியால்மூடு, சீனிதூவு.

froth *n.* நுரை, குமிழிகளின் தொகுதி.

froward *a.* கீழ்ப்படிய மறுக்கிற, கட்டுப்படுத்த விரும்பாத.

frown *n.* முகச்சுளிப்பு, *v.* விருப்பின்மைக் குறிப்புக் காட்டு.

frowzy *a.* கழுவாததனால் ஏற்படும் கெடு நாற்றமுள்ள.

fructify *v.* பலனளி, கனிகொடு.

frugal *a.* சிக்கனமான, அற்பமான

மிகக்குறைந்த விலையுடைய, *a frugal meal* விலை குறைந்த எளிய உணவு.

fruit *n.* கனி, விளைவு, பயன், வழித்தோன்றல்கள், **fruiterer** *n.* கனி விற்பவன், **fruition** *n.* பயனநுகர்வு, **fruity** *a.* பழச் சுவையுடைய.

frump *n.* அலங்கோலமாக உடுத்தபெண்.

frustrate *v.* பெறமுடியாமற் தடு, செயல்குலை, முறியடி, ஏமாற்று, **frustration** *n.* எண்ணக்குலைவு, செயல்குலைவு.

fry *v.* பொரி, வறு, *n.* மீன் குஞ்சுத் திரள், *small fry* முக்கியத்துவமில்லாதவர் (*pl.* **fry**)

fuchsia *n.* தொங்குமலர் கொண்டசெடியினம், **fucky** *v.* கலவிசெய்

fuddle (பட்ல்) *n.* குடிமயக்கம்.

fuddy-duddy *n.* புதிய கருத்துகளை ஏற்கமுடியாதவர், *a.* காலங்கடந்த.

fudge (பஜ்) *n.* மென்மையான இனிப்புப்பண்டம், உடன்பாடின்மையைத் தெரிவித்தல்.

fuel *n.* எரிபொருள், உணர்ச்சியைப்பெருக்கும் பொருள்.

fug *n.* புழுக்கம்.

fugitive (ப்யூஜிற்றிவ்) *n.* தப்பியோடுபவன், *a.* தப்பியோடுகிற, நிலையற்ற.

fugue (ப்யூக்) *n.* பல ஓசை இசை.

fulcrum *n.* நெம்புகோலின் ஆதாரம், மிண்டு.

fulfil *v.* நிறைவேற்று.

full *a.* நிறைந்த, முழுமையான, *adv.* சரியாக, நிரம்ப, *full blown* முழுவளர்ச்சியுற்ற, *full plumed* மனமார்ந்த.

fulminate (பல்மினேற்) *v.* கடுமையான எகிர்ப்புத்தெரிவி, வெடி, **fulmination** *n.* கண்டித்தல், இடியிடித்தல்.

fulsome (புல்சம்) *a.* மிகுதியாகப் பாராட்டுகிற.

fumble (பம்பிள்) *v.* தடுமாறு, அலங்கோலமாகக் கையாளு.

fume (ப்யூம்) *n.* புகை, *v.* சீற்றங் கொள்.

fumigate (ப்யூமிகேற்) *v.* புகையடிச்சுப் பூச்சி கொல்.

fun *n.* பகடி, *fun fair* களியாட்டு விழா, *make fun of* ஏளனஞ் செய், சிரிக்கச் செய்.

function *n.* செயல், சடங்கு, நிகழ்ச்சி, *v.* செயற்படு.

functionary *n.* பணித்துறைமேலாள், அதிகாரி.

fund *n.* ஒதுக்கிய பணம், நிதி, உளம், முதலீடுசெய்.

fundamental *a.* அடிப்படையான, இன்றியமையாத.

funeral *n.* இழவுவினை, பிணஊர்வலம்.

funerary *a.* இழவுவினைக்கு ஏற்ற

funereal *a.* இழவுவினைக்குப் பொருந்திய, துயரார்ந்த.

fungus (பங்கஸ்) (*pl.* **fungi** பன்கை) *n.* காளான்.

funk *n.* அச்சம், கோழை, *v.* அச்சமடைகொள், அஞ்சித்தவிர்.

funky *a.* சிக்கலற்ற, உணர்ச்சிவயப்பட்ட, நறுமணமுள்ள.

funnel *n.* புனல், புகைக்குழாய்.

funny *a.* வேடிக்கையான, விந்தையான, புதிரான.

fur *n.* மென்மயிர் *to make the fur fly* சண்டையிடு, **furry** *a.*

மென்மயிரொத்த.

furbelows *n. pl.* பகட்டணிமணிகள்.

furbish *v.* துப்புரவுசெய், மினுக்கு, திருத்து, புதுக்கு.

furious *a.* சினமிக்க, கொந்தளிப்பான, வெறிகொண்ட, *at a furious pace* மிகவிரைந்து.

furl *v.* சுருட்டு, சுருடிக்கட்டிவை

furlong *n* 220 யார் தொலைவு, $\frac{1}{8}$மைல்.

furlough *n.* நீண்டவிடுமுறை.

furnace *n.* உலைக்களம், உலை.

furnish *v.* தளபாடமிடு, வழங்குகொடு.

furniture *n.* தளபாடம், தட்டுமுட்டுப்பொருள்.

furore (ப்யூரோறி) *n.* ஆர்வப்பாராட்டு.

furrier (பரிய) *n.* மென்மயிர்வணிகர்.

furrow *n.* உழவுசால், வண்டித்தடம்.

further *a.* மிகுதொலைவிலுள்ள மேலும், *v.* முன்னேற்று, *adv* இனியும், அன்றியும்.

furtive *a.* களவான, திருட்டுத்தனமான.

fury *n.* கடுஞ்சினம், கொந்தளிப்பு, சினத்தன *to rain like fury* பெருமழை. *the Furies* தவறுசெய்த ஆண்களைத் தண்டிக்கும் பெண் தெய்வங்கள்.

fuse *v.* ஒன்றுக்கு, ஒன்றுகு, *n* மின்காப்பு எரியிழை.

fuselage *n.* வானூர்தியின் கட்டுமானச்சட்டம்.

fusillade (ப்யூஸிலேட்) *n.* கேள்விக் கணைகள், தொடர்துப்பாக்கிவெடி.

fusion *n.* அணுக்கரு இணைவு, கூட்டிணைவு.

fuss *n.* தேவையற்ற பதற்றம், வீண்செயல், கடும் எதிர்ப்பு, *v.* திளர்ச்செய் *fuss-pot* வீண் ஆர்ப்பாட்டக்காரர்.

fustian *n.* தடித்த பருத்தித்துணிவகை, பகட்டான வெற்றுரை.

fusty *a.* கெட்ட மணமுள்ள, காலத்துக்கொவ்வாத கருத்துள்ள, ஊசிப்போன.

futile *a.* பயனற்ற, அற்பமான,

future *a.* எதிர்காலத்திற்குரிய, *n* எதிர்காலம்.

futuristic *a.* எதிர்காலத்துக்கேபொருத்தமான, மரபல்லாத.

fuzz *n.* பொலீஸ்காரர், பஞ்சுபோன்றபொருள்.

fuzzy *a.* மங்கலான, தெளிவற்ற, மிகவும் சுருண்ட, பஞ்சுபோன்ற.

G

gab *n.* வீண்பேச்சு, *gift of the gab* பேச்சு வன்மை.

gabardine *n.* பப்ரித்துணிவகை.

gabble (கபிள்) *v.* விரைந்து தெளிவின்றிப்பேசு, *n* உளறல்.

gable (கேபிள்) *n.* வெளிச்சுவரின் முக்கோணப்பகுதி, யன்னல் மேற்கூரை, பலகணிமேற்கட்டி

gad *n.* வீணாக அலைந்துதிரிதல், *gadabout* வீட்டுவேலையிலும் பார்க்க சுற்றித்திரிவதில் நாட்டமுடையவர்.

gadfly *n.* உண்ணி, மாடடிலையான்.

gadget *n.* சிறுசூழ்ச்சிப்பொறி, பயனுள்ள கருவி.

Gaelic (கேலிக்) *n.* ஸ்கொற் லண்ட் மக்களின் கெல்டிக் மொழி, ஐரிஷ்மொழி.

gaff *n.* மீன்குத்தும் ஈட்டி, *to blow the gaff* இரகசியத்தை வெளிவிடல்.

gaffe *n.* பெருந்தவறு.

gaffer *n.* முதியவர், மேலதிகாரி.

gag *n.* வாயடைப்பு, பகடி, வாய் திறந்தபடியிருக்கஇடும்பொறி யமைப்பு, *v.* வாயடைப்புச் செய், பேச்சுரிமை இழக்கச் செய், பகடிவிடு, ஓங்காளி.

gaga *a.* முதிய, பைத்தியக்கார, மடத்தனமான.

gage (கேஜ்) *n.* அடகுப்பொருள், *to throw down the gage* மற்போ ருக்கு அழை.

gaggle *n.* வாத்துத்தொகுதி.

gaiety *n.* மகிழ்ச்சி, களியாட்டு, கவர்ச்சித்தோற்றம்.

gaily (கேலி) *adv.* மகிழ்வொடு.

gain (கேன்) *v.* பெறு, படிப்படி யாகப்பெறு, நயம்பெறு, நெருங்கு, அடை, விரை, *to gain ground* முன்னேறு.

gainsay (கேன்ஸே) *v.* மறு, முரண்படு.

gait (கேற்) *n.* நடக்கும் விதம்.

gaiter *n.* கீழ்க்காலுறை.

gala (காலா) *n* மகிழ்ச்சிநாள், விழா நாள்.

galaxy *n.* உடுக்களால் ஒளிபெ றும் வான்பகுதி, அழகியர் குழாம், அறிஞர் கூட்டம், *the Galaxy* பால்வழி.

gale (கேல்) *n.* கடுங்காற்று, *v.*

gall (கோல்) *n.* பித்தநீர், கசப் புணர்வு, உராய்வதாலான புண், *v.* தொல்லைகொடு, இழி வுபடுத்து.

gallant *a.* வீரமுடைய, பெண்க ளுடன் பண்பாகப் பழகுகின்ற, *n.* காதலன், சிங்காரன்.

galleon *n.* பெரியகப்பல்வகை.

gallery *n.* கலைக்காட்சிக்கூடம், நீண்டொடுங்கிய கூடம், திரைப்படக்கொட்டகை முன் வரிசை, *to play to the gallery* பொதுமக்கள் பாராட்டை நாடு.

galley *n.* பண்டையபோர்க் கப் பல், கப்பலிலுள்ள சமையல றை, அச்செழுத்தடுக்கும் நீண்ட தட்டு.

gallivant *v.* வீணுகச் சுற்றித்திரி

gallon *n.* முகத்தலளவைக்கூறு, 4½லீற்றர்,

gallop *n.* குதிரைப்பாய்ச்சல், *v.* விரைந்து முன்னேறு.

gallows *n.* தூக்குமரம், *gallows bird* தூக்கப்படவேண்டியவர்.

gallstone (கோல்ஸ்ரோன்) *n.* பித்தப்பையில் உண்டாகும் கல்போன்ற பொருள்.

Gallup poll *n.* பொதுமக்கள் வாக்களிப்புமுடிபைமுன்கூட்டி யே அறியுமுறை.

galore *adv.* நிறைய.

galoshes *n.* சப்பாத்து மேலுறை

galvanic *a.* இரசாயன முறையில் மின்னூற்றல் உண்டுபண்ணு கிற, மக்களை செயலில் ஈடுப டத் தூண்டுகிற.

galvanize *v.* செயற்படத்தூண்டு துத்த நாகப்பூச்சுப்பூசு

gambit *n.* சதுரங்க ஆட்டத்

தொடக்கமுறை, தொடக்க நடவடிக்கை அல்லது குறிப்பு.

gamble *n.* சூதாட்டம், இடருள்ள முயற்சி ஈடுபாடு, *v.* சூதாடு, வெற்றிநாடி முயற்சியில் ஈடுபடு.

gambol *v.* துள்ளி விளையாடு, *n.* குதியாட்டம்.

game *n.* விளையாட்டு, வேட்டையாடப்பட்ட விலங்கு, *v.* சூதாடு, *a.* வீரதீரப்பண்புடைய, விருப்புள்ள, நொண்டியான, *to make a game of* இகழ்ந்து பேசு, *the game is up* திட்டம் தோல்வியுற்றது, *a game leg* புண்பட்டகால், *a game person* போராடும்உணர்வுள்ள, *game for anything* எதையும் செய்யத் தயாராயுள்ள.

game-cock *n.* சண்டைச்சேவல்.

game keeper *n.* வேட்டைக்காட்டுக் காவலர்.

gamester *n.* சூதாடி.

gamete *n.* பாலினச்சார்புக்கலம்.

gamtn n. நன்னடத்தை பயிலாத தெருப்பையன்.

gamma (கம) *n.* கிரேக்க நெடுங்கணக்கில் மூன்றுவது எழுத்து, மூன்றுந்தரம், *gamma plus* மூன்றுந்தரத்துக்குச் சற்று மேற்பட்ட, *gamma minus* மூன்றுந்தரத்துக்குக் குறைந்த, *gamma rays* சிற்றலை ஒளிக்கதிர் வகை.

gammon *n.* உப்பிட்ட பன்றியிறைச்சித்துண்டு, ஏய்ப்பு, பொருளற்ற பேச்சு.

gamut (சமட்) *n,* ஏழிசைத் தொகுதி, முழு ஆற்றல்.

gagader *n.* ஆண்வாத்து.

gang *n.* வேலைசெய்வோர் தொகுதி, சட்டத்தைமீறும் கும்பல், நண்பர் குழாம்.

gangling *a.* உயரமும் அழகற்றதுமான.

ganglion *n.* நரம்புகள் கூடுமிடம், நரம்புத்தொகுதி.

gangplank *n.* படகில் ஏறியிறங்குதற்கான பலகை.

gangrene (கங்க்றீன்) *n.* உடலிழைய அழிவு.

gangster *n.* கொள்ளைக்கூட்டத்தவன்.

gangway *n.* இருக்கை வரிசை கட்கிடையேயுள்ள வழி, கப்பலிலுள்ள ஊடுவழி, கப்பலில் ஏற இறங்கவுள்ள நீக்கக்கூடிய பாலம்.

gannet *n.* கடற்பறவை வகை.

gaol (ஜேல்) *n.* சிறைக்கூடம், *v.* சிறையிடு.

gaol-bird *n.* அடிக்கடி சிறை செல்பவர்.

gaoler *n.* சிறைக்காவலர்.

gap (கப்) *n.* இடைவெளி, இடையீடு, குறைபாடு, ஆழமான பள்ளத்தாக்கு.

gape (கேப்) *v.* வாய்பிள, வியந்து பார்.

garage (கருஷ்) *n.* மோட்டார் வண்டி திருத்துமிடம், கார்க் கொட்டில்.

garb *n.* உடுப்பு, *v.* உடுத்து

garbage (காபிஜ்) *n.* வீட்டுக்கழிவுப்பொருள், குப்பை.

garble *v.* திரித்துக்கூறு, குழப்பு மதிப்புக்கெடு.

garden *n.* வீட்டுத்தோட்டம், *philosophers of the garden* எபிகூரஸ் என்ற அறிவுரைப்

பின்பற்றுவோர், *garden party* தோட்டவிருந்து.

gargantuan *a.* மிகப்பெரிய, மிகுதியாக உண்கின்ற

gargle *v.* தொண்டை கழுவு.

gargoyle *n.* உயிரின வடிவில் அமைந்த நீர்த்தாரைத் தூம்பு.

garish *a.* கண்ணைப்பறிக்கும் வண்ணம் மிளிர்ந்த.

garland *n.* பூமாலை.

garlic *n.* உள்ளி, வெள்ளைப்பூடு.

garment *n.* உடை, ஆடை.

garner *v.* சேர்த்துவை, திரட்டு.

garnet *n.* செந்நிற மணிக்கல்.

garnish *v.* அழகுபடுத்து, எச்சரிக்கைசெய்.

garniture *n.* ஒப்பனைப்பொருள்.

garret *n.* உச்ச மேன்மாடிச் சிற்றறை.

garrison *n.* கோட்டைக் காவற்படை.

garrotte *n.* குரல்வளை நெரித்துக் கொல்லப் பயன்படும் பட்டி.

garrulous *a.* மிகுதியாகப்பேசுகிற

garter *a.* காலுறைகட்டும் பட்டி,

gas *n.* காற்றுவகை, வெற்றுரை, பெற்ரோல். *gas bag* வாயாடி. *step on the gas* வேகத்தைக் கூட்டு.

gash *n* ஆழமான வெட்டு.

gasoline *n.* பெற்ரோல்

gasp *n.* மூச்சுத்திணறல்.

gastric *a.* இரைப்பைசார்ந்த.

gastronomy *n.* உணவுக்கலை.

gasworks *n.* எரிவாயு உற்பத்திச்சாலை.

gate *n.* வாயில், படலை, **gated** *a.*

gatecrash *v.* அழைப்பின்றி நுழை. *gate crasher n.*

gateway *n* நுழைவாயில்.

gather *v.* ஒன்றுசேர், திரட்டு, படிப்படியாகப்பெறு, பரிந்து கொள், முடிவுசெய், பறி, வரவழை, உய்த்தறி, சீழ்பிடித்து வீங்கு, **gathering** *n.* மக்கள் கூட்டம், சீழ்பிடித்த வீக்கம்.

gauche (கோஷ்) *n* பண்பற்ற அருவருக்கத்தக்க. **gaucherie** *n*

gaudy (கோடி) *a.* பகட்டாயுள்ள **gaudiness** *n.*

gauge (கேஜ்) *n.* அளவை, *v.* அளவிடு, மதிப்பிடு.

gaunt (கோன்ற்) *a.* ஒல்லியான, அழகற்ற, பிணமொத்த, கடுகடுத்த முகமுடைய.

gauntlet *n.* கையுறைவகை, *run the gauntlet* தொடர் கண்டனத்துக்கு ஆளாகு.

gauze (கோஸ்) *n.* மென்கம்பிவலை, மென்துணிவலை.

gavel (கவல்) *n.* கைச்சுத்தியல்.

gavotte *n.* பிரெஞ்சுநாட்டு ஆடல்வகை.

gawk (கோக்) *n* தேர்ச்சியில்லாதவன், உயரமான இளைஞன்.

gawky *a.* அருவருப்பான.

gawp *v.* மடத்தனமாக உற்றுப்பார்.

gay *a.* மகிழ்ச்சிநிரம்பிய, உவகை நிறைந்த, வேடிக்கையான, கவர்ச்சியாக வண்ணந்தீட்டப்பெற்ற, தன்னினச்சேர்க்கை சார்ந்த.

gaze *v.* கூர்ந்துபார், உற்றுப்பார்.

gazebo *n.* கோடைக்கால வீடு.

gazelle *n.* சிறு மான்வகை.

gazette *n* வர்த்தமானி, அரச செய்தியிதழ்.

gazetteer *n.* இடம் ஆறுமலை முதலியனபற்றிய விளக்கச்சுவடி, கருப்பொருள் விளக்கம்.

gazump *v.* விலை நிசைவுக்குப்பின் அதனை உயர்த்தி ஏமாற்று.

gear *n.* துணைக்கருவிகள், ஒன்றி ணைந்து இயங்கும் பற்சில்லு கள், *all one's worldly gear* உடைமைகள் முழுவதும், *out of gear* சீரிலாத, செயற்படும் நிலையிலிராத.

gecko *n.* பல்லியினம்.

gee (ஜீ) *int.* வியப்பிடைச்சொல், *gee up* குதிரையை விரைவடுத்தும் சொல் *gee gee* குதிரைக்கான மழலைச்சொல்.

geezer கீஸர்) *n.* ஆள், மூதியவர்

Gehenna (கிஹென) *n.* இறப்பின்பின் தண்டிக்கப்பெறும் இடம், நரகம்

Geiger counter (கைகர்கௌன்ரர்) *n* கதிர் இயக்கத்தைக் கண்டுபிடித்து அளவிடும் கருவி

geisha (கேஷ) *n.* வரவேற்று மகிழ்விக்கும் ஜப்பானியப் பெண்.

gel *n.* ஜெலிபோன்ற கூழ்ப்பொருள்.

gelatine *n.* தண்ணீரில் உருகி குளிரில் தடிப்பாகும் பொருள், எலும்பு சூடாக்கிப்பெறப்படும் பொருள்.

geld *v.* காயடி, ஆண்தன்மை நீக்கு, வலுக்குறை.

gelding *n.* காயடித்த விலங்கு, காயடித்தல்.

gelid *a.* குளிரான.

gelignite *n.* நைட்ரோ-கிளிசரின் கொண்ட வெடிமருந்து வகை.

gem *n.* மணிக்கல், இரத்தினம், அரும்பொருள்.

Gemini *n. pl.* மிதுனராசி.

gen *n.* தகவல்.

gendarme (ஸொன்டாம்) *n.* பிரஞ்சுப் படைவீரர்

gender *n.* சொல்லின் பால்வகை.

gene (ஜீன்) *n.* பரம்பரையைக் கட்டுப்படுத்தும் கூறுகளில் ஒன்று.

genealogy *n.* மூதாதையர் மரபு வரலாறு, குடிவழி ஆய்வு, குடிவழிப்பட்டியல்.

general *a.* பொதுவான, முழுவதுமான, பெருவழக்கான, தலைமையான, *n* படைத்தலைவர், *general hospital* தலைமை மருத்துவமனை, *general practitioner* பொதுத்துறை மருத்துவர்.

generalize *v.* பொது ஆட்சிக்குக் கொண்டுவா, பொதுக்கோட்பாடு அமை, தெளிவின்றிப் பேசு *generalization n* பொதுவிதி, பொதுக்கருத்து.

generate *v.* தோற்றுவி, உற்பத்தி செய்.

generation *n.* தோற்றுவித்தல் தலைமுறை, 30 ஆண்டுகாலம்,

generator *n.* மின் ஆக்கி, மின் சக்தி உண்டாக்கும் பொறி.

generic *a.* இனத்துக்குரிய, பொதுவான, தழுவுக்குரிய.

generous *a.* தாராளமாகக் கொடுக்கின்ற, குறுகிய நோக்கமற்ற, ஏராளமான, பரந்த மனப்பான்மையுடைய.

genesis *n.* மூலம், தோற்றம்

Genesis *n.* விவிலிய நூலின் முதற்பிரிவு.

genetic *a.* தோற்றம் பற்றிய, மரபுவழிப் பண்பியல் சார்ந்த

genetics *n. pl.* மரபுவழிப்பண்பியல் பற்றிய ஆய்வு.

genial *a.* அன்பான, மகிழ்ச்சிதருகிற, ஆர்வமான.

genie (ஜீனி) *n.* பூதம், வேதாளம், **genii** (ஜீனிஐ) *n. pl.*

genital *a.* பிறப்புக்குரிய, **genitals** *n. pl.* பிறப்புறுப்புக்கள்.

genitive *n.* உடைமைப்பொருள் வேற்றுமை, ஆறும்வேற்றுமை

genius *n.* மேதை, இயல்பாயமைந்த தனிச்சிறப்புத்தன்மை, **geniuses** *n. pl.* மேதைகள்.

genocide *n.* இனஅழிவு, இன ஒழிப்பு.

genre (ஷாங்ர்) *n.* வகை, பாணி.

genteel *a.* நற்குடிச்சிறப்பான, நாகரிகப்பாங்கான.

gentile (ஜென்ரைல்) *n.* யூதரல்லாதார்.

gentility *n.* நன்னடத்தை, உயர்குடிப்பண்பு.

gentle *a.* நற்குடிசார்ந்த, அமைதியான, முரட்டுத்தனமாயிராத, கடுமையாயிராத, *of gentle breeding* உயர் குடிப்பிறந்த, *v.* கவனமாகக்கையாளு, மெதுவாகத்தூண்டு, *n.* தூண்டில்இரை ஈவகையின் முட்டைப்புழு.

gentlefolk *n. pl.* நற்குடிமக்கள்

gentleman *n.* நன்னடத்தையுள்ளவன், நன்னிலையிலுள்ளவன் **gentlewoman** *n.* நற்குடிப்பிறந்தவள்.

gentry *n. pl.* சீமான்கட்கு அடுத்த கீழ்நிலை மக்கள், இடைநிலை மக்கள், *light fingered gentry* திருடர்.

genuflect *v.* முழங்கால் மடித்து உடல்வளை, **genuflexion** *n.* உடல்வளைத்து வணங்குதல்

genuine *a.* உண்மையான, தூயதான.

genus (ஜீனஸ்) *n.* இனம், பல்லினக்குழு, *pl.* genera

geo *pref.* நிலவுலகம்சார்ந்த.

geocentric *a.* நிலவுலகை நடுவாகக்கொண்ட.

geography *n.* நிலவியல், புவிஇயல்.

geology *n.* மண்ணியல்.

geometry *n.* வடிவியல், கேத்திரகணிதம்.

geophysics *n.* நிலவியல்சார் பௌதிகம்.

geopolitics *n.* நிலவியல்சார்ந்த அரசியல், நிலவியல் அமைப்புவழி வரையறுக்கப்பட்ட அரசியல்.

georgette (ஜோர்ஜெற்) மென்பட்டுத்துணிவகை.

Georgian *a.* ஜோர்ஜ் அரசர் காலத்தைய (1714-1830).

geranium *n.* பூச்செடிவகை.

geriatrics *n.* முதியோர் நோய், கள்பற்றிய மருத்துவத்துறை.

germ *n.* நுண்மம், நோய்நுண்மம், கருமூலம்.

german *a.* ஒரே பெற்றோரையுடைய.

germane *a.* இன்றியமையாத.

germicide *n.* நுண்மக் கொல்லி.

germinate *v.* முளைவிடு.

gerontology *n.* மூப்பியல்பற்றிய ஆய்வு, முதியோர் சிக்கல் குறித்த ஆய்வு.

gerrymander *v.* தேர்தலில்

வெற்றிபெற தேர்தல் தொகுதி எல்லையில் திருகுதாளம் செய்.

gerund *n.* *-ing* முடிவு பெற்று தொழிற்பெயராக இயலும் தொடரெச்ச வடிவம், *gerund grinder* கல்விச் செருக்குடைய ஆசிரியர்.

Gestapo (கெஸ்டாப்போ) *n.* நாஜிஜெர்மனியின் இரகசியப் பொலீஸ்.

gestation *n.* கருவில் இருக்கும் நிலை, சூற்பையில் இருக்கும் காலம்.

gesticulate *v.* உறுப்பசைவுகளால் கருத்தைப் புலப்படுத்து.

gesture *n.* சைகை, உணர்ச்சிக் குறிப்பு.

get *v.* எடு, கொள், பெறு, வாங்கு, பற்று, பிடி, புரிந்துகொள் தயார்செய், எய்து, தூண்டு கண்டுபிடி, அடை, *getat* அடை *get away* தப்பு, *get by* வெற்றியடை, *get down* இறங்கு, *get in* நுழை, *get wind of* கேள்விப்படு, *get off* தப்பு, இறங்கு, விடுபடு, *get on* ஏறு, சமாளி, முன்னேறு, இணங்கு, *get out of* நழுவு, *get over* வெற்றிகொள், *get round* இணங்கச்செய், ஏமாற்று, *get up* துயில் நீங்கு, ஒழுங்கு செய், உடு.

get-at-able *a.* எளிதில் காணத்தக்க, கிடைக்கக்கூடிய.

getaway *n.* தப்பியோடல்.

get-together *n.* ஒன்றுகூடல்.

get-up *n.* கட்டமைப்புத் தோற்றம்.

gew gaw (க்யூகோ) *n.* விளையாட்டுப்பொருள், தேவையற்ற அணி,

geyser (கீஸர்) *n.* வெந்நீருற்று.

ghastly *a.* கோரமான, கூடாத, வெளிறிய.

ghat *n.* ஆற்று இறங்குதுறை.

gherkin (கேக்கின்) *n.* வெள்ளரி வகை.

ghetto *n.* ஓரினத்தவர் வதியும் சேரி.

ghost *n.* ஆவி, பேய், *give up the ghost* உயிர்விடு, *Holy Ghost* பரிசுத்த ஆவி.

ghost-writer *n.* தான் எழுதியதாகக் காட்டும் ஒருவனுக்கு எழுதிக்கொடுப்பவன்.

ghoul (கூல்) *n.* பிணந்தின்னும் பேய், கோரமான வற்றில் திளைப்பவன்.

giant *n.* அரக்கர், பேராற்றல் வாய்ந்தவர், இயல்பு மீறிய உயரமுடையவன், பேருருத் தாங்கிய விலங்கு, *a.* மிகப் பெரிய.

gibber (ஜிப) *n.* பிதற்றல், குரங்கின் ஒலி.

gibbet *n.* தூக்குமரம், *v.* இகழ்ச்சிக்கும் கண்டனத்துக்கும் ஆளாக்கு.

gibbon (கிபன்) *n.* நீண்டகையுடைய குரங்குவகை.

gibe (ஜைப்) *n.* இகழ்ச்சி, *v.* எள்ளி நகையாடு.

giblets (ஜிப்லிற்ஸ்) *n. pl.* பறவைகளின் உண்ணக்கூடிய உறுப்புக்கள்.

giddy (கிடி) *a.* தலைசுற்றுகிற, தள்ளாடுகிற, மனஉறுதியற்ற, விளையாட்டியல்புடைய.

gift *n.* கொடை, இயற்கைத்

திறம், எளிதானவேலை, *gift of the gap* பேச்சுத்திறன்.

gig *n.* இருவல்லுக் குதிரை வண்டி, ஜாஸ் இசை சிறு படகு, துடுக்குப்பெண்.

gigantic (ஜைகன்ரிக்) *a.* மிகப் பெரிய.

giggle (கிகிள்) *v* இளி, *n.* இளிப்பு பண்பற்றவளின் சிரிப்பு.

gigolo (ஜிகலொ) *n.* பணம் கொடுத்துக் காதலனாக்கப் பெற்றவன்.

gild (கில்ட்) *v* பவுண்பூச்சுப் பூசு, *gilded youth* நாகரிக இளைஞர்

gill (கில்) *n.* செவுள், மீனின் உயிர்ப்புறுப்பு, கோழியினத்தின் தொங்குதாடை.

gill (ஜில்) *n.* ¼பைந்து அளவு.

gilt (கில்ற்) *a.* பொன் முலாம் பூசப்பெற்ற. *n.* பெண் பன்றிக் குட்டி, *gilt edged a.* மிகவும் பாதுகாப்பான.

gimcrack (ஜிம்க்றக்) *a.* பகட்டான, பயனற்ற, போலியான.

gimlet (கிம்லிற்) *n.* துறப்பணம்.

gimmick (கிமிக்) *n.* கவன ஈர்ப்புச் சூழ்ச்சி.

gin (ஜின்) *n* குடிவகை, பொறி விதையினின்றும் பருத்தியை நீக்கும் பொறி, கண்ணி.

ginger *n.* இஞ்சி, செம்மஞ்சள் நிறம், சுறுசுறுப்பு. *ginger group* சட்டமன்றில் அரசியலுக்கு விறுவிறுப்பூட்டும் குழு. *to ginger up* ஊக்கம் கொடு.

gingerly *adv.* முன்னெச்சரிக்கையுடன்.

gingham (கிங்கம்) *n.* கோடு அல்லது கட்டமிட்ட பருத்தித் துணி.

gipsy, gypsy (ஜிப்ஸி) *n.* நாடோடி இனம்.

giraffe (ஜிறாப்) *n.* ஒட்டைச் சிவிங்கி.

gird (கேட்) *v.* சுற்றிக்கட்டு, வளை, *gird up one's loins* தயாராகு.

girder (கேட) *n.* ஆதாரமாகப் பயன்படும் இருப்புப்பாளம்,

girdle *n.* ஒட்டியாணம், அரைஞாண், எலும்பு வளையம், சூட்டில் சமைத்தற்குப் பயன்படும் வட்ட இருப்புத்தட்டு

girl *n* இளம் பெண், வேலைக்காரி

girlie *n.* இளம் பெண். *girlie magazines* காம உணர்வைத் தூண்டக்கூடிய இளம் பெண்களின் கவர்ச்சிப்படங்கள் நிறைந்த சஞ்சிகை.

giro (ஜைறோ *n.* ஒரு கணக்கிலிருந்து பிறிதொன்றுக்கு கடனை மாற்றுவதன்மூலம் கொடுப்பனவுசெய்யக்கூடிய வங்கி இயல்.

girt *a.* சுற்றிவளைக்கப்பெற்ற, சூழப்பெற்ற.

girth *n.* சேணக்கச்சு, சுற்றளவு.

gist (ஜிஸ்ற்) *n.* கருப்பொருள், சாரம், சுருக்கம்.

give *v.* தா, கொடு *n* நெகிழ்வு, *give away* கொடு *give in* விட்டுக்கொடு *give off* வெளித்தள்ளு. *give out* தெரிவி, களைப்படைந்துவிடு. *give over* செய்யாமலிரு, ஒப்புவி, *give tongue* பேசு, *give up* கைவிடு, *give way* வழிவிடு, விழு, அறு.

gizzard (கிஸட்) *n.* பறவையின் இரண்டாவது இரைப்பை

glace (க்ளேஸே) *a.* சீனிதூவி குளிர்பதனம் செய்யப்பெற்ற.

glacial *a.* உறைந்த, பனிக்கட்டிக் குரிய.

glacier *n.* அசைந்துசெல்லும் பனிக்கட்டிக்குவியல்.

glad *a.* மகிழ்ச்சியான, gladness *n*, gladden *v.* உவப்பூட்டு.

glade *n.* காட்டகத்துத் திறந்த வெளி

gladiator *n.* காட்சிச்சண்டை வீரன்,

gladiolus *n.* பூச்செடிவகை.

glamour *n.* மயக்கும் அழகு, மனங்கவரும் நல்லியல்புகள்,

glance *n* கணநேர நோக்கு *v.* கணப்பொழுது பார், மேலீடாக வாசி, மின்னிடு.

gland *n.* சுரப்பி

glanders *n. pl.* குதிரைநோய் வகை.

glare *v.* அச்சந்தோன்றப்பார் சினத்துடன் உற்றுப்பார் கண்ணை உறுத்தும் ஒளிகாலு *n.* கண்கூசும்ஒளி, வெறித்த பார்வை

glass *n.* கண்ணாடி கண்ணாடிக் குவளை, காற்றழுத்தமானி, glassy *a*

glasses *n. pl.* மூக்குக்கண்ணாடி.

glass house *n.* செடிவளர்ப்பதற் கான கண்ணாடிக் காப்பகம், படையினர் சிறை.

glaucoma *n.* கண்விழி நோய் வகை.

glaze *n* பளபளப்பான தோற்றம் கண்ணாடி பொருத்து, பளபளப் பாக்கு, மெருகுப்பரப்பிடு,

glazer *n.* மெருகிடுவோன்.

glazier *n.* கண்ணாடி பொருத்து வோன்.

gleam *n.* ஒளிக்கதிர்க்கற்றை, மினுமினுப்பு. தன்மைபின் கணத்தோற்றம், *v.* பளிச்சிடு.

glean *v.* பொறுக்கிச்சேர், திரட்டு

glebe (க்ளீப்) *n.* கோவில்நிலம்

glee (க்ளீ) *n.* மகிழ்ச்சி, பலர் சேர்ந்து பாடும்பாட்டு.

glen *n.* இடுங்கிய பள்ளத்தாக்கு.

glib *a.* வழவழப்பான, ஆற்றொழுக்கான வெறும் பேச்சு, *adv.* வெறுஞ் சொல்லோட்டமுள்ள *v.* வழவழப்பாக்கு.

glide *v.* ஊர்ந்துசெல், நழுவிச் செல், சறுக்கிச்செல், மிதந்து செல், ஒரு சுரத்திலிருந்து மறு சுரத்துக்கு இடையறாது செல்,

glider *n.* எஞ்சின் இல்லாத வானூர்தி.

glimmer *n.* மங்கிய ஒளி

glimpse *n.* கணநேரத்தோற்றம், தெளிவற்ற காட்சித் துணுக்கு.

glint *n.* மின்னொளி.

glissade *v.* சறுக்கு, *n.* சறுக்கிச் செல்லல்.

glisten *n.* மினுமினுப்பு, *v.* பளபள என ஒளிகாலு.

glitter *n.* பளபளப்பு, *v.* ஒளிர்.

gloaming *n.* அந்திஒளி, மாலைஒளி எற்பாட்டொளி.

gloat *v.* எண்ணி மகிழ், கண்டு மகிழ்,பேராசைகொண்டுமகிழ்.

globe *n.* உருண்டைவடிவப் பொருள், உலகம், globe trotting உலகச்சுற்றுலா வரல்,

globule *n.* துளி, மிகச்சிறு உருண்டைப்பொருள்.

gloom *n.* அரையிருள், மனச் சோர்வு. **gloomy** *a.* இருண்ட துயருற்ற.

glorious *a.* சிறந்த, புகழ்பெற்ற மகிழ்ச்சி தருகிற.

glory *n.* புகழ், அழகு, பெருமதிப்பு பெருமைப் படுதற்குரிய பொருள், *v.* பெருமைகொள், மகிழ்ச்சிகொள் *glory hole n.* அழுக்கடைந்த அறை, **glorify** *v.* பெருமைப்படுத்து, புகழ், போற்று. *to go to glory* இற, *Old Glory* அமெரிக்கக் கொடி

gloss *n.* பளபளப்பு, விளக்க உரை, *v.* பளபளப்பாக்கு, விரிவுரை எழுது, *gloss over* மூடிமறை.

glossary *n.* அருஞ்சொல் விளக்கப்பட்டியல்.

love (க்ளவ்) *n.* கையுறை. *to be hand in glove* நெருங்கியபழக்க முள்ள *take up the glove* அறை கூவலை ஏற்றுக்கொள், *throw down the glove* போருக்கழை. *handle without gloves* கடுமை யாக நடத்து.

glow *v.* (க்ளோ) தீக்கொழுந்தின்றி ஒளியும்சூடும் சாலு, முகஞ் சிவப் புறு, *n.* வெந்தழலொளி, ஆவ உணர்ச்சி, முகச் சிவப்பு *to speak in glowing terms* மிகுதி யாகப் பாராட்டிப் பேசுதல், **glow worm** *n.* மின்மினி.

glower (க்ளௌவ) *v.* சினத்துடன் பார், உறுத்துப்பார்.

glowing *a.* உற்சாகப்படுத்துகிற.

glucose *n.* பழவெல்லம்.

glue *n.* பசைப்பொருள், *v.* பசையினால் ஒட்டு, நெருக்கமா கச்சேர்.

gulm (க்ளம்) *a.* வாட்டங் கொண்ட, அமைதியான.

glut (க்ளட்) *v.* தேவையிலும் கூடுதலாக வழங்கு, *n.* தேவைக்கு மேற்பட்ட வளம்.

gluten *n.* பசைப்பொருள்.

glutton *n.* மிகுதியாக உண்பவர், ஆவல் கொள்பவர், கீரியின விலங்குவகை.

glycerine *n.* மருந்துக்குப் பயன் படும் நீர்மப்பொருள்.

gnarled (நார்ள்ட்) கணுப்புடைப் புள்ள, முறுக்கிய, உருமாறிய.

gnash *v.* பற்களை நெரி.

gnat *n.* இரத்தம் உறிஞ்சும் பூச்சி வகை.

gnaw (நோ) *v.* பல்லால் கறி.

gnome *n.* கூளி, நிலத்தின் கீழுள்ள செல்வத்தைக் காவல் செய்யும் சிறு தேவதை, நீதி மொழி.

gnu (ந்யூ) *n,* ஆப்பிரிக்க மான் வகை.

go *v.* போ, இயங்கு, காலங்கழி, செலவாகு, விற்கப்பெறு, பின் பற்று, இணை, பரவலாயிரு, தெரியப்பெறு, பங்குகொள், தகர், வழிசெய், இற, தோல்வி யுறு, எடு, கட, உரியதாகு, பந்தயம்வை, ஆட்டங்கேள், ஒழி, *n.* ஆற்றல், முயற்சி, வெற்றி, நோய், *go ahead* முன்னேறு, *go back on* தவறு **go between** *n.* தரகர், **go-cart** *n.* சிறுவர் விளையாட்டு வண்டில், *go for* தாக்கு, **go-getter** *n.* தன்னம்பிக்கையுடன் முயல்பவன், **go go** *a.* சுறுசுறுப்பான, **go kart** *n.* பந்தயக்கார் மாதிரி, *go out*

தியணை, go round போதியளவு, go-slow n. வேண்டுமென்றே மெதுவாக வேலை செய்தல், go under கிழ்ப்படி, அழிந்துபோ go up விலையேற்றம், வெடித்தல் வி ரந்துளரிதல், go with ஒத்துப்போதல், on the go இயங்குதல், சுறுசுறுப்பு, to go to pieces கெடுதல், going like hot cakes நன்றாக விற்பனையாதல், it's a go ஒப்புக்கொள்ளப்பட்டது, it's no go பயனற்றது, முடியாதது, a going concern வெற்றிகரமான வணிகம்

goad *n.* தாற்றுக்கோல், மந்தை விரட்டும் தடி, தூண்டுதலளிக்கும் பொருள், *v.* எரிச்சலூட்டித்தூண்டு

goal *n.* இலக்கு, நோக்கம், உதைபந்தாட்டத்தில் பெறும் புள்ளி goalie *n.*

goat *n.* வெள்ளாடு, to play the giddy goat முட்டாளாக நட, get one's goat எரிச்சலூட்டு

goatee *n.* கூரான குறுந்தாடி.

gobble *v.* விரைந்துண்ணு, களகள என ஒலியெழுப்பு.

gobbledegook *n.* சொற் பகட்டு.

goblet *n.* தண்டும் அடியுமுள்ள கண்ணாடிக்கிண்ண வகை.

goblin *n.* குறும்புத் தேவதை.

god *n.* தெய்வம், போற்றிப் பாராட்டற்குரியவர், tin god தன்னைப்பற்றி கூடுதலாக எண்ணுகிற முக்கியத்துவமற்றவர்.

godchild *n.* வளர்ப்புக்குழந்தை, ஞானக்குழந்தை

goddess *n.* பெண்தெய்வம்.

godfather *n.* ஞானஸ்நானதந்தை, சட்டபூர்வமற்ற அமைப்பின் மூளை.

god fearing *a.* உண்மையான சமயப்பற்றுடைய.

godforsaken *a.* துயரஞ்செறிந்த, இரங்கத்தக்க.

godhead *n.* கடவுள்தன்மை.

godown *n.* கிடங்கு, பண்டசாலை களஞ்சியம்.

godparent *n.* ஞானஸ்நானப் பெற்றோர்.

godsent *n.* எதிர்பாரா நன்மை.

goggle *v.* விழிகளை அகலத்திறந்து உற்றுப்பார், goggles *n. pl.* கண்களைப் பாதுகாக்கும் மூக்குக்கண்ணாடி.

goitre *n.* குரல்வளைச் சுரப்பி வீக்கம்.

gold *n.* தங்கம், தங்கநகை, gold digger தன்கவர்ச்சியைப் பயன்படுத்தி ஆண்களிடம் பணம் பறிப்பவள், gold mine தங்கச் சுரங்கம், பெருஞ்செல்வ வருவாய்.

golden *a.* பொன்னிலான, விலை மதிக்க முடியாத, தலைசிறந்த golden age பொற்காலம், worship the golden calf பணம் பெறுவதையே நோக்காய்க் கொண்ட, golden handshake வேலையினின்றும் நீக்கப்பெற்றவர் அல்லது ஓய்வுபெற நிர்ப்பந்திக்கப்பெற்றவருக்கு தாராளமாகக் கொடுக்கப்பெறும் பணம், golden jubilee, golden wedding 50வது ஆண்டு நிறைவு விழா.

goldfinch *n.* தித்திரிட பறவை, இறக்கையில் மஞ்சள் ஆரமுள்ள பறவை.

oldfish *n.* சிறுசெந்நிற மீன்வகை

goldsmith *n.* பொற்கொல்லன்.

golf *n.* குழிப்பந்தாட்டம்.

golliwog *n.* அருவருப்பூட்டும் கறுப்புப்பொம்மை.

golosh *n.* பாதம் ஈரமாகாமல் பாதுகாக்கும் ரப்பர் மேலுறை

gondola *n.* நீண்டு ஒடுங்கி உயர் நுனி கொண்ட தோணி.

gone *a.* சென்ற, அழிந்துபோன, கெட்டுப்போன, *gone man, gone case* கெட்டுப்போன, *gone on* காதலில்.

gong *n.* சேமக்கலம்.

goo *n.* பசைப்பிடிப்பான ஈரப் பொருள்.

good *n.* நல்ல, சரியான, பொருத்தமான, ஒழுக்கமுள, அன்பான நன்னடத்தையுள்ள, பயனுள்ள, தகுதியான, முழுமையான, *n.* நயம், பயன், ஒழுக்கத்துறை நலம், goodish *a.* சிறந்த, பெரிய, goods *n.* பொருட்கள் goods and chattels உடைமை முழுதும்.

good bye *int.* கடவுள் காப்பாற்று வாராக.

good for nothing *a.* ஒன்றுக்கும் உதவாத.

Good Friday *n.* இயேசுநாதர் சிலுவையிலறையப் பெற்றதை நினைவுகூரும் ஈஸ்டருக்கு முந்திய வெள்ளிக்கிழமை.

goodwill *n.* நல்லெண்ணம், ஆதரவு, நட்புணர்வு, வணிக நற்பெயர், விற்கக்கூடியசொத்து

goody *n.* நல்ல தின்பண்டம், goody-goody புனிதமானவர் போல் பாசாங்கு செய்பவன்.

gooey *a.* ஈரமானதும் ஒட்டுந்தன்மையானதுமான

goofy *a.* முட்டாள்தனமான.

googly *n.* பந்துவீச்சு வகை.

goose *n.* (*pl. geese*) வாத்துவகை, முட்டாள், *cook one's goose* தோல்வியுறச்செய்.

gooseberry *a.* முட்செடிவகை, காதலரிடைநுழையும் வேண்டப்படாத மூன்றாமவர்.

goose flesh *n.* தோலின் சிலிர்ப்பு நிலை.

goose-step *n.* முழந்தாள் மடியாமல் நடக்கும் முறை.

Gordian (கோட்யன்) *a.* சிக்கலான, கடினமான, *to cut the Gordian knot* வன்முறையில் சிக்கல் தீர்த்தல்.

gore *n.* உறைந்துபோன குருதி, முக்கோண வடிவப் பகுதி, *v.* கொம்பினால் புண்படுத்து, gored *a.*

gorge *n.* தொண்டை, இடுக்கு வழி, *v.* அவாவுடன் விழுங்கு, நிரப்பு, அடைத்துக்கொள், *one's gorge rises* வெறுப்புக் கொள்.

gorgeous (கோஜஸ்) *a.* நன்றாக வண்ணந்தீட்டிய, சிறப்பான, அழகான.

gorget *n.* கழுத்தணி

gorgon *n.* அச்சுறுத்தும் பெண், கோரப்பெண், பயங்கரமானவள்.

gorilla *n.* பெருங்குரங்குவகை.

gormandize (கோமன்டைஸ்) *n.* மிகுதியாக உண்ணுதல்.

gormless *a.* முட்டாள்தனமான

gorse *n.* மஞ்சட்பூவுள்ள முட்செடிவகை

gory *a.* குருதிதோய்ந்த

gosh *int.* வியப்பிடைச்சொல்

gosling *n.* வாத்துக்குஞ்சு.

gospel *n.* இயேசுவின் போதனை, நம்பத்தக்க பொருள், நம்புங் கோட்பாட்டுத்தொகுதி, Gospel *n.* இயேசுவின் வாழ்க்கையும் போதனையும் குறிக்கும் புதிய ஏற்பாட்டு நூல்கள், *gospel truth* உறுதிப்பாடான உண்மை.

gossamer *n.* சிலந்தி நூல், நொய்மையான பொருள், மெல்லிய பட்டுநூல்.

gossip *n.* வீண்பேச்சு, மனம்போனபோக்கில் பேசுபவர்.

Gothic *n.* கட்டடக்கலையில் கூர்மாடச் சிற்பப்பாணி.

gouge(கௌஜ்) *n.* உளிவகை, *v.* தோண்டியெடு.

goulash (கூலஷ்) *n.* இறைச்சியும் மரக்கறியும் கலந்து ஆக்கிய உணவு வகை.

gourd *n.* சுரைக்காய், சுரைக்குடுக்கை

gourmand *n.* பேரளவில் உண்பவர்

gourmet (குவமே) *n.* உணவு குடிவகைச் சுவைஞர்

gout (கௌற்) *n.* சந்துவாதம், கீல்வாதம்

govern *v.* ஆளு, கட்டுப்படுத்து, நடத்து governor *n.* government *n.* ஆட்சி

governess *n.* வீடுகளில் குழந்தைகட்குக் கற்பிக்கும் ஆசிரியை

gown *n.* மேற்சட்டை, நீண்ட உடை, அலுவலக உடை

grab *v.* திடீரெனப் பறி, அவாவுடன்பற்று, கடுமையாக இயங்கு

grace *n.* கவர்ச்சி, அழகு, தயவு அன்பு, பரிவு, நன்றிசெலுத்தும் வழிபாடு, தவணை, பட்டம் *v* மதிப்பளி, அழகு செய், graceful *a.*, gracious *a.*

gradate (க்றடேற்) *v.* தரப்படுத்து தரவாரியாக ஒழுங்குபடுத்து

gradation *n.* படித்தர வரிசை சுரவரிசை, படிப்படியான மாற்றம்

grade *n.* படிநிலை, வகுப்பு, சரிவு, *v.* தரப்படுத்து, சீர்ப்படுத்து.

gradient *n.* சாய்வு வீதம், சரிவு வாட்டம்

gradual *a.* படிப்படியாக, மெதுவாக.

graduand *n.* பல்கலைக்கழகப் பட்டம் பெற விருப்பவர்.

Graduate *n.* பட்டதாரி, *v.* பட்டதாரியாகு, தகுதிபெறு, பகுத்து அடையாளமிடு, படிநிலைப்படி பிரி

graffito *n.* (*pl.* ti) சுவரில் கிறுக்கிய எழுத்து, சுரண்டி அமைத்த வரைதல்.

graft *n.* ஒட்டுச்சினை, அறுவை மூலம் இடம்மாற்றிப் பொருத்திய உயிரிழைமம், லஞ்சம், நேர்மையற்றமுறையிற்பெறும் பணம், *v.* ஒட்டுச்சினையைப் பொருத்து, பிரிக்கமுடியாமல் இணை, கடுமையாக உழை.

grain *n.* கூலம், தானியம், சிறுதுகள், 65 மில்லிகிராம் அளவு, அமைப்பு.

gram, gramme *n.* பருப்பு வகை. $\frac{1}{1000}$ கில்லோகிராம்.

graminivorous *a.* புல்தின்கிற.

grammar *n.* இலக்கணம், மரபமைதி, *comparative grammar*

ஒப்பிலக்கணம், *historical grammar* வரலாற்று வழி இலக்கணம், grammarian *n.* இலக்கணப்புலவர் grammatical *a.* இலக்கண அமைதியுடைய.

gramophone *n.* இசைத்தட்டுப் பெட்டி.

grampus *n.* கடல் விலங்கினம்.

gran *n.* பாட்டி.

granary *n.* களஞ்சியம்.

grand *a.* மிகப்பெரிய, மிகநல்ல, மேலான, கவர்ச்சியான, 1000 டொலர் அல்லது பவுண், *Grand Prix* (க்ரு ப்றி) முதன்மையான அனைத்துலக மோட்டார்ப் போட்டி, grandad *n.* பாட்டன், grandchild *n.* பேரக்குழந்தை, grand daughter *n.* பேர்த்தி

grande a. சிறப்புமிக்க, *grande passion* முழுதும்ஆடகொண்ட காதல்.

grandee *n.* உயர் பதவியாளர்

grandeur *n.* உயர்நிலை, பேராற்றல், பேரழகு.

grandfather *n.* பாட்டன்.

grandiloquent *a.* சொற்பகட்டான.

grandiose *a.* ஆரவாரமான, பெரியளவில் திட்டமிட்ட

grandma *n.*பாட்டி, grand mother *n.* பாட்டி.

grandpa *n.* பாட்டன்.

grandparent *n.* பாட்டன் அல்லது பாட்டி.

grandson *n.* பேரன்.

grandstand *n.* விளையாட்டுத்திடலைமைந்துள்ள பார்வையாளர் கொட்டகை.

grange (க்றேன்ஜ்) *n.* பண்ணைமனை,

granite (க்றநிற்) *n.* கருங்கல்.

granivorous *a.* கூலம் உண்கின்ற.

granny (க்றனி) *n.* பாட்டி, முதியவள்.

grant *v.* சலுகையளி, உண்மையென ஒப்புக்கொள், *n.* நன்கொடை, பொதுநிதியிலிருந்து மாணவருக்கு வழங்கும்செலவப்படி, அரசபொருளுதவி, *take for granted* உண்மையென அப்போதைக்கு ஒப்புக்கொள்.

granule *n.* சிறுகூலம், சிறுதுகள்

grape *n.* திராட்சைப்பழம், *grape vine* அதிகாரபூர்வமற்றமுறையில் செய்திபரவும் வகை.

grapefruit *n.* புளிச்சுவைப்பழவகை.

graph *n.* அடையாள விளக்கக் குறிவரைவு.

graphic *a.* கலைசார்ந்த, விளக்கமான, *graphic arts* வரைதல், ஓவியம், அச்சுபோன்றவை

graphite *n.* காரீயம்.

graphology *n.* கையெழுத்து ஆய்வுகலை.

grapnel *n.* பலகொளுவிகளுள்ள நங்கூரவகை.

grapple இறுகப்பிடி, பற்று போராடு

grasp *v.* புரிந்துகொள், பற்றிப்பிடி, *grasp at* பறி, grasping *a.* பேரசைபிடித்த.

grass*n.* புல்லு, *to go to grass* ஓய்வுபெறு, துரோகம் *grass roots* அடிப்படை மட்டம், *grass widow* கணவனைப்பிரிந்து

வேறிடத்திலிருக்கும் மனைவி

grasshopper *n.* வெட்டுக்கிளி.

grate *n.* அடுப்பு, இரும்பு அடுப்புத்தட்டு, *v.* தேய்த்துப்பொடியாக்கு, நறநறவென ஒலியெழுப்பு, எரிச்சலூட்டு.

grateful *a.* நன்றியுடைய, இனிமையான.

grater *n.* அராவு கருவி.

gratify *v.* மகிழ்வி, மனநிறைவடையச்செய்.

grating *n.* தடுப்புக்கிராதி

gratis (க்றேற்றிஸ்) *adv.* விலையில்லாமல், கைம்மாறு கருதாமல்.

gratitude *n.* நன்றி.

gratuitous *a.* நன்கொடையான, கைம்மாறுகருதாத, தேவையற்ற.

gratuity *n.* ஊழியக்கொடை.

grave *n.* புதைகுழி, பிணக்குழி, *a.* முதன்மையான, ஆழ்ந்தகவனத்துக்குரிய.

gravel *n.* சரளைக்கல், கல்லடைப்பு.

graven *a.* செதுக்கிய

graveyard *n.* இடுகாடு

gravitate *v* ஈர்க்கப்படு, **gravity** *n.* ஈர்ப்பாற்றல், முதன்மை.

gravy *n.* சமைத்த இறைச்சியிலிருந்து கசியுஞ்சாறு.

grayling *n.* நன்னீர் மீன்வகை.

graze *v.* புல்மேய், மேய்ச்சலுக்கு இட்டுச்செல், உராய்ந்துசெல், உராய்வுறு, **grazier** *n.* மந்தை மேய்த்துக்காப்பவன்.

grease *n.* கொழுப்பு, *to grease the palm* கைக்கூலிகொடு

great *a.* பெரிய, மிகநல்ல, பேர் பெற்ற

greatgraudchild *n.* கொள்ளுப் பேரர், பேரரின் பிள்ளை.

greave *n.* கீழ்க்காற்கவசம்.

greed *n.* பேரவா, பேராசை.

green *n.* பச்சைநிறம், புல்தரை *a.* பச்சைநிறமான, பழுக்காத முற்றுத, தேர்ச்சியில்லாத எளிதில் ஏமாற்றப்படுகின்ற *green belt* நகர்ப்புறத் திறந்த வெளி, *green fingers* பயிர் வளர்ப்பு திறமை, *green light* மேற்செல்ல இசைவு *Green Paper* திட்டங்கள்பற்றிய அரசு அறிக்கை, *green pound* ஐரோப்பிய பொருளாதார சமூக உணவு உற்பத்தியாளருக்கான கொடுப்பனவுகளின் ஒப்புக் கொள்ளப்பெற்ற ஸ்டார்லிங் பெறுமதி, *green revolution* பசுமைப் புரட்சி, பெருவிளைவு.

greenback *n.* அமெரிக்க தாள் நாணயம்.

greenery *n.* பசுந்தழை, பசுமையான பயிர்.

green eyed *a.* பொறுமையுள்ள.

greenfinch *n.* பசும்பொன்னிற சிறுபறவை.

greengrocer *n.* மரக்கறி விற்பவர்

greenhorn *n.* அனுபவமில்லாதவர்

greenhouse *n.* பயிர்வளர்க்கப் பயன்படும் கண்ணாடி வீடு.

greenroom *n.* நாடகக்கொட்டகையில நடிகர் ஓய்வறை.

greens *n. pl.* கீரைவகை

greenstick *n.* எலும்பு முறிவு.

greet *v.* வரவேற்பளி, வரவேற்று மகிழ்ச்சிதெரிவி.

gregarious *a.* கூடிவாழ்கிற, இணைந்துவாழ விரும்புகிற, மந்தையாக வாழ்கிற.

gremlin *n.* இயந்திரக்கோளாறு கட்குக் காரணமாகக் கருதப் படும் குறும்புதேவதை

grenade (க்றிநேட்) *n.* எறி குண்டு, **grenadier** *n.* குண்டு எறிபவர்.

grenadine (க்றெனடீன்) *n.* மாதுளம் பழத்திலிருந்து செய் யப்பெறும் குடிவகை.

grey *n.* சாம்பல்நிறம், *greybeard* முதியவர் **greyhound** *n.* விரை வாகஓடும் நாய்வகை, **grey lag** *n.* காட்டுவாத்துவகை, *looks grey* நம்பிக்கையிழந்த நிலை.

grid *n.* கம்பிவலைச்சட்டம், நிலப் படக் குறுக்குக் கோட்டுச் சட்டம்.

griddle *n.* கேக் சுடும் இருப்புக் கல்

gridiron *n.* சமையல்செய்தற் கான இருப்புச்சட்டம், அமெ ரிக்க உதைபந்தாட்டத்திடம்

grief *n.* கடுந்துயர், *come to grief* தோல்வியுறு, வீழ், அழிவுறு, இடர்படு.

grievance *n.* மனக்குறை, **grieve** *v.* வருந்து, தொல்லைகொடு.

grievous *a.* துன்பந்தருகிற, கடுமையான.

griffin *n* சிங்க உடலும் கழுகுத் தலையும் இறகுகொண்ட பழங்கதைக் கற்பனை உயிரினம்

griffon *n.* நாய்வகை, கழுகுவகை

litany *n.* வழிபாட்டுப் பாடல் தொகுதி.

litchi (லீச்சீ) *n.* பழவகை.

literacy *n.* எழுத்தறிவு.

literal *a.* எழுத்துபற்றிய, சொல்லின் மூலப் பொருள்சார்ந்த.

literary *a.* இலக்கியஞ்சார்ந்த.

literate (லிற்றறிற்) *a.* கல்வியறிவுள்ள.

literati *n. pl.* கற்ற வகுப்பினர்.

literature (லிட்றிச்ச) *n.* இலக்கியம்.

lithe (லைத்) *a.* வளையக்கூடிய, விரைந்து செல்லக் கூடிய.

lithic *a.* கல்சார்ந்த.

lithograph *n.* கல்லச்சு முறையிலான ஓவியம்.

lithography *n.* கல்லச்சுக்கலை.

litigate *v.* வழக்காடு.

litigant *n.* வழக்காளி.

litmus *n.* காடிப் பொருளுக்கு செந்நிறமாக மாறும் நீலநிறப் பொருள்.

litre (லீற்ற) *n.* பிரஞ்சு முகத்தலளவை அலகு($1\frac{3}{4}$ பைந்து)

litter (லிற்ற) *n.* குப்பைகூளம், ஓரீற்றுக் குட்டித் தொகுதி, தூக்குக் கட்டில், *v.* குட்டிகள் ஈனு, ஒழுங்கின்றியிரு.

litterateur *n.* இலக்கியவாணர்.

little *a.* சிறிய, இளைய, இழிந்த.

littoral *n.* நெய்தல் நிலம், கடலோரப் பகுதி.

liturgy (லிற்றேஜி) *n.* பொது வழிபாட்டு முறை.

live (லவ்) *a.* உயிருள்ள, எரிகின்ற, வெடியாத, நேரே ஒலிபரப்புகின்ற, மின்னூற்றலுள்ள, *live wire* சுறு சுறுப்பும் ஆற்றலுமுள்ள ஆள்.

live (லிவ்) *v.* வாழ், வாழ்க்கை முறைமேற் கொள், தங்கிவாழ், இருப் பிடமாகக் கொள், *lives by his wits* ஏமாற்றிப் பணம் பெறல், *live and let live* நீயும் வாழ்ந்து பிறரையும் வாழவிடு, *live from hand to mouth* அன்றுடவாழ்வுக்கே போதாத உழைப்பு, *live down one's past* கடந்தகாலத் தவறுகளைப் பிறர் மறக்கும் படியாக வாழல், *live fast* தவருக ஒழுகி உடல் நலம் கேடுற வாழ்தல், *live in a small way* மட்டான செலவில் அமைதியாக வாழ்தல், *live in clover* கவலையற்ற வாழ்க்கை, *live to oneself* ஒதுங்கி வாழ் *live upto one's principles*, கொள்கைப்படி வாழ்தல்.

livelihood *n.* வாழ்க்கைத் தொழில்.

livelong *a.* நீண்ட, *the livelong day* முழுநாளும்.

lively *a.* உயிர்த் தன்மையுள்ள சுறுசுறுப்புள்ள, *a lively time* இடர் மிகுந்த காலம்.

liven *v.* உயிர்த் துடிப்புடையதாக்கு.

liver *n.* ஈரற் குலை, கடும் செம்மண்ணிறம், *white livered, lily livered* கோழைமை, திறலின்மை.

livery (லிவறி) *n.* நகரத்தொழிற் குழுவினரின் தனி ஆடை,

அடையாள ஆடை liverystable வாடகைக் குதிரை லாயம்.

livestock (லிவ்ஸ்ரொக்) *n.* தோட்ட வளர்ப்பு விலங்குகள்

livid *a.* கடுஞ் சினமுடைய, வெளிறிய நீல நிறமான.

living *a.* உயிருள்ள, மண்ணினின்றும் பிரிக்கப் பெறுத, ஒத்த, *n.* வாழ்வுமுறை, பிழைப்பு, *living - room* பகலில் பயன்படுத்தும் அறை, *living-wage* வாழப்போதுமான கூலி.

lizard *n.* பல்லி.

llama (லாம) *n.* ஒட்டக இனத்து திமிலில்லாத தென் அமரிக்க விலங்கு.

lo *int.* பார்! அதோ!

loach *n.* நன்னீர் மீன் வகை.

load *n.* சுமை, மின்னேட்ட அளவு, பொறுப்பு.

loadstar, lodestar *n.* துருவ வெள்ளி, வடமீன், வழிகாட்டி

loadstone, lodestone *n.* வடதிசையையே காட்டும் காந்தக்கல்.

loaf *n.* பாண்துண்டு, சீனிக்கட்டி, தலை, *v.* வீண்பொழுதுபோக்கு, அலைந்துதிரி.

loam *n.* வளமான மண்.

loan *n.* கடன் கொடுத்தல், கடன் கொடுத்த பொருள், *v.* கடன் கொடு.

loath *a.* விருப்பமில்லாத.

loathe *v.* வெறுப்புக் கொள்,

loathsome *a.* அருவருப் பூட்டுகிற, வெறுக்கத்தக்க.

lob *v.* பந்தை மேலே அடி.

lobar *a.* சோணை சார்ந்த.

lobby *n.* வாயில்ரண்டபம், முன்னறை, சட்டமாக்கலுக்கு ஆதரவுதேடும் குழு.

lobe *n.* வளைந்த பகுதி, காதுச் சோணை, மடல்.

lobelia *n.* செடிவகை.

lobster *n.* நண்டு வகை.

local *a.* இடம் சார்ந்த, *n.* குறிப்பிட்ட இடத்தில் வாழ்பவர், பொதுவிடுதி, *local colour* பகைப் புலத்தை யதார்த்தமாகக் காட்டுதற்கான வண்ணனை, *local government* உள்ளூராட்சி.

locale *n.* நிகழ்விடம்.

locality *n.* நிகழ்விடம், அயல், பொருள் நிலை.

locate *v.* இடங்கண்டுபிடி,

loch (லொக்) *n.* குளம், கடற்கழி, காயல்.

lock *n.* மயிர்க்கற்றை, பூட்டு, கால்வாய்க் கதவு, பிடி, *v.* பூட்டு, *lock, stock and barrel* முழுவதும், *lock - out* கதவடைப்பு, *lock up* தற்காலிக சிறைக்கூடம்.

locker *n.* சிறு அடுக்குப்பெட்டி

locket *n.* பதக்கம், சிறுபேழை.

lockjaw *n.* வாய்ப்பூட்டு நோய்.

locksmith *n.* பூட்டு பழுதுபார்ப்பவன்.

loco citato adv. மேற்கோளாகக்காட்டப்பெற்ற பகுதியில்.

locomotion *n.* இடம்பெயரும் ஆற்றல்.

locomotive *n.* தொடர்வண்டி இயக்கும் பொறி.

locum *n.* பதில் மருத்துவர் பதில் குருவானவர்.

locus *n.* இடம், குறிப்பிடம்.

locus standi (லோக்கஸ் ஸ்ரான் டை) பங்கு பற்றும் உரிமை, முறை மன்றில் செய்யும் கோரிக்கை உரிமை.

locust *n.* வெட்டுக்கிளி.

locution *n.* சொல், சொற் றொடர்.

lode, load *n.* உலோகத் தாதுப் படை.

lodestar *n.* கப்பல் வழிகாட்டி யாயமையும் துருவ விண்மீன் lodestone திசைகாட்டும் கல்.

lodge (லொஜ்) *n.* தோட்டவீடு, வாயிற் காப்போன் இருக்கை, கழகக் கிளை உறுப்பினர் கூடு மிடம், *v.* தற்காலிகமாகத் தங்கவிடு, படுக்கை வசதி, கொடு.

lodger *n.* வாடகைக்கு இருப்ப வர், lodging *n.* வாடகை அறை.

loft *n.* பரண், மேன்மாடி அறை, கோவில் இருக்கை, *v.* பந்தை உயர அடி.

lofty *a.* மிக உயரமான, மேன் மையான, இறுமாப்பான.

log *n.* மரக்குற்றி, கப்பல் வேக த்தை அளக்குங் கருவி, log-book *n.* கப்பற்பயண விளக்கக் குறிப்பேடு.

log *n.* எண்ணின் மடங் கெண்.

logarithm *n.* மடக்கை, எண் ணைர் மதிப்பெண்ணின் மடங் கெண்.

loggerhead *n.* மர மண்டை, மூடன், *at loggerheads* ஒவ் வாதிருத்தல், சண்டையிடல்.

loggia *n.* நிறந்தபக்கங்களுள்ள களரி.

logging *n.* பலகைக்காகக் காட்டு மரம் வெட்டுதல்.

logic *n.* வாதமுறை, தர்க்கம்,

logical *a* தர்க்கம் சார்ந்த, நியா யமான, வாதப் பொருத்த மான.

logistics *n. pl.* வழங்கல்-சேவை ஆகியவற்றை ஒழுங்கமைத் தல், போர் வீரரை அணி வகுத்து நடத்துங்கலை.

logo *n.* அடையாளமாகப் பயன் படும அச்சுவடிவம்.

loin *n.* இடுப்பு, *gird up one's loins* செயற்படத் தயாராதல்

loiter *v.* அலைந்துதிரி, காலம் தாழ்த்து.

loll *v.* சோம்பிக்கிட, தொங்க விடு.

lollipop *n.* இனிப்புப்பண்டம்.

lollop *v.* தள்ளாடு, தடுமாறி விழு.

lolly *n.* இனிப்பு, பணம்.

lone *a.* தனிமையான.

lonely *a.* தனித்த, துயரார்ந்த, நடமாட்டமில்லாத.

loner *n.* ஒதுங்கிவாழ விரும் புபவர்.

long (லொங்) *a.* நீளமான, *adv.* நெடுங்காலமாக, *long face* துயரார்ந்த முகம், *long johns* நீண்டகாலுள்ள உள்ளாடை *make a long nose* இகழ்ச்சிக் குறிப்புக் காட்டு முகமாக மூக்கில் கைவைத்தல், *long shot* தவருன ஊகம் அல் லது முயற்சி, *have a long tongue* மிகுதியாகக் கதைத்தல், *long wave* 1000 மீற்றர் அலை நீளத்துக்குக் கூடுதலான வா னொலிஅலை.

long (லொங்) *v.* விரும்பு, ஆவ லுறு அவாக்கொள்.

long-bow *n.* வில் வகை, *draw the long bow* நம்ப முடியாத கதை சொல்லு.

long-cloth *n.* தடித்த பருத்தித் துணி வகை.

longevity *n.* நீண்ட வாழ்வு.

long-hand *n.* கையெழுத்து.

longhorn *n.* நீள் கொம்புள்ள மாட்டுவகை.

longing *n.* வேணவா, மிகுந்த ஆவல்.

longitude *n.* பூகோள கற்பனை நிரை கோடு.

long range *a.* நீண்ட வீச்செல்லையுடைய.

long-shore *a.* கடற் கரையில் வேலை செய்கிற, கடற் கரையில் காணப்படுகின்ற.

long-sighted *a.* தொலைவிலுள்ளதைமட்டுமே பார்க்கக் கூடிய.

long-suffering *a.* எரிச்சலூட்டுஞ் செயல்களைப் பொறுமையோடு தாங்குகின்ற.

long-term *a.* நெடுங்கால எல்லையுடைய.

long-tongued *a.* வாயாடியான.

long-winded (லொங்உவின்டிட்) *a.* கருத்துச் செறி வில்லாத பேச்சு, சலிப்புத் தட்டுமளவுக்கு நீடித்த பேச்சு அல்லது எழுத்து.

loo *n.* கழிப்பறை, கக்கூசு.

loofah *n.* சுரைக்காயினத்தின் காய்ந்த கோது.

look *v.* பார், தேடு, ஆராய், எதிர்கொள், போலத்தோன்று *look before you leap* நன்குக எண்ணிச் செயற்படு, *look a gift horse in the mouth* நன்கொடையில் குறை காணல், *look after*, தேடு, பேணு, கவனித்துப்பார், *look blue* மகிழ்ச்சியின்றியிரு, *look black* வெறுப்பினைக்காட்டு, *look down on* வெறு, *look forward to* ஆவலுடன் எதிர்பார், *look in on* சென்று பார், *look for* தேடு, *look into* ஆராய், *look on* பார்வையாளனாயிரு, *look out* விழிப்பாயிரு, ஆய்ந்து தேர், *look up* தகவலுக்காகத் தேடு, வளம் பெருகு, காண செல், *look up to* பாராட்டிமதிப்பளி,

looker - on *n.* பார்வையாளன்.

look - in *n.* பங்கு பற்றும் வாய்ப்பு.

looking - glass *n.* முகம் பார்க்கும் கண்ணாடி.

look - out *n.* காவல் நிலையம், காவலாள்.

loom *n.* நெசவுத்தறி, *v.* அச்சுறுத்தும் வகையில் தோன்று.

loon *n.* நீர்ப்பறவை, முட்டாள்.

loony *n.* பைத்தியக் காரன், *a.* பித்துப் பிடித்த *loony-bin* மனநோயாளர் நிலையம்.

loop *n.* வளையம், *loop the loop* கரணமடித்தல்.

loophole *n.* கோட்டைச்சுவர்ப் புழை, சட்டத்தின் பிடியினின்றும் தப்புதற்கான வழி.

loose *a.* தளர்ந்த, உதிரியான, சரியாயில்லாத, ஒழுக்கக்கேடான, *v.* விடுவி, தளர்த்து *at a loose end* திட்டமான தொழிலற்ற, *to break loose* தப்புதல், *loose life* ஒழுங்கற்ற வாழ்வு, *play fast and loose* நேர்மையின்றி நடத்தல், முட்டாள்தனமாக நடத்தல்.

loose-leaf *a.* ஏட்டினின்றுப் பிரித்

தெடுக்கக் கூடிய தனித்தனித் தாள்கள்.

loot *n.* கொள்ளைப் பொருள்.

lop *v.* வெட்டு, தொங்கவிடு, *n.* மரக்கொப்பு, அலையசைவு.

lope *v.* பாய்ந்தோடு, *n.* நீண்ட துள்ளல் ஓட்டம்.

lop-eared *a.* தொங்கு காது டைய.

lopsided *a.* ஏறுமாறான.

loquacious (லுக்வேஷஸ்) *a.* வம் பளக்கிற, கலகலப்பான.

lord *n.* பெருமகன், மேலாளன், நிலக்கிழார், *the Lord* இறை வன், *Our Lord* கிறித்து பெரு மான், *Lord's Supper* தேவநற் கருணை.

lordly *a.* பெருமகனுக்குரிய, இறு மாப்பான.

lore *n.* மரபுச் செய்தித் தொகுதி, கல்விச் செல்வம், புலமை.

lorgnette (லோன்யெற்) *n.* கை பிடியுடன் கூடிய தொலைநோக் குக் கண்ணாடி.

lorn *a.* கைவிடப்பட்ட, தனித்த.

lose (லூஸ்) *v.* இழ, கைவிடு, தோல்வியுறு, *lose one's head* தன் வயமிழத்தல், *lose ground* வலுவிழ, *lose one's temper* சினங் கொள்.

loss *n.* இழப்பு, *be at a loss* மனம் குழம்பிய நிலை.

lot *n.* பொருட்தொகுதி, நிலத் துண்டு, மிகுதி, *the lot* முழு வதும்.

lotion (லோஷன்) *n.* மருத்து நீர்மம்.

lottery (லொட்டரி) *n.* குலுக்குச் சீட்டுப் பரிசில் முறை.

lotus *n.* தாமரை, கற்பனைப் பழ வகை, *lotus eater* சோம்பேறி.

loud *a.* உரத்த, பகட்டான, பண் பற்ற, *loud hailer* ஒலிபெருக்கி *loud speaker* ஒலிபெருக்கி.

lough (லொக்) *n.* ஏரி, கடற் கழி.

lounge (லௌன்ஜ்) *v.* உலாவு, ஓய்வாகக்கிட, சாய்ந்திரு *n.* சாய்விருக்கை, ஓய்வறை, *lounge suit* பகலுடை.

lour, lower (லௌவ) *v.* முகத்தை ச்சுளி, கறுத்து அச்சுறுத்து.

louse *n.* (pl. *lice*) பேன், (pl. *louses*) வெறுக்கத்தக்கவர்.

lousy *a.* பேன் இருக்கின்ற, மிக வும்கெட்ட, பெறுமதியில்லாத.

lout (லௌற்) *n.* நாகரிக நய மறியாதவன்.

louver (லூவ) *n.* மழை-வெளிச் சம் தவிர்த்து காற்றுப் புக விடும் அமைவு.

love *n.* அன்பு, நட்பு, காதல், காதலி, புள்ளியின்மை, *in love* காதல்நிலை, *love affair* காதலுறவு, *there's no love lost between them* ஒருவரை யொருவர் வெறுக்கின்றார், *fall in love* காதல் கொள், *labour of love* அன்புப் பணி *make love to* காதலிக்கத் தொடங்கு.

love-begotten *a.* முறைப்படி பிறக்காத.

love bird *n.* காதலில் தோயும் பறவையினம்.

love-child *n.* மணவழிப் பிறக் காத குழந்தை.

love-feast *n.* ஆன்ம நேய ஒரு மைப்பாட்டு விருந்து.

love - lock *n.* நெற்றியில் விழும் சுருள் மயிர்க்கற்றை.

lovelorn *a.* காதலராற் கைது றக்கப் பெற்ற, காதலர்க்காய் ஏங்குகிற.

lovely *a.* அழகான, மகிழ்ச்சி தருகின்ற.

love - match *n.* காதல்மணம்.

love - philtre *n.* காதல் வசிய மருந்து.

love - shaft *n.* மாரன் கணை.

lovesick *a.* காதல் நலிவுற்ற.

low *n.* ஆவின் கதறல், தாழ்வானது, *a.* தாழ்ந்த, இழிந்த *adv* தாழ்வாக, மெள்ள, இழிநிலைக்கு, *low fellow* இழிந்தவன், *to lie low* அமைதியாக. *to be laid low* கொல்ல வேண்டிய, *give him eht low - down* ரகசியங்களைச் சொல்லு, *low season* சுறு சுறுப்பில்லாத காலம், *high and low* எல்லாரும், *low comedy* அவல நாடகம், *low relief* புடைப்பு நிலை ஓவியம், *low tide, low water* வேலை இறக்கம்.

low - born *a.* தாழ்குடிப்பிறந்த.

low - bread *a.* இழிநடத்தையுள்ள.

low - brow *a.* அறிவாளியல்லாத. பண்பாடில்லாத. *n.* இசையார்வமில்லாதவன்,

Low Church *n.* சமயகுருவுக்கோ சடங்குகளுக்கோ முதன்மை யளிக்காத ஆங்கில திருச்சபைப் பிரிவு.

low - class *a.* தாழ்ந்த.

low-down *a.* இகழ்ச்சிக்குரிய, நேர்மையில்லாத.

lower *a.* தாழ்ந்த, கீழான, *lower cave* அச்சுத்துறையில் சிற்றெழுத்து வடிவம், *lower deck* சிற்றாழியர்

lowlands *n. pl.* பள்ளமான நிலப் பகுதி.

lowly *a.* பணிவுள்ள.

Low Sunday *n.* இயேசு உயிர்த்தெழுந்தநாள் விழாவுக்கு அடுத்த ஞாயிற்றுக் கிழமை.

loyal *a.* திடப்பற்றுடைய.

loyalist *n.* பற்றுறுதியுடையவர்.

lozenge *n* வைரம்போன்ற சாய்சதுர உரு, வாயில் கரையும் குளிகை வகை.

lubber (லப) *n.* பயிற்சிபெறுத கடலோடி, செயற்திறனில்லாத தொழிலாளி.

lubber's line *n.* கப்பல் முகப்புத் திசை காட்டும் திசையறிகருவி வரை.

lubricate (லூப்றிகேற்) *v.* மசகிடு, எண்ணெயிடு.

lucerne (லுஸேண்) *n.* செடி வகை.

lucid (லூஸிட்) *a.* தெளிவான.

Lucifer (லூஸிப) *n.* தீய ஆவி, சைத்தான்.

luck *n.* நற்பேறு, அதிர்ஷ்டம்.

lucrative *a.* மிகு வருமானந் தருகிற.

lucre *n.* நயம், *filthy lucre* தகாவழிப்பணம்.

lucubrations *n.* ஆழமான படிப்பு.

Lnddite *n.* இயந்திர ஊழித்தொடக்கத்தில் (1811 - 1816) இயந்திர அழிப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டோர்.

ludicrous *a.* நகைப்புக்கிடமான, முட்டாள்தனமான.

ludo *n.* பகடை ஆட்டவகை.

luff (லப்) *v.* கப்பல் முகப்பைக் காற்றுத் திசைக்குத் திருப்பு.

lug (லக்) *v.* வலிந்திழு, *n.* காது போன்ற பகுதி.

luge (லூஷ்) *n.* பனிச் சறுக்கு வண்டி வகை.

luggage (லகிஜ்) *n.* பயணப் பொதி.

lugger (லக) *n.* சிறியதோணி, அம்பி.

lugubrious *a.* துயரார்ந்த, துன்பமான.

lukewarm (லூக்வோம்) *a.* இளஞ் சூடான, ஆர்வமில்லாத.

lull (லல்) *v.* அமைதிப்படுத்து, துயிலச்செய், *n.* அமைதி, ஓய்வு.

lullaby (லலபை) *n.* தாலாட்டு.

lumbago (லம்பேகோ) *n.* இடுப்பு வாத நோய்.

lumbar (லம்ப) *a.* இடுப்பு சார்ந்த.

lumber (லம்ப) *n.* தேவையற்ற பொருட்கள், வெட்டுமரம் *v.* தடுமாறிநட, இடைஞ்சலுண்டு பண்ணு, இடம்நிரப்பு, *to lumber up* பயனற்ற பொருட்களால் நிரப்பு.

lumberjack *n.* மரம்வெட்டி.

luminary (லூமினறி) *n.* விண்மீன், புகழ்பெற்ற அறிஞன்.

luminescent *a.* வெப்பமின்றி ஒளியுமிழ்கின்ற.

luminous *a.* ஒளிவீசுகின்ற.

lump (லம்ப்) *n.* கட்டி, வீக்கம், பேதை, பெரிய அளவு, *v.* குவி, *a lump sum* மொத்தத்தொகை *lump it* வேண்டாததைமுறைப்பாடு செய்யாமல் ஏற்றுக் கொள்.

lunacy (லூனஸி) *n.* பைத்தியம், மடமை.

lunar (லூன) *a.* திங்களுக்குரிய *lunar month* புதுநிலா இரண்டுக்கு இடைப்பட்ட காலம்

lunatic (லூனற்றிக்) *n.* பித்தர், அறிவற்றவர், *lunatic asylum* பித்தர் விடுதி.

lunch (லன்ச்) *n.* நண்பகல் உணவு, சிற்றுண்டி.

luncheon *n.* சிற்றுண்டி.

lunge (லன்ஜ்) *n.* திடீர் முற்பாய்ச்சல், திணித்தல்.

lungs (லங்ஸ்) *n.* நுரையீரல்.

lupin *n.* செடிவகை.

lupine *a.* ஓநாய்க்குரிய.

lurch (லே'ச்) *n.* திடீர்ச்சாய்வு, தடுமாற்றம், *to leave in the lurch* இடர்ப்படும் போது கைவிடுதல்.

lurcher *n.* திருட்டுவேட்டைக்காரர்பயன் படுத்தும் கலப்பின நாய்வகை.

lure (ல்யுஅ) *v.* கவர், வசப்படுத்து, *n.* கவருதற்கான இரை, கவர்ச்சி.

lurid (ல்யுறிட்) *a.* அச்சம் தருகின்ற, அதிர்ச்சி விளைக்கின்ற, பகட்டு நிறங்களிலான, *lurid story* அருவருக்கத்தக்க உணர்ச்சியைக் கிளறும் கதை.

lurk (லேக்) *v.* பதுங்கியிரு, மறைந்திரு.

luscious (லஷஸ்) *a.* சுவையான, இனிப்பான.

lush (லஷ்) *a.* அடர்த்தியான, வளமான, ஆடம்பரமான.

lush (லஷ்) *v. lush up* குடிவகை நல்லூண் வழங்கு, *n.* குடிகாரன், களி.

lust *n.* காமம், மிகு விருப்பம்.

lustre (லஸ்ற்ற) *n.* பளபளப்பு, பெரும்புகழ்.

lusty *a.* வலிமையும் சுறுசுறுப்பு முள்ள.

lute (லூற்) *n.* இசைக்கருவி வகை யாழ்.

Lutheran *n.* மாட்டின் லூதர் (*1483 - 1546*) எனும் சமயசீர் திருத்தக்காரரைப் பின் பற்றுபவர்.

luxuriant *a.* தாராளமாக வளர்கின்ற.

luxuriate *v.* இன்பில் திளை.

luxurious *a.* மிகு வசதியுள்ள, இன்ப வாழ்வுக்குகந்த, ஆடம்பரமான.

luxury *n.* இன்பவாழ்க்கைப் பொருள், சுவைக்கக்கூடிய ஆனால் முகியத்துவ மில்லாத பொருள், ஆடம்பரம்.

lycee (லீஸே) *n.* 14-18 வயதுக் கிடைப்பட்டவர்க்கான பிரஞ்சு நாட்டுக் கல்லூரி.

Lyceum *n.* அரிஸ்டோட்டில் தங்கியிருந்து கற்பித்த அதென்ஸ் நகரத்தோட்டம், இலக்கியக் கழகம், சொற்பொழிவுக்கூடம்.

lye *n.* கழுவு நீர்ம வகை.

lying *n.* பொய்பேசுதல், படுத்திருத்தல், *lying in* மகப்பேறுற்ற நிலையில்.

lymph (லிம்ப்) *n.* நிறமற்ற ஊன் நீர்.

lynch *v.* ஆராய்வின்றித் தான் தோன்றித் தனமாய்த் தீர்ப்பளி, *lynch law* சட்ட விரோதமான நீதி மன்ற விதி முறை.

lynx *n.* கூரிய பார்வை யுடைய பூனையின விலங்கு, *lynx eyed* கூரிய பார்வையுள்ள.

lyre (லய) *n.* பண்ணுடைய நரம்பிசைக் கருவிவகை.

lyric (லிறிக்) *n.* உணர்ச்சிப் பாடல், இசைப்பா.

lyrical *a.* உணர்ச்சிப் பாடலுக்குகந்த, lyricism *n.* உணர்ச்சிப் பாடற் பண்பு.

lyrics (லிறிக்ஸ்) *n. pl* உணர்ச்சிப் பாடல்கள்.

lyrist *n.* யாழ்ப்பாணன், உணர்ச்சிப்பாடற் கவிஞர்.

lysol (லைஸொல்) *n.* நுண்மக் கொல்லி.

M

M உரோம எண் *1000*.

ma *n.* தாய்.

ma'am *n.* பெருமாட்டி.

mac *n.* மழைச்சட்டை.

macabre *a.* கொடுமை மிக்க.

macadam *n.* தெருப்போடுதற்கான உடைகல்.

macaroni *n.* குழல் வடிவிலான தின்பண்டம்.

macaronics *n. pl.* வேடிக்கைப் பாடல்கள், மணிப்பிரவாளம்.

macaroon *n.* முட்டை வாதுமை சர்க்கரை சேர்ந்ததின்பண்டம்.

macaw *n.* அமரிக்க கிளியினம்.

mace (மேஸ்) *n.* உலோகத் தலைக் கோற் படைக்கலன், பணித்துறை அடையாளக் கோல், சாதிக்காய்க்கோது.

macerate (மஸறேற்) *v.* ஊற

வைத்து மென்பத மாக்கு, மெலிவி.

machan (ம'சான்) *n.* மரஉச் சியில் கட்ட ப்படும் வேட்டைப் பரண்.

Machiavellian (மக்யவெலியன்) *a.* சூழ்ச்சிமிக்க, 1527 இல் இறந்த மக்கிய வெலியின் கொள்கையைப் பின்பற்று கின்ற.

machination (மகினேஷன்) *n* சூழ்ச்சி, சதி.

machine (மஷீன்) *n.* இயந்திரம், *machinegun* தானியங்கித் துப் பாக்கி.

mackerel (மக்றல்) *n.* கடல் மீன் வகை.

mackintosh *n.* மழைச் சட்டை.

macro - *pref.* பெரிய, நீண்ட.

macro biotic *a.* வாழ்வு நீட்சிக் கான உணவு சார்ந்த

macrocosm *n.* அண்டம், முழு வதும்.

macro-economics *n.* பேரலகு களின் பொதுவான பொருளி யல் ஆய்வு.

mad *a.* மனநோயுள்ள, மடைத் தனமான, மகிழ்ச்சி வெறி கொண்ட.

madame *n.* திருவாட்டி, பெரு மாட்டி, மாதரை விளிக்கும் மரியாதைச் சொல், *pl.* *mes-dames.*

madcap *a.* எளிதில் உணர்ச்சி வயப்படுகின்ற, *n.* துணிச்சல் மிக்கவள்.

madder *n.* பூண்டுவகை.

Madeira *n.* இன்தேறல், அப்ப வகை,

mademoiselle (மட்முவாஸல்) *n.* மணமாகாத பெண்ணுக்கான அடைமொழி.

madonna *n.* கன்னி மேரியின் படம் அல்லது உருவச்சிலை.

madrigal *n.* குறுங்காதற் பாடல், பல் குரற் பாடல்.

maelstrom (மேல்ஸ்ட்ரோம்) *n.* பெரும்நீர்ச்சுழி, மனக்குழப்பம்.

maestro (மைஸ்ட்ரோ) *n.* இசைப் பா இயற்று பவர் இசைநிக ழ்ச்சி நடத்துபவர், கலைவல்லு நன்

magazine (மகஸீன்) *n.* பருவவெ ளியீடு, படைக்கல களஞ்சியம் *magazine gun* துப்பாக்கி வகை.

Magdalene *n.* திருந்திய வேலை மகள்.

magenta (மஜென்ற்ரு) *n.* செவ் வூதா நிறம்.

maggot *n.* முட்டைப்புழு.

Magi (மேஜை) *n. pl.* குழந்தை இயேசுவுக்குக் காணிக்கை கொடுக்க பெத்தலஹேம் சென்ற கீழ்ப்பால் அறிவர்.

magic *n.* மாய வித்தை, *black magic* பில்லி, சூனியம், *natural magic* செப்பிடுவித்தை, *white magic* தெய்வ உதவியுடனான மாயம்.

magistrate *n.* குற்றவியல் நடு வர், நீதிபதி.

Magna Carta *n.* பேருரிமைத் தாள், பிரிட்டனில் 1215 இல் ஜோன் அரசனிட மிருந்து பெற்ற உரிமைத்தாள்.

magnanimous *a.* பெருந்தன் மையுள்ள.

magnate (மக்நேற்) *n.* செல் வாக்குள்ள பெருஞ் செல்வன், பெருவணிகன்.

magnesium (மக்னீஷம்) *n.* உலோகத் தனிம வகை.

magnet (மக்நிற்) *n.* காந்தம், கவர்ச்சிப் பொருள்.

magneto (மக்நீற்ரோ) *n.* காந்த மின்னுக்கி.

magnificent *a.* மிகச்சிறந்த.

magnify *v.* பெரிதாக்கு, மிகைப் படுத்து.

magniloquent (மக்நிலுக்வன்ற்) *a.* பெருமையோடு பேசுகிற, உயர்சொல் வகையான.

magnitude *n.* பருமன், பரும அளவு, முதன்மை, முக்கியத்து வம்.

magnolia *n.* நறுமணப் பூமரம்.

magnum *n.* அரைக்கலன் அளவு, அரைக் கலன் குடி வகை.

magnum opus *n.* முதன்மையான படைப்பு.

magpie (மக்பை) *n.* காக்கை வகை, வம்பளப் பவர் குறியின் வெளிவட்டம்.

mahogany *n.* செம்மண்ணிற மர வகை.

mahout (மஹௌத்) *n.* யானை ஓட்டி.

maid (மேட்) *n.* பெண், கிழக் குமர், பணிப்பெண், *maid of all work* பலதொழில் செய் பவள், *maid of honour* அரசி யின் சேடி., *old maid* மண மாகா முதியோள்.

maiden (மேடின்) *n.* மணமாகா தவள், தலைவாங்கிப் பொறி, பாலினச் சேர்க்கை பெறுத, பரிசில் பெறுத, வித்திலிருந்து விளைந்த, பழக்கப் படாத, *maiden name* மணமாகு முன் னுள்ள பெயர், *maiden over* ஓட்டம் எடுக்காத, *maiden speech* முதற்பேச்சு.

mail (மேல்) *n.* மெய்க்காப்பணி, அஞ்சல், *mailed fist* வன் செ யல்.

maim (மேம்) *v.* குறைப்படுத்து, முடமாக்கு.

main (மேன்) *n.* சேவற்போட்டி, பகடைக் கள்விளண், பேராழி, பெருநிலப்பகுதி, சாக்கடைக் கால் வாய், முதன்மை நிலை. *with might and main* முழுவ லி மையோடு, *mainspring* மூல விசை.

mainstay *n.* பாய்மரக்கயிறு, முக்கிய ஆதாரம்.

mainstream *n.* அப்போதைய போக்கு.

maintain *v.* செலவை ஏற்றுக் கொள், உண்மையென நிறுவு, வாழவை, தொடரச் செய் பேணு.

maisonette (மேஸ்நெற்) *n.* சிற்றில், பகுதிவீடு.

maize (மேஸ்) *n.* சோளம்.

majestic *a.* வீறுமிக்க, தனிச்சிறப் புடைய, ஆளுமைவாய்ந்த.

majesty *n.* தோற்றப் பொலிவு, அரசரை விளிக்கு முறை.

major (மேஜ) *a.* பெரிய, மிகமிக இன்றியமையாத, வயதுவந்த, *n.* படைத்துறைத் தலைவர், *v.* சிறப்புப் பாடமாகப் பயில், *ma jor domo* வீட்டுத் தலைமைப் பணியாள்.

majority *n.* பெரும்பான்மை, *the majority* இறந்தோர், *join the majority* இறந்துபோ, *reach one's majority* 21வயதடைதல்.

make *v.* செய், உண்டுபண்ணு, அடை பெறு, வற்புறுத்து, செய்வி, *make away with* அழி, *make believe* பாசாங்கு செய், நடி, *make do* சமாளி, *make for* நோக்கிச் செல், அடைய முயல், *make good* வெற்றியுறு, நிறைவு செய், இழப்பீடுசெய், *make love* கட்டித் தழுவிக் காதலி, புணர்ந்து கொள் *make much of* இன்றியமையாத தாகக் கொள், மிகுந்த அக்கறை காட்டு, *make off* ஓடி விடு, *make off with* திருடு, *make out* எழுது, கண்டறி, விளங்கிக் கொள், உறுதிப்படுத்து, *make over* உரிமை மாற்று, *make shift* சமாளி *make up* இழப்பீடுசெய், உருவாக்கு, ஏற்பாடு செய், பூசல் ஒழிந்து ஒன்றிணை, குறை நிரப்பு, ஒப்பனைசெய், கதை கட்டு, *make up one's mind* முடிபு செய், *make upto* அன்பு செய், *make weight* குறைநிரப்பி.

making *n.* செய்தல், உருவாக்குதல், *be the making of* வெற்றிக்கான காரணி, *have the makingsof* ஆக்கப் பண்புக் கூறுகள் பெற்றிருக்கின்ற.

mal - *pref.* கூடாத.

malachite (மலகைற்) *n.* பச்சை நிறக் கனிப்பொருள்.

maladjusted *a.* பொருத்தக் கேடான.

maladministration *n.* சீரற்ற நிர்வாகம்.

maladroit *a.* தவருன, தாறுமாருன.

malady *n.* பிணி.

mala fide *a.* தீய நோக்குடனுன.

malaise (மலேஸ்) *n.* உடல்நலக் கேடு.

malapropism *n.* ஒலிக்குழப்பத் தாலாகும் சொற்குளறுபடி, ஒருவகையணி.

malaria *n.* நுளம்பினால் ஏற்படும் முறைக் காய்ச்சல்.

Malayalam *n.* திராவிட மொழி எனப்பெறும் பழந்தமிழின்கிளை மொழிகளி லொன்முன மலையாள மொழி (கி. பி. 8ம் நூற்முண்டளவில் தமிழிலிருந்து பிரிந்தது).

malcontent *n.* மனக்குறையுடையவர்.

mal de mer *n.* கடற் செலவில் ஏற்படும் குமட்டல்.

male (மேல்) *n.* ஆண்.

malediction (மலிடிக்ஷன்) *n.* பழிப்புரை.

malefactor *n.* குற்றவாளி, தீங்கிழைப்பவர்.

malevolence *n.* தீங்கிழைப்பதில் ஆர்வம்.

malfeasance *n.* பொல்லாங்கு, பணியாளர் நெறி தவறிய நடத்தை.

malformation *n.* தவருன உருவ அமைப்பு.

malice *n.* தீயநோக்கம், தொல்லைதரும் விருப்பம்.

malign (மலின்) *a.* தீங்கு செய்கின்ற, *v.* புறங்கூறு, பழிகூறு, அவதூறுகூறு.

malignant (மலிக்னன்ற்) *a.*

கொடிய, கடு வெறுப்புள்ள, விரைந்து வளர்ந்துதீமைசெய் கின்ற, *malignant disease* கொல்லும் பிணி.

malinger *v.* கடமை தவிர்க்க நோயுற்றவர்போல் நடி.

mallard *n.* காட்டுவாத்து.

malleable *a.* அடித்துத்தகடாக்கக் கூடிய, நெகிழ் பிணக்க முடைய.

mallet (மலிற்) *n.* மரச்சுத்தியல்.

malnutrition *n.* ஊட்டக் குறைவு.

malodorous *a.* கெட்டமண முள்ள.

malpractice *n.* கெடுசெயல்.

malt *n.* வடிப்பதற்கான கூல மாவூறல்.

Malthusian *n.* குடிப்பெருக்கத் தடுப்புக்கு பாலியற் கட்டுப் பாடு வேண்டுமென்ற மல்துஸ் (1834 ல் இறந்த) என்பாரைப் பின் பற்றுபவர்.

maltreat *v.* தவறுக நடத்து துன்புறுத்து.

mama (மமா) *n.* ஆய், தாய், அம்மா.

mamba *n.* தென் ஆப்பிரிக்க மரநச்சுப்பாம்பு.

mammal (மமல்) *n.* பாலூட்டி

mammary *a.* முலைசார்ந்த.

mammon *n.* தெய்வம் போலப் பேணப்படும் செல்வம்.

mammoth *n.* கால்வழியற்றுப் போன ஆனையினம், *a.* மிகப் பெரிய.

man *n.* மனிதன், ஆள், *man-hour* ஓராள் ஒருமணித்தியாலத்திற் செய்யும் வேலையளவு, *man-hunt* மனிதவேட்டை, *man in the street* பொதுநிலை மனிதன், *man of the world* சமூகம் பற்றி நன்கறிந்தவன், அனுபவசாலி, *man-of-war* போர்க்கப்பல், *man to man* வெளிப் படையாக, *to a man* யாவரும், *the inner man* வயிறு.

manacle *n.* கையிலங்கு.

manage (மனிஜ்) *v.* நடத்து, மேலாட்சி செய், ஒப்பேற்று, சமாளி, **management** *n.* மேலாண்மை, செயலாட்சிக் குழு.

manager *n.* மேலாளர், பொறுப் பாளர், *manageress n. fem.*

Manchester goods *n.* பருத்திப் புடைவை.

Manchester School *n.* அரசியற் கட்டுப்பாடற்ற வணிகமு றைக் கோட்பாட்டாளர்.

mandamus *n.* மேம்மன்ற ஆணை.

mandarin *n* பண்டைய சீன அரச அலுவலர், செல்வாக் குள்ள உயர் அலுவலர், சிறு தோடை வகை, தரமான சீனப் பேச்சு மொழி.

mandate *n.* ஆணை, மேலிடக் கட்டளை, உரிமைக்கட்டளை, **mandatory** *a.*

mandible *n.* தாடை.

mandolin (மன்டுலின்) *n.* நரம் பிசைக் கருவி வகை.

mandrake *n.* உறக்கந்தரும் நச்சுமர வகை.

mandrill *n.* குரங்கு போன்ற விலங்கு வகை.

mane (மேன்) *n.* விலங்கினத்தின் நீண்ட பிடரிமயிர், **manes** *n. pl.* தென்புலத்தார்.

manful *a.* துணிச்சலுள்ள, உறுதியுடைய.

manganese *n.* நரைநிற உலோக வகை.

mange (மேன்ஜ்) *n.* விலங்கினத்தின் தோல் நோய்.

mangel wurzel (மங்கல்வேஸல்) *n.* விலங்குணவாகும் கிழங்கினம்.

manger (மேன்ஜ) *n.* விலங்கின் உணவுத் தொட்டி.

mangle (மங்கிள்) *n.* புடைவை நீர் பிழிந்த தகற்றும் பொறி, *v.* முரட்டுத் தனமாக வெட்டு, உருக்கெடப் பண்ணு இதைத்தழி.

mango *n.* மாங்காய், *(pl-oes)*

mangrove (மங்க்ரோவ்) *n.* சதுப்புநிலச் செடிவகை.

mangy (மேன்ஜி) *a.* தோல் நோய் பற்றிய, அழுக்கடைந்த, வலுவற்ற, கெட்ட.

manhandle *v.* முரட்டுத்தனமாகக் கையாளு, மனித ஆற்றலால் மட்டுமே இயக்கு.

manhole *n.* நிலக்கீழ் குழாய்களை அடையக் கூடிய வாய்ப்புழை.

manhood *n.* முழுமனிதப் பருவம், ஆண்மை, நாட்டின் ஆடவர் தொகை.

mania *n.* மூளைக்கோளாறு, பேராவல்.

mania *suf* பேராவல், பைத்தியம், **kleptomania** திருட்டார்வம், **bibliomania** பொத்தகப்பைத்தியம்.

manicure *n.* கைவிரல் உகிருக்கான ஒப்பனை. நகவொப்பனை

manifest *a.* தெளிவான, பிழையற்ற, *v.* தெளிவாகக் காட்டு, அடையாளங் கொடு, *n.* சரக்குப்பட்டியல், ஆட்பதிவுப் பட்டியல்.

manifesto *n.* (*pl.* o*s*) கொள்கை விளக்க அறிவிப்பு, *communist manifesto* மார்க்ஸ் ஏங்கல்ஸ் ஆகியோரால் 1848 இல் வெளியிடப்பெற்ற கம்யூனிஸ்ட் அகில கொள்கை விளக்கம்.

manifold *a.* பல்வகையான.

manikin *n.* குள்ளன், குட்டையான மனிதன்.

manilla *n.* மண்ணிறத்தாள் வகை, சணல் நார்வகை.

manioc *n.* மரவள்ளி வகை.

manipulate *v.* கையாளு, திறமையாக நடத்து, சூழ்ச்சித்திறத்துடன் கையாளு.

mankind *n.* மனித இனம்.

manly *a.* வீறுமிக்க, மனிதனுக்குரிய ஆண்மையுள்ள.

manna *n.* பாலைவனத்தில் இசுரேலியர்க்கு இறைவனால் அருளப்பெற்ற உணவு.

mannequin (மனிகின்) *n.* ஆடையணிக் காட்சிப் பாவை.

manner *n.* பாங்கு, முறை, பாணி வகை, நடைமுறை, (*pl*) சமூக வழக்கமரபு, நடைமுறைகள்.

mannerism *n.* செயற்கை மரபு, போலிநடை, தனிப்பாங்கு.

mannish *a.* ஆண்மாரியான, ஆணியல்பு காட்டுகின்ற.

manoeuvre (மனூவ) *n.* படை போர்க் கப்பல்களின் திட்ட

மிட்ட நடவடிக்கை இயக்கம், சூழ்ச்சித் திட்டம், திறமையான திட்டம்.

man-of war *n.* போர்க்கப்பல்

manor *n.* பண்ணை நிலத்து—ன் கூடிய நாட்டு புற வீடு.

manse *n.* கோவிற் குருவின் வீடு.

manservant *n.* ஆண்பணியாள்.

mansion *n* மாளிகை, பெருங் கட்டடம்.

manslaughter (மன்ஸ்லாட்ட) *n.* கருத்தின்றிச் செய்யும் ஆட் கொலை.

mantelpiece *n.* அடுப்பைச்சுற்றி அதன் மேல் கட்டப் பெற்ற பகுதி.

mantilla *n.* பெண்களின் தலை மயிர் தோள்களின் மென்துணி மறைப்பு.

mantis *n.* வெட்டுக்கிளிபோன்ற பூச்சி.

mantle *n.* கையற்ற தளர்த்தி யான மேற்சட்டை, போர்வை.

manual *a* கைசார்ந்த, *n.* கைந் நூல், கையால் வாசிக்கப்படும் இயத்தின் பட்டடை.

manufactory *n.* தொழிற்சாலை.

manufacture *v.* இயந்திரமூலம் பெரியளவில் உற்பத்திசெய், செயற்கையாகப் படை.

manumit *v.* விடுவி.

manure *n.* எரு, உரம், பசளை.

manuscript *n.* கையெழுத்துப் படி.

many *a.* பல.

Maoism *n.* 1976இல் இறந்த சென்சினத் தலைவர் மாஓசே துங் என்பாரின் பொதுவுடை மைக்கோட்பாடு

map *n.* நிலப்படம், உலகப்படம், நாட்டுப்படம், *map out* திட்ட மிடு.

maple (மே'பிள்) *n.* அகன்ற இலைகளுடைய மர வகை.

maquis (ம'கீ) *n.* சிறுமரப்புதர்க் காடு, ஜெர்மனிபடைக்கு எதிரான இரகசிய பிரெஞ்சுப் படையினர், இரகசியப்படை.

mar *v.* கெடு, பாழ்படுத்து.

marabou (மறபூ) *n.* ஆப்பிரிக்க பறவை இனம்.

maraschino (மறஸ்கிநோ) *n.* குடிவகை.

marathon *n.* நெடுநீள ஓட்டப் போட்டி, பொறுமைக்கான நீண்ட சோதனை.

marauding *a.* கொள்ளையிடுகின்ற, **maraud** *v.* சூறையாடு, **marauder** *n.* கொள்ளைபர்.

marble *n.* பளிங்குக்கல், மாக்கல்.

marcasite (மகஸைற்) *n.* வெள்ளை இருப்புக்கந்தகக்கல்.

March *n.* ஆங்கில ஆண்டின் மூன்றும் மாதம்.

march *v.* அணிவகுத்துச்செல், முன்னேறு, *march past* படையினர் அணிநடை, **marches** *n. pl.* எல்லைப் பகுதி.

marchioness (மாஷநெஸ்) *n.* கோமகள்.

mare (மெய) *n.* பெண்குதிரை, *mare's nest* பயனற்ற கண்டு பிடிப்பு, பொய்யான கண்டு பிடிப்பு, *to go on Shank's mare* நட.

margarine (மாகறீன்) *n.* செயற்கை வெண்ணெய்.

marge (மாஜ்) *n.* வெண்ணெய் வகை.

margin *n.* விளிம்பு, எல்லை, தேவைக்கு மேற்பட்ட அளவு.

marginal *a.* ஓரத்திலுள்ள, எல்லையடுத்த, சிறிதளவேயான, *marginal constituency* உறுதியானதாகக் கருதமுடியாதளவுக்கு மிகக் குறைந்த பெரும்பான்மையுடன் வென்ற தேர்தல் தொகுதி, *marginal land* அரசு உதவியின்றி பயன் படுத்தமுடியாத நிலம், *marginal utility* எல்லைப்பயன்பாடு.

margosa *n.* வேப்பமரம்.

marguerite (மாகரீற்) *n.* பூ வகை.

mariage de convenance (மறிஆஷ் டெகொன்வனுன்ஸ்) *n.* அன்புக் காகவன்றிப் பணத்துக்காகச் செய்யப்படும் திருமணம், ஆதாயத் திருமணம்.

marigold *n.* மஞ்சட் பூ வகை.

marijuana marihuana (மறிஹ்வான) *n.* புகைப்பதற்கான போதைப் பொருள்.

marina *n.* சிறு துறைமுகம்.

marinade *n.* ஊறுகாய் போடும் நறுஞ்சுவை நீர்மம்.

marine (மறீன்) *a.* கடல் சார்ந்த. கப்பல் பற்றிய, *n.* கடற்படை, கடற்படைவல்லுநர்.

mariner (மறீன) *n.* கடலோடி.

marionette *n.* சூத்திரப் பாவை.

marital *a.* திருமணம் பற்றிய, கணவனுக்குரிய.

maritime *a.* கடலோரம் சார்ந்த.

marjoram *n.* நறுமணப் பூண்டு வகை.

mark *n.* அடையாளம், குறி, மதிப்பெண், ஜெர்மன் நாணயம், *mark time* மூன்னேறாமல் நின்ற இடத்திலேயே கால்களைத் தூக்கித் தூக்கி வைத்தல், காத்திருத்தல்.

market (மாக்கிற்) *n.* அங்காடி, சந்தை, *market garden* விற்பனைக்கான காய்கறி வளர்க்கப்படும் தோட்டம், *black market* கள்ளச் சந்தை, *market price* நிலவர விலை.

marking *n.* குறியிடல், சாயமிடல்.

marksman *n.* குறிவல்லான்.

marline-spike *n.* கயிற்றின் புரிகளைப் பிரிக்கப் பயன்படும் கருவி.

marmalade *n.* பழப்பாகு வகை.

marmoset (மாமுஸெற்) *n.* அமெரிக்க சிறு குரங்கு வகை.

marmot *n.* அணில் இனச் சிறு விலங்கு.

maroon *n.* பழுப்புச் சிவப்பு நிறம், எச்சரிக்கையாக வெடிக்கும் குண்டு, *v.* கைவிடப்பட்ட இடத்தில் விட்டுவிடு, இக்கட்டான நிலையில் கைவிடு.

marquee (மா'ீ) *n.* பெரிய கூடாரம்.

marquetry *n.* உள் இழைப்பு வேலை.

marquis (மாக்விஸ்) *n.* கோமான்

marriage *n.* திருமணம், marry *v.* இணை, *civil marriage* சடங்குகளின்றிச் சமுதாய அதிகாரிகளால் நடத்தப் பெறும் திருமணம், *companionate marriage* இருவரும் விரும்பினால் மணவிலக்குச் செய்து கொள்ளவும் சட்டப்படி கருத்தடை செய்து கொள்ளவும் உரிமையளிக்கும் திருமணம், *marriage portion* சீதனம்.

marrow *n.* எலும்பு மச்சை, சுரைக்காய் வகை.

Mars *n.* செவ்வாய்க் கோள், அங்காரகன்.

Marseillaise (மாஸெலாஸ்) *n.* பிரஞ்சுப் புரட்சிக்காரர் பாடல், பிரான்சின் தேசியகீதம்.

marsh *n.* சதுப்புத் தாழ்நிலம், *marsh gas* ஒளி உமிழும் சதுப்பு நிலக் காற்று.

marshal *n.* உயர் அலுவலர், படைத்துறைத் தலைவர் *v.* முறையாக ஒழுங்கு படுத்து, ஒன்றுசேர், அழைத்துச் செல்.

marshalling yard *n.* தொடர் வண்டிச் சரக்குகள் தரப்படுத்துமிடம்.

marshmallow *n.* இனிப்புப் பண்டம்.

marsupial *n.* பைம்மா, வயிற்றில் பையுடைய பாலூட்டி.

mart *n.* அங்காடி, சந்தை.

martello *n.* கடற் கோட்டை.

marten *n.* அடர்ந்த மென்மயிருடைய விலங்கினம்.

martial *a.* போருக்குரிய, *martial law* போர்க்காலச்சட்டம், பொதுநிலைச்சட்டம் நிறுத்தி வைக்கப்படும் படைத்துறை யாட்சி முறை.

Martia *n.* செவ்வாய்க்கோளில் வசிப்பவர்.

martin *n.* சுருவிவகை.

martinet *n.* மிக கண்டிப்பான வர்.

martyr *n.* கொள்கைக்காக உயிர் துறப்பவர், *be a martyar to* நோயினால் துன்புறுபவர், *to make a martyr of oneself* புகழ் அவாவித் தேவையின்றித் துன்புறுபவர்.

marvel *n.* வியப்பூட்டும்பொருள், **marvellous** *a.* வியப்படையச் செய்கின்ற.

Marxism *n.* ஜேர்மன் நாட்டவரானகாள்மாக்ஸ் (*1818-1883*) என்பாரின் பொதுவுடைமைக் கோட்பாடு.

marzipan *n.* வாதுமையினாலான பண்ணியம்.

mascara *n.* கண்ணிமைச் சாயம்.

mascot *n.* நற்பேறு கிடைக்கச் செய்யும் எனக் கருதப்படும் பொருள், தாயத்து.

masculine *a.* ஆண்மையுள்ள, ஆண்பாலுக்குரிய.

mash (மாஷ்) *n.* கூலக்கலவை, தவிட்டுக் கலவை.

mask *n.* முகமூடி.

masochism *n.* துன்புறுவதால் இன்புறல்.

mason (மேஸன்) *n.* கல்தச்சன், கட்டுமான வேலை செய்பவர், *free - masonry* நட்புறவு.

masque (மாஸ்க்) *n.* நாடகவகை

masquerade (மஸ்கறேட்) *n.* பொய்த்தோற்றம், நடிப்பு, *v.* மாறுவேடத்தில் செல்.

mass *n.* கத்தோலிக்க கோவில்களில் கொண்டாடப் பெறும் இயேசுவின் இறுதி உணவு விழா.

mass *v.* திரட்டு, குவி, *n.* திரள், மொத்தம், *mass observation* பொது மக்களின் வாழ்க்கை முறை வழக்கங்கள் பற்றிய ஆய்வு, *mass meeting* மாபெரும் பொதுக் கூட்டம், *mass production* பெரிய அளவிலான

உற்பத்தி, *the masses* பெரும் பாலான பொதுமக்கள்.

massacre *n.* பேரளவிலான கொலை, *v.* கொன்றுகுவி.

massage (மஸாஷ்) *n.* உடல் பிடித்தல், *v.* தேய்

masseur (மஸேர்) *n.* உடல் பிடிப்பவன், masseuse (மஸேஸ்) *n. fem.*

massif *n.* மலையுச்சித் திரள்.

massive *a* பெருத்த, பெரும் பளுவான, திண்மையான.

mast *n.* பாய்மரம், பன்றியுணவாகப் பயன்படும் பழவகை.

mastectomy *n.* அறுவை மூலம் முலையகற்றல்.

master *n.* தலைவன், உரிமையாளர், ஆசிரியன், பெருங் கலைஞன், கைதேர்ந்தவன், சிறியவன், *v.* அடக்கியாளு, தேர்ச்சியடை, *master -key* பல பூட்டுகளைத் திறக்கவல்ல திறப்பு, *master - mind* வல்லுநன், *master-stroke* தேர்ச்சித் திறன் மிக்க செயல்.

masterful *a.* மேலாதிக்க மனப்பான்மையுள்ள.

masterly *a.* தேர்ச்சிமிக்க.

masterpiece *n.* தலை சிறந்த படைப்பு.

mastery *n.* மேலாண்மை, தேர்ச்சித்திறம், தேர்ந்த அறிவு.

masticate *v.* மெல்லு, பல்லினால் நன்றாக அரை.

mastiff *n.* பெரிய நாய் வகை.

mastodon *n.* கால் வழியற்றுப் போன பெருவிலங்கு வகை.

mastoid *n.* செவியின் பின்புற எலும்பு.

masturbate *n.* கையால் வலிந்து விந்து வெளியேற்றல்

mat *n.* பாய், *v.* பாயிடு, சடையாக்கு.

matador *n.* எருத்துடன் சண்டையிடுபவன்.

match *n.* தீக்குச்சி, இணையானவர், ஒத்தது, ஆட்டப்போட்டி *matchless a.* இணையற்ற.

matchmaker *n.* திருமணச்சோடிகளை இணைத்து வைப்பவர்.

mate *n.* உடன்வேலைசெய்பவர், துணைவன், துணைவி, வணிகக்கப்பற் துணைத்தலைவன், *v.* திருமணஞ்செய், கூடிப் புணர்

mate *n.* சதுரங்க ஆட்டத்தில் அரசனைப்பற்றும் நிலை.

material *a.* பருப்பொருள் சார்ந்த, இன்றியமையாத, *n.* மூலப்பொருள், புடைவை.

materialism *n.* பொருள் முதல் வாதம், உலோகாயதம்.

materialize *v.* கண்ணுக்குப் புலப்படு, உண்மையாகு நிகழ்.

materia medica *n.* மருந்துச்சரக் காய்வு நூல்.

maternal *a.* தாய்வழி, தாய் போன்ற.

maternity *n.* தாய்மை, பிள்ளைத் தாய்ச்சி நிலை.

matey *a.* பழகுந்தன்மையுள்ள.

mathematics *n.* கணிதம்.

matinee (மற்றினே) *n.* பிற்பகல் நிகழ்ச்சி.

matins *n.* காலை வழிபாடு.

matriarchy (மேட்றியாக்கி) *n.* தாய் குடும்பத் தலைவராகவுள்ள சமூக அமைப்பு.

matricide (மேட்றிஸைட்) *n.* தாய்க்கொலை.

matriculate (மட்றிக்யுலேற்) *v.* பல்கலைக் கழக நுழைவு பெறு.

matrimony *n.* திருமணம்.

matrix (மேட்றிக்ஸ்) *n.* அச்சுவார்ப்புரு, pl. *matrices* (மேட்றிஸீஸ்).

matron *n.* மணமான பெண், கல்லூரி விடுதிச் செவிலி, மருத்துவமனைச் செவிலி.

matt *a.* மங்கலான, பளபளப்பற்ற.

matted *a.* சேர்த்து முறுக்கப் பெற்ற.

matter *n.* பருப்பொருள், சீழ், செய்தி, கருத்து, *matter-of-fact a.* உண்மையான, *no matter* முக்கியமன்று.

matting *n.* பாய், நிலவிரிப்பு.

mattock *n.* மண்கொத்தி.

mattress *n.* மெத்தை.

mature *a.* முற்றிய, முதிர்ந்த.

maudlin (மோட்லின்) *a.* குழந்தைத் தனமான, பசப்புச் சிணுங்கல் உடைய.

maul (மோல்) *v.* முரட்டுத்தனமாகக் கையாளு, அடித்துக் காயமுண்டுபண்ணு.

maulstick *n.* ஓவியரின் கோல் வகை.

maund *n.* மணங்கு, எட்டு வீசை நிறை.

maunder (மோண்ட) *v.* கருத்தின்றிச் செயற்படு, கருத்தற்ற பேச்சுப் பேசு.

maundy *n.* ஈஸ்டருக்கு முந்திய வியாழனன்று ஏழை கட்குப் பணம் வழங்கல்.

mausoleum (மோஸலியம்) *n.* கல்லறை.

mauve (மோவ்) *n.* மெல்லிய ஊதா நிறம்.

maverick *n.* மனம் போன போக்கில் வாழ்பவர்.

maw (மோ) *n.* அசைபோடும் விலங்கினத்தின் வயிறு-வாய் - தாடை.

mawkish (மோக்கிஷ்) *a.* அருவருப்புணர்ச்சி ஊட்டுகிற உணர்ச்சி பசப்புகிற.

maxim (மக்ஸிம்) *n.* ஒழுக்க விதி, பொது உண்மை கூறும் உரை, கோட்பாடு.

maximalist *n.* விட்டுக் கொடுக்க மறுத்து உச்ச கோரிக்கையை வலியுறுத்துபவர்

maxim gun *n.* இயந்திரத் துப்பாக்கி வகை.

maximum *n.* ஆகக் கூடிய அளவு

May *n.* ஆங்கில ஆண்டின் ஐந்தாவது மாதம், *May Day* உலகத் தொழிலாளி வர்க்கத்தின் விழா நாளான மே முதல் தேதி.

may *v. auxl.* ஒருவேளை நடைபெறலாம், இசைவு கொடுக்கப்பட்டுள்ளது இயலும்

may be *adv.* ஒருவேளை, ஒருகால்

mayhem *n.* உடலூறுபடுத்தல், தீங்கு செய்தல்.

mayonnaise (மேயநேஸ்) *n.* முட்டை எண்ணை கலந்த ஊண்பசைவகை.

mayor *n.* மாநகர் முதல்வர்.

maypole *n.* மேநாளன்று சுற்றி நடனமாடுவதற்காக அமைக்கப்படுத்தப்படும் கம்பம்.

maze (மேஸ்) *n.* குழப்ப மிக்க பாதை, சிக்கலான காரியம்.

mazurka (மஸேக்க) *n.* போலந்து நாட்டுக் குழுக்கூத்து

McCarthyism *n.* அமரிக்காவில் பொதுவுடைமையாள ரென ஐயுறப்படுபவரை அரச பணி களிலிருந்து நீக்கிவிடும் கோட் பாடு.

me *pron.* என்னை எனக்கு.

mead (மீட்) *n.* தேனுடன் நீர் கலந்த குடி வகை, புல்வெளி.

meadow (மெடு) *n.* பைம்புற் தரை.

meagre (மீக) *a.* மெல்லிய, சிறி தளவான.

meal (மீல்) *n.* உணவு, மாவு. உணவுவேளை.

mealy *a.* மாவுக்குரிய, *mealy mouthed* மழுப்பிப் பேசுகிற, பிறர் பாதிப்புறுமல் நடந்து கொள்ள முயல்கிற.

mean (மீன்) *a.* மட்டமான, இழிந்த, தன்னலமிக்க, கஞ்சத் தனமான, அன்பில்லாத, இடைநிலையான, சராசரியான, *v.* கருது, ஈடுபடு, *the golden mean, the happy mean* சரியான செயல்.

meander (மியன்ட) *v.* வளைந்து நெளிந்து செல்.

means *n.* வழிவகை, *n. pl.* வரு வாய், *by all means* உறுதியாக, எல்லாவழியிலும், *by no means* கிடையவே கிடையாது, *means test* உதவியளிக்குமுன் தே வையை உறுதிசெய்தற்கான அதிகார பூர்வ விசாரணை.

meantime *adv.* இடைவேளையில்.

meanwhile *adv.* இடைக்காலத் தில், அதே வேளையில்.

measles *n.* அம்மைநோய் வகை.

measly *a.* சிறிதளவான, இழிந்த.

measure (மெஷ) *n.* அளவு, நட வடிக்கை, சந்தம், *measure one's length* நிலத்தில் நெடுயாய் வீழு, *measure up to* தேவை யான தரத்தை அடை, *to tread a measure* ஆடல், *beyond measure* அளவுமீறிய.

measured *a.* சந்தவயப்பட்ட. சீர்தூக்கி மதிப்பிடப்பெற்ற,

meat (மீற்) *n.* விலங்கூன் உணவு, *this book is full of meat* கருத் துக்கள் நிறைந்த பொத்தகம்.

meaty *a.* இறைச்சி சார்ந்த பொருட் செறிவுள்ள, சதைப் பற்றுள்ள.

mechanic *n.* பொறிவினைஞர்.

mechanical *a.* பொறியால் இய க்கப்படுகிற, இயந்திரம் போல் இயங்குகின்ற, சிந்தனையின்றி ஒரேமாதிரிச் செயற்படுகின்ற.

medal *n.* பாராட்டுப் பதக்கம்.

medallion (மிடல்யன்) *n.* பெரிய பதக்கம்.

meddle *v.* தலையிடு.

media (மீடிய) *n. pl.* *the media* செய்தித்தாள் வானொலி போன்ற தகவல் சாதனம்.

mediaeval (மெடி, ஈவல்) *a.* 500 - 1500 கி பி. வரையான காலத்திய, மத்தியகால.

medial *a.* நடுவிலுள்ள.

mediate (மீடிஏற்) *v.* நடுவரா யிரு, இடை நின்று இணக்குவி.

medical *a.* மருத்துவக்கலை சார்ந் த, *medical jurisprudence* மருத் துவத்துக்குத் தேவையான சட்டப்படிப்பு.

medicate *v.* மருந்துடன் கல, **medicament** *n.* மருந்து, **medicaster** *n.* போலி மருத்துவர்.

medicinal (மிடிஸ்னல்) *a.* மருந்து சார்ந்த.

medicine (மெட்ஸின்) *n.* மருத்துவம், மருந்து, *medicine man* பில்லி சூனியம் வல்ல மருத்துவர், மாய மந்திர வாதி.

medieval *a.* மத்திய காலத்திய.

mediocre (மீடிஓக்க) *a.* இடைநிலையிலுள்ள.

mediocrity (மீடிஒக்ரிற்றி) *n.* சாதாரண நிலை.

meditate (மெடிற்றேற்) *v.* ஆழ்ந்து நினை, திட்டமிடு.

medium (மீடியம்) *n.* (*pl. media*) நடுத்தரமான, சூழல், சாதனம் வழி, ஆவியுலக இடையீட்டாளர்.

medlar *n.* பழவகை.

medley (மெட்லி) *n.* கலவை.

meed *n.* பரிசில், பாராட்டு.

meek *a.* பணிவான, எதிர்க்காத.

meerschaum (மியஷம்) *n.* புகை குடிக்கும் குழாய் வகை.

meet *a.* பொருத்தமான, சரியான.

meet *v.* எதிர்ப்படு, சந்தி, காண், பட்டறி, நிறைவுசெய், *meet halfway* விட்டுக்கொடுத்து இணங்கு, *make both ends meet* வரவுக்குள் செலவு செய்.

meeting *n.* கூட்டம், சந்திப்பு.

mega- *pref.* பெரிய, பத்து இலட்சம்.

megacephalic *a.* பெருந்தலையுடைய.

megahertz *n.* விநாடிக்குப் பத்து லட்சம் சுற்று கொண்ட மின் காந்த அலையதிர்வலகு.

megalithic *a.* பெருங்கல்லாலான.

megalomania *n.* தற்பெருமைக் கோளாறு, பெரிய பொருள்களில் ஆசை.

megalosaurus (மெகலு'ஸோறஸ்) *n.* கால் வழியற்றுப்போன பெருவிலங்கு.

megaphone *n.* ஒலிபெருக்கி.

megaton *n.* பத்து இலட்சம் தொன் எடை.

megrim (மீக்றிம்) *n.* தலைவலி, நம்பிக்கை இழந்த நிலை.

melamine (மெலமீன்) *n.* குழைவுத் தன்மையுள்ள பிளாஸ்ரிக் வகை.

melancholia (மெலன்'கோலிய) *n.* மனச்சோர்வு, துயரார்ந்த நிலை.

melange (மே, லான்ஷ்) *n.* கலவை

melee (மெலே) *n.* குழப்பம்.

mellifluous *a.* இனிமையான.

mellow (மெலு) *a.* இனிய, முதிர்ந்த, மென்மையான, வளமான, அன்பு செய்கின்ற.

melodious *a.* இன்னிசையுள்ள.

melodrama (மெலுட்ரமா) *n.* உணர்ச்சிக் கட்டங்கள் மலிந்த இன்பியல் நாடகம்.

melody (மெலுடி) *n.* இன்னிசை, பாடல்.

melon *n.* வெள்ளரிப்பழம்.

melt *v.* உருகு, உருக்கு, இரங்கு, மறைவுறு.

member *n.* உறுப்பு, உறுப்பினர்.

membrane *n.* சவ்வு.
membrum virile *n.* ஆண்குறி.
memento *n.* நினைவுக்குறி.
memo *n.* நினைவூட்டற் குறிப்பு.
memoir (மெம்வா) *n.* நிகழ்ச்சிக் குறிப்பு.
memoirs (மெம்வாஸ்) *n. pl* வாழ்க்கை நிகழ்ச்சிக் கோவை.
memorable *a.* நினைவில் வைக்கத் தக்க, மறக்கமுடியாத.
memorandum *n.* நினைவூட்டற் குறிப்பு, அறிக்கை.
memorial *n.* நினைவுச்சின்னம்.
memorize *v.* நினைவில் வை, மனனஞ் செய்.
memory *n.* நினைவாற்றல்.
mem - sahib *n.* இந்திய வழக்கில் ஐரோப்பிய மாதர்.
menace *n.* அச்சுறுத்தல், தொல்லை கொடுப்பவர்.
menage (மெனஷ்) *n.* வீட்டு ஒழுங்கு முறை, வீட்டாட்சி.
menagerie (மினஜறி) *n.* காட்சிக்கான வனவிலங்குத் தொகுதி.
mend *v.* செப்பனிடு, திருத்து, *on the mend* தேறி வருதல்.
mendacious *a.* பொய்யான.
Mendelism *n.* 1884இல் இறந்த ஜி. ஜே. மெண்டல் என்ற பயிரியல் வல்லாரின் கோட்பாடு, ஜீன்களுக் கேற்பவே மரபுப் பண்பு அமையும் எனும் மரபியற் கோட்பாடு.
mendicant *a.* இரக்கிற, பிச்சை எடுக்கிற.
menfolk *n.* ஆண்கள்.
menhir *n.* வரலாற்றுக்கு முற்பட்ட காலநினைவுக்குறிக் கல்.
menial (மீனியல்) *a.* கீழ்த்தரமான, அடிமைப்பாங்கான, *n.* வேலையாள், குற்றேவலன்.
meningitis (மெனின்ஜைற்றிஸ்) *n.* தண்டு மூளைக் கவிகைச் சவ்வு அழற்சி.
meniscus *n.* குழிகுவி வில்லைக் கண்ணுடி, குழாய் நீர்மங்களின் வளைந்த மேற்பரப்பு.
menopause (மெனுபோஸ்) *n.* இறுதி மாத விடாய்க் காலம்.
menses *n. pl.* மாத விடாய்.
Menshevik *n.* ருஷ்ய மிதவாதக் கட்சியினர், சிறு பான்மை உறுப்பினர்.
menstrual *a.* மாத விலக்குக் குரிய.
menstruate *v.* மாத விடாய் வெளியேறப் பெறு, **menstruation** *n.* மாதவிடாய்.
mensurable *a.* அளக்கத்தக்க.
mensuration *n.* நீளம் பருமன் ஆகியவற்றை அளத்தல் அல்லது கணித்தல்.
mental *a.* மனஞ் சார்ந்த, மனதுக்குரிய.
mentality *n.* மனப்பான்மை.
menthol *n.* பச்சைக் கற்பூரம்.
mention *v.* குறிப்பிடு, பெயர் குறி.
mentor (மென்ற்றோ). *n.* நம்பிக்கையான ஆலோசகர்.
menu (மென்யு) *n.* உணவுப் பட்டியல்.
mercantile *a.* வணிகஞ் சார்ந்த.
mercenary *a.* பணத்துக்காக வேலை செய்கிற, கூலிக்காக வேலைசெய்கிற, *n.* கூலிப் படை வீரர்.

mercer *n.* புடைவை வணிகன்.
merchandise *n.* வணிகச் சரக்கு.
merchant *n.* வணிகன், குறிப்பிட்ட ஒரு செயலில் ஆர்வமுள்ளவன், *merchant bank* வணிக வங்கி, *merch ant navy* வணிகத்துக்கான கப்பற் சேவை, *merchant ship* வணிகச் சரக்குக் கப்பல்.
merciful *a.* பரிவு காட்டுகின்ற
merciless *a* இரக்கம் காட்டாத.
mercurial (மேக்யுறியல்) *a.* பாதரசம் கலந்த, துடிதுடிப்புள்ள, அடிக்கடி மாறுகிற.
mercury (மேக்யுறி) *n.* பாதரசம்
Mercury *n.* புதன் கோள்.
mercy *n.* அருள், கருணை, தயவு.
mere (மிய) *n.* குளம், *a.* மட்டும், வெறும் அவ்வளவே, merest *a.* மிகச்சிறிய.
meretricious (மெறிட்றிஷஸ்) *a.* வெளிப்பகட்டான.
merge *v.* இரண்டறக் கல, இணை.
meridian *n.* பூகோளத்தின் இரு துருவங்களையும் இணைக்கும் கற்பனைக் கோடு, நண்பகல், கோளின் உச்ச நிலை, புகழுச்சி.
meringue (மெறங்) *n.* முட்டை சீனி கலந்த தின்பண்ட வகை.
merino *n.* கம்பளி ஆடு.
merit *n.* தகுதி, சிறப்பு, மதிப்பு, நலன்.
meritorious *a.* பாராட்டத்தக்க, நன்றிக்குரிய.
mermaid (மே'மேட்) *n.* கடற் கன்னி, பாதி பெண்ணும் பாதி மீனுமான கற்பனைக் கடற் கன்னி.
merman (மே'மன்) *n.* பாதி ஆணும் பாதி மீனுமான கற் பனை உயிரி.
merry *a.* மகிழ்ச்சி மிக்க, களி வெறி கொண்ட.
mesalliance (மேஸலி' ஆன்ஸ்) *n.* கலப்புத் திருமணம்.
meseems (மிஸீம்ஸ்) *v.* எனக்குத் தோற்றுகிறது.
mesh (மெஷ்) *n.* வலையின் கண்ணி, *v.* வலையிட்டுப்பிடி, ஒருசில்லைப் பிறிதொன்று இயக்கும் வகையில் அவற்றை இணை.
meshes *n. pl* வலை, வலைப்பின்னல் வலைநூல்.
mesmerize *v.* வசியம் பண்ணு.
mesolithic *a.* இடைக்கற் காலஞ் சார்ந்த.
mesozoic *a.* இடையுயிர் ஊழிக் குரிய.
mess *n.* அழுக்கு, வெறுப்பூட்டும் பொருள், குழப்பம், இக்கட்டான நிலை, பிளவு, தொல்லை, உணவுப்பந்தி, படையினர் உணவறை, *v.* அழுக்காக்கு, குளறுபடி செய், கூடியுண், *to mess about* வேலைசெய்யாது சோம்பித்திரி, *to mess together* பொது மேசையில் உணவு கொள்ளுதல், *make a mess of* குளறுபடி செய், *mess of pottage.*
message (மெஸிஜ்) *n.* செய்தி, அறிவுரை.
messenger (மெஸின்ஜர்) *n.* செய்தி கொண்டு திரிபவர், தூதர்.
Messiah (மிஸைய) *n.* யூதர் எதிர் பார்த்த மீட்பர், இயேசு நாதர், மீட்பாளர்.

Messrs (மெஸேஸ்) *n.* திரு வாளர்கள்.

metabolism *n.* ஊன்ம ஆக்கச் சிதைவு மாறு பாடு, முழுமை யானமாற்றம்.

metal *n.* உலோகம், *road metal* சரளைக்கல், *the metals* தொடர் வண்டிப் பாதைக்கான தண்ட வாளங்கள்.

metalloid *n.* உலோகப்போலி.

metallurgy (மிற்றலஜி) *n.* உலோ கத் தொழில்.

metamorphosis *n.* உருமாற்றம், பண்பு மாற்றம்.

metaphor *n.* உருவகம்.

metaphysics *n.* அறிவியல் உயிரி யல் இறையியல் பற்றி ஆயும் மெய்யியற் பிரிவு.

metastasis *n.* நிலைமாற்றம், உரு மாற்றம்.

mete *v.* அள பங்கிடு, வழங்கு.

meteor (மீற்றிய) *n.* விண்வீழ் கொள்ளி,

meteoric *a.* விரைந்து முன்னேறு கின்ற.

meteorology (மீற்றியரோலஜி) *n.* வானிலை ஆய்வு.

meter (மீற்ற) *n.* அளவு கருவி.

methane (மீதேன்) *n.* சதுப்பு நில வளி வகை.

methinks *v.* எனக்குத் தோன்று கிறது, நான் எண்ணுகிறேன்.

method *n.* செய்ம்முறை, ஒழுங்கு

Methodist *n.* ஜோன் வெஸ்லி என்பாரைப் பின்பற்றும் கிறித் தவப் பிரிவினர்.

methodist *n.* ஒழுங்கு முறை பின்பற்றுபவர்.

meths *n.* குடிப்பதற்குதவாது வெப்பமூண்டு பண்ணுவதற் குப் பயன்படும் வெறிய வகை.

methylated (மெதிலேற்றிட்) *v.* வெறிய மூட்டப்பட்ட.

meticulous *a.* மிக உன்னிப்பான, மிகமிக நுணுக்கமாய்க் கவனிக் கின்ற.

metier (மெற்றி ஏ) *n.* தகுந்த தொழில்.

metonymy *n.* ஆகுபெயர்.

metre (மீற்ற) *n* சீர், சீர்தளை யாப் பமைதி, 39.4 அங்குலங் கொண்ட நீட்டலளவு.

metric system *n.* பதின்மான அடுக்காயமைந்த அளவை முறை.

metrics *n.* யாப்பியல், **metrist** *n.* யாப்பியல்வல்லார், **metrical** *a.* யாப்பு முறையான, சீருக்குரிய.

metropolis *n.* தலைநகர்.

mettle *n.* மனவுறுதி, உள்ளக் கிளர்ச்சி, ஒழுக்கஉரன், *on one's mettle* திறமை மனவுறுதி வெளிப்படுத்தத் துணிதல்.

mettlesome *a.* ஊக்கமிக்க, திற மையுள்ள.

mew (ம்யூ) *v.* கூண்டிலிடு, இற குதிர், *n.* பூனையின் குரல்.

mews (ம்யூஸ்) *n.* குதிரைகட்டும் வண்டில்கட்டுமான நிரை வீடுகள், வீடுகளாக மாற்றப் பட்ட குதிரை லாயங்கள்.

mezzanine (மெற்ஸநீன்) *n.* இடைமாடி.

mezzotint *n.* ஒருவகைச் செதுக் குவேலைப் பாடு.

miaow (ம்யௌ) *n.* பூனையொலி.

miasma (மியஸ்ம) *n.* நச்சுக்காற்று

mica (மைக்க) *n.* காக்காய்ப் பொன், அப்பிரகம்.

Michaelmas (மிக்கல்யமஸ்) *n.* செப்டம்பர் 29இல் தூய மைக்கேல் பெயரால் நடைபெறும் விழா.

Mickey Mouse *n.* திரைப்படச் சித்திரக் கேலி நடிப்புப் பகுதியின் பெயர், *take the mickey out of* சினமூட்டல், கேலிசெய்தல்.

micro- (மைக்ரோ) *pref.* சிறிய.

microbe *n.* நுண்ணுயிர்.

microcosm *n.* சிறியளவிலான மாதிரி.

microfilm *n.* நுண்ணிய நிழற் படப்பதிவு.

microgramme *n.* பதின்மான எடையலகின் பத்திலட்சத்தில் ஒரு கூறு.

micron *n.* பதின்மான நீட்டலளவை அலகில் பத்திலட்சத்தில் ஒருகூறு, 0.00004 அங்குலம்.

Microorganism *n.* நுண்ம உயிரினம்.

microphone *n.* ஒலிபெருக்கி.

microphyte *n.* நுண்மச் செடியினம்.

microscope *n.* நுண்ணோக்காடி, உருப்பெருக்கி.

microwave *n.* 50 சென்டி மீட்டருக்கும் 1 மில்லி மீட்டருக்கும் இடைப்பட்ட நீளமுள்ள மின்காந்த அலை.

microzyme *n.* புளிப்பு நொதியிலுள்ள நுண்மம்.

mid *a.* நடு.

midday *n.* நண்பகல்.

midden *n.* எருமேடு, குப்பைமேடு.

middle *n.* நடு, *middle-aged a.* 40 முதல் 60 வரையிலுள்ள வயதுடைய, *Middle Ages* 500 - 1500 வரையானகாலப்பகுதி *middle class* நடுத்தர வர்க்கம், *Middle English* 1150 - 1500 வரையான கால ஆங்கில மொழி.

middleman *n.* தரகர்.

middle weight *n.* 75 கில்லோகிராம் குத்துச் சண்டையாளை.

middling *a.* இடை நிலைப்பட்ட.

middy *n.* கப்பல் நடுத்தரப் பணியாளர்.

midge *n.* கொசு இனப் பூச்சி.

midget (மிஜிற்) *n.* குறுமனிதன், குறளன்.

midland *n.* உள் நாடு.

midnight *n.* நள்ளிரவு,

midrib *n.* இலையின் நடுநரம்பு.

midriff *n.* உந்துசவ்வு, நுரையீரலினின்றும் இரைப்பையைப் பிரிக்கும் சவ்வு.

midshipman *n.* கப்பல் நடுத்தரப் பணியாளர்.

midst (மிட்ஸ்ற்) *n.* நடு, *adv.* இடையில், *prep.* இடையே.

midsommer *n.* நடுவேனில், ஜூன் 21 ஆம் நாளையடுத்த காலப்பகுதி.

midwife *n.* மருத்துவிச்சி.

midwinter *n.* டிஸெம்பர் 22 ஆம் நாளையடுத்த காலப் பகுதி.

mien (மீன்) *n* ஒருவரின் தோற்றமும் நடத்தையும்.

might (மைற்) *n.* வலு, ஆற்றல், *with might and main* முழு ஆற்றலுடன்.

mighty *a.* வலுமிக்க, ஆற்றல் வாய்ந்த, மிகப்பெரிய.

mignonette (மின்யநெற்) *n.* நறுமணப் பூச்செடி வகை.

migraine (மீக்றேன்) *n.* கடுமையான ஒற்றைத் தலைவலி.

migrate (மைக்றேற்) *v.* இடம் பெயர்.

mikado *n.* ஜப்பானியப் பேரரசர் பட்டம்.

mike *n.* ஒலிபெருக்கி.

milage (மைலிஜ்) *n.* பயணஞ் செய்த கல் தொலைவு.

milch (மில்ஷ்) *a.* பால்தருகிற, *milch cow* பால்தரும் பசு, எளிதிற் பணம் கறக்கக்கூடிய மனிதர், எளிதான பணவருவாய்.

mild *a.* கடுமையாயிராத.

mildew (மில்ட்யூ) *n.* பூஞ்சணம்.

mile *n.* கல் தொலைவு, 1760யார் அல்லது 1.609 கிலோமீட்டர் அளவு, *nautical mile* கடற்பயணத் தொலையளவு, 2025யார் அல்லது 1852கிலோமீட்டர்.

mileage *n.* கல் தொலையளவு, மைல்நீளம்.

milestone *n.* மைல்கல், முக்கிய கட்டம்.

milieu (மில்ய) *n.* சூழல், சூழ்நிலை, *pl.* - *eus*.

militant *a.* போர்க்குணமுள்ள.

military (மிலிட்றி) *n.* படை *a.* படைத் துறைபற்றிய.

militate *v.* எதிராகச் செயற்படு.

militia (மிலிஷ) *n.* குடிப்படை.

milk *n.* பால், *v.* பணம்கற, பால்கற, *milk and honey* பெருவளம், *milk and water* உறுதியற்ற.

milksop *n.* பேடி, ஆற்றல் குறைந்தவன்.

milk tooth *n.* பாற்பல், அரும் புப்பல்.

milky *a.* பால் போன்ற; *milky way* பால்வழி மண்டலம்.

mill *n.* ஆலை, சண்டை, *v.* நாணய விளிம்பில் வெட்டிடு, *go through the mill* அனுபவம் பெறு *put through the mill* அனுபவத்திற்கு உட்படுத்து.

millboard *n.* தடித்த தாள் அட்டை.

millenium (மிலெனியம்) *n.* ஆயிரம் ஆண்டுக்காலம், மகிழ்ச்சி நிகழ்ந்த எதிர் காலம், நிலவுலகில் இயேசுவின் ஆயிர ஆண்டு ஆட்சிக்காலம்

millepede, millipede (மிலிபீட்) *n.* பலகாற் சிறுபூச்சி வகை.

miller (மில) *n.* ஆலை உரிமையாள், ஆலைவேலையாள்.

millet (மிலிற்) *n.* சாமை, தினை வகை.

milli - *pref.* ஆயிரத்தில்ஒருபகுதி ($\frac{1}{1000}$)

milliard *n.* நூறு கோடி.

milligramme *n.* கீழாயிரச் சிரெடை.

millilitre *n.* .061 கன அங்குல அளவு.

millimetre *n.* .0394 அங்குலம்.

milliner *n.* மகளிர் தொப்பி விற்பவர், தொப்பி செய்பவர்.

million (மில்யன்) *n.* ஆயிரமாயிரம், பத்து இலட்சம், (1,000,000), *the million* பெரும்பாலோர்.

millionaire (மில்யனெய) *n.* கோடீசுவரர், பெருஞ்செல்வர்.

millstone *n.* திரிகை, இடையூறாக இருக்கும் பெரும்பாறை.

milt *n.* மீன்சினை, ஆண்மீன் விந்து.

mime (மைம்) *n.* அவிநயக்கூத்து.

mimeograph (மிமியுக்றப்) *n.* அச்சுப்பொறி வகை.

mimic *v.* வேடிக்கைக்காகப் பிறர் போல்நடி நடித்துக்கேலிசெய்.

mimosa *n.* பூச்செடி வகை.

minaret (மினறெற்) *n.* மசூதியின் தூபி.

mince (மின்ஸ்) *v.* சிறுசிறுதுண்டுகளாக நறுக்கு, மழுப்பிப்பேசு, தளுக்கிநட, *mince matters* நயமாக மழுப்பிப்பேசு.

mincemeat *n.* உலர்பழமும் சீனியும் கலந்த கலவை, *make mincemeat of* படுதோல்வியுறச் செய்.

mind (மைன்ட்) *n.* உள்ளம் நினைவு, நினைவாற்றல், விருப்பம், எண்ணம், *v.* பொறுப்பெடு, எதிர்ப்புத் தெரிவி, நினைவிற்கொள், அக்கறையெடு, *be in two minds* ஊசலாடு, *be of one mind* உடன்படு, *bring to mind, call to mind* நினைவுபடுத்திப்பார், *give one's mind to* சிந்தனையைச் செலுத்து, *out of his mind* மனக்கோளாறு *if you dont mind* உனக்குத்தடையில்லாவிடில், *absence of mind* செயலில் கருத்தின்றி, *presence of mind* இக்கட்டான வேளையில் விரைந்து முடிபு செய்யும் ஆற்றல், *to speak one's mind* நினைத்ததை அப்படியே சொல்லுதல், *make up one's mind* முடிபு செய்தல், *mind one's ps and qs* சொல்லுவதைக் கவனமாகச்சொல், *mind out* கவனமாயிரு.

minded *a.* விருப்புடைய.

minder *n.* பொறுப்பாயுள்ளவர்.

mindful *a.* கவனமுள்ள.

mine *pron.* எனது, *a.* எனக்குரிய

mine *n* சுரங்கம், மூலவளம் வெடிக்கிடங்கு, கண்ணிவெடி.

mineral *n.* கனிப்பொருள், *mineral waters* வளி கலந்த குடிநீர் வகை.

minerva *n* பண்டைய ரோமரின் அறிவுத் தெய்வம்.

mineralogy n கனிப்பொருளியல்

mingle *v.* கல.

mingy (மின்ஜி) *a.* கீழ்த்தரமான, கஞ்சத்தனமான.

mini- *pref.* மிகச்சிறிய.

miniature *a.* மாதிரி உருவம்.

minim *n.* சுரம், முகத்தலளவை.

minimal *a.* மிகச் சிறிய, ஆகக் குறைந்த.

minimalist *n.* குறைந்தளவு கோரிக்கைக்கு இணங்குபவர்.

minimum *n.* குறைந்தளவு, *pl.* minima.

minion (மின்யன்) *n.* அடிமைபோல் பணியாற்றுபவர்.

minister (மினிஸ்ர) *n.* அமைச்சர், மதகுரு.

ministry *n.* அமைச்சு.

mink *n.* கீரியின விலங்கு.

minnow (மினோ) *n.* நன்னீர் மீன் வகை.

minoan *n.* கீரீட் தீவின் வெண்கலக் கால நாகரிகம் (*3000-1500* கி மு).

minor *a.* குறைந்த, முக்கியத்துவமில்லாத, 21 வயதுக்குட்பட்ட, சிறிய.

minority *n.* சிறுபான்மை, 21 வயதுக்குக் குறைந்த நிலை.
minster (மின்ஸ்ர) *n.* கிறீத்தவ திருக்கோவில்.
minstrel *n.* பாணர், பாடகர்.
mint *n.* நாணயஞ் செய்யுமிடம், அக்கசாலை, பெருஞ் செல்வம், நறுமணச் செடிவகை, *in mint condition* புதிய தோற்றம்.
minuet (மின்யு'எற்) *n.* ஆட்ட வகை.
minus *prep.* குறைக்கப்பட்டு, நீக்கப்பட்டு, *a* குறைபட்ட, *n.* கழித்தல்.
minuscule *a.* மிகச்சிறிய.
minute (மினிற்) *n.* மணித் துளி நிமிஷம், சிறுகுறிப்பு.
minute (மைன்யூற்) *n.* மிகச்சிறிய.
minutes *n pl.* நிகழ்ச்சி ஏடு, கூட்ட நடவடிக்கைக் குறிப்பு.
minutiae (மைன்யூஷிஈ) *n. pl.* மிகச்சிறிய விபரங்கள், நுணுக்க விபரங்கள்.
minx (மிங்க்ஸ்) *n.* சிறுக்கி, துணிச்சல் மிக்கவள், குறும்புக் காரி.
திருத்தல், *oil one's hand* கைக் கூலி கொடு, *pour oil on the flame* உணர்ச்சிகளைக் கிளறி விடு, *pour oil on troubled waters* குழப்பத்தைத்தணித்து அமைதிப்படுத்து.

oilcake *n.* பிண்ணுக்கு.

oilfield *n.* எண்ணை வயல்.

oilman *n.* எண்ணை வணிகன்.

oilpainting *n.* எண்ணைச் சாய ஓவியம்.

oil press *n.* செக்கு.

oilskin *n.* மெழுகு சீலை.

oily *a.* எண்ணை சார்ந்த, பசப்பு கிற.

ointment *n.* மருத்து நெய், களிம்பு.

okay *n.* எல்லாஞ்சரி.

okapi *n.* நடு ஆப்பிரிக்க விலங்கு வகை.

old *a.* பழைய, பட்டறிந்த, தேர்ச்சி மிக்க, முதிய, *Old Glory* அமெரிக்கக் கொடிவகை, *Old hand* கைதேர்ந்தவர், *old maid* மணமாகாத முதியவள், *Old Testament* யூதரின் வரலாறு நம்பிக்கைகள் பற்றிக் கூறும் விவிலியப் பிரிவு, பழையஏற் பாடு, *old wives' tale* மரபுவழி வரும் மூட நம்பிக்கை, *old world* ஐரோப்பா - ஆசியா ஆப்பிரிக்கா.

olden *a.* பழங்காலத்திய.

oldster *n.* இளமை கழிந்தவர்.

oleaginous (ஓலியஜினஸ்) *a.* எண்ணை இயல்புடைய.

oleander *n.* பூச்செடிவகை, அலரி

olfactory (ஒல்பக்ட்ரி) *a.* மோப்பம் பற்றிய.

oligarchy (ஒலிகாகி) *n.* சிலராட்சி.

olive *n.* மரவகை, பச்சை நிறம்.

olive-branch *n.* அமைதிக்குறி.

olympian *a.* ஒலிம்பஸ் மலைக் குரிய, வீரூர்ந்த.

olympic *a.* ஒலிம்பியாவில் நடை பெற்ற, *Olympic Games* நான் காண்டுக்கொருமுறை திகழும் அனைத்துலக விளையாட்டுப் போட்டி.

olympics *n. pl.* பண்டைக் கிரேக் கத்தில் ஒலிம்பியா எனும் இடத்தில் கி.மு 776 முதல் நான்காண்டுக் கொருமுறை நடைபெற்ற அனைத்துலக விளை யாட்டுப் போட்டி, 1896முதல் நான்காண்டுக் கொருமுறை நடைபெற்றுவரும் உலக விளை யாட்டுப் போட்டி.

ombudsman *n.* அரச அலுவலர்க் கெதிரான தனிப்பட்டோர் முறைப் பாடுகளை விசாரணை செய்ய அமர்த்தப்பெறுபவர்.

omega (ஓமிக) *n.* கிரேக்க நெ டுங்கணக்கின் இறுதி எழுத்து, இறுதி. *alpha and omega* முத லும் முடிவும், முதன்மையானது

omelet, omelette *n.* முட்டைப் பொரியல் வகை, *cannot make an omelet without breaking eggs* அர்ப்பணிப் புகளின்றிக் குறிக். கோள்களை அடைய முடியாது

omen (ஓமின்) *n.* முற்குறி, நிமித் தம், சகுனம்.

ominous *a.* வரப்போகும் தீமை யை அறிவிக்கின்ற, தீக்குறி யான.

omission *n.* விடுபாடு, செய்யப் படாதது.

omit *v.* விடு, புறக்கணி, செய்யத் தவறு.

omni--*pref.* முழுவதும், எல்லாருக்கும்.

omnibus *n.* பேருந்து, பஸ் வண்டி.

omnipotent *a.* எல்லாம் வல்ல.

omnipresent *a.* எங்கும் உள்ள.

omniscient (ஒம்னிஷியன்ற்) *a.* எல்லாம் அறிந்த.

omnivorous *n.* எல்லாம் உண்கின்ற.

on *prep.* மேல், இல், அருகில், நோக்கி, சரியாய், தொடர்பாய், சேர்த்து, *adv.* மேலே, முன்னேக்கி, இயங்கிக் கொண்டு, நடை பெற்றுக் கொண்டு *on and on* தொடர்கின்ற, *off and on* காலத்துக்குக் காலம்.

onanism *n.* கையால் விந்து வெளியேற்றல்.

once *n.* ஒருமுறை, *adv.* ஒரு காலத்தில், ஒருதடவை, *at once* உடனடியாக, ஒருங்கே, *once and again* பல தடவை *once for all* முடிவாக, *once in a way* எப்பொழுதாவது ஒரு முறை, *once more* இன்னொரு தடவை.

once-over *n.* துரித மேற்பார்வை, எல்லாப் பகுதிகளையும் விரைவாகத் துப்புரவு செய்தல்.

oncer *n.* ஞாயிறுமட்டும் கோயிலுக்குச் செல்லும் கிறித்தவர்.

on-coming *a.* அணுகுகிற, நெருங்குகிற வருகிற

one *a.* ஒற்றையான, தனித்த *n.* ஒன்று, ஒருவர், *pron.* ஏதோ ஒரு பொருள், எவரோ ஒருவர்.

oneness *n.* ஒருமை, ஒற்றுமை.

onerous *a.* பளுவான, தொல்லை தருகிற.

oneself *refl. pron.* ஒருவரே, ஒருவர்தம்மையே.

onesided *a.* ஒரு தலைச்சார்பான, பாரபட்சமான, முறையற்ற.

one upmanship *n.* உளவியல் ரீதியாகச் சாதகமான நிலையினைப் பெற்றிருத்தல்.

one-way *a.* ஒருவழி.

onion (அன்யன) *n.* வெங்காயம்.

onlooker *n.* பார்வையாளர்.

only *a.* ஒரே, ஒரேயொரு *adv.* மட்டும், *conj* எனினும், *only too* மிகுதியாக.

onomatopoeia *n.* சொற் பொருள் இசைவணி, பொருளின் ஒலிக் கேற்பச் சொல்லமைதல்.

onrush *n.* முன்னேக்கிய பாய்ச்சல்.

onset *n.* தொடக்கம், தாக்குதல்.

onslaught (ஒன்ஸ்லோற்) *n.* கடுந் தாக்குதல்.

ontology *n.* மெய்ப்பொருள்மூல ஆராய்ச்சி.

onus (ஓநஸ்) *n.* பொறுப்பு, கடமை, சுமை.

onward *a.* முன்னேக்கிய, *adv.* மேன் மேலும், மேலே, முன்னே.

onyx (ஒநிக்ஸ்) *n.* பன்னிற வரிகள் கொண்ட பளிங்கு வகை.

oodles *n. pl.* பெருந்திரள்.

oof *n.* காசு, பணம்.

oogamous *a.* ஆண்பெண் கரு உயிர்மச் சேர்க்கையால் இனப் பெருக்கம் உண்டு பண்ணுகிற.

oology *n.* பறவை முட்டை ஆய்வு.

oolong *n.* பதப்படுத்திய சீனத் தேயிலை வகை.

oompah *n.* கவர்ச்சி, ஆற்றல்.

ooze *n.* கசிவு, வண்டல், சேறு *v.* கசிந்தொழுகு.

opacity *n.* ஒளி புகவிடாத் தன்மை.

opal *n.* மணிக்கல் வகை.

opalescent *a.* நிறமாற்றம் காட்டுகின்ற.

opaque *a.* தெளிவில்லாத, ஒளி புகவிடாத.

open *a.* திறந்த, கட்டுப்படுத்தப் படாத, விரிந்த, வெளிப்படையான, முடிபு செய்யப்பெறுத, கிடைக்கக் கூடிய, அணுகத் தக்க, ஏற்க விரும்புகிற, *v.* தொடங்கு, நிறுவு, திற, *open house* எல்லாரையும் ஏற்று விருந்தளி, *open letter* செய்தித்தாள் மூலம் ஒருவனுக்கு எழுதும் பகிரங்கக் கடிதம், *open question* முடிபு செய்யப் பெறுத செய்தி, *open scholarship* போட்டியடிப்படையிலான கல்வியுதவித் தொகை *open secret* பலரறிந்த இரகசியம், *open verdict* குற்றச்செயலீடுபாடு உண்டாஎன்பதுகுறிப்பிடாத தீர்ப்பு, *receive with open arms* மனமார வரவேற்புக் கொடு, *the open door* அயல் நாடுகள் வந்து வணிகஞ் செய்வதற்காக ஒரு நாடு அளிக்கும் நுழைவுச் சலுகை.

open - hearted *a.* வஞ்சகமில்லாத.

opening *n.* இடைவெளி, தொடக்கம், வாய்ப்பு, புழை, திறத்தல், வாயில்.

openly *adv.* வெளிப்படையாக, பலர் முன்.

opera (ஒபர) *n.* இசைநாடகம் *comic opera* உரையாடலுள்ளிட்ட இசை நாடகம், *grand opera* உரையாடலில்லா இசை நாடகம்.

operate *v.* இயங்கு, அறுவைசெய் இயக்கு.

operation *n.* இயக்கம், செயல் முறை, சட்டச் செயலாட்சி, வேலைப்பாடு, இராணுவ நடவடிக்கை, அறுவை.

operative word *n.* பேசிய முக்கிய சொல்.

operetta *n.* ஓரங்க இசைநாடகம்.

ophthalmic *a.* கண்சார்ந்த.

ophthalmology *n.* கண் மருத்துவம்.

opiate *n.* அபின் கலந்த மருந்து.

opine *v.* கருது, எண்ணங் கொள்.

opinion *n* எண்ணம், கருத்துரை, தீர்ப்பு.

opinionated *a.* கருத்தில்விட்டுக் கொடாத.

opium *n.* அபினி.

opossum *n.* அசப்பட்டால் இறந்தது போல் நடிக்கும் மரமேறும் விலங்கு வகை.

opponent *n.* எதிரி, போட்டியிடுபவர்.

opportune (ஒபச்சூன்) *a.* வாய்ப்பான

opportunism *n.* சந்தர்ப்பவாதம்.
opportunity *n.* வாய்ப்பு, சந்தர்ப்பம்.
oppose *v.* எதிர், தடு.
opposite *a.* முற்றிலும் வேறுபட்ட, எதிரான.
opposition *n.* எதிர்ப்பு, எதிர்க்கட்சி, எதிரிடை.
oppress *v.* அடக்கு, ஒடுக்கு, அழுத்து.
oppressive *a.* அடக்கி யொடுக்கும், தாங்கமுடியாதமுறையற்ற
opprobrious *a.* கடுமையான, இகழ்ச்சியான.
opprobrium *n.* வசை, இழிவு.
oppugn (ஒப்யூன்) *v.* மறு, எதிர்.
opt *v.* தெரிவு செய், *opt out* பங்குபற்றாதிருப்பதை விரும்பு.
optative *n.* வியங்கோள், *optative mood* வியங்கோள் விணைப்பாங்கு, *a.* விருப்பத்தை உணர்த்துகிற.
optic *a.* கண் சார்ந்த.
optical *a.* பார்வைக்குரிய, *optical illusion* காட்சி மயக்கம்.
optician (ஒப்ரிஷன்) *n.* மூக்குக் கண்ணாடி விற்பவர்.
optics *n.* கண் பார்வை பற்றிய நூல்.
optimism *n.* எல்லாம் நன்மையாகவே முடியும் எனும் நம்பிக்கை, இவ்வுலகமே வாழ்வதற்கு மிகச் சிறந்த இடம் என்னும் லேப்னிட்ஸ் கோட்பாடு.
optimist *n.* நம்பிக்கை தளராதவன்.
optimum *a.* உகந்த, மிகச்சிறந்த.
option *n.* விருப்பம், தேர்வுரிமை.
optional *a.* விருப்பப்படியான.
opulence *n.* செல்வம், மலிவளம்.
opulent *a.* செல்வமிக்க, வளமான.
opus n. இசைப்பா, ஆக்கப்படைப்பு *magnum opus* தனிப் பெருநூல், சிறந்த படைப்பு.
opusculum சிற்றிலக்கியப் படைப்பு, சில்லறை இசைப் பாடல்.
or *conj* அல்லது, *adv.* முன்.
oracle *n.* தெய்வம் மக்களுடன் உரையாடு மிடம், தெய்வ வாய் மொழியாளர், தெய்வத்தின் பதில்கள், நல்லுரை பகர்வோர், நற்சொல், நல்வழி காட்டி.
oracular *a.* தெய்வமொழி சார்ந்த.
oral *a.* வாய்பற்றிய, வாய்மொழியான, வாய்மூல
orange (ஒறிஞ்ஜ்) *n.* தோடம் பழம், செம்மஞ்சள் நிறம்.
orangeade (ஒறிஞ்ஜேட்) *n.* தோடம்பழச்சாற்றுக் குடிவகை.
orang outan *n.* வாலில்லாக் குரங்குவகை.
oration (ஒறேஷன்) *n.* நீண்ட சொற்பொழிவு.
orator *n.* நாவலன், பேச்சு வல்லான்.
oratorical *a.* சொற்பொழிவு சார்ந்த, நாவன்மைமிக்க.
oratorio *n.* விவிலியக்கதைகூறும் நீண்ட இசைப்பாடல், இசைப்பா.
oratory (ஒறட்றி) பேசும்பாணி, சொற்பொழிவு, சிறு வழிபாட்டிடம்.

orb (ஓப்) *n.* கோளம், உலகம் விண்மீன், உருண்டை.

orbit (ஓபிற்) *n.* கட்குழி, கோளப் பாதை.

orchard (ஓச்சட்) *n.* பழத் தோட்டம்

orchestics *n.* ஆடற்கலை.

orchestra (ஓகிஸ்ட்ரு) *n.* இசைக் கருவியாளர் குழு, பல்லியம் முழக்குவோர்.

orchid (ஓகிட்) *n.* பூச்செடிவகை

ordain (ஓடேன்) *v.* கட்டளையிடு, சமயப்பணியிலமர்த்து, மதகுருவாக்கு

ordeal (ஓடியல்) *n.* கடுந்தேர்வு, சோதனை

order *n.* வரிசை, ஒழுங்கு, கட்டளை, உடல்நிலை, படிநிலை, *v.* கட்டளையிடு, *in good order* நன்னிலையில், *out of order* ஒழுங்கின்றி *in bad order* சீர்குலைவாக,

Orderly *n.* கட்டளைகள்கொண்டு செல்பவர், மருந்தகஏவலர், *a.* ஒழுங்குமுறைப்பட்ட, அமைதி விரும்புகின்ற, கட்டளைகளை மதித்துநடக்கிற, நன்னடத்தையுள்ள.

orders *n. pl.* சமயப் பணிநிலைகள் கட்டளைகள், *holy orders* சமயப் பணித்துறை *the lower orders* பொதுமக்கள், *to take orders* சமயப்பணியாளராகு

ordinal *n.* வரிசைமுறை எண் பெயர்

ordinance *n.* மேலாணை வரையறை, சட்டம், சடங்கு.

ordinary *a.* வழக்கமான, சாதாரண, பொதுநிலை.

ordination *n.* பதவியளிப்பு

ordnance (ஓட்னன்ஸ்) *n.* பீரங்கி, படைகலக்களஞ்சியம், படைக்கலன்கள்

ordure (ஓஜு) *n.* எச்சம், அழுக்கு தகாமொழி

ore *n* உலோகப்பாறை, தாதுப் பொருள்

organ *n.* உறுப்பு, இயம், செய்தித்தாள்

organdie (ஓகண்டி) *n.* மெல்லிய துணிவகை

organic *a.* உறுப்புச்சார்ந்த உயிரியக்கவியலான, கரியச் சேர்மானமுடைய

organism *n.* உயிரினம், தனியொரு விலங்கு அல்லது பயிர்

organist *n.* இசைக்கருவி மீட்டுபவர்

organization *n.* அமைப்பு, சங்கம்

organize *v.* ஒழுங்கமை, ஏற்பாடு செய்

orgasm *n.* புணர்ச்சியின் உச்ச இன்பநிலை.

orgy (ஓஜி) *n.* கேளிக்கை, களியாட்டம், குடிகாரர் கும்மாளம்

oriel *n.* சுவர்ப்புறப் பலகணி.

orient *n.* கீழ்ப்பால், கீழைநாடுகள், கிழக்கு,

oriental *a.* கிழக்குக்குரிய, கிழக்கு நாடு கட்குரிய.

orientate *v.* சரியான திசை தொடர்பு அமைவி, கி

முகமாக அமைவி, *orientate oneself* புதியசூழ்நிலைக்குப்பழக்கப்படுதல்

orifice (ஓறிபிஸ்) *n.* புழைவாய், துளை.

origami *n.* கவர்ச்சியாகத் தாள்களை மடிக்கும் ஜப்பானிய க்கலை,

origin (ஓறிஜின்) *n.* மூலம், தோற்றுவாய், *a man of humble origin* கீழ்த்தடிப் பிறந்தோன்.

original *n.* மூலப்படிவம், மூலம், *a.* மூல, முதலான, பிறரைப்பின்பற்றாத.

originate *v.* தோற்றுவி, தோன்று

oriole *n.* கருமை பொன்மைநிற புள்வகை.

orion *n.* உடுத்தொகுதி, விண்மீன் கூட்டம்

orison *n.* வேண்டுகோள், பிரார்த்தனை

ormolu *n.* மூலாமிட்ட வெண்கலம், பொன்னிற உலோகக் கலவை, உலோகக் கலவையிலான பொருட்கள்

ornament *n.* அழகூட்டும்பொருள், அணிமணி

ornate *a.* அணிநலம் செறிந்த

ornitho - *pref* பறவை

ornithology *n* பறவையியல் பற்றிய ஆய்வு

orology *n.* மலைகள்பற்றிய ஆய்வு

orphan *n.* (ஓபன்) பெற்றோரற்ற குழந்தை, அநாதை

orphanage *n.* பெற்றோரற்ற குழந்தைகட்கான விடுதி, அநாதை இல்லம்

ortho *pref* சரியான

orthodontics *n.* பல் ஒழுங்கின்மையை சரி செய்தல்

orthodox *a.* மரபுவழி நம்பிக்கைகளினின்றும் வழுவாத, வைதிகமான.

orthography *n.* எழுத்திலக்கணம் எழுத்துக்கூட்டுமுறை.

orthopaedics (ஓதொபீடிக்ஸ்) *n* உருத்தரிபட்ட உறுப்புகளை அறுவைமூலம் சரிசெய்தல்.

orwellian *n.* 1950 இல் இறந்த ஜோர்ஜ்ஓவல் என்னும் புனைபெயர்கொண்ட E. A. பிளையர் என்பாரின்ஆக்கங்கள் பற்றிய

oscar *n.* திரைப்படத்துறையில் ஈடுபட்டோருக்கு வழங்கப்பெறும் பரிசில்.

oscillate (ஒஸிலேற்) *v.* ஊசலாடு

oscular *v* வாய்பற்றிய, முத்தத்துக்குரிய

osier (ஓஷ்ய) *n* பரவகை, கூடைமுடையப் பயன்படும் சுள்ளிவகை

osmosis *n.* கண்ணுறை இடைத்தடுப்பூடாக நீர்மங்கலத்தல்.

osprey *n.* மீன்கொத்திப் பறவைவகை, பஞ்சுபோன்ற மென்தூவி.

osseous (ஒஸியஸ்) *a.* எலும்பாலான.

ossicle *n.* சிறு எலும்பு

ossify *v.* எலும்பாகமாறு, கடினமாகு,

ostensible *a.* பகட்டான, போலி.

ostentation *n.* மனங்கவரும் காட்சியமைப்பு, படாடோபம்

ostcopath *n.* என்புதசை பிடித்து பிணி நீக்கும் மருத்துவர்.

osteopathy *n.* வன்மப்பிடி மருத்துவமுறை.

ostler (ஒஸ்ல) *n.* குதிரைகளைக் கண்காணிப்பவன்.

ostracize *v.* ஒதுக்கு, விலக்கு.

ostracism *n* சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வை

ostrich ஒஸ்ட்றிச்) *n.* தீக்கோழி.

other *a.* மற்ற, *n.* மற்றவர், மற்றது *the otherday* சிலநாள்முன் *the other world* இறப்பின் பின் வாழ்வு.

otherwise *adv.* வேறு வகையாக, மற்றப்படி, *conj.* இல்லையேல்

otic *a.* செவிக்குரிய.

otter *n.* நீர்நாய்,

ottoman *n.* சாய்மணைபில்லாத மெத்தை தைத்த நீண்ட இருக்கை, மெத்தை மேற்பாகப் பெட்டி.

Ottoman *a.* முன்னாள் துருக்கிப் பேரரசுக்குரிய

ouch *int.* வலிக்குறிப்பொலி.

ought (ஓட்) *v. aux.* கடமை, முறைமை, நடைபெறக்கூடியது, செய்யத்தக்கது போன்றவற்றை உணர்த்தும் துணைவினை, வேண்டும், கட்டாயமாக வேண்டியதாகும்.

ought, aught *n.* ஏதாவது, ஒன்றுமேஇல்லை.

ounce (ளௌன்ஸ்) *n.* $\frac{1}{16}$ இறுத்தல், வீசம், அவுன்ஸ், 28.35 கிராம், $\frac{1}{20}$ *fluid ounce* பைந்து (அமெரிக்காவில் $\frac{1}{16}$)

our *poss a.* எங்களுடைய

ours *poss. pron.* எங்களுடையது

ourself *pron.* myself என்பதன் பத்தி எழுத்தாளர் வழக்கு

ourselves *refl pron.* நாங்களே.

oust (ஔஸ்ட்) *v.* வெளியேற்று,

out *adv.* வெளியே வழக்கற்று, பிழையாக, எரியாமல், முழுமையாக, மயக்கமாக கட்புலனாகாமல், கண்ணுக்குத் தெரியும்படி, முடிவுற்ற நிலையில், *out of date* வழக்கிறந்த, *out of doors* திறந்த வெளியில் *out, of the way* வழமைக்கு மாறுக, தொலைவில், நேர்மையற்ற முறையில், தடையாக இல்லாமல்.

out - *pref.* கூடுதலாக, மிகச் சிறந்த, கட்டுப்பாடின்றி.

out and out *a.* முழுமையான, முற்றிலும்.

outback *n.* நாட்டகத் தே தொலைவிலுள்ள மாவட்டங்கள்.

outbid *v.* கூடுதல் விலைகேள்.

outboard *a.* தோணிபின் புறத்தே பொருத்திய.

outbreak *n.* திடீரென த் தோன்றல்.

outburst *n.* திடீர்வெளிப்பாடு.

outcast *n.* வெளியேற்றப் பட்டவன்.

outcome *n.* விளைவு, பலன்.

outcrop *n* நிலத்தின் மேல் பாறை வெளித்தோன்றுதல்.

outcry *n.* கூக்குரல், கடும் எதிர்ப்பு.

outdated *a.* வழக்கிறந்த.

outdo *v.* மிக நன்றாகச் செய்.

outdoor *a.* திறந்த வெளியில்.

outdoors *adv* வெளியே.

outer *a.* வெளியிலுள்ள. மையத்திருந்து விலகிய.

outermost *adv.* மிகத்தொலைவில்

outfit *n.* அணிமணித்தொகுதி, கருவிகலத்தொகுதி,

outfitter *n* ஆடவருடை வழங்குபவர், கருவிகள் வழங்குபவர்.

outflank *v.* பக்கவாட்டில்தாக்கு.

outflow *n.* வெளிப்பாய்தல்.

outgoing *a.* வெளிச்செல்லும்.

outgoings *n. pl.* செலவுகள்.

outgrow *n.* விரைவாக வளர்.

outgrowth *n.* கிளைத்தல்,

outhouse *n.* கொட்டில், புறவீடு,

outing *n.* இன்பஉலா, விடுமுறைப் பயணம்.

outlandish *a.* புதிய, புதுமையான.

outlast *v.* குறித்த காலத்திலும் பார்க்க நீடித்திரு,

outlaw *n.* சட்டப் பாதுகாவல் இழந்தவர்.

outlay *n.* செலவுகள், செலவிட்ட தொகை.

outlet *n.* சந்தை, வெளிச்செல்லும்வழி

outline *n.* சுருக்கர், உருவரை, எல்லைக்கோடு.

outlive *v.* குறித்த காலங்கடந்தும் வாழ்ந்திரு.

outlook *n.* காட்சி, எதிர்கால வாய்ப்புவளம், மனச்சார்பு.

outlying *a.* தொலைவிலுள்ள.

outmanoeuvre *v,* மிகத்திறமையாக திட்டமிடு.

outmoded *a.* வழக்கிறந்த, பழமைபபட்ட.

outmost *a.* மிகக்கடுதலான,

outnumber *v.* எண்ணிக்கையில் விஞ்சு.

outpace *v.* விரைந்து முந்திச் செல்.

out patient *n.* மருத்துவமனை வெளிநோயாளி

outpost *n.* வெளிக்காவல் நிலையம், தொலைக்குடியிருப்பு.

outpour *n.* பொழிவு, உணர்ச்சி வெளிப்பாடு.

output *n.* உற்பத்தியளவு, வேலையளவு.

outrage *n.* உரிமை மீறல், அழிசெயல், கற்பழிப்பு.

outrageous *a.* மட்டுமீறிய, திடுக்கிடச் செய்கின்ற.

outre (ஊட்ரே) *a.* வழக்கத்துக்கு மாறுன, தனிப்பட்ட.

outrider *n.* பாதுகாவலனுகச் செல்லும் குதிரைவீரன்.

outright *adv* முழுவதும், அடியோடு, ஒரேயடியாக.

outrun *v.* வெளிச்செல், மீகுதியாகு, கடந்துபோ.

outset *n.* தொடக்கம்.

outshine *v.* விஞ்சிஒளிர், மேம்படு.

outside *n* வெளிப்பகுதி, *a.* வெளியிலிருந்து.

outsider *n.* வெளியார், போட்டியில் பங்கு பற்றும் வாய்ப்பில்லாதவர்.

outsize *a.* தேவைக்கு மிஞ்சிய அளவு.

outskirts *n. pl.* சுற்றுப்புறம் நகர்ப்புற எல்லை.

outspoken *a.* வெளிப்படையாய்ப் பேசுகிற

outspread *v.* பரவு, பரப்பு.

outstanding *a.* மிகச்சிறந்த, கொடுபடாத, தீர்க்கப்படாத.

outstation *n.* தொலைவிட நிலையம்.

outstay *v.* காலங்கடந்தும் தங்கியிரு.

outstep *v.* வரம்பு மீறு.

outstretched *a.* விரித்துநீட்டுகிற.

outstrip *v.* கடந்துசெல், முந்திப்போ, விரைந்தோடு.

outvie *v.* போட்டியில் விஞ்சு.

outvote *v.* கூடுதல் வாக்கால் தோல்வியுறச் செய்.

outward *a.* வெளிநோக்கிய, *n.* வெளிப்புறம்,

outweigh *v.* நிறைகூடு, முக்கியத்துவத்தில் மேம்படு.

outwit *v.* சூழ்ச்சியினால் வெல்.

outwork *n.* புறஅரண், *v.* முடிபுசெய்.

outworn *a.* நைந்துபோன, வழக்கிறந்த.

ouzel *n.* புள்ளினம்

ova *n. pl.* பெண்கருவுயிரணுக்கள்

oval *a.* முட்டைவடிவான

ovary *n.* கருவகம், கருமுளை

ovation *n.* மகிழ்ச்சி ஆரவாரம்

oven (அவ்ன்) *n.* சூட்டடுப்பு

over (ஓவ) *prep.* மேலே, எதிர்ப்புறத்தில், எங்கும், தாவி, *adv.* தலைகுப்புற, குறுக்காக தவிர, திரும்பத்திரும்ப, ஓர் தொங்கலில், *n* தொடர்ந்து ஆறு அல்லது எடுத்தடவை பந்துவீசுதல், *over head and ears* முழுதும அமிழ்ந்து, *to go over* கவனமாக ஆராய்தல், *over and above* கூடுதலாக

over -*pref* மேல், மிகுதி

overall *n.* தளர்மேலாடை, *a.* மொத்தமாக

overalls *n. pl.* மேலாடை.

overawe *v.* அச்சுறுத்திப்பணியவை.

overbalance *v.* சமநிலையிழந்து விழு.

overbear *v.* பலுவால் அழுத்து நிலைதலையச் செய்.

overbearing *a.* பிறர்கருத்துக்கு இடங்கொடாத, வீறுப்பான

overboard *adv.* கப்பலினின்றும் நீருள்.

overburden *v.* நிறையச்சுமத்து.

overcast *a.* முகில் மூடிய.

overcharge *v.* கூடுதலாய்அறவிடு, *n.* மிகுவிலை, மின்மிகைச் செறிவு.

overcoat *n.* மேலங்கி.

overcome *v.* வெல், உதவியற்செய் *a.* ஆட்பட்ட

overconfidence *n.* மட்டுமீறிய தன்னம்பிக்கை.

overdo *v.* அளவு மீறிச்செய், பக்குவங்கெடச் செய்.

overdose *n,* மீறிய அளவு.

overdraft *n.* இருப்புக்குமேல் பற்று.

overdraw *v* இருப்புக்குமேல் பணம் எடு.

overdue *a.* தாமதமாகிவிட்ட.

overestimate *n.* மிகைமதிப்பீடு,

overexcited *a.* மிகுஉணர்ச்சிவயப்பட்ட.

overflow *v* நிரம்பிவழி, செல்வம் கொழி.

overgrow *v.* மேற்கவிந்துபடர் மட்டுமீறி வளர்.

overgrowth *n.* மிகுவளர்ச்சி.

overgrown *a.* மிகுதியாய் வளர்ந்த.
overhang *v.* கவிந்திரு, புறந் தள்ளிக் கொண்டிரு.
overhaul *v.* பிரித்தாராய், எட்டிப்பிடி.
overhead *a.* தலைக்குமேல், வானத்தில்.
overheads *n. pl.* வணிகச் செலவுகள்.
overhear *v.* ஒட்டுக்கேள், தற் செயலாகக் கேள்.
overjoyed *a.* மிக்கமகிழ்ச்சியுடன்
overland *a.* நிலவழியான.
overlap *v.* பகுதியொத்திரு, மேற் சென்றிரு.
overleaf *n.* மறுபக்கம்
overload *n.* அளவுமீறியசுமை.
overlook *v.* புறக்கணி, காணத் தவறு, கண்காணி.
overlord *n.* மேலாளர்.
overman *v.* மிகுதியான வேலையாள் வழங்கு.
overnight *adv.* ஓரிரவுக்குள்ளாக.
overpass *v.* கடந்துசெல், குறுக்கேசெல்,
overpay *v.* மிகுதியாய்க் கூவிகொடு.
overpower *n.* மிகை ஆற்றலால் அடக்கு.
overpowering *a.* அடக்க முடியாத.
overrate *v.* மட்டுமீறி மதிப்புவை, கூடுதல் மதிப்பிடு.
overreach *v.* அளாவிஎல்லைதோல்வியுறு, மீறிமேற்செல்.
override *v.* தலையிட்டு நிறுத்து, மிதித்துச்செல், தள்ளு.
overripe *a.* அளவுமீறிக்கனிந்த.
overrule *v.* ஒதுக்கித்தள்ளு.
overrun *v.* பரந்துபற்று, எல்லைகட, பாழ்படுத்து.
overseas *a.* கடல்கடந்த, வெளிநாட்டில்.
oversee *v.* கண்காணி.
overseer *n.* கண்காணிப்பவர்.
oversew *v.* சாய்வரித்தையலிடு.
overshadow *v.* நிழல்கவி, முக்கியமில்லாததாக்கு
overshoot *v.* குறிகடந்துசெல்.
oversight *n.* மேற்பார்வை, கருதாப்பிழை, காணத்தவறுகை.
oversized *a* அளவுக்கு மிஞ்சிய, மிகப்பெரிதான.
oversleep *v.* மிகுதியாகத்தூங்கு.
overspill *n.* வடிந்தது, இடம் பெயர்வோர்.
overstay *v.* காலங்கடந்தும் தங்கியிரு.
overstep *v.* எல்லைகட, வரம்பு மீறு.
overstrain *v* கடுமுயற்சி மேற் கொள்.
overt *a.* வெளிப்படையான.
overtake *v.* தொடர்ந்துபிடி, திடீரெனவா.
overtax *v.* மிகுவரிசுமத்து, கூடுதல் பளுசுமத்து.
overthrow *v.* வீழ்த்து, தோற்கடி.
overtime *n.* கூடுதல் நேரம்.
overture *n.* இசைநாடகத் தொடக்க நிகழ்ச்சி, (*pl*) நட்பு அணுகுமுறை, முறையான வேண்டுகோள்.
overturn *v.* கவிழ், விழு, விழச்செய்
overweening *a.* தருக்கான, மிகுதன்னம்பிக்கை வாய்ந்த.

overweight *n.* அளவுமிகுந்த எடை.

overwhelm *v.* மூழ்கடி, அமுக்கு, திணறவை,

overwhelming *a.* மிகப்பெரியள விலான.

overwork *v.* கடுமையாயுழை, ஆற்றல்மீறியுழை.

Ovidian *a.* ஓவிட் என்றலத்தீன் கவிஞர் சார்ந்த,

Ovine *a.* செம்மறி போன்ற ஆடுகளுக்குரிய.

oviparous *a.* முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கிற.

ovoid *a.* முட்டைவடிவான.

ovoviviparous *a.* உடலுள் முட்டையிட்டுக்குஞ்சுபொரிகிற.

ovulate *v.* கருப்பையிலிருந்து முட்டை வெளிவிடு.

ovule *n.* கருவுரு முட்டை, கரு நிலைவித்து,

ovum *n.* கருமுட்டை, கருவகச் சினை.

owe *v.* கடன்பட்டிரு, கடமைப் படு.

Owenism *n.* ஓவென் (1771 - 1858) என்பாரின் பொதுவுடைமைக் கூட்டுறவுக் கோட்பாடு.

Owing *a.* கொடுக்கவேண்டிய, *owing to* வினைவாக.

owl *n.* ஆந்தை.

owlery *n.* ஆந்தைப்பொந்து.

owlet *n.* ஆந்தைக்குஞ்சு.

own *a,* உரிமையான, *get one's own back* பழிவாங்கு, *hold one's own* வலுவிழக்காமல், பிடிவிடாமல். *on one's own* தனியே, சுதந்திரமாக.

owner *n.* உரிமையாளர்.

ownership *n.* உரிமை.

ox *n.* எருது

oxide *n.* உயிர்வளி இணைந்த பொருள்.

oxygen *n.* உயிர்வளி.

oxymeron *n.* சொல் முரணணி.

oyster *n.* சிப்பி.

oyster-bank *n.* சிப்பி வளர்க்குமிடம்.

oyster-bed *n.* சிப்பிப்படுகை.

P

Pa (பா) *n.* தந்தை.

pabulum *n.* உணவு.

pace *n.* ஒருகாலடி, முன்னேற்ற வேகம், *keep pace with* தொடர்ந்து உடன் செல்.

pachyderm (பகிடேம்) *n.* தின்தோல் விலங்கு.

pacific *a.* அமைதியான.

Pacific Ocean *n.* ஆசிய - - அமரிக்க கண்டங்களுக்கிடையிலான பசிபிக்மாகடல்.

pacifist *n.* போரொழிப்புக் கோட்பாட்டாளர்.

pacify *v.* அமைதிப்படுத்து, அமைதி நிலைநாட்டு.

pack *n.* பொதி, சிப்பம், சீட்டுக் கட்டு, தொகுதி, மந்தை, *v.* திணி, நெருக்கிவை, கட்டு, *pack off* வெளியே அனுப்பு, *send packing* திடீரென நீக்கு.

package *n.* மூட்டை, பொதி, சிப்பம், *package deal* முழுவதையும் ஏற்கும் ஒப்பந்தம்.

packet *n.* சிறுபொதி, பொட்டலம், பெருந்தொகைப்பணம்,

pack-horse *n.* பொதிக்குதிரை.

pact *n.* உடன்படிக்கை,

pad *n.* எழுதும்தாள் தொகுதி, பஞ்சுறை, மெத்தை, விலங்கின் அடி, *v.* மெதுவாக நட.

padding *n.* வெற்றுச்சொல், விலங்கடி மென்தசைத்திண்டு, மெனப்பொருள்.

paddle *n.* கைத்துடுப்பு, *v* துடுப்பினை இயக்கு, வெறுங்காலுடன் நீருள் நட, நீரலைந்து விளையாடு, *paddle one's own canoe* உதவியின்றி வேலை செய்.

paddock *n.* சிறுவயல், புல்வெளி, பந்தயத்திடலில் குதிரை கார் கட்டான அடைப்பு.

paddy *n.* நெல், சுனம்.

padlock *n.* ஆமைப்பூட்டு.

padre (பாட்றி) *n.* சமயகுரு, பாதிரி.

paean (பீயன்) *n.* போற்றிப்பா வெற்றிப்பா.

paediatrics (பீடியட்றிக்ஸ்) *n.* குழந்தை மருத்துவம்.

pagan (பேகன்) *n.* கிறித்தவரல்லாதார், புறச்சமயி, உருவவழிபாடுடையவர்.

page (பேஜ்) *n.* பக்கம், தாளின் ஒரு புறம், சிறுவன்.

pageant (பஜன்ற) *n.* மாபெருங்காடசி, ஊர்வலக்காட்சி, பேரணிக்காடசி.

pageantry (பஜன்ட்றி) *n.* பகட்டாரவாரக்காடசி.

pagoda *n.* கோபுரம், பௌத்த கோவில், புத்தவிகாரம்.

paid (பேட்) *a. put paid to* முடிபு.

pail (பேல்) *n.* வாளி.

paillasse (பலியஸ்) *n.* வைக்கோல் மெத்தை.

pain *n.* நோவு, மனத்துயர், *v.* துன்புறுத்து.

pains *n. pl.* பிள்ளைப்பேற்று நோவு, கடுமுயற்சி

painstaking *a.* கடுமையாக உழைக்கின்ற.

paint (பேன்ற்) *n.* வண்ணப்பூச்சு, *paint the town red* மகிழ்ச்சியாக மாலைப்பொழுதைக் கழி.

painting *n.* ஓவியம், வண்ணம் பூசுதல்.

pair *n.* இணை, சோடு, *v.* இணை, புணர்.

pajamas *n.* தளர்ந்த காற்சட்டை, படுக்கையுடை.

pal *n.* நண்பர், தோழன்.

palace *n.* அரண்மனை, மாளிகை.

paladin *n.* அருஞ்செயல்வீரன்.

palaeo - *pref.* பழைய.

palaeography *n.* தொல்லெழுத்துக கலை.

palaeolithic (பலியுலிதிக்) *a.* பழங்கற் காலஞ்சார்ந்த.

palaeozoic *a.* தொல்லுயிரூழி சார்ந்த.

palanquin *n.* பல்லக்கு, சிவிகை.

palatable *a.* சுவையான, மனத்திற்கினிய.

palatal *n.* அண்ண ஒலி, இடைநாவிடையண்ண ஒலி.

palate *n.* அண்ணம், சுவை.

palatial (பலேஷல்) *a.* அரண்மனைபோன்ற, மாளிகைபோன்ற.

palaver (பலாவ) *n.* பலர்கலந்துகொள்ளும்பேச்சு, தேவையற்றபேசசு, வெற்றுரவாரம்.

pale *a.* வெளிறிய, *n.* எல்லை, வேலிக்கான கூர் முனை மரக் குற்றி, வேலி, *beyond the pale* நன்னடத்தையின்று.

palette (பலிற்) *n.* ஓவியரின் வண்ணம் கலக்குந்தட்டு.

palfrey (போல்ப்றி) *n.* சவாரிக் குதிரை, மட்டக் குதிரை.

Pali *n.* வடதிராவிடமொழியின் சிதைவு களிலொன்றான பாளிமொழி, புத்தசமயிகளின் மறைமொழி.

paling (போலிங்) *n.* முள்வேலி,

palisade (பலிஸேட்) *n.* கம்பி வேலி, கம்புவேலி.

pall (போல்) *n.* பிணமேல்விரிப்பு, *v.* விருப்பற்றுப்போ, வெறுப்பூட்டு, தெவிட்டிப்போ.

pallbearer *n.* பாடைகாவுபவர், பிணஊர்வலத்தில் செல்பவர்.

pallet (பலிற்) *n.* வைக்கோல் திணித்த மெத்தை, மேடை தட்டு.

palliasse (பலியஸ்) *n.* வைக்கோல் மெத்தை.

palliate (பலிஏற்) *v.* நோ தணிவி, சிறுகுற்றமுள்ளது போல் காட்டு, மறையச்செய்.

palliative *a.* தீய விளைவுகளைக் குறைக்கிற, நோய் தணிக்கும்

pallid *a.* வெளிறிய.

pallor *n.* வெளிறிய தோற்றம்.

palm (பாம்) *n.* பூலினமரம், அங்கை, *Palm Sunday* குருத்தோலை ஞாயிறு, ஈஸ்டருக்கு முந்திய ஞாயிறு, *bear away the palm* வெல்லுதல், *yield the palm to* தோல்வியடை, *to grease his palm* கைக்கூலி கொடு.

palmist (பாமிஸ்ற்) *n.* கைவரை பார்த்து வருவதுரைப்பவர்.

palmistry *n.* கைவரைக்கலை, ரேகை சாத்திரம்.

palmy *a.* வளமிக்க, செழிப்பான,

palmyra *n.* பனைமரம்.

palpable *a.* தொடக்கூடிய, உணரக் கூடிய, தெளிவான.

palpitate *v.* நடுங்கு, துடி, படபட வெனஅடி.

palpitation *n.* இதயத் துடிப்பு.

palsy (போல்ஸி) *n.* முடக்குவாதம், பாரிச வாதம்.

paltry (போல்ட்றி) *a.* பயனற்ற, அற்பமான.

pampas *n.* தென் அமரிக்கப் புல்வெளி.

pamper *v.* செல்லங் கொடு, அதிகசலுகை காட்டு.

pamphlet (பம்ப்ளிற்) *n.* சிறு நூல், துண்டு வெளியீடு,

pan *n.* தட்டம், தட்டு *v* தட்டுலட்டுக் கழுவு, சுடுமையாக விமர்சனஞ் செய்.

pan *pref.* எல்லாம், எல்லாவற்றுக்கும்.

panacea (பனஸிய) *n.* எல்லா நோய்கட்குமான மருந்து.

panache (பநாஷ்) *n.* பகட்டு, வீருப்பு,

panama *n.* வைக்கோல் தொப்பி வகை.

pancatella *n.* சுருட்டுவகை

pancake *n* பணியாரவகை,

pancreas (பங்கறியஸ்) *n* கணையம், இரைப்பைக்கு அருகிலுள்ள சுரப்பி.

panda *n.* கரடியின விலங்கு. *panda car* பொலீஸ்கார்வகை,

paudemonium *n.* பெருங்குழப்பம்.

pander *v.* கீழான ஆசையை எழுப்பு.

pane (பேன்) *n.* யன்னல் கண்ணாடி.

panegyric (பனிஜிறிக்) *n.* புகழுரை.

panel *n.* நீள்சதுரத்துண்டு, புறம்பானதுணி, பெயர்ப்பட்டியல், ஜூரி, வல்லுநர்குழு நடுவர்குழு.

panelling *n.* தனியமைப்பு,

panellist *n.* வல்லுநர் குழுவுறுப்பினர்.

pang *n.* கடுந்துன்பம், திடீர் நோவு,

panic *n.* திடீரச்சம், திகில் பீதி,

panicky *a.* அச்சுறுத்துகிற, கிலிகொண்ட

panicle *n.* பூங்கொத்து,

pannier (பன்யர்) *n.* கழுதை சுமக்கும் கூடை, தொங்கு கூடை,

pannikin *n.* சிறுதகரக் குவளை,

panoply *n.* முழுக் கவச தொகுதி,

panorama *n.* பரந்தவிளைவான காட்சி, பல நிகழ்வுகளின் காடசி,

pansy *n.* அகலிதழ்ப் பூவகை.

pant *v.* மூச்சுத்திணறு, மிகவிரும்பு,

pantaloon *n.* சிரிப்பூட்டும் கோணங்கி,

pantaloons *n. pl.* காற்சட்டை,

pantechnicon *n.* தட்டுமுட்டுப் பொருள்களை எடுத்துச் செல்லும் மூடுவண்டி.

pantheism *n.* எல்லாதெய்வ வழிபாடு, உலகமுழுவதும் இறைவனே எனும் கோட்பாடு,

pantheon *n.* பெருமண்டபம், நினைவுமண்டபம், ஒரு நாட்டின் பல தெய்வங்கள்,

panther *n.* சிறுத்தைப்புலி,

panties *n. pl.* குறுங்காற்சட்டை.

pantile *n.* வளைந்த கூரை ஓடு.

pantomime *n.* கட்டுக்கதை, அடிப்படையிலான கிறிஸ்மஸ் கூத்து, ஊமைக்கூத்து.

pantry (பன்ட்றி) *n.* சாப்பாட்டறை மட்கலன் கத்தி கரண்டி முதலியன வைக்கும் அறை.

pants *n. pl.* காற்சட்டை குறுங்காற்சட்டை,

pap *n.* மெல்லுணவு,

papa *n.* தந்தை,

papacy (பேபஸி) *n* போப்பாண்டவர் பதவி.

papal *n.* போப்பாண்டவர் சார்ந்த.

papaw *n.* பப்பாமரம்,

paper (பேப) *n.* தாள், கடதாசி, செய்தித்தாள், விளைத்தாள், ஆவணம், கட்டுரை' ஆய்வுக்கட்டுரை, *commit to paper* எழுத்தில்வை, *on papers* எழுத்தில் மட்டுமான, *paper currency* தாள் நாணயம், *paper money* தாள் பணம், *paper profits* எதிர்பார்க்கும் இலாபம், *paper tiger* கடதாசிப் புலி, *paper war* தாள் போர், தாள்மூலமான வாக்குவாதம், *send in one's papers* பதவிவிலகல்.

paperback *n.* தாளட்டைப் பொத்தகம்.

paper - chase *n.* தாள் துண்டுக ளைப் போட்டுக் கொண் டே ஓடுபவரைப் பின் தொடரும் ஓட்டப்போட்டி.

paper weight *n.* தாள் பறவா திருக்கவைக்கப்படும்பொருள்.

papier mache (பப்பேமஷே) *n.* பெட்டி முதலியன செய்தற் கான தாள் கூழ்.

papist (பேபிஸ்ற்) *n.* இழிவழக் கில் ரோமன் கத்தோலிக்கர்.

papoose *n.* அமரிக்க இந்தியக் குழந்தை.

paprika *n.* செம்மிளகு.

papyrus (பபைறஸ்) *n.* புல் வகை, புன்தாள், புல்தாளில் எழுதப்பெற்ற கையெழுத்துப் படி.

par *n.* சராசரி, சமநிலை, *at par* முகப்பு மதிப்பின்படி, *on a par with* சமமாக, ஒத்த நிலை யில்.

parable *n.* நீதிக்கதை.

parabola *n.* பந்துப்பா தை போன்றவளைவு, சாய்மாலைவட் டம், நீள்வட்ட வடிவம்.

parachute (பறஷூட்) *n.* வான் குடை, வானிலிருந்து நிலத் துக்கு இறங்க உதவும் குடை.

parade (பரேட்) *n.* படை அணி வகுப்பு, படையணிச்சதுக்கம்.

paradigm *n.* இலக்கண மேற் கோள் வாய்பாடு.

paradise *n.* துறக்கம், சுவர்க் கம், பொன்னுலகம்.

paradox *n.* முரண்பாடு.

paraffin *n.* மெழுகு, எரிபொரு ளாகப்பயன்படும் எண்ணை வகை, *liquid paraffin* மலமி ளக்கி, *paraffin wax* கெட்டி யான மெழுகு.

paragon *n.* சிறந்த மாதிரி.

paragraph *n.* உரைநடைப் பந்தி.

parakeet *n.* சிறுகிளிவகை.

parallel *a.* ஒத்த, இணையான, சமாந்தரமான, *v.* ஒப்பிடு.

parallelogram *n.* இணைகரம்.

paralogy *n.* போலிவாதம்.

paralyse *v.* பக்கவாதத்தால் தாக்குறு, முடக்கு, செயலற்ற தாக்கு.

paralysis *n.* பக்கவாதம், பாரிச வாதம்.

paralytic *a.* பாரிசவாத நோயாளி, வெறியேறிய.

paramilitary *a.* படைத்துறை போன்ற அமைப்புடைய.

paramnesia *n.* பொய்ந் நினைவு.

paramount *a.* மிகச்சிறந்த, தலை மையான, மேதக்க.

paramour (பறமுஅ) *n.* கள்ளக் காதலர்.

paranoia *n.* தான் மிகப்பெரிய வன் என எண்ணும் மனக் கோளாறு வகை.

parapet *n.* பாதுகாப்புச் சுவர், சிறு மதிலரண், கைப்பிடிச் சுவர்.

paraphernalia *n. pl.* மூட்டை முடிச்சு, துணைக்கலங்கள்.

paraphrase *n.* பொழிப்புரை, வேறு சொற்களிற் கூறல்.

paraplegia *n.* உடம்பின் கீழ்ப் பகுதி செயலற்றுப் போதல்.

paraquat *n.* களைகொல்லி.

parasite *n.* புல்லுருவி, ஒட்டுண்ணி, அண்டிவாழ்பவர்.

parasol *n.* குடை வகை.

paratrooper *n.* வான் குடை மூலம் இறக்கப்படும் படைவீரர்.

paratroops *n. pl.* வான்குடை மூலம் இறங்கப் பயிற்றப் பட்ட படை.

paratyphoid *n.* மெல்லிதான நெருப்புக்காய்ச்சல் வகை.

parboil *v.* அரை குறையாகக் கொதிக்கவை.

parcel *n.* பொட்டலம், பொதி, நிலக் கூறு, *v.* பகுதிகளாகப் பிரி, பொதி பண்ணு, *part and parcel of* முக்கிய கூறு.

parch (பாச்) *v.* உலரச் செய், விடாய் ஏற்படுத்து.

parchment *n.* தோல் தாள், எழுதுதற்குரிய தோல்.

pardon *n.* பொறுத்தல், மன்னிப்பு, *beg your pardon* மன்னிக்கவும்.

pare *v.* ஓரம் வெட்டு, உரி, சிறிது சிறிதாகக் குறை.

parent *n.* பெற்றோர், முன்னோர், மூலம்.

parentage *n.* வழிவழி, பரம்பரை.

parenthesis *n.* (*pl.* - *theses*) இடைப்பிறவரல், தனி நிலை மொழி, அடைப்புக்குறி.

par excellence *adv.* எல்லாவற்றிற்கும் மேற்பட்டு.

parings *n. pl.* வெட்டிய துண்டுகள்.

pari passu *adv.* இணையாக, ஒரே சமயத்தில்.

parish *n.* திருச்சபை மாவட்டம், கோவில் பற்று, உள்ளூராட்சி வட்டாரம்.

parity *n.* ஒப்புமை, சமநிலை, சமத்துவம்.

park *n.* பூங்கா, வண்டிகள் நிறுத்தி வைக்குமிடம்.

parka *n.* தலைக்கவியுடன் கூடிய மேற்சட்டை.

Parkin *n.* வெல்லப்பாகும் மாவும் சேர்ந்த இஞ்சி அப்பம்.

parky *a.* கடுங் குளிரான.

parlance *n.* பேச்சுப் பாங்கு.

parley (பாளி) *n.* சிக்கல் தீர்வுக்கான பேச்சு, எதிரிடைகளுக்கிடையேயான கலந்துரையாடல்.

parliament *n.* சட்டமன்றம், பாராளுமன்றம்.

parlour (பாள) *n.* வரவேற்பறை.

parlous (பாளஸ்) *a.* இடுக்கண் நிறைந்த, ஆபத்தான, இழிந்த,

parochial (பரோகியல்) *a.* திருச்சபை வட்டாரஞ் சார்ந்த, குறுகிய நோக்கங் கொண்ட.

parody (பரடி) *n.* நகைப்புக்கிடமாக்கும் உரை.

parole *n.* உறுதிமொழி, தப்பியோட மாட்டேன் எனக் கைதி கூறும் உறுதிமொழி, *on parole* கைதியின் உறுதிமொழியின் பேரில் அளிக்கும் விடுதலை.

paronomasia *n.* செம் மொழிச் சிலேடை.

paroxysm *n.* வலிப்பு, வெடிச் சிரிப்பு, திடீர்ச் சினம்.

parquet (பாகே) *n.* மரக்கட்டைகளாலான நில அமைப்பு.

parr *n.* சமன் மீன் குஞ்சு.

parricide (பரிஸைட்) *n.* தந்தையைக் கொல்பவன்

நெருங்கிய உறவினரைக் கொல்பவன்.

parrot *n.* கிளி.

parry (பறி) *v.* தவிர், சாதுரியமாய் நழுவு, தடு, தள்ளு.

parse *v.* சொல்லிலக்கணங்கூறு.

parsec *n.* வானியலில் தொலை அலகு, ஏறத்தாழ 3 $\frac{1}{2}$ ஒளி ஆண்டுகள்.

parsimonious (பாஸிமோனியஸ்) *a.* ஈயாத.

parsimony *n.* சிக்கனம், கஞ்சத்தனம்.

parsley (பாஸ்லி) *n.* மரக்கறி வகை.

parsnip *n.* உண்ணத் தக்க கிழங்குவகை.

parson *n.* சமயகுரு, பாதிரியார்.

parsonage *n.* குருமனை.

part *n.* பகுதி, நடிகர்பாகம், *v.* பிரி, *part with* விட்டுப்பிரி, கொடு, வில், *part of speech* இலக்கணத்தில் சொல் கை, *part and parcel* இன்றியமையாக்கூறு.

partake *v.* பங்குகொள், சிறிது அருந்து.

Parthian *a. Parthtan shot* பிரிவு நேரக் குறிபபுரை.

partial (பாஷல்) *a.* பகுதியளவான, ஒரு சார்புடைய.

partiality *n.* ஓரவஞ்சனை, தனிப்பற்று.

participant *n.* பங்குகொள்பவன்.

participate *v.* பங்குபெறு, கலந்து கொள்.

participle *n.* வினையினின்றும் தோற்றிய சொல், வினைப் பகுதி.

particle *n.* சிறுதுகள், உருபு.

particular *a.* ஒன்றினுக்கேயுரிய, சிறப்பான, *n.* நுணுக்க விளக்கம்.

particulars *n. pl.* விவரங்கள்.

parting *n.* பிரித்தல், பிரிதல், வகிடு, *parting of the ways* இரண்டிலொன்றை தெரிவு செய்ய வேண்டிய தறுவாய்.

partisan *n.* கடும் ஈடுபாடுடையவர், கெரில்லா வீரர்.

partition (பாட்டிஷன்) *n.* பிரிவினை, *v.* பங்கிடு, பிரி,

partly *adv.* ஓரளவுக்கு, சிறிதளவில்.

partner *n.* பங்காளி.

partnership *n.* கூட்டு வியாபாரம், கூட்டு.

partridge (பாட்றிஜ்) *n.* கௌதாரி.

parts *n. pl.* பகுதிகள், *the privy parts* மறைஉறுப்புக்கள்.

parturition *n.* பிள்ளை பெறுதல், பிள்ளைப்பேறு.

party *n.* கட்சி, குழு, பங்காளி, ஆள், *party spirit* கட்சி பனப்பான்மை, *party line* கட்சிக் கொள்கை.

parvenu (பாவன்யூ) *n.* திடீர்ப் பணக்காரர்.

paschal (பாஸ்கல்) *a.* இயேசு உயிர்த்தெழுந்த திருநாள் பற்றிய, ஈஸ்டர் பற்றிய,

pass *n.* தேர்ச்சி, இசைவுச்சீட்டு, பந்து செலுத்துதல், பலிப்பாதை *v.* மேலே செல், மாறு தலடை, இற, கடந்து செல், தப்பித்துக் கொள், கொண்டு போ, தேர்ச்சியடை, நிறை

வேற்றப்பெறு, விலகிக்கொள், நிகழ், விஞ்சு, கழி, வழங்கு, *make a pass at* காம நோக்குடன் கவர முயல், *pass away* இற, *pass out* இற, மயக்கமடை, *pass over* தவிர், *pass up* ஏற்க மறுத்தல், *come to pass* நிகழ், *pass water* சிறு நீர்கழி, *pass by* தவிர், *pass for* எனத் தவறுகவழங்கப்பெறு, *pass in one's checks* இறந்துபடு, *pass muster* போதுமானதென ஏற்றுக்கொள்ளப்பெறு, *pass off* மங்கிப்போ, கவனந்திருப்பு, நிறைவேற்றப்பெறு, ஏமாற்றிக்கொடு, *pass on* முன்செல், இறந்துபடு, அனுப்பு, தண்டனை விதி, *pass through* நுகர், அனுபவி, *pass upon* தீர்ப்பளி, ஏமாற்றிக் கொடு.

passage *n.* பாதை, குழாய் போன்ற அமைப்பு, கடற்பயணம், பொத்தகப்பகுதி, *bird of passage* ஓரிடத்தில் நிலையாயிராதவர், *passage of arms* சண்டை.

passe (பஸே) *a.* இளமைக் கவர்ச்சி கடந்துவிட்ட.

passenger *n.* பயணி.

passe-partout (பாஸ்பாற்று) *n.* எல்லாப் பூட்டுகளையும் திறக்கும் பொதுத் திறப்பு.

passer-by *n.* வழிச்செல்வோன்.

passing *a.* நிலைத்திருக்க மாட்டாத, தற்செயலான.

passion (பஷன்) *n.* கழிகாமம், பேராவல், உணர்ச்சி வெறி, கடுஞ்சினம்*the Passion* இயேசு சிலுவையிற்பட்ட துன்பம், *passion play* இயேசுவின் துன்பங்கள் பற்றிய நாடகம்.

passionate *a.* உணர்ச்சி மிக்க.

passive *a.* எதிர்க்காத, சுறுசுறுப்பில்லாத, *passive voice* செயப்பாட்டு வினை.

passkey *n.* எல்லாப் பூட்டுகளையும் திறக்கக்கூடிய திறப்பு.

Passover *n.* யூதர்கள் எகிப்தியரிடமிருந்து பெற்ற விடுதலையை நினைவு கூரும் யூதர்விழா.

passport *n.* கடவுச் சீட்டு.

password *n.* எதிரியிடமிருந்து நண்பனைப் பிரித்துக் காட்டும் மறை மொழி.

past *a.* கழிந்த, *n.* இறந்த காலம், முடிந்த நிகழ்ச்சி, கடந்தகால வாழ்க்கை, *prep.* அப்பால், கடந்து, *past master* துறைபோகியவர், வல்லுநர், *past participle* முடிவெச்சம்.

pasta *n.* பல வடிவங்களிலான உலர்ந்த மாப்பசை.

paste *n.* பசை, மாப்பசை. தின்பண்ட வகை, கடினமான கண்ணாடிப் பொருள் வகை, *v.* ஒட்டு, அடி.

pasteboard *n.* தடித்த தாள் அட்டை.

pastel (பாஸ்ரல்) *n.* வண்ணக் கோல்.

pastern *n.* குதிரையின் காற் குழைச்சு.

pasteurize *v.* பாஸ்டர் (*Louis Pasteur 1822-95*) முறைப்படி சூடாக்கிப் பாலைத் துப்புரவு செய்.

pastiche *n.* தொகுப்பு, கதம்பம்.

pastille (பஸ்ற்றீல்) *n.* இன்சுவைமிக்க மருத்து வில்லை.

pastime (பாஸ்ரைம்) *n.* பொழுதுபோக்கு.

pastor (பாஸ்ற்ற) *n.* திருச்சபைக்குப் பொறுப்பான மதகுரு, நல்லாயர், போதகர்.

pastoral (பாஸ்ற்றறல்) *a.* நாட்டுப்புற வாழ்க்கை பற்றிய, மதகுருசார்ந்த, ஆன்மிக வழிகாட்டல்பற்றிய.

pastry (பேஸ்ட்றி) *n.* மாப்பண்டப்பணியாரம்.

pasture (பாஸ்ச்ச) *n.* மேய்ச்சல்புல் வெளி.

pasty (பேஸ்ற்றி) *a.* வெளிறிய, பசை போன்ற.

pasty (பாஸ்ற்றி) *n.* இறைச்சி கலந்த மாப்பண்டவகை

pat *v.* மெதுவாய்த் தட்டு, *n.* ஊக்குதல் தெரிவி, *n.* தட்டுதல், தட்டும் ஒலி, திரளை, *a.* தெரிந்த, தயாரான, *adv.* வாய்ப்பாக, தயார் நிலையில், *pat on the back* ஆதரவு தெரிவி, *stand pat* முடிபில் உறுதியாயிருத்தல். *to answer pat* திறமையாகப் பதிலளித்தல்.

patch *n.* ஒட்டு, நிலத்துண்டம், ஒட்டுத்துண்டு, தெளிவான காலப்பகுதி, *v.* ஒட்டுப்போடு சீர்செய், *not a patch on* சிறிதும் ஒப்பிடத்தக்கதன்று, *patch up* சீராக்கு, பூசல் இணக்குவி.

patchouli (பச்சுளி) *n.* நறுமணச் செடி.

patchwork *n.* ஒட்டுவேலை, பன்னிற ஒட்டிணைவு,

patchy *a.* எல்லாம் ஒரேமாதிரியில்லாத, நிற ஒழுங்கற்ற.

pate (பேற்) *n.* தலை.

pâté (பாற்றே) *n.* இறைச்சிக் களி.

patent (பேற்றன்ற்) *a.* தெளிவான, திறந்த.

patent *n.* தனிச்சிறப்புரிமை, தனிக்காப்புரிமை.

patentee *n.* தனியுரிமைப்பட்டயம் பெற்றிருப்பவர்.

paterfamilias *n.* குடும்பத்தலைவர், தந்தை.

paternal (பற்றேணல்) *a.* தந்தைவழி, தந்தை போன்ற தந்தைக்குரிய.

paternalism *n.* பொறுப்புகள் கொடாமல் தேவைகளை வழங்கும் கொள்கை.

paternity *n.* தந்தைமை, தந்தையாயிருக்குந் தன்மை.

paternoster *n.* வழிபாட்டுப்பா.

path *n.* பாதை, செயல் நெறி முறை.

pathetic *a.* இரக்கமூட்டுகிற போதாத.

pathology *n.* நோய் ஆய்வு.

pathos (பேதொஸ்) *n.* இரக்கப்பண்பு, பரிவேற்படுத்தும் ஆற்றல், அவலச்சுவை.

patience (பேஷன்ஸ்) *n.* பொறுமை, ஒருவரே ஆடும்சீட்டாட்ட வகை.

patient *n* நோயாளி, *a.* பொறுமையுள்ள.

patina *n* பசுங்களிம்பு.

patio *n.* தளவரிசையமைத்த முற்றம்.

patois (பற்வா) *n.* குறிச்சி மொழி.

patriarch (பேட்றியாக்) *n.* குடும்பத்தலைவன், குலமுதல்வன், திருச்சபை முதல்வர்.

patrician (பட்றிஷன்) *n.* உயர், குடியாளர்.

patricide *n.* தந்தையைக்கொல் லுதல்.

patrimony (பட்றிமனி) *n.* பரம் பரைச் சொத்து, முதுசொம்.

patriot *n.* நாட்டுப்பற்றுளர்.

patriotism *n.* நாட்டுப்பற்று.

patrol *v.* ஊர்க்காவல்செய், சுற் றுக்காவல் செய்.

patron (பேட்றன்) *n.* புரவலர், காப்பாளர், வாடிக்கையா ளர்.

patronize (பட்றனைஸ்) *v.* புரந் தருள், ஆதரவுகொடு, காப் பாற்று.

patter *n.* குழுமொழி, *v.* மள மளவென்று பேசு, சடசட வென ஒலியெழுப்பு, குடுகுடு வென ஓடு.

pattern *n.* மாதிரி, சிறந்த எடுத் துக்காட்டு, நிகழ்வுகளின் ஓழுங்கு முறை.

patty *n.* மாப்பண்டம்.

paucity (போஸிற்றி) *n.* சிறி தளவு, சொற்பம்.

paunch (போஞ்ச்) *n.* வயிறு, தொப்பை.

pauper (போப்ப) *n.* வறியவன்

pauze (போஸ்) *n.* இடை நிறுத் தம், ஓய்வு.

pave (பேவ்) *v.* தளம் அமை, கல்பரப்பு, ஏற்பாடு செய்.

pavement *n.* தெருவோர நடைபாதை.

pavilion (பவில்யன்) *n.* பெருங் கூடாரம், கூடாரம் போன்ற கட்டடம், விளையாட்டிடக் கட்டடம்.

paw (போ) *n.* கூருகிர்ப்பாதம், கை, *v.* கையால் தொடு, தாளால்நிலத்திலுதை.

pawky *a.* நகைச்சுவை.

pawn (போண்) *n.* சதுரங்க ஆட்டக்காய், ஆட்டுவிப்பவன், செயற் சுதந்திரம் அற்றவன்.

pawn *v.* அடகுவை, *n.* அடை மானம்.

pawnbroker *n.* அடகுபிடிப்ப வர்.

pay *v.* ஊதியமளி, கடன்கொடு, பணம் கொடு, *n.* சம்பளம், கூலி, *in the pay of* வேலைக் கமர்த்தப்பெற்ற, *pay as you earn* உழைக்கும் போதேவரி செலுத்து, *pay off* முழுமை யாகக் கடன் கொடு, நல்விளைச்சல் கொடு, *pay out* தண்டனையளி, பழிகுப் பழி வாங்கு, *pay up* முழுதுங் கொடு, *pay through the nose* மிகுவிலைகொடு, *pay a call* விருந்தாகச் செல், *pay down* உடன் பணங்கொடு, *pay for* விலைகொடு, தண்டனைபெறு, *pay the piper* செலவுப்பொறுப் புஏற்றுக்கொள்.

payee *n.* பணம் பெறுபவர்.

payer *n.* பணம் கொடுப்பவர்.

payload *n.* வானூர்தி அல்லது ரொக்கட்டின் முழுச்சுமை.

payment *n.* சம்பளம், பண வழங்கீடு.

payola *n.* நேர்மையற்ற முறை யில வணிகம் பெருக்க வழங் கப்படும் கையூட்டு.

payroll *n.* சம்பளம் பெறுவோர் பட்டியல்.

pea (பீ) *n.* பயறு, பயற்றினம்.

peace (பீஸ்) *n.* அமைதி, *justice of the peace* சமாதான நீவான்.

peach *n.* பழவகை, அழகான பெண் *v.* பிறர் தவறுகளைச்

சொல்.

peacock *n.* ஆண் மயில்.

peahen *n.* பெண் மயில்.

peak *n* கூர் நுனி, உச்சி, தொப்பி முனை.

peaky *a.* நோயுற்றவர்போல் தோன்றுகிற, ஒட்டி மெலிந்த, முகடுபோன்ற.

peal *n.* பன் மணியோசை. பேரொலி.

peanut (பீநட்) *n.* நிலக்கடலை வகை.

peanuts *n. pl.* மிகச் சிறு தொகைப் பணம்.

pear (பெய) *n.* பழவகை.

pearl (பேள்) *n.* முத்து, முத்துப் போன்ற பொருள்.

peasant (பெஸன்ற்) *n.* கமத்தன், உழவன்.

peasantry *n.* கமவேலைசெய்பவர்.

peat (பீற்) *n.* அழுகிக்கரியான பயிர் வகை.

pebble *n.* கூழாங்கல்.

peccadillo (பெக்கடிலோ) *n.* சிறுதவறு.

peck (பெக்) *v.* கொத்து, அல கால் கொத்தி எடு, அவசர முத்தங்கொடு *n.* 2 கலன் அளவு, $7\frac{1}{2}$ லீற்றர், பேரளவு.

pecker *n.* மூக்கு, ஆண் குறி, *keep one's pecker up* உற்சாகமாயிருத்தல்.

peckish *a.* பசியுள்ள.

pectin *n.* பழப்பசைச் சாறு.

pectoral *a.* நெஞ்சுதொடர்பான.

peculate *v.* திருடு, பணங்கையாடு.

peculation *n.* பணம்கையாடல்

peculiar *a.* சிறப்பான, ஒன்றற்கேயுரிய, புதுமையான.

peculiarity *n.* தனித்தன்மை, சிறப்பியல்பு.

pecuniary *a.* பணந்தொடர்டான.

pedagogue *n.* கண்டிப்புமிக்க ஆசிரியர்.

pedagogy *n.* ஆசிரியரியல், கற்பிக்கும் முறை.

pedal *n.* மிதிகட்டை.

pedant *n.* கல்விச் செருக்குடையவர்.

peddle *v.* சுற்றித்திரிந்து விற்பில்.

pedestal *n* மேடை, பீடம், அடிப்படை.

pedestrian *n.* நடந்துசெல்பவர், *a.* சிறுதனையற்ற, மழுங்கிய.

pedicure *n.* பாதம் கால்விரல் ஆகியவற்றிற்கான மருத்துவம்.

pedigree *n.* குடிவழிப்பட்டியல், மரபுவழி.

pediment *n.* முக்கோணமுகப்பு முகடு.

pedlar *n.* வீடுவீடாகச் சென்று விற்பவர்.

peek *v.* களவாகப்பார்

peel *v.* தோலுரி, உரி,

peep *v.* துளையூடுபார், மறைந்து டார், அரைதலறையாக்காட்டு, *n.* பறவையின் நீச்சொலி.

peer *v.* கூர்ந்து நோக்கு, *n.* உயர்குடியினர், இணையானவர், *peeress n. fem.*

peerless *a.* இணையற்ற.

peevish *a.* சிடுசிடுப்பான

peewit *n.* நீர்ப்பறவை வகை.

peg *n.* மரஆணி, வெறியம், முளை, சாட்டு, *v.* ஓரேநிலையில் வை. *off the peg* உடன் பயன்படுத்தக்கூடிய, *peg away* விடாமுயற்சியுடன்உழை, *peg out* இற, *a peg to hang on* வெறுஞ் சாக்குப் போக்கு *round peg in a square hole* ஒவ்வாத.

pegasus *n.* கவிதையாற்றல், பறக்கும் குதிரை.

pejorative *a.* இழிவுபடுத்துகிற.

peke *n.* நாய்வகை.

Pekingman *n.* பீக்கிங் நகர் அருகில் 1929இல் கண்டெடுக்கப்பெற்ற முன்னூழிக்காலப் புதைபடிவ மனித இனம்.

pekoe *n.* நறுமணத்தேயிலைவகை

pelf *n.* பணம், செல்வம்.

pelican *n.* நீர்ப்பறவைவகை, *pelican crossing* ஒளியூட்டிய பாதை கடக்குமிடம்.

pellet *n.* உருண்டை, குண்டு

pell-mell *n.* குழப்பம், *a.* தாறுமாறான.

pellucid (பிலூஸிட்) *a.* மிகத் தெளிவான.

pelmanism *n.* நினைவுப் பயிற்சி முறை.

pelmet (பெல்மிற்) *n.* யன்னல் மேல் விடப்படும் குறுங்கரைத் திரைச்சீலை.

pelt *n.* விலங்குத் தோல் *v.* தொடர்ந்து எறி, விடாது பெய், விரைந்தோடு, *at full pelt* மிகுவிரைவாக, *pelting rain* பெருமழை.

pelvis *n.* இடுப்பெலும்புக் கூடு, கூபகம்.

pemmican *n.* உலர்ந்த இறைச்சி.

pen *n.* தொழுவம், பட்டி, வேலியடைப்பு, எழுதுகோல், அஞ்சனப்பெட்டி, *pen friend* பேனா நண்பர், *pen name* பேனாபெயர், *pen pusher* எழுதுவினைஞர்.

penal *a.* தண்டனை பற்றிய, தண்டனைக்குரிய, *penal servitude* கடுங் காவல் தண்டனை.

penalty *n.* தண்டனை.

penance *n.* கழுவாய், நோன்பு, செய்த தவற்றுக்காகத் தன்னை ஒறுத்தல்.

pence *n. pl.* ஆங்கில நாணயவகை.

penchant (பாங்ஷாங்) *n.*, விருப்பம்.

pencil *n.* கரிக்கோல்.

pendant *n.* பதக்கம், தொங்கணி.

pendent *a.* தொங்குகிற.

pending *a.* முடிபு செய்யப்பெறுத, முடிபிற்காகக் காத்திருக்கிற, *prep.* முடிபு செய்யுமவரை.

pendulous *a.* ஊசலாடுகிற, தொங்குகிற.

pendulum *n.* ஊசற்குண்டு.

penetrate *v.* ஊடுருவு, துளையிடு நுழை, துருவிநோக்கு, நுணுகி ஆராய்.

penguin (பெங்குவின்) *n.* பறவாத நீர்ப்பறவையினம்.

penicillin *n.* நோய்நுண்மங்களைக் கொல்லும் மருந்து.

peninsula *n.* தீவக்குறை, குடாநாடு.

penis (பீநிஸ்) *n.* ஆண்குறி.

penitent *a.* தவற்றுக்காக வருந்துகிற,

penitentiary (பெனிற்றென்ஷரி) *n.* சிறை.

penknife (பென்னைப்) *n.* பேனாக் கத்தி, சிறுகத்தி,

pennant *n.* நீண்டொடுங்கிய முக்கோணக் கொடி.

penniless *a.* பணமில்லாத, துணையற்ற, வறிய.

pennon *n.* கப்பற் கொடிவகை.

penny *n.* ஆங்கிலக் காசுவகை, *a pretty penny* பெருந்தொகைப் பணம், *penny wise* சிறுசிறு செலவிற்கூட கைபிறுக்கமாயிருக்கிற. *penny wise and pound foolish* உலக்கை போவதை விட்டுவிட்டு ஊசி போவதைக் கணக்குப் பார்க்கின்ற.

pension (பென்ஷன்) *n.* ஓய்வூதியம், *pension off* ஓய்வூதியத்துடன் விலக்கு.

pension (பாஸியோ) *n.* உணவு விடுதி.

pensive *a.* சிந்தனையில் மூழ்கிய, வாடிய தோற்றமுடைய.

pent *a.* அடைத்துவைத்த, *pent up* அடக்கிவைத்த.

penta *pref.* ஐந்து.

pentagon *n.* ஐங்கோணம், ஐந்துபக்க உருவம், *the Pentagon* அமெரிக்கப் போர்ப்பணிமனை.

pentameter *n.* ஐஞ்சீரடி.

Pentateuch *n.* பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து ஏடுகள்,

pentathlon *n.* ஐந்து நிகழ்ச்சிகள் கொண்ட விளையாட்டுப் போட்டி.

Pentecost *n.* யூதரின் அறுவடை விழா, இயேசுநாதர் மீட்டுயிர்ப்புக்கடந்த ஞாயிற்றுக்கிழமை.

penthouse *n.* சுவரோடிணைந்த சரிவுக்கூரை, மேற்கட்டி, கட்டடக் கூரையிலமைந்த வசிப்பிடம்.

penultimate (பினல்ற்றிமிற்) *a.* ஈற்றயலான, கடைசிக்கு முந்திய.

penury *n.* ஏழ்மைநிலை.

peon (பீஒன்) *n,* பணிமனைச் சிற்றுள், நாட்கூலியாள், தபாற்காரன்.

peony *n.* பூச்செடி வகை.

people (பீப்பிள்) *n. pl.,* மக்கள், *a people* நாடு, *peoples* நாடுகள்.

pep *n.* விரைவு, ஊக்கம், மிதம்பு, *pep talk* ஊக்குதற் பேச்சு.

pepper *n.* மிளகு.

pepper and salt *a.* கருமையும் வெண்மையும் கலந்த,

pepper-corn *n.* காய்ந்த மிளகு, *pepper-corn rent* மிகக் குறைந்த வாடகை,

peppermint *n.* சுவையூட்டும் எண்ணெவகை, இனிப்புவகை.

peppery *a.* மிளகு போன்ற, மிளகுநிறைந்த, சிடுசிடுப்பான,

pepsin *n.* இரப்பையில் சுரக்கும் நீர்மவகை,

peptic *a.* செமிக்கச் செய்கிற,

per *prep.* ஒவ்வொருவருக்கும், மூலமாக, *per cent* நூற்றுக்கு, *per post* அஞ்சல் வழி.

per *pref* ஊடாக, முழுமையாக,

peradventure *adv.* தற்செயலாக, ஒருவேளை,

per annum *adv.* ஆண்டுதோறும், *per capita* *adv.* ஒவ்வொருவருக்கும்.

perambulate *v.* நடந்துதிரி, சுற்றித்திரி.

perambulator *n.* குழந்தை வண்டி.

perceive (பேளீவ்) *v.* உணர், காண், அறி.

percentage *n* நூற்றுவிழுக்காடு, சதவீதம்.

perceptible *a.* உணரத்தக்க, அறியக்கூடிய, காணத்தக்க.

perception *n.* புலனுணர்வு.

perch *n.* நன்னீர் மீன்வகை.

perch *n.* பறவை குந்துமிடம், கூண்டிலமைந்த குறுக்குக் கம்பி.

perchance *adv.* தற்செயலாய், ஒருவேளை,

percolate *v.* வடிகட்டு, கசி.

percolator *n.* வடிகட்டும்கருவி.

percussion (பேக்கஷன்) *n.* மோதுதல். தண்ணுமை, நோயறிய நெஞ்சில் தட்டுதல்,

per diem adv. நாள் ஒன்றிற்கு.

perdition *n.* அழிவு, நரகம், சுவர்க்க நம்பிக்கை இழப்பு.

peregrination *n.* வெளிநாட்டுப் பயணம், சுற்றித்திரிதல்.

peregrine *n.* பருந்துவகை, *a.* வெளிநாட்டுக்குரிய.

peremptory *a.* முடிவான, மீற முடியாத, *peremptory mandamus* மறுக்க முடியாத கட்டளை, *peremptory writ* எதிர்வாதிக்கான அழைப்பாணை.

perennial *a.* என்றுமுள்ள, பல்லாண்டு வாழ்கிற.

perfect *a.* முழுநிறைவான, செயல் முடிபு குறிக்கிற, குற்றமற்ற, மிகச்சிறந்த.

perfection *n.* முழுநிறைவு, தவறற்ற நிலை, மிகுசிறப்பு.

perfectionist *n.* முழுநிறைவு காணமுடியும் என்பவர்.

Perfidy *n.* வஞ்சனை, நம்பிக்கை மோசம், துரோகம்.

perfroate *v.* துளையிடு, ஊடுசெல்.

perforce *adv.* கட்டாயத்தால்.

perform *v.* நடத்து, நிறைவேற்று, செய்துகாட்டு, நடி, பாடு.

performance *n.* நிகழ்ச்சி, செய்தல், செயல்.

perfume *n.* நறுமணம்,

perfunctory (பேபங்ட்றி) *a.* கடமைக்காகச் செய்யப்படுகிற, மனந்தோயாத.

pergola *n.* பூம்பந்தல், செடி கொடி படரும் நடைபாதை மேல் வளைவுகள்.

perhaps *adv.* ஒருவேளை.

peri - *pref* சுற்றிவர.

peril *n.* இடர், துன்பதெருக்கடி, பேராபத்து.

perimeter *n.* சுற்றுவட்டஅளவு, சுற்றுவரை, புறஎல்லை.

period *n.* காலப்பகுதி, முற்றுத்தெர்டர், நிறுத்தக்குறி, மாதவிடாய், *a.* கடந்தகாலத்துக்குரிய.

periodical *a.* பருவ இதழ், சிற்றேடு.

peripatetic *a.* அலைந்துதிரிகிற.

peripheral *a.* புறஎல்லையிலுள்ள, சிறிதளவே முக்கியமான.

periphery *n.* எல்லை, விளிம்பு.

periphrasis *n.* சுற்றிவளைத்துப் பேசுதல்.

periscope *n.* நீர்மூழ்கி பதுங்கு குழிகளில் இருப்பவர் வெளியே நடப்பவற்றை அவதானிக்க உதவும் கருவி.

perish *v.* அழிவுறு, வாடு.

perishable *a.* அழியக்கூடிய.

periwig *n.* பொய்ம்மயிர்க் குல்லாய்.

periwinkle *n.* செடிவகை, நத்தை வகை.

perjure *v. refl.* பொய்ச்சத்தியஞ் செய்.

perjury (பேஜூறி) *n.* வாக்குறுதி மீறல், பொய்ச்சான்று ரைத்தல்.

Perk *v.* ஊக்கத்துடன் எழு, தலைநிமிர்ந்துநில், *n.* வேறு நன்மைகள்.

perky *a.* துடுக்கான, உற்சாகமான, செருக்குள்ள.

perm *n.* தலைமயிரில் செயற்கையாக ஏற்படுத்தும் அலை நெளிவு, ஒழுங்குப் பிறழ்வு.

Permafrost *n.* நிலையாக உறைந்திருக்கும் கீழ்மண்படை.

permanent *a* நிலையான. *permanent way* தொடர் வண்டிப் பாதை.

Permeate (பேமிஏற்) *v.* ஊடுருவி பரவு.

per mensem adv. மாதமொன்றுக்கு.

permission *n* இசைவு, அனுமதி.

permissive *a.* இசைவளிக்கிற, பொறுத்துப் போகின்ற, கட்டுப்பாடற்ற.

permit *n.* இசைவுச்சீட்டு, *v.* இசைவு கொடு.

permutation *n.* ஒழுங்கு வரிசை மாற்றம்.

pernicious (பெணிஷஸ்) *a.* கேடு செய்யக்கூடிய.

pernickety *a.* திருப்தி பண்ண முடியாத, கவனமாகக்கையாள வேண்டிய.

peroration (பெறரேஷன்) *n.* நீண்ட பேச்சு, நீண்ட பேச்சின் இறுதிப்பகுதி.

perpendicular *a.* செங்குத்தான

perpetrate *v* செய், குற்றஞ்செய்.

perpetual *a.* இடைவிடாத, நிலையான.

perpetuate *v.* மறவாதிருக்கச் செய், நீடித்திருக்கச்செய்.

perpetuity *n.* நிலைபேறு. என்றென்றைக்கும்.

perplex *v.* குழப்பு, திகைக்கச் செய்.

perplexity *n.* குழப்பம், தடுமாற்றம்.

perquisite (பெக்விஸிற்) *n.* ஊதியத்துக்குப்புறம்பான நலங்கள், இலாபம்.

perry *n.* குடிவகை.

per se adv. அதாகவே, இயல்பாகவே.

persecute (பெஸிக்யூற்) *v.* தொல்லை கொடு, பகைமை பாராட்டு, கொடுமை செய்.

persecution *n.* அடக்குமுறை, அட்டூழியம்.

persevere (பேஸிவிய) *v.* விடா முயற்சி செய்.

persiflage (பேஸிப்ளாஷ்) *n* வேடிக்கைப் பேச்சு.

persist *v.* பிடிவாதமாயிரு,

தொடர்ந்திரு.

person *n.* ஆள், இடம், மனித உடல்.

personable *a.* அழகான, கவர்ச்சியான.

personage *n.* முக்கியமானவர்.

persona grata பிடித்தமானவர், வேண்டியவர்.

personal *a.* தனிப்பட்ட, ஒருவருக்கேயுரிய.

personality *n.* ஆளுமை.

persona non grata விரும்பப்படாதவர், வேண்டாதவர்.

personate *v.* ஆள்மாறாட்டஞ் செய்.

personify *v.* மானிட உருவம் கொடு, உருவகஞ் செய்

personification *n.* உருவக அணி

personnel *n.* வேலையாளர், அலுவலகப் பணியாளர்.

perspective *n.* தோற்றம், காட்சி.

perspex *n.* கண்ணாடி போன்ற பொருள்.

perspicacious *a.* கூர்த்தமதியுள்ள

perspicuous *a.* தெளிவான

perspiration *n.* வியர்வு

perspire *v.* வியர்

persuade *v.* தூண்டு, இணங்கவை.

persuasion *n.* இணங்குவித்தல், நம்பிக்கை, மதம்.

pert *a.* துடுக்கான, உயிர்ப்புள்ள,

pertain *v.* உரியதாயிரு, பொருத்தமாயிரு, குறிப்பிடு.

pertinacious *a.* உறுதியான, பிடிவாதமான.

pertinent *a.* பொருத்தமான, சார்புடைய.

perturb *v.* கலக்கு, மனத்தைக் குழப்பு.

peruke *n.* மயிர்த் தொப்பி.

peruse *v.* கவனமாகப் படி.

pervade *v.* ஊடுருவிப்பரவு.

perverse *a.* முறைதிறம்பிய.

pervert *v.* தவறுகப் பயன்படுத்து, பிழைவழி இட்டுச் செல், *n.* கோணல் போக்குடையவர், நெறிதவறியவன்.

pervious *a.* வழிவிடுகிற, இணங்குகிற, ஊடுருவிப் பரவுதற்கு இடமளிக்கின்ற.

pessimism *n.* எல்லாமே தீமைக்குத்தான் எனும் மனப்பாங்கு, நம்பிக்கையின்மை.

pest *n.* தொல்லை கொடுப்பது, தொற்றுநோய்.

pester *v.* அடிக்கடி கேட்டுத் தொல்லை கொடு.

pesticide *n.* தொல்லைதரும் உயிரினத்தைக் கொல்லவல்ல மருந்து, பூச்சிக்கொல்லி.

pestiferous *a* கேடுசெய்கிற, அழிவு செய்கிற.

pestilence *n.* சாவுவிளைக்கிற தொற்று நோய்.

pestle *n.* உலக்கை

pet *n.* செல்லமாக வளர்க்கப்படுவது, அன்பிற்குரியது, *pet name* செல்லப் பெயர், *pet aversion* மிகு வெறுப்புத் தருவது.

petal *n.* பூவிதழ்.

petard *n.* வெடிகுண்டுவகை.

peter *v.* படிப்படியாக அழிந்து போ.

petite (பெற்றீற்) *a.* சிறிய, *petite bourgeoisie* கீழ் நடுத்தர வர்க்கம்.

petition (பிற்றிஷன்) *n.* வேண்டுகோள், குறையிரப்பு, மன்றாட்டு மனு.

petrel *n.* கடற்பறவை வகை, *stormy petrel* அமைதியின்மை ஏற்படுத்துபவர்.

petrify (பெட்றிபை) *v.* கல்லாக்கு, வியப்பால் செயலறச் செய் அச்சத்தால் உணர்விழக்கச் செய்.

petrochemieal *n.* பெட்ரோலியத்திலிருந்து பெறப்படும் ரசாயனப் பொருள்.

petrodollar *n.* பெட்ரோலிய ஏற்றுமதியால் பெறும் வருமானம்.

petrol *n.* பெட்ரோல், பளுக் குறைந்த மண்ணெய் வகை.

petroleum (பிட்ரோல்யம்) *n.* பளுவான நிலநெய் வகை, கனிஜ எண்ணை.

petrology *n.* பாறைகள் பற்றிய ஆய்வு.

petticoat *n.* மகளிர் உள்ளுடை, *petticoat government* பெண் ஆதிக்கம்.

pettifog *v.* சட்டத்துக்குட்பட்ட உருட்டுப்புரட்டுக்களைச் செய், சொற் புரட்டு.

pettifogger *n.* கீழ்த்தரமான வழக்குரைஞர், அற்பகாரியங்கள் செய்பவன்.

pettifogging *a.* மிகச்சிறிய, முக்கியமில்லாத நுணுக்கங்கட்காக சச்சரவிடுகின்ற.

Petting *n.* செல்லம் கொடுத்தல்.

pettish *a.* சிடுசிடுப்பான, சினங் கொள்கிற.

petty *a.* மிகச்சிறிய, குறுகிய மனங்கொண்ட, *petty cash* சில்லறைச் செலவுக்கான பணம்.

petulant *a.* எரிச்சல் கொள்ளுகிற.

petunia *n.* பூச்செடியினம்.

pew (ப்யூ) *n.* பாதிரி கோவிலிலுள்ள நீண்ட இருக்கை,

pewter (ப்யூட்ட) *n.* வெள்ளீய காரீயக் கலவைக் கலம்.

phaeton (பேற்றன்) *n.* குதிரை வண்டி வகை.

phalanx (பலங்க்ஸ்) *n.* மக்கள் திரள், காலாட் படைப்பிரிவு, விரல் எலும்பு.

phallic *a.* படைப்பாற்றல் குறியாக விளங்கும் ஆண்குறி பற்றிய.

phantasm *n.* உருவெளித் தோற்றம், ஆவியுருக்காட்சி, பிரமை.

phantasy *n.* மனக்கண் தோற்றம்.

phantom *n.* பேயுருத் தோற்றம் மாயை.

Pharaoh *n.* பண்டைய எகிப்திய அரசரின் பட்டப்பெயர்.

Pharisee *n.* யூதவகுப்பினர். ஆசாரக் கண்டிப்பாளர், போலிப்பகட்டர்.

pharmaceutical (பாமஸ்யூட்டிகல்) *a.* மருந்து ஆக்கத்துக்குரிய.

pharmacist *n.* மருந்துக் கடைக்காரர், மருந்து தயாரிப்பவர்.

pharmacopoeia *n.* மருந்துப் பொருள் பட்டியல்.

pharmacy *n.* மருந்துக்கடை.

pharynx *n.* மூக்கு தொண்டை ஆகியவற்றின் பின்புறக் குழாய்.

phase (பேஸ்) *n.* கட்டம், நிலை, வளர்ச்சிப் படி, *phase out* படிப்படியாக வழக்கொழி.

pheasant (பெஸன்ற்) *n.* வேட்டைப் பறவை.

phenomenal *a.* குறிப்பிடத்தக்க, தனிச்சிறப்புக்குரிய, வியப்புக்குரிய.

sickle *n.* அரிவாள்.

sickly *a.* நோயுற்ற, உரமற்ற

sickness *n.* நோய், வாந்தி.

side (ஸைட்) *n.* பக்கம், செருக்கு.

side board *n.* உணவுக் கூடநிலையடுக்கு.

side burns *n. pl.* கன்ன மீசை.

side effect *n.* பக்க விளைவு.

side line *n.* உபதொழில்.

sidereal (ஸைடியறியல்) *a* விண்மீன் சார்ந்த.

side-step *v.* தவிர், நழுவு.

side-track *v.* திசை திருப்பு.

sideview *n.* பக்கவாட்டுக் காட்சி.

sidewalk *n.* தெருவோர நடைபாதை.

sideways *a.* பக்கவாட்டான.

siding *n.* தடமாற்றத்துக்குப்பயன்படும் பக்கத்தண்டவாளம்.

sidle *v.* அஞ்சியஞ்சிக் களவாக முன்னேறு.

siege (ஸீஜ்) *n.* முற்றுகை.

sienna (ஸி'என) *n.* நிறமூட்டும் களிமண்வகை.

siesta (ஸிஎஸ்ர) *n.* நண்பகற் சிறுதுயில்.

sieve (ஸிவ்) *n.* அரிதட்டு.

sift *v.* அரி, பிரி, கொழி, தூவு, ஆராய்.

sigh (ஸை) *n.* பெருமூச்சு.

sight *n.* பார்வை, காட்சி, பெருந்தொகை, *at first sight* பார்த்தவுடனே, *get sight of* பார், *out of sight* மறைந்து.

sightly *a.* கண்ணுக்கினிய.

sightseeing *n.* சுற்றுலாப்போதல்.

sign (ஸைன்) *n.* அடையாளம், குறி, சாடை, இராசி, *v.* கையொப்பமிடு.

signal (ஸிக்னல்) *n.* குறி, சாடை, *a.* குறிப்பிடத்தக்க, சிறப்பான, *v.* சாடைகாட்டு.

signalize *v.* குறிப்பிடத்தக்கதாக்கு.

signatory (ஸிக்னேட்றி) *n.* ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டவர்.

signature *n.* கையொப்பம், *signature tune* நிகழ்ச்சி முன்னிசை.

signboard (ஸைன்போட்) *n.* அறிவிப்புப்பலகை.

signet (ஸிக்நிற்) *n.* பொறி, முத்திரை, *signet-ring* பொறிப்புள்ள கணையாழி.

significance *n.* பொருள், இன்றியமையாமை, முக்கியத்துவம்.

signi fication *n.* பொருள், குறிப்பு.

signify *v.* குறியாயமை, கருது, தெரிவி.

signor (ஸின்யோ) *n.* திரு.

signora (ஸின்யோற) *n.* திருமதி.

signorina (ஸீன்யறீன) *n.* செல்வி.

signpost (ஸைன் போஸ்ற்) *n.* குறிகாட்டி, கைகாட்டி மரம்.

Sikhism (ஸிகிஸ்ம்) *n.* பஞ்சாபில் குருநானக் (1469-1538) என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட மதம்.

silence (ஸைலன்ஸ்) *n.* அமைதி, *v.* அடக்கு.

silent *a.* அமைதியாக.

silhouette (ஸிலு'எற்) *n.* நிழலுரு.

silica *n.* கண்ணடி மணல்.

silicosis *n.* தூசியினால் ஏற்படும் நுரையீரல் நோய் வகை.

silk *n.* பட்டு, *take silk* இராணி வழக்குரைஞராதல்.

silk worm *n.* பட்டுப்புழு.

sill *n.* வாயிற்படி, பலகணி அடிக்கட்டை.

silly (ஸிலி) *a.* அறிவற்ற, துடுப்படி வீரருக்குக் கிட்ட, *silly billy* பேதை.

silo (ஸைலோ) *n.* புல்பதனக் குழி, கழிவுக்குழி, ஏவுகணை நிலை.

silt (ஸில்ற்) *n.* வண்டல், சேற்றுப்படிவு.

silvan *a.* காடு சார்ந்த.

silver *n.* வெள்ளி, *silver-fish* பொத்தகப்பூச்சி வகை, *silver jubilee* 25 ஆவது ஆண்டுவிழா, *silver lining* நம்பிக்கை ஒளி, *silver side* மாட்டிறைச்சி, *silver smith* வெள்ளிக் கம்மியன், *silver tongued* நாவன்மையுள்ள, *silver ware* வெள்ளிக் கலம், *silver wedding* 25 ஆவது மணவிழா.

silviculture *n.* மரவளர்ப்பு.

simian *n.* குரங்கு சார்ந்த.

similar *a.* போன்ற, **similarity** *n.* ஒற்றுமை.

simile (ஸிமிலி) *n.* உவமையணி.

similitude *n.* ஒப்புமை.

simmer *v.* மென் கொதிப்படை உணர்ச்சியை அடக்கியிரு, மனம்குமுறு, *simmer down* உணர்ச்சி அடங்கியிரு.

simoom (ஸிமூம்) *n.* அராபிய வெப்பக்காற்று.

simper *n.* அசட்டுச் சிரிப்பு.

simple *a.* எளிய, சிக்கலற்ற, வஞ்சகமில்லாத, திறமையற்ற.

simpleton *n.* அறிவிலி, அரைகுறை அறிவுடையவன், மூடன்.

simplicity *n.* எளிமை, நேர்மை.

simplify *v.* எளிதாக்கு, சுருக்கு.

simulacrum *n.* படிமம், நிழலுரு போலிவடிவம்.

simulate *v.* போல நடி.

simultaneous *a.* உடனிகழ்வான.

sin *n.* பழி, குற்றம், தவறு.

sinanthropus *n.* பீகிங் குரங்கு போன்ற புதைபடிவ மனிதன்.

since *prep.* அன்றிலிருந்து, பின்னாக, *conj.* அப்பொழுதிருந்து, என்றதனால், *adv.* பின்பு.

sincere (சின்ஸிய) *a.* உண்மையான.

sinciput *n.* முன்மண்டை.

sinecure (ஸைனிக்யுவ) *n.* வேலையின்றிச் சம்பளமுள்ள தொழில்.

sine die (ஸைனிடையி) *adv.* காலவரையறையின்றி, தேதி குறிப்பிடப் படாமல்.

sine qua non (ஸைனிக்வேநொன்) இன்றியமையாதது.

sinew (ஸின்யு) *n.* தசைநார், *pl.* தசை, வலு, *the sinews of war* பணம், படைக்கலன்.

sing *v.* பாடு.

singe (ஸின்ஜ்) *v.* சிறிது சுடு

single *a.* தனியான, மணமாகாத, பிரித்தெடுத்த, *v.* தேர்ந்தெடு, *single figures* 1—9 வரை, *single handed* உதவியின்றி.

singlet *n.* கையில்லாத சட்டை.

singleton *n.* தனியன், ஒன்றேயொன்று.

singsong *n.* குழுவிசை, சலிப்பூட்டும் மெட்டு.

singular *n.* ஒருமை, *a.* ஒற்றையான, அரிய, தலைசிறந்த, புதுமையான.

Sinhalese *n.* சிங்கள இனம், சிங்கள மொழி, வடதென் திராவிடர் கலப்பில், கி.மு 543 க்குப் பின், பழந்தமிழகத்தின் சிறுதுண்டமான ஈழநாட்டில் தோன்றிய இக்கலப்பினம், பழந் தமிழ்ச் சிதைவுகளாய ஆரியம் பிராகிருதம் பாலிஎலு ஆகியவற்றைக் கலந்து தோற்றுவித்த கலப்பு மொழியே சிங்களம். தூயசிங்களம் எனப் பெறும் 'ஹெலபாஷா' 'எலு' மொழியேயன்றி வேறன்று 'எலு' மொழியில் கி. பி. 13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற 'ஸிதத் ஸங்கராவ, எனும் நூலே சிங்கள மொழியின் முதல் இலக்கண நூலாகும். இதன் முதல் இலக்கிய நூல் கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் எழுதப் பெற்ற 'சியபஸ் லகர' என்பதாகும். இலக்கிய நூல்களுள் மிகச் சிலவே செய்யுளில் இயன்றவை. இவற்றில் 'எலு' மொழியின் செல்வாக்கு மிக்கிருப்பதைக் காணலாம்.

sinister *a.* கெட்ட, கொடிய. வஞ்சனையான, இடக்கை பற்றிய.

sink *v.* அமிழ், மதிப்பிழ, வலுவிழ, கிண்டு, துளையிடு, செதுக்கு, பந்து குழியில் விழச்செய், முதலிடு, மற, *n.* தொட்டி, குழி.

sinker *n.* தூண்டிற் பளு.

sinking-fund *n.* கடனடைக்க ஒதுக்கும் பணம்.

Sino- *pref.* சீனபற்றிய.

sinology *n.* சீன பற்றிய ஆய்வு.

sinophil (ஸினுபில்) *n.* சீனவை விரும்புபவர்.

sinophobe *n.* சீன வெறுப்பாளர்.

sinuous *a.* வளைவுகளுடைய.

sinus (ஸைநஸ்) *n.* குழிவு, சிறுதுளை.

sip (ஸிப்) *v.* சிறிது சிறிதாகக் குடி.

siphon (ஸைபன்) *n.* வளைகுழாய், உந்து குப்பி.

sir n. ஐயா, ஒருபட்டம்.

sire (ஸய) தந்தை, v. ஈனுவி.

siren (ஸைறன்) n. மயக்கி மோசஞ் செய்பவள், கடலணங்கு, பேரொலி செய்யும் கருவி.

sirloin (சேலொய்ன்) n. மாட்டின் பின் கால் இறைச்சி.

sirocco (ஸிரொகு) n. அனல் காற்று.

sisal n. நாரிழை வகை.

siskin n. பறவை வகை.

sissy n. கோழை, பெண்மை மிக்கவன்.

sister n. உடன் பிறந்தாள், தோழி, தாதி, கன்னியாஸ்திரி, *sister in-law* கணவன் அல்லது மனைவியின் உடன் பிறந்தாள், உடன் பிறந்தான் மனைவி.

sisterhood n. பெண் தொண்டர் குழு.

sisterly a. மிக்க அன்பான, உடன் பிறந்தாள் போன்ற.

sit v. உட்கார், அடைகா, *sit on the fence* நடு நிலையாயிரு, *sit up* நெடுநேரம் விழித்திரு, *sit well* சரிஅளவாக இரு.

sitar n. இசைக்கருவி வகை.

sit-down n. வேலை செய்யாதிரு, *sit-down strike* உள்ளிருந்து வேலை நிறுத்தம் செய்தல்.

site (ஸைற்) n. கட்டிடம், நிகழ்விடம்.

sitter (ஸிற்ற) n. அடைகாக்குங் கோழி.

sitting n. உட்காருதல், கூட்டம், அமர்வு, முட்டைத் தொகுதி.

situated a. இருக்கின்ற.

situation n. இடம், சூழல், நிலைமை, தொழில்.

six n. ஆறு, *at sixes and sevens* குழம்பிய நிலையில், **sixth** a. ஆறுவதான.

sixfold a. ஆறுமடங்கான.

sixteen n. பதினாறு, **sixteenth** n. பதினாறுவது.

sixty n. அறுபது, **sixtieth** n. அறுபதாவது.

sizable (ஸைஸபிள்) a. பெரிய அளவான.

size n. அளவு, பசை, v. தரவாரி பிரி, பளபளப்பாக்கு, *size up* அளவை மதிப்பிடு, மதிப்பிடு.

sizzle (ஸிஸ்ஸ்) v. சுரீரென ஒலி.

skate (ஸ்கேற்) n. மீன் வகை, காலணி, v. பனிமீது சறுக்கிச் செல்.

skein (ஸ்கேன்) n. நூற்கண்டு, பறக்கும் காட்டு வாத்துக் கூட்டம்.

skeleton n. எலும்புக்கூடு, சட்டம், செயற்திட்டம், *skeleton staff* ஆகக் குறைந்த அலுவலர் தொகுதி, *skeleton key* எல்லாப்பூட்டுகட்கும் பொருந்தும் திறப்பு, *a skeleton in the cupboard* குடும்பரகசியம்.

skep n. கூடை, தேன்கூடு.

sketch (ஸ்கெச்) n. சுருக்கக் குறிப்பு, சிறு நாடகம், புனையா ஓவியம், v. விவரி, வரை.

skew (ஸ்க்யூ) a. சரிந்த.

skewbald a. வெண்மையும் வேறு நிறமும் கலந்த.

skewer n. இறைச்சி பற்றும் ஊசி.

ski (ஸ் கீ) *n.* 7½ அடி நீள பனிப் பாதணி, பனிநடைக் கட்டை.

skiing *n.* பனிச் சறுக்கு விளையாட்டு.

skid (ஸ் கிட்) *v.* சறுக்கு, *n.* தடைக்கட்டை.

skiff *n.* சிறு வள்ளம்.

skilful *a.* திறமையுள்ள.

skill *n.* செயற்றிறன், திறமை.

skillet *n.* வாணலி, சமையற் கலம்.

skim *v.* ஆடை எடு, நழுவு, ஊர், விரைவாக வாசி.

skimp *v.* தேவையிலும் குறைத்துக் கொடு.

skimpy *a.* குறுகிய, சிறிய, சிறிதளவான.

skin *n.* தோல், நிறம், *save one's skin* தப்பித்துக் கொள், *skin and bone* ஒல்லியான *skin deep* மேற்போக்கான *thick skin* மான உணர்ச்சியின்மை.

skinflint *n.* கஞ்சன், கருமி.

skinny *a.* ஒல்லியான, கஞ்சத்தனமான.

skint *a.* பணமின்றி, வறிய.

skip *v.* துள்ளு, இடையிடை விட்டு வாசி, விரைந்து செல், கயிறடி, ரகசியமாக வெளியேறு, *n.* வாளி.

skipper *n.* தலைவன்.

skirl *n.* கிறீச்சொலி.

skirmish (ஸ்கேமிஷ்) *n.* சிறு சண்டை.

skirt *n.* பாவாடை, விளிம்பு.

skirtings *n. pl.* மாட்டிறைச்சி வகை.

skirts *n. pl.* எல்லைப் புறங்கள்

skit (ஸ்கிற்) *n.* வசைத்துணுக்கு.

skittish *a.* விளையாட்டுத் தனமான.

skittles *n.* பந்திலுல் எறிந்து வீழ்த்தும் ஆட்டம்.

skive *v.* கடமையைத் தட்டிக் கழி.

skivvy *n.* வேலைக்காரி.

skua *n.* பெரிய கடற் பறவை.

skulduggery (ஸ்கல்டகறி) *n.* சூழ்ச்சி.

skulk *v.* மறைந்து திரி, அஞ்சி ஒளி.

skull *n.* மண்டையோடு, கபாலம்.

skunk *n.* முடைநாற்ற விலங்கு வகை, வெறுக்கத் தக்கவன்.

sky (ஸ்கை) *n.* வானம், வான்நிலை *v.* மேலே செல்ல பந்தை அடி,

skylark *n.* வானம்பாடி, *v.* குறும்பாட்ட மாடு.

skylight *n.* மேல்தளப் பலகணி.

skyscraper (ஸ்கைஸ்க்றேப்ப) *n.* மிக உயர்ந்த கூட்டடம்.

skyward *a.* வானம் நோக்கிய.

slab *n.* பாளம், பலகை.

slack *a.* தளர்ந்த, மெதுவான, அக்கறையற்ற, *n.* நிலக்கரித் தூள், வேலைதவிர்ப்பவன், *pl* தளர்ந்த காற்சட்டை.

slacken *v.* தளர்த்து, தாமதப் படுத்து.

slag *n.* உருக்கிய உலோகக் கழிவு.

slake (ஸ்லேக்) *v.* தணி, நீருடன் கல.

slalom (ஸ்லாலொம்) *n.* நெளி பாதைப் பனிச்சறுக்காட்டம், தடங்கற் படகுப் பந்தயம்.

slam *v.* படாரென ஓசையெழ மூடு, தொப்பெனப் போடு, கடுமையாய் விமர்சனம் செய், *n.* சீட்டாட்டமுறை.

slander *n.* அவதூறு, பொல் லாங்கு பழியுரை.

slang *n.* கொச்சை மொழி, *v.* திட்டு, வசைகூறு.

slant *v.* சாய், பக்கம் சார்ந்திரு *a.* சாய்ந்த.

slanting *a.* சாய்வான, சரிந்த.

slap *v.* கையாலடி *a.* நேராக.

slap-dash *a.* அக்கறையின்றி, அவசரமாக, மடத்துணிச் சலான.

slapstick *n.* ஆரவாரமிக்க இன் பியல் நாடகம்.

slash *v.* வெட்டு, அடி, குறை, கடுமையாக விமர்சி.

slat *n.* மரச்சட்டம், நீண்டொ டுங்கிய மரத்துண்டு.

slate (ஸ்லேற்) *n.* கற்பலகை, *v.* கண்டி, திட்டு, *have a clean slate* நற்பெயரெடு, *start with a clean slate* பழையதை மறந்து புதிதாய் தொடங்கு.

slattern (ஸ்லற்றண்) *n.* ஒழுங்கு முறை பேணுதவள்.

slaughter (ஸ்லோட்ட) *v.* இறைச் சிக்காக கொல்லு, பேரளவிற் கொலை செய்.

slaughterhouse *n.* விலங்குகளை வெட்டுமிடம்.

slave (ஸ்லேவ்) *n.* அடிமை, *v.* கடுமையாய் உழை.

slaver *v.* உமிழ்நீர் வழியவிடு *n.* அடிமை வணிகத்தில் ஈடுப டுபவர்.

slavery *n.* அடிமைத் தனம்.

slavish *a.* அடிமை போன்ற.

slay *v.* கொல்லு.

sleazy *a.* அழுக்கான, ஒழுங்கற்ற.

sledge (ஸ்லெஜ்) *n.* சறுக்கு வண்டி.

sledgehammer *n.* பளுவான பெரிய சம்மட்டி.

sleek *a.* பளபளப்பான, செழிப் பான.

sleep *n.* தூக்கம்.

sleeper *n.* இருப்புப் பாதைக் குறுக்குக் கட்டை, தொடர் வண்டித் துயிற் பெட்டி.

sleeping partner *n.* உழையாத பங்குரிமையாளர்.

sleepy *a.* கலகலப்பற்ற, நன்கு கனிந்ததாற் சுவையற்ற, தூக் கமுள்ள.

sleet *n.* ஆலங்கட்டி மழை, கல் மழை.

sleeve *n.* சட்டையின் கை, குழல் போன்ற மேலுறை, *up one's sleeve* மறைத்து வைத் திருக்கின்ற.

sleigh (ஸ்லே) *n.* குதிரைஇழுக் கும் பயணிகள் சறுக்குவண்டி.

sleight (ஸ்லேற்) *n.* கைத்திறன், சாதுரியம், *sleight of hand* கண்கட்டு வித்தை.

slender *a.* போதாத, இளைத்த, ஒல்லியான, மிகச்சிறிய, *slender means* சிறிதளவு பணம்.

sleuth (ஸ்லுத்) *n.* துப்பறிபவர்.

sleuth - hound (ஸ் லூ த் ஹவுண்ட்) *n.* மோப்ப வேட்டை நாய்.

slew (ஸ்லூ) *v.* திரும்பு.

slice (ஸ் லை ஸ்) *n.* மெல்லிய துண்டு, சீவல், பகுதி, *v.* வெட்டு.

slick (ஸ்லிக்) *a.* விரைவான, திறமையான, வழுக்குகிற, நயமான.

slicket *n.* கயவன், மோசக்காரன்

slide (ஸ்லைட்) *v.* வழுக்கு, நழுவு, *n.* சரிவு, சறுக்குதல், கண்ணாடி வில்லை, திரைப்படவில்லை, தலையூசி, கணிப்புக் கருவி.

slight (ஸ்லைற்) *a.* சிறிய, ஒல்லியான, முக்கியமல்லாத, கடுமையில்லாத சொற்ப, *v.* புறக்கணி, அவமதி.

slim (ஸ் லிம்) *a.* மெலிந்த, சொற்ப, போதாத.

slime (ஸ்லைம்) *n.* குழைந்த சேறு, வழவழப்பான பசைப் பொருள், சளி.

sling (ஸ் லிங்) *n.* கவண், கை தூங்கி, *v.* வீசு, தொங்கவிடு, *sling mud at* வசை கூறு.

slink (ஸ்லிங்க்) *v.* ஒளிந்து செல்.

slip *v.* சறுக்கு, நழுவு, தப்பு, விடு, *n.* தவறு, உறை, தளர் உடை, துண்டு, பூச்சு, *give a person the slip* தவிர், தப்பு, *slip up* தற் செயல் தவறு, *slip of the tongue* நாத் தவறு.

slipper *n.* செருப்பு, நழுவுபவன்.

slippery *a.* வழுக்குகிற, நம்பக் கூடாத.

slippy *a.* சறுக்குகிற, *look slippy* விரைவு படுத்து.

slipshod *a.* கவனக் குறைவான, அழகற்ற.

slipway *n.* கப்பல் துறைச் சாய் மேடை.

slit *n.* நீள்வெட்டு, சிறுபுழை, பிளவு.

slither *v.* நழுவு.

sliver *n.* சிராய், சிம்பு, *v.* சிராய் களாகப்பிள.

slobber (ஸ்லொப) *v.* வாய்நீர் வடி.

sloe *v.* கற்முழை வகை.

slog *v.* கடும் அடி, கடுநடை, கடு வேலை.

slogan *n.* சுலோகம்.

sloop (ஸ்லூப்) *n.* ஒற்றைப் பாய் மரக் கப்பல்.

slop *v.* சிதறு, சொட்டு, வழி, தெறி, *n.* தளர்உடை, *pl.* கழி நீர், நோயாளியின் உணவு, தயாரித்த தளர் உடை.

slope *n.* சாய்வு, *slope off* வெளியே செல்.

slop - pail *n.* படுக்கையறைக் கழிவுக்கலம்.

sloppy *a.* நனைந்து அழுக்கான, ஆக்கறையற்ற, காதலுணர்ச்சியுடைய, காதலுணர்ச்சிபற்றிப் பேசுகிற.

slop-seller *n.* தைத்தஉடை விற்பவர்.

slosh *v.* நீர் தெறி, அடி.

slot *n.* நீண்டொடுங்கிய துளை மான் தடம், இயைபள்ள தாழ்ப்பாள்.

sloth n. சோம்பல், மர வில்லங்கு வகை, தேவாங்கு.

slouch (ஸ்லெளச்) n. அருவருப் பூட்டும் நிலை.

slough (ஸ்லெள) n. சதுப்பு நிலம்.

slough (ஸ்லப்) v. தோல் நீக்கு, தவிர்.

sloven (ஸ்லவ்ன்) a. ஒழுங்கற்ற, தூய்மையற்ற, சோம்பல்மிக்க, அக்கறைக் குறைவான.

slovenly a. அழக்கான, adv ஒழுங்கீனமாக

slow a. மெதுவான, மந்தமான, adv. மெள்ள, v. வேகங்குறை.

slowcoach n. சுறுசுறுப்பில்லாதவன்.

slub (ஸ்லப்) n. நூல் திரள்.

sludge n. சேறு, கழிநீர், மிதக்கும் பனிக் கட்டி.

slue (ஸ்லூ) v. ஊடச்சில்திரும்பு.

slug (ஸ்லக்) n. நத்தையின ஊர்வன, உலோகத் திரள், துப்பாக்கிக்குண்டு, v. கடுமையாய் அடி.

sluggard n. சோம்பேறி, மந்தமானவன்.

sluggish a. மெதுவாகச் செல்கிற.

sluice (ஸ்லூஸ்) n. மடை, மதகு, கால்வாய்.

slum (ஸ்லம்) n. அழுக்குமிக்க சேரிப்புறம், புறஞ்சேரி v. ஏழைகளிடஞ் செல்.

slumber n. சிறுதுயில், v. தூங்கு.

slumming n. சேரிக்குப் போதல். சேரி மக்கள் போல் வாழ்தல்

slump n. திடீர்வீலை வீழ்ச்சி, வீழ்ச்சி.

slur (ஸ்லேர்) v. இழிவாகப் பேசு, தெளிவின்றிச் சொல், மேலோடு செல், n. கறை, நிந்தை.

slurp v. உறிஞ்சுவது போல் ஓசையிடு.

slurry (ஸ்லறி) n. சேறு, சாந்து.

slush n. உருகிய பனிக்கட்டி, முட்டாள் தனமான பேச்சு, தரக்குறைவான கவிதை, சேறு, *slush fund* சட்டவிரோத நோக்கத்துக்கான நிதி.

slut n. தூய்மையற்றவள்.

sly (ஸ்லை) a. வஞ்சகமான, மறைவான, குறும்பான *on the sly* மறைவாக.

smack n. நறுஞ் சுவை, நறுமணம், ஒற்றைப் பாய்த் தோணி, அடி, முத்த ஒலி.

small (ஸ்மோல்) a. சிறிய, மூக்கியமற்ற, *small minded* குறுகிய மனப்பான்மையுடைய, *small talk* முக்கியமில்லாத விஷயம் பற்றிய உரையாடல்.

smallholding n. சிறு அளவிலான கமபுலம்.

small pox n. பெரிய அம்மை நோய்.

smarmy a. தெவிட்டுகிற.

smart a. கவர்ச்சியான, திறமையான, சுறுசுறுப்பான, கடுமையான, வலியுணர், வருந்து, n. கடுவலி.

smash v. தகர், நொறுக்கு, மோது, தோற்கடி, அழி, n. பெருவிபத்து, வலுவான அடி அழிவு.

smashing *a.* திறமையான.
smatter *v.* பிதற்று.
smattering *n.* புல்லறிவு, சிறிதள வான அறிவு.
smear (ஸ்மிய) *v.* பூசு, மரியாதை கெடு.
smell *n.* மணம் *v.* மணந்து பார்.
smelling - salts *n. pl.* முகர்வுப்பு மருந்து.
smelt *n.* கடல்மீன் வகை, *v.* உருக் கிப் பிரித்தெடு.
smile (ஸ்மைல்) *n.* முறுவல், புன் சிரிப்பு, தயை.
smirch (ஸ்மேச்) *v.* பூசு, இழிவு படுத்து, அழுக்காக்கு.
smirk *v.* இளி.
smite (ஸ்மைற்) *v.* திடீரென த் தாக்கு, அடி, வெட்டு.
smith (ஸ் மி த்) *n.* கம் மி யர், கருமான்.
smithereens *n. pl.* தூள்கள்.
smithy *n.* கொல்லன், பட்டறை
smock *n.* தளர் மேலுடை.
smog *n.* புகையும் பனியும் கலந்த மூட்டம்.
smoke (ஸ் மோ க்) *n.* பு கை, சுருட்டு, குறுஞ்சுருட்டு.
smoke - screen *n.* மறைப்பு.
smolder *n.* தணல்.
smooth *a.* அழுத்தமான, தடங்க லில்லாத, கடுமையில்லாத.
smother (ஸ்மத) *n.* அடர்புகை, தூசிப்படலம், *v.* மூச்சுத்திணற வை, அ ட க் கு, மூட்டமிடு, மூடு.
smoulder (ஸ்மோல்ட) *n.* அழல், மனப்புழுக்கம்.
smudge (ஸ்மஜ்) *n.* அழிதடம், *v.* ஈரமை அழி.
smug *a.* தன்னிறைவுள்ள.
smuggle *v.* க ள் ள க் கடத்தல் செய்.
smut *n.* கூலநோய்வகை, கரும் புள்ளி, கரிக்கசடு, ஆபாசமான வை, மாசு, *v.* அழுக்காக்கு.
snack *n.* சிற்றுண்டி.
snaffle *n.* கடிவாளவாய்க் கம்பி. உருக்கு.
snag *n.* எதிர்பாரா இடைஞ்சல், தடை, நீரடி முட்டுக் கட்டை நீருள்ளிருக்கும் மரக்கிளை.
snail (ஸ் நே ல்) *n.* நத்தை, *snails pace* மெல்லடை.
snake *n.* பாம்பு, *snake in the grass* மறைமுக எதிரி.
snake charmer *n.* பாம்பாட்டி, பிடாரன்.
snap (ஸ்நப்) *v.* திடீரெனமுறி, ச டாரெனமூடு, படம்எடு, அறுந் துவிடு, திடீரெனக்கவ்வு, சினந் துபேசு, *n.* சிறுபூட்டு படம்.
snapdragon *n.* பூச்செடி வகை.
snapper *n.* மீன் வகை.
snappy *a.* சினந்து கொள்கிற விரைவான, கவர்ச்சியான வேடிக்கையான.
snare (ஸ் நெ ய) *n.* க ண் ணி. பொறி, முழவின் வார்வகை.
snarl (ஸ்நார்ள்) *v.* பல் தெரி ய உறுமு, சினங் கொண்டு பேசு, சிக்காக்கு, *n.* உறுமல், சிக்கு.
snatch (ஸ் நா ச்) *v.* ப றி, விரைந்து பெறு, *n.* சிறு பகுதி,
snazzy *a.* நயநாகரிகமான.

sneak (ஸ்நீக்) *v.* திருடிச் செல், கோள் சொல், பதுங்கிச் செல், நழுவு.

sneaking *a.* அற்பமான, இழிவான.

sneakers *n. pl.* மென் பாதச் சப்பாத்து.

sneer (ஸ்நிய) *n.* ஏளனச் சிரிப்பு, கேலிப் பேச்சு, அலட்சியப் பார்வை *v.* நிந்தி.

sneeze *n.* தும்மல்.

snib *n.* காலதர்க் கொளுவி, யன்னற் பூட்டு.

snick *v.* சிறு வெட்டிடு, சிறிது சாய்வாக அடி.

snicker *v.* இளி கனை.

snide *a.* போலியான, கள்ளமான.

sniff (ஸ்நிப்) *v.* மூக்கால் காற்றை உள்ளிழு, மோந்து பார், *n.* மோப்பம் பிடித்தல்.

sniffle *v.* மீண்டும் மீண்டுமோந்து பார், மெதுவாக உறிஞ்சு.

snigger *n.* அடக்கமான அரைச் சிரிப்பு.

snip *v.* கத்திரி, *n.* துண்டித்தல்.

snipe (ஸ்நைப்) *n.* உள்ளான் குருவி, *v.* மறை விடத்திலிருந்து சுடு, மறைவாக விமரிசி.

sniper *n.* மறைந்திருந்து சுடும் படைஞர்.

snippet *n.* சிறு வெட்டுத் துண்டு, *pl.* துணுக்குத் தகவல்கள்.

snitch *v.* களவெடு.

snivel *v.* மூக்கு நீர் வடிய சிணுங்கு.

snob *n.* பகட்டாரவாரத்தை மதிப்பவர்.

snobbery *n.* நாகரிகப் பகட்டு.

snooker (ஸ்நூக்க) *n.* கோற் பந்தாட்ட வகை.

snoop *v.* ஒட்டுப் பார்.

snooty (ஸ்நூற்றி) *a.* தற் பெருமையுடைய.

snooze *n* சிறு தூக்கம்.

snore *n.* குறட்டை.

snorkel *n.* நீரடிச் சுவாசிப்புக் கருவி.

snort *n.* பேரொலியுடன் சுவாசித்தல்.

snout (ஸ்நௌற்) *n.* விலங்கின் நெடு மூக்கு.

snow (ஸ்நோ) *n.* பனித் திரள்.

snowdrop *n.* வெண் பூச் செடி வகை.

snowflake *n.* வெண் பனித் திவலை.

snub (ஸ்நப்) *v.* கண்டி, அதட்டு, முரட்டுத் தனமாக நடந்து கொள், *a.* குறுகிக் கொழுத்த.

snuff *n.* மூக்குத் தூள், மெழுகு திரியின் கருகிய பாகம், *v.* அணை, *snuff it* சா.

snuffle *v.* பேரொலியுடன் மூச்சு விடல்.

snuffy *a.* சிடுசிடுப்பான.

snug *a.* சொகுசாயிருக்கின்ற, அடக்கமான.

snuggle *v.* நெருங்கியிரு, அணைத்துக் கொள்.

so *adv.* அப்படி, அவ்வாறு, மிக, அவ்வளவு, *conj.* ஆதையால் எனில், அப்படியே, எனவே, *int.* சரி, ஆகட்டும், *so and*

so and so விருப்பமில்லாதவர், *quite so* அதுதான் சரி, *so beit* நல்லது, இருக்கட்டும், *so far* இதுவரை.

soak (ஸோக்) *v.* நன்றாக நனை, ஊறவை, பரவு, உறிஞ்சு, வலிந்து பணம் எடு, *n.* நிறை குடிகாரன்

soap *n.* சவர்க்காரம், *soap opera* வானொலிப் பகல் நிகழ்ச்சிக் கோவை.

soapnut *n.* சிகைக்காய்.

soapsuds *n. pl* சவர்க்காரநுரை.

soar *v* உயரப் பற, விலை ஏறு

sob (ஸொப்) *v.* விம்மியழு, தேம்பு.

sober (ஸோப) *a.* குடிமயக்கமில்லாத, கடுமையான அமைதியான, அறிவுத் தெளிவுடைய, பகட்டற்ற.

sobriety (ஸுப்றையற்றி) *n.* அமைதிநிலை, அறிவுத் தெளிவுடையநிலை.

sobriquet (ஸோப்றிகே) *n.* பட்டப் பெயர்.

soccer (ஸொக்க) *n.* உதைபந்தாட்டம்.

sociable (ஸோஷபிள்) *a.* கூடிப் பழகும் இயல்பு வாய்ந்த

social (ஸோஷல்) *a.* சமுதாயஞ் சார்ந்த, கூடிவாழ விரும்புகிற, *n.* தெளிக்கை, விருந்து, *the social contract or compact* சமூக நலன்களுக்கான கூட்டுறவு ஒப்பந்தம், *social credit* தொழில் இலாபங்கள் பொது மக்களுக்கு வழங்கப் பெற வேண்டுமெனும் பொருளியற் கோட்பாடு, *Social Democrat* ஸோஷலிஸத்தை நோக்கி படிப்படியாக முன்னேறுவதன் மூலம் கீழ்நிலை மக்களின் வாழ்நிலையை மேம்படுத்து வதைக் குறியாய்க் கொண்ட அரசியல் வாதி, *social disease* பரத்தையர் தொடர்பால் ஏற்படும் தொற்றுநோய், மதனநோய், *the social evil* பரத்தைமை, *social history* சமூக நடத்தைகள் பற்றிய வரலாறு, *social order* மனித உறவுகளின் ஒழுங்கமைப்பு, *social realism* காலை போன்றவற்றில் சமுதாயக் கருத்துகளைப் புலப்படுத்தல் *social science* மனித சமூகத்தையும் சமுதாய உறவுகளையும் பற்றிய விஞ்ஞான நோக்கு, *social security* பொருளாதாரப் பாதுகாப்புக்கும் நல்வாழ்வுக்குமான அரச உதவி *social services* அரசு வழங்கும் பொது நலசேவைகள்.

socialism *n.* உற்பத்திச் சாதனங்கள் வழங்கல் பரிமாற்றம் ஆகியன சமூக உடைமையாக்கப் பட்டு சமூகத்தாலேயே கட்டுப்படுத்தப்ப வேண்டும் எனும் அரசியல் பொருளாதாரக்கோட்பாடு, தனியுடைமையை எதிர்த்து பொதுவுடைமையைப் போற்றும் இந்தப் பொருளியற் கோட்பாடு, சிற்சில வேறுபாடுகளுடன் பற்பல நாடுகளிலும் விரைந்து பரவியுள்ளது சாள்ஸ்பூரிய லூயிபிளாங் பிரான்சிலும் தோமஸ்

ஸ்பென்ஸ், ரெரு பட் ஓவன் இங்கிலாந்திலும், அல்பட் பிறிஸ்பேன், புரௌன்சன் அல் கொட் அமரிக்காவிலும் பரப்பினர். பிரட்றிக் ஏங்கல்ஸ், கார்ள் மாக்ஸ் மாக்சிய சோஷலிஸத்தை (marxian socialism) அறிமுகப்படுத்தினர். மோறிஸ், கிங்ஸ்லி ஆகியோரால் இங்கிலாந்தில் கிறிஸ்தவ சோஷலிஸம் (christian socialism) அறிமுகமானது. கிறித்தவக் கோட்பாட்டின் மூலம் சமூக சீர்திருத்தங்களைச் செய்ய இது முன் வந்தது. பேடினன்ட் லாசாலே, விலெம் லீப்னெக்ற், ஓகஸ்ட் பீபெல் ஆகியோர் ஜெர்மனியில் சோஷல் ஜனநாயகக் கட்சி தோன்றுவதற்கு வழிகோலினர். பிளக்கனேவ் என்பார் ருஷ்யாவில் தோற்றுவித்த சோஷல் ஜனநாயகக் கட்சியே போல் ஷெவிஸம் மென்ஷெவிஸம் எனப் பிளவுற்றது. பேபிணட்ஷோ, சிட்னிவெப் பீட்றிஸ்வெப். ஆகியோர் பேபியன் சோஷலிஸம் (Fabian socialism) எனும் கோட்பாட்டை இங்கிலாந்தில் அறிமுகப்படுத்தினர். கில்ட் சோஷலிஸம் (Guild Socialism) டென்ரிஎன்பாரால் இங்கிலாந்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

socialite *n.* நயநாகரிகச் சமுதாயத்தவர்.

society *n.* பன்பதை, சமுதாயம், சங்கம்.

sociology (ஸோஸிஒலஜி) *n.* சமூகவியல்.

sock (ஸொக்) *n.* குறுங்காலுறை, வெல்வெட்டடி.

socket (ஸொகிற்) *n.* குழிவு.

Socratic *n.* கி.மு 469-399 இல் வாழ்ந்த கிரேக்க அறிஞர் சோக்கிரட்டீசைப் பின்பற்றுபவர், *Socratic method* வினாவிடை ஆய்வுமுறை.

sod *n.* புற்றரை, ஆள், புல்மண் கட்டி.

Soda *n.* உப்புவகை, குடிவகை.

sodden (ஸொடின்) *a.* நன்றாக நனைந்த.

sodium *n.* உப்பு மூலத்தனிமம்.

sodomite *n.* விலங்குடனே ஆண்களுடனே புணர்பவன்.

sodomy *n.* மலவாயிலைப் பயன்படுத்தும் தன்னினைச் சேர்க்கை.

sofa *n.* படுக்கக்கூடிய சாய்விருக்கை.

soffit *n.* வளைவின் அடிப்புறம்.

soft *a.* மென்மையான, எளிய, கனியுப்புகளற்ற, வெறிதராத, மதிப்பிறங்கக்கூடிய, *soft currency* தாள் நாணயம், *soft drink* வெறிதராத, *soft fruit* விதையில்லாப்பழம், *soft goods* புடைவைவகை, *soft hearted* இரக்கமுள்ள, *soft nothings* காதற் பேச்சுக்கள், *soft wicket* நனைந்த தரையாட்டம், *soft witted* அறிவு முதிராத.

soften *v.* மென்மையாக்கு, தணி.

soggy (ஸொகி) *a.* நனைந்த, நீரூறிப் பருவான.

soidisant (ஸ்வாடீஸாங்) *a.* தானேதனக்குச் சூட்டிய.

soigne (ஸ்வானியே) *a.* நயநாகரிகமான, நன்றாக ஒழுங்கு செய்யப் பெற்ற.

soil *n.* உதிர்மண், நிலம், அழுக்கு, *v.* அழுக்காக்கு

soiree (ஸ்வாறே) *n.* மாலை நேர மக்கள் கூட்டம்.

sojourn (ஸொஜேண்) *v.* சிறிது காலந் தங்கியிரு.

sol *n.* ஞாயிறு.

solace (ஸொலஸ்) *n.* ஆறுதல், மனநிறைவு, *v.* தேற்று.

solar (ஸோல) *a.* கதிரவன் சார்ந்த, *solar plexus* உந்தி நரம்பு வலை.

solarium *n.* கதிரொளி பயன்படுத்தப்படும் அறை.

solder (ஸோட / ஸோல்ட) *n.* பற்றுசு, பொடி, *v.* பற்றுசு வைத்து இணை.

soldier (ஸோல்ஜ) *n.* படைவீரர், *soldier on* கடுமையாக முயல்.

soldiery *n.* படைவீரர்குழாம்.

sole *n.* உள்ளங்கால், பாதணி அடிப்பாகம், தட்டைமீன் வகை, *a.* தனித்த.

solecism (ஸொலிஸிஸ்ம்) *n.* மொழிவழு, சமுதாயப்பிழை.

solemn (ஸொலெம்) *a.* மெதுவான, சடங்கொடுபட்ட, கடுமையான, நடை முறை தவறுத, பயபக்தியுடனான, வீரூர்ந்த.

solemnity *n.* பக்தியுடனான சடங்கு, பவித்திர நிலை.

solemnize *v.* கொண்டாடு, விதி முறைப்படி நடத்து, ஆசாரமாக்கு, புனிதமாக்கு.

solemnly *adv.* முறைப்படி, பயபக்தியூட்டும் முறையில்.

solenoid *n.* மின்காந்த கம்பிச் சுருள்.

solfa *n.* சுரவரிசைக்கான அசை முறை.

solicit *v.* அழை, கேள், வேண்டு.

solicitor *n.* சட்ட ஆலோசகர், வழக்குரை ஞர்க்கறிவுறுத்துபவர்.

solicitous *a.* அக்கறையுள்ள, ஆவலுடைய.

solicitude *n.* அக்கறை, ஆவல்.

solid *a.* திண்ணிய, ஒருமித்த உறுதியான, நம்பத்தக்க.

solidarity *n.* ஒற்றுமை.

solidify *v.* கட்டியாகு, உறை.

soliloquize (ஸுலிலகுவை) *v.* தனக்குள் பேசு.

soliloquy (ஸுலிலக்வி) *n.* தனக்குத் தானே பேசிக் கொள்தல்.

solipsism (ஸொலிப்ஸிஸ்ம்) *n.* ஆன்மா ஒன்றே அறியத் தக்கதும் நிலை பேறுடையதும் ஆகும் என்னுங் கோட்பாடு.

solitaire (ஸொலிற்றெய) *n.* தனி வைரம், தனியொருவர் சீட்டாட்டம்.

solitary (ஸொலிட்றி) *a.* தனித்த, தனிமையான.

solitude *n.* தனிமை, தனிமையான இடம்.

solo (ஸோலோ) *a.* தனியான, *n.* தனிஇசை, soloist *n.*

solstice *n.* கதிரவன் நடுக்கோட்டிலிருந்து செல்லத்தக்க ஆசக் கூடிய தொலைவிடம், சங்கராந்தி (ஜூன் 21, டிசம்பர் 22).

soluble *a.* கரையத்தக்க, தீர்வு காணத்தக்க.

solution *n.* கரைசல், தீர்வு, முடிபு, விடை.

solve *v.* விடை காண், வழி காண்

solvency *n.* கடன் தீர்க்கும் நிலை

solvent *a.* கரைக்கும் ஆற்றலுடைய, கடன் தீர்க்கும் வகையுடைய.

sombre (ஸொம்ப) *a.* இருண்ட, துயரார்ந்த, மங்கலான.

sombrero (ஸொம்ப்றெரோ) *n.* அகல் விளிம்புத் தொப்பி.

somatic *a.* உடல்பற்றிய.

some (ஸம்) *a.* கொஞ்ச, சில, போதிய அளவு, யாரோ, கிட்டத்தட்ட, குறிப்பிடத்தக்க.

-some *suf.* காரணமாதல், quarrel some சண்டை விளைக்கிற, tiresome களைப்புறச் செய்கிற.

somebody *n.* யாரோ ஒருவர்.

somehow *adv.* எப்படியோ, எப்படியாவது.

somersault (ஸமஸோல்ற்) *n.* குட்டிக் கரணம், திடீர் மாற்றம்

something *pron.* ஏதோ ஒன்று, ஏதோ கொஞ்சம், *adv.* சுமாராக.

sometime *a.* முன்னுள், *adv.* எப்பொழுதாவது, முன்பு, ஒருசமயம்.

sometimes *adv.* சிலவேளைகளில், அடிக்கடி.

somewhat *adv.* சிறிதளவில், கொஞ்சம், சற்று.

somewhere *adv.* எங்கேயோ.

somnambulism *n.* தூக்கநடை,

somnolent *a.* தூக்கநிலையிலுள்ள.

son *n.* மகன், *The Son of Man* இயேசு.

sonar *n.* நீரடிப் பொருள்களைக் கண்டு பிடிக்கபயன்படும் கருவி.

sonata (ஸனாற்ரு) *n.* கூறுபாடுடைய இசைப்பா.

sonatina *n.* குறு இசைப்பா.

song *n.* பாடல், *for a song* அற்ப விலையில்.

songster *n.* பாடகர், இசைப்புள், கவி.

sonic *a.* ஒலியலைபற்றிய.

sonnet (ஸொனிற்) *n.* பதினான்குவரிப் பாவகை.

Sonny *n.* சிறுவனை விளிக்கும் முறை.

sonorous *a.* உரத்த, கணீரென்ற ஒலியுடைய.

soon (ஸூன்) *adv.* விரைவில் உடனே.

soot (ஸுட்) *n.* ஒட்டைடை.

sooth (ஸூத்) *n.* உண்மை.

soothe *v.* ஆற்று, அமைதிப்படுத்து, தணி.

soothsayer *n.* வருவதுரைப்பவன், குறிசொல்பவன்.

sop *n.* நனைத்த அப்பம், கைக்கூலி.

sophist (ஸொபிஸ்ற்) *n.* குதர்க்கவாதி.

sophisticated *a.* சிக்கலான, இயல்பகலாத, உலகியலுக்கேற்ப நடக்கிற, உருட்டுப்புரட்டுத் தெரிந்த.

sophistry *n.* குதர்க்கம், போலிவாத நுணுக்கம்.

sophomore *n.* பல்கலைக் கழக இரண்டாம் ஆண்டு மாணவர்.
soporific *a.* துயிலூட்டுகிற.
sopping *a.* தண்ருக நனைந்த.
soppy *a.* முற்ருக நனைந்த, உணர்ச்சிப் பசப்பு நிறைந்த.
soprano (ஸுப்ரூ ஆனு) *n.* உச சக்குரலிசை.
Sorbet *n.* நறுஞ் சுவையூட்டிய குளிர்பானம், ஷர்பத்.
sorcerer *n.* மந்திரவாதி, சூனியக் காரன்.
Sorcery *n.* மந்திரவித்தை, சூனியம், மாந்திரீகம்.
sordid *a.* அழுக்கான, நேர்மையற்ற, கஞ்சத்தனமான, கூலிக்காக வேலை செய்கிற.
sore *a.* வருத்துகிற, கடுமையான, சினமுற்ற, *n.* புண்.
sore-eyes *n.* கண்நோய்.
sorely *adv.* மிகவும், கடுமையாக.
sorghum *n.* தினை வகை
sorority *n.* பல்கலைகழக மாணவிகள் குழு.
sorrel *n.* பூண்டு வகை, செம்பழுப்பு நிறம், இந்நிறக் குதிரை.
sorrow *n.* துயரம், மனவருத்தம்.
sorry *a* வருந்துகிற, இரங்குகிற, வறிய, பயனற்ற, கேவலமான
sort *n.* வகை, வகுப்பு, *out of sorts* உடல் நலக்கேடு.
sortie (ஸோர்ற்றி) *n.* முற்றுகைப்பட்ட வீரரின் புறத்தாக்குதல், வானூர்திநடவடிக்கை.
SOS *n.* உயிர்காப்புக் கோரிக்கை, உடனுதவிக் கோரிக்கை.
soso *a.* நல்லதும் அல்ல கெட்டதும் அல்ல.
sot *n.* குடிகாரன்.
sotto voce தாழ்குரலில்.
sou (ஸூ) *n.* மிகச்சிறுநாணயம்.
soubrette *n.* தோழி, வேலைக்காரி
souffle (ஸூப்ளே) *n.* முட்டை வெண்கருவுணவு.
sough (ஸௌ) *n.* மெல்லோசை.
soul (ஸோல்) *n.* உயிர்நிலை ஆன்மா, ஆள், ஓருயிர்.
soulful *a.* உணர்ச்சிமயமான.
soul-stirring *a.* எழுச்சியூட்டும்
sound (ஸௌண்ட்) *n.* ஒலி, நீரிணை, *a* உடையாத, உடல் நலன்குன்றுத, பாதுகாப்பான, சரியான, பழுதல்லாத, முழுமையான, சான்றுடைய, *v.* நீராழம்காண், சொல்லு, கருத்தறி, தோன்று.
soup (ஸூப்) *n.* வடிசாறு, சூப் *soup up* ஆற்றலேக் கூட்டு, *in the soup* இக்கட்டு நிலையில், *soup and fish* மின்னேர உடை.
soupcon *n.* மிகச் சிறுஅளவு.
sour (ஸவ) *a.* புளிப்பான, சிடுசிடுப்பான.
source (ஸோஸ்) *n.* தோற்றுவாய், மூலம்.
sourpuss *n.* சிடுசிடுப்பானவர்.
souse (ஸவ்ஸ்) *v.* ஊறவை, உப்பலிடு.
soutane *n.* பாதிரியின் மேலங்கி.
south *n.* தெற்கு, *south-east* தென்கிழக்கு, *south-west* தென்மேற்கு.
southerner (ஸதெணர) *n.* தெற்கத்தியார்.
southpaw *n.* இடக்கையர்.
souvenir (ஸூவெனிய) *n.* நினை

வுப் பொருள், நினைவுமலர்.

souwester *n.* தொப்பிவகை.

sovereign (ஸொவ்றின்) *n.* மன்னர், தங்கநாணயம் *a.* இறையுடைய, மேலான, வல்லமையுள்ள, சிறந்த.

Soviet *n.* ருசியநாட்டுக் கூட்டரசு, நகராட்சிக் குழு, *the Soviet 1922* ஆப ஆண்டிலிருந்து ருஷ்யா.

sow (ஸோ) *v.* விதை (ஸை) *n.* பெண்பன்றி.

sox *n. pl.* காலுறை.

soy *n.* சோயா அவரை.

sozzled *a.* மிகுதியாய்க் குடித்த

spa *n.* மருத்து நீர்ச்சுனை.

space (ஸ்பேஸ்) *n.* விண்வெளி, வெளி, இடைக்காலம்.

spacecraft *n.* விண்கலம்.

spacious (ஸ்பேஷஸ்) *a.* போதிய இடமுள்ள, பரந்த.

spade *n.* மண்கிண்டி, சீட்டுவகை, *call a spade a spade* ஒளிவு மறைவின்றிப் பேசு.

spadework *n* சடினமான தொடக்கவேலை, முன்னேற்பாட்டு வேலை.

spaghetti (ஸ்பகெற்றி) *n.* மாப் பண்டம்.

spam *n.* சமைத்த பன்றியிறைச்சித் துண்டு.

span *n.* சாண் அளவு, இடை யளவு, வண்டி மாட்டுல் இணை காலம்.

spandrel *n.* வளைவிடை இடம்.

spangle *n.* ஆடையில் மினுங்கும் ஒப்பனைப் பொருள்.

Spaniard *n.* ஸ்பெயின் நாட்டவர்.

spaniel *n.* நெடுஞ்செவிச் சடை நாய்வகை.

spank *v.* குண்டியில் அடி.

spanner *n.* புரிமுடுக்கி, *a spanner in the works* இடையூறு செய்வது.

spar *n.* கனிப்பொருள், பாய்மரத்தடி, *v.* குத்துச் சண்டையிடு, வாதஞ்செய், சண்டையிடு.

spare (ஸ்பெய) *v.* விட்டு விடு, மன்னித்துவிடு; கொடு, மிச்சம்வை, *a.* மேலதிகமான, மெல்லிய, ஒல்லியான, கொஞ்ச.

sparing *a.* சிக்கனமான, மிதமான.

spark (ஸ்பாக்) *n.* தீப்பொறி, மின்பொறி, துகள், *a gay spark* இனியவர்.

sparkle *v.* ஒளிவிடு, மின்னு, *n.* சிறுதீப்பொறி.

sparkler *n.* பூந்திரி.

sparrow (ஸ்பறு) *n.* சிட்டுக் குருவி.

sparse (ஸ்பாஸ்) *a.* அடர்த்தியில்லாத.

spartan *a.* எளியதும் சில வேளைகளில் கடுமையானதுமான.

spasm (ஸ்பஸ்ம்) *n.* தசைப்பிடிப்பு, வலிப்பு, இசிப்பு, திடீர் உணர்ச்சி.

spasmodic *a.* தசைப்பிடிப்பால் ஏற்பட்ட, விட்டுவிட்டு நிகழ்கிற, இழுப்புடன் கூடிய.

spastics *n.* பிறக்கும் போதே மூளை பாதிப்புற்றதால் கைகால் வழங்க முடியாதவர்.

spat *n.* பூசல், சிறு அளவு, முட்டை.

spate *n.* திடீர் வெள்ளம்.

spathe (ஸ்பேத்) *n.* மடல்.
spatial *a.* இடஞ் சார்ந்த.
spatter *v.* தெறி, தெளி, வாரியடி, துளிகளாக விழ.
spatula (ஸ்பற்யுல) *n.* கத்தி போன்ற தட்டைக் கருவி, நாவழுத்திப்பிடிக்கும் மருத்துவர் கருவி.
spatulate *a.* கத்தி போன்ற.
spavin *n.* குதிரை நோய் வகை.
spawn (ஸ்போன்) *n.* மீன் சினை, முட்டை, நரு, கால் வழி.
spay *v.* கருப்பை அகற்றிக் கருத்தடை செய்.
speak (ஸ்பீக்) *v.* பேசு, உரையாடு, சான்று பகர், தெரிவி.
speaker *n.* ஒலிபெருக்கி, சபாநாயகர், பேச்சாளர்.
spear (ஸ்பிய) *n.* ஈட்டி.
spearhead *n.* தாக்குதல் நடத்தும் முன்னணிப் படை.
spearmint *n.* கீரை வகை.
spec *n.* ஊக வணிகம், எதிர் பார்ப்பு.
special (ஸ்பெஷல்) *a.* தனி வகையான, சிறப்பியல்புடைய, விசேஷமான, வழமைக்கு மாறான.
specialist *n.* நிபுணர்.
speciality *n.* சிறப்பியல்பு.
specialize *v.* தனி அக்கறை செலுத்து.
specie (ஸ்பீஷீ) *n.* நாணயம்.
species (ஸ்பீஷிஸ்) *n.* இனம், வகை.
specific (ஸ்பிஸிபிக்) *a.* குறிப்பான, தனியான, தெளிவான, திட்டவட்டமான, *n.* குறிப்பிட்ட நோய் மருந்து. *specific gravity* விதஎடை மானம்.
specification *n.* செய்பொருள் விளக்கம்.
specify *v.* குறிப்பிடு, தெளிவாகக் காட்டு.
specimen *n.* மாதிரி.
specious (ஸ்பீஷஸ்) *a.* நல்லது போல் தோன்றுகிற.
speck (ஸ்பெக்) *n.* சிறு புள்ளி, கறை.
speckle *n.* புள்ளி, பொட்டு.
specs *n. pl.* மூக்குக் கண்ணாடி.
spectacle *n.* மனத்தில் பதியக் கூடிய காட்சி, நகைப்புக்கிடமான காட்சி, *pl* மூக்குக் கண்ணாடி.
spectacular *a.* கண்ணைக் கவர்கின்ற, வியக்கத்தக்க.
spectator *n.* பார்வையாளர்.
spectre (ஸ்பெக்ர) *n.* பேய், ஆவி, மாயத் தோற்றம்.
spectrum *n.* (*pl.* -*tra*) ஒளி வண்ணப் பட்டை.
speculate (ஸ்பெக்யுலேற்) *v.* ஊகி, நினை, ஊகவணிகஞ் செய்.
speculum *n.* உடற் குழிவுகளைப் பார்க்கப் பயன்படும் கருவி.
speech *n.* பேச்சு, சொற் பொழிவு, மொழி, *figure of speech* அணி வகை, *maiden speech* முதற் பேச்சு.
speed *n.* விரைவு, விரைவு வீதம்.
speedometer *n.* விரைவு மானி.
speedway *n.* மோட்டார் சைக்கிள் பந்தயத்திடல்.
speed well *n.* காட்டுப் பூச் செடி

வகை.

spredy *a.* விரைவான.

speleology *n.* முழைஞ்சுகள் பற்றிய ஆய்வு.

spell *n.* மந்திரச் சொல், கவர்ச்சி, வசியம், காலம். *v.* எழுத்துக் கூட்டு, வினவாகு

spellbound *a.* வசிகரிக்கப்பட்ட, மயங்கிய.

spelt *n.* கோதுமை வகை.

spencer *n.* பகளிர் உள்ளாடை.

spend *v.* செலவு செய், செலவிடு

spendthrift *n* வீண் செலவு செய்பவன், ஊதாரி.

spent *v.* களைத்த, முடிந்து போன.

sperm *n.* விந்து, திமிங்கில நெய்.

spermicide *n.* விந்துக் கொலை.

spermicidal *a.* விந்து கொல்லுகிற.

spew (ஸ்ப்யூ) *v.* வாந்தியெடு.

sphagnum *n.* சகதிப் பாசி.

sphere *n* கோளம், பண்டலம் செயற்களம், ஆட்சி எல்லை.

spherical *a.* கோளம் போன்ற.

sphinx *n.* மனிதத் தலையும் அரிமா உடலும் இறக்கைகளும் கொண்ட உரு, புரிந்து கொள்ள முடியாத மனிதர்.

spice (ஸ்பைஸ்) *n.* சுவையூட்டும் நறுமணப் பொருள்.

spick and span *a.* நேர்த்தியான.

spider *n.* சிலந்திப் பூச்சி.

spiel (ஸ்பீல்) *n.* நீண்ட பேச்சு

spigot *n.* மூடி, அடைப்பு.

spike *n.* கூர் நுனி, இரும்பு முள், தடித்த பெரிய ஆணி, கூலக் கதிர். *v.* குத்து, துளை, சாராயம் சேர், spike a person's guns திட்டத்தைச் சிதை.

spill *v.* வழியவிடு, சிந்து, *n.* சிம்பு, spill the beans தகவல் தெரிவி.

spin *v.* சுழல், திரி, நூற்றல்செய், *n.* சுழற்சி, சவாரி.

spin-drier *n.* ஈரம் போக்கும் பொறி.

spin-off *n* நன்மைகள், spin out நீடித்தல்

spina bifida (ஸ்பைனா பிபிடா) பிறப்பிலுள்ள முதுகெலும்புக் குறைபாடு.

spinach (ஸ்பினிச்) *n.* மரக்கறி வகை.

spinal *a* முதுகெலும்பு பற்றிய.

spindle *n.* சுழல் அச்சு, நூற்புக் கதிர், செயலிலம்.

spindly *a.* நீளடொடுங்கிய, உயர்ந்து தொல்லியான.

spindrift *n* கடல் மேற் பரப்பு நுரை.

spine (ஸ்பைன்) *n.* முதுகெலும்பு முள், துணிச்சல்.

spineless *a* துணிவில்லாத, முதுகெலும்பற்ற.

spinet (ஸ்பினிற்) *n.* நரம்பிசைக் கருவி.

spinnaker *n.* பந்தயக்கப்பலிலுள்ள மேலதிகப் பாய்.

spinney *n.* புதர்க் காடு.

spinning *n.* நூற்றல், spinning house பருத்தியிழைத் திருத்துமிடம், spinning jenny இயந்திர நூற்பமைவு spinning wheel கை நூற்பமைவு.

Spinozism (ஸ்பினோஸிஸம்) *n.* பல்லுயிரும் தன் பலவேறு பாடாகக் கொண்டு அவற்றின் பரப்பும் திணைவுத் திறங்களும் தன் பண்புகளாகக் வடைய எல்லையிலாப் பொருளே உலகின் மூலம் எனும் ஸ்பானிய யூத அறிஞர் ஸ்பினோஸ (1632-77) கோட்பாடு.

spinster *n.* மணமாகாதவள்.

spiral (ஸ்பைறல்) *a.* திருகு சுருளான, சுருள் போன்ற.

spire *n.* கூரான கோபுரம்.

spirit (ஸ்பிரிற்) *n.* ஆவி, ஆன்மா, இயல்பு, சிறப்பியல்பு, உட்பொருள், துணிச்சல் சாராயம், *pl* உற்சாகம்.

spirited *a.* உற்சாகமுள்ள, துணிச்சலுள்ள, *v.* கடத்திவிடு மாயமாக மறை, ஊக்கு.

spirit-level *n.* குமிழ் மட்டம்.

spiritual *a.* ஆன்மிகமான, புனிதமான.

spiritualism *a.* ஆன்மிகவாதம்.

spirituous *a.* சாராயம் கலந்த.

spit *v.* துப்பு, மழை தூறு, துளை, *n.* உமிழ் நீர், ஒத்திருத்தல், முனை, கடற் கூம்பு, உலோக முள், மண்வெட்டி அலகாழம்

spite *n.* வெறுப்பு, சினம், *v.* துன்புறுத்து, சினமூட்டு வருத்து, *in spite of* இருந்தும்கூட

spitfire *n.* சிடுமூஞ்சி.

spittle *n.* உமிழ்நீர், எச்சில்.

spittoon *n.* படிக்கம், எச்சிற் கலம்.

spiv (ஸ்பிவ்) *n.* குறுக்கு வழியில் பொருளீட்டும் பகட்டுக் காரன்.

splash *v.* சிதறித் தெளி, பகட்டாகக் காட்டு, தாராளமாகச் செலவு செய்.

splay *v.* புறச் சாய்வாக அமை.

spleen *n.* மண்ணீரல், சினம், வெறுப்பு.

splendid *a.* சிறந்த, கவர்ச்சியான, அற்புதமான.

splendour *n.* உயர்வு, சிறப்பு, புகழொளி.

splenetic *a.* சிடுசிடுக்கிற.

splice (ஸ்ப்ளைஸ்) *v.* புரி இணை, ஒன்றன் பள்ளத்தில் மற்றையது விழ பொருத்து.

splint (ஸ்பிளின்ற்) *n.* சிம்பு, வரிச்சல், அணை சட்டம்.

splinter *n.* சிராய், சிம்பு, சிறு பகுதி.

split *v.* பிரி, கிழி, பிள, இரகசியம் வெளிவிடு, *split one's sides* நன்றுகச் சிரி, *split second* மிகக் குறுகிய நேரம், *split hairs* மிகச் சிறு வேறுபாடு களைப் பெரிது படுத்தல்.

splotch *v.* பூசு, அப்பு, கறைப்படுத்து.

splurge *n.* பகட்டுக் காட்சி, *v.* கட்டுப் பாடின்றி செலவு செய்.

splutter (ஸ்பளட்ட) *v.* எச்சில் தெறிக்கப் பேசு.

spoil *v.* கெடு, பயனற்றதாக்கு, விரும்பு, கொள்ளையிடு, *n.* கொள்ளைப் பொருள்.

spoke *n.* ஏணிப் படி, ஆரைக் கல்.

spoken *a.* பேசப்படும்.

spokesman *n.* பிறர் சார்பாகப் பேசுபவர்.

spoliation *n.* கொள்ளையிடல், பாழடித்தல்.

sponge *n.* நீர்வாழ் உயிரி, கடற் பஞ்சு, *v.* உறிஞ்சு.

sponger *n.* பிறர் செலவில் வாழ்பவர்.

sponsor *n.* பொறுப்பேற்பவர், ஒலிபரப்பு நிகழ்ச்சிச் செலவேற்று விளம்பரஞ் செய்பவர், தொடக்கி வைப்பவர், *v.* தொடங்கு.

spontaneous *a.* தானாகவே நிகழ்கிற, புறக்காரணமில்லாத.

spoof *n.* ஏமாற்று, போலி.

spook *n.* பேய், ஆவி.

spool *n.* நூற்கண்டு, சுழல் தண்டு, உருளை.

spoon *n.* கரண்டி, *v.* உதவி செய், காதலுரையாடி முத்தமிடு.

spoonerism *n.* சொற்களின் தலைப்பெழுத்து தவறுதலாக மாறுவது.

spoonfeed *v.* கரண்டியால் ஊட்டு, மானிய உதவி செய்.

spoor *n.* விலங்கின் தடம், மோப்பத்தடம்.

sporadic *a.* சிதறலான, அங்கும் இங்கும் நிகழ்கிற.

spore *n.* விதை, கருமூலம்.

sport *n.* விளையாட்டு, மரபுப் பிறழ்ச்சி, வேட்டையாடு, வேடிக்கை *v.* அணி.

spot *n.* புள்ளி, பரு, இடம், சிறு அளவு, அழுக்கு, *v.* மைதூறு, இனங்காண், குறிப்பிடு, கெடு, கறைபடித்து, *in a spot* இக்கட்டான நிலையில், *on the spot* அதேயிடத்தில் அதே பொழுதில், விரிப்பு நிலையில், *spot cash* உடனே பணம் கொடு.

spouse *n.* கணவர் அல்லது மனைவி.

spout *n.* குழாய்வாய், நீர்த்தாரை, *v.* ஊற்று தொடர்ந்து பேசு, *up the spout* உடைந்த, அழிந்த, நம்பிக்கையற்ற நிலையில்.

sprain *n.* சுளுக்கு.

sprat *n.* சிறு மீன் வகை.

sprawl *v.* கைகால் பரப்பிக்கிட

spray *v.* தெளி, *n.* சிறுகிளை, பூங்கொம்பு துளிகள், தூறல்.

sprayer *n.* தெளிகருவி.

spread *v.* விரி, பரவு, மூடு, *n.* விரிப்பு, அளவு, பரப்புதல், அளவு மீறிய உண்டி, எல்லை, வீச்சு.

spree *n.* வேடிக்கை, வெறியாட்டம்.

sprig *n.* சிறுகிளை, தலையில்லா ஆணி.

sprightly *a.* உற்சாகமான, மகிழ்ச்சியான.

spring *v.* துள்ளு, பாய், தோன்று, எழு, பிளவுறு, இயங்கு, தப்புதற்குத் திட்டமிடு, *n.* ஊற்று, நெகிழ்ச்சி, இளவேனில், *spring clean* *v.* முழுவதும் துப்பரவு செய், *spring tide* அலை எழுச்சிப் பருவம்.

sprinkle *v.* தெளி, விழு.
sprint *v.* விரைவாக ஓடு.
sprit *n.* மரக்கலப்பாய்க் குறுக் குத்தடி.
sprite *n.* கூளி, தேவதை, பூதம்.
sprocket *n.* பற்சில்லின் பல்லு.
sprout *n.* முளை, தளிர்.
spruce *n.* செடிவகை, *a.* நேர்த் தியான.
sprung *a.* வெறிமயக்கத் திலுள்ள.
spry *a.* சுறுசுறுப்பான.
spud *n.* களைபிடுங்கி, உருளைக் கிழங்கு.
spume *n.* நுரை.
spunk *n.* துணிவு.
spur *n.* தாற்றுமுள், தூண்டுதல், கிளைப்பாதை, *on the spur of the moment* திடீர்த் தூண்டு தலால், *win one's spurs* திற மையை நிறுவுதல்.
spurious *a.* போலியான.
spurn *v.* உதைத்துத் தள்ளு, வெறுத்தொதுக்கு.
spurt *v.* பீறித்தள்ளு, திடீரென விரைவுபடுத்து, *make a spurt* குறுங்கால கடுமுயற்சி செய்.
sputnik *n.* ருஷ்ய செயற்கைக் கோள்.
sputter (ஸ்பட்ட) *v.* துண்டுகள் வெளிவீசு, எச்சில் தெறிக்கப் பேசு.
sputum (ஸ்ப்யூட்டம்) *n.* தொண்டைச் சளி.
spy *n.* ஒற்றன், *v.* வேவுபார்.
squab (ஸ்குவொப்) *n.* இளம்புறு, திண்டு.
squabble *v.* பூசலிடு, சண்டை யிடு, *n.* வீண் சண்டை.
squad *n.* சிறு குழு.
squadron *n.* குதிரைப் படைப் பிரிவு, போர்க் கப்பற் பிரிவு, வானூர்திப் பிரிவு.
squalid *a.* அழுக்கான, வறிய ஒழுக்கங்குன்றிய.
squall *v.* வீறிட்டலறு, *n.* திடீர்ப் புயல்.
squalor *n.* அழுக்கு, வறுமை.
squander *v.* வீண் செலவு செய்.
square *n.* சதுரம், சதுக்கம், வர்க் கம், பழமை வாதி, *a.* ஒழுங்கு செய்யப்பட்ட, நேர்மையான, வெளிப் படையான, போதிய அளவு *v.* கடன் தீர், கைக் கூலி கொடு, *square up with* கடன் தீர், *all square* ஒரே நிலை, *a square deal* நேர்மையான வணிகம், *a square meal* நிறை வான உணவு.
squash (ஸ்குவொஷ்) *v.* நசுக்கு. பிழி, பிசை, அடக்கு, *n.* மக் கள் திரள், பந்தாட்ட வகை, கனிவகை, பழச்சுவைப்பானம்.
squat *v.* குந்தியிரு, இரு, பதுங்கி யிரு, *a.* குறுகிக் கொழுத்த.
squatter *n.* பொது நிலத்தில் உரி மையின்றிக் குடியேறுபவர் நிலக்கிழார், கால்நடை வளர்ப்போர்.
squaw *n.* அமெரிக்க இந்தியப் பெண்.
squawk *n.* கூக்குரல்.
squeak (ஸ்குவீக்) *n.* கீச்சிடும்ஒலி, *narrow squeak* மயிரிழையில் தப்புதல்.

squeal n. கிறீச்சொலி, v. கடுமையாக எதிர்; தகவல் கொடுப்பவராக.

squeamish a. வெறுக்கிற, நுணுக்கம் பார்க்கிற, குமட்டுகிற.

squeegee (ஸ்குவீஜீ) n. நீரகற்றும் ரப்பர் துடைப்பம்.

squeeze v. பிழி, நெருக்கு, வலிந்து பெறு, n. அன்புத் தழுவல். நெருக்கடிநிலை, கடல் பெறுவதில் கட்டுப்பாடு.

squelch n. சேற்றில் நடப்பது போன்ற ஒலி v. நரி.

squib n. சிறுவெடி, சொல்லடி வசை.

squid n. பத்துக் கையுடைய கடலுயிரி.

squiffy a. சிறிது குடித்த

squiggle n. முறுகிய நெளிகோடு

squill அல்லியினப் பூண்டு.

squint n. கோணல் பார்வை ஒரக்கண்.

squire n. நிலக் கிழார்,

squirm v. நெளி, மனத் துயரடை.

squirrel n. அணில்.

squirt n. மருந்தூசி, பீற்றுகுழல், பீற்று நீர், தற் பெருமைக் காரன்.

stab v. குத்து

stabilize a. நிலைநிறுத்து.

stable a. நிலையான, n. குதிரை லாயம்.

staccato a. விட்டு விட்டுப் பாடுகிற.

stack n. குவியல், பேரளவு, புகைபோக்கி தொகுதி. இவித்த புகைபோக்கி.

stadium n. விளையாட்டரங்கம்.

staff n. கோல், கைத்தடி, உதவி, துணைப்பணியாளர் குழு.

stag n. ஆண்மான், stag-party ஆடவர் மட்டும்.

stage n. அரங்கு, மேடை, படிநிலை, ஏவுகணைப் பகுதி. go on the stage நடிகராதல், stage fright மேடையச்சம்.

stager n. old stager அனுபவசாலி.

stagflation n. உற்பத்தி பெருகாப் பணவீக்கம்.

staggar v. தள்ளாடு, அதிர்ச்சியடையவை, மாறி மாறிவை.

staggering a. திகைக்க வைக்கிற.

stagnant a. அசைவற்ற

stagnate v. தேங்கி நில், சோம்பியிரு.

staid a. எழுச்சியற்ற, ஒருநிலைப்பட்ட.

stain n. கறை, குற்றம்.

stair n. படிக்கட்டு.

stake n. கூராண குத்துக்கட்டை, கழுமரம், பந்தயப்பணம், பங்கு, உதவு, at stake இக்கட்டான நிலையில், stake a claim உரிமை கோரல்.

stale a. நாட்பட்ட, சுவையற்ற.

stalemate n. இக்கட்டு நிலை.

Stalinist n. 1953 இல் இறந்த ருஷ்ய புரட்சித் தலைவர் ஜோசப் ஸ்டாலினின் ஆதரவாளர்.

stalk n. தண்டு, v. பீடு நடைபோடு, களவாகப் பின் தொடர்.

stalking-horse n. நோக்கத்தை மறைப்பதற்கு உதவுபவர்.

stall *n.* தொழுவம், விற்பனைச் சாவடி, இருக்கை.

stallion *n.* விதையடிக்கப் படாத குதிரை.

stalwart *a.* கட்டுறுதி வாய்ந்த, நம்பிக்கையான.

stamen *n.* பூவின் அணுறுப்பு.

stamina *n.* தாங்கும் ஆற்றல்.

stammer *v.* திக்கிப் பேசு.

stamp *v.* ஓங்கி மிதி, தனித் தன்மை கொடு, பொறியிடு *n.* முத்திரை தனிப் பண்பு, *stamp out* அழி, அடக்கு.

stampede *n.* மூண்டியடித்தோடல், *v.* மிதித்துத் தள்ளியழி.

stance *n.* நிற்கும் நிலை.

stanch *v.* குருதிப் பெருக்கைத் தடு.

stanchion *n.* செங்குத்தான தூண், உதைகால்.

stand *v.* நில், உறுதியாயிரு, உட்படு, பொறுத்துக் கொள், தன்செலவில் வழங்கு, *n.* நிலை, நிற்குமிடம், சாட்சிக் கூண்டு, *stand a chance* வெற்றி வாய்ப்பு, *stand by* பார்த்துக் கொண்டிரு, செயற்பட தயாராயிரு, பக்கஞ்சார், உதவு, மாறுதிரு, *stand down* விலகு, *stand for* குறித்து நில், வேட்பாளராயிரு, பதிலாயிரு, தாங்கிக் கொள், *stand in* பதிலாயிரு, *stand on* வலியுறுத்து, *stand one's ground* விட்டுக் கொடாதிரு, *stand to* செயற்பட தயாராயிரு, *stand up for* ஆதரி, *stand up to* துணிந்து எதிர், தாங்கிக் கொள்.

standard *n.* கொடி, வகுப்பு, அளவு, தரம், ஒட்டுமரம், மாதிரி.

standardization *n.* தரப்படுத்தல்.

standing *n.* தராதரம், கால நீட்சி, தகுதி, நிலை, *a.* நிலையான.

stand point *n.* கருத்து, நோக்கு.

standstill *n.* தொடர முடியா நிலை.

tannery *n.* தகரச் சுரங்கம்.

stanza *n.* செய்யுட் பத்தி, அடித் தொகுதி.

staple (ஸ்ரேப்பிள்) *n.* தைப்புக் கம்பி, கொண்டி, மூலப் பொருள்.

star *n.* விண்மீன், உடுக்குறி, புகழ்நடிகர், திறமையானவர்.

starboard *n.* கப்பல் வலப் பக்கம்.

starch *n.* கஞ்சிப் பசை, விறைப்பு நிலை.

stare *n.* உற்றுப் பார்த்தல்.

stark *a.* வெறும், விறைத்த, முழு, தனி.

starling *n.* பறவை வகை.

sarry *a* விண்மீன் போன்ற, *starry-eyed* கற்பனையுலகில் திளைக்கின்ற.

start *n.* தொடக்கம், திடீரசைவு, *by fits and starts* விட்டு விட்டு.

startle *v.* திடுக்குறச் செய், அதிர்ச்சியுறவை.

starvation *n.* பட்டினி.

starve *v.* பட்டினி கிட, துன்புறு.

stash *v.* பாதுகாப்பாகவை, மறை.

state *n.* நிலை, தகுதி, ஆடம்ப

ரம். அரசு, நாடு, v. சொல்லு, *lie in state* பிறர் பார்வைக்கு பொதுவிடத்தில் பிணம் வைத்தல் *state craft* ஆட்சிக்கலை

stateless *a.* நாடற்ற, குடியுரிமையற்ற.

stately *a.* பெருமிதமுடைய, ஆடம்பரமிக்க.

statement *n.* கூற்று, கணக்கு விவர அறிக்கை.

statesman *n.* ஆட்சியியல் வல்லுநன்.

static *a.* நிலையான.

statics *n.* நிலையமைவியல்.

station *n.* நிலையம், நிற்குமிடம், நிலை.

stationary *a.* இடம் பெயராத.

stationer *n.* எழுதுதற்கான பொருள்கள் விற்பவர், stationery *n.*

statistics *n.* புள்ளிவிவரம், *statistician n.* புள்ளிவிவரத் தொகுப்பாளர்.

statuary *n.* சிலைகள், சிற்பக்கலை.

statue *n.* சிலை, statuesque *a.* statuette *n.* சிறிய சிலை.

stature *n.* ஆள் உயரம், உயர்ச்சி.

status *n.* தகுதி, *status quo* இதுவரையுள்ள நிலை, *status quo ante* முன்பிருந்த நிலை.

statute *n.* சட்டம், விதி.

staunch *a.* கீழ்ப்படிவுள்ள, உறுதியான.

stave *n.* தொட்டிப்பலகை, கோல், சலாகை, செய்யுட்பத்தி, v. தூளியிடு, *stave off* தவிர்.

stay *n.* பாய்மரக் கயிறு, ஆதாரம், v. தங்கு, தற்காலிகமாக இரு, ஒத்திப் போடு, மனநிறைவு செய், நிறுத்து, பொறுத்திரு, *pl.* இறுக்க மார்க்கச்சு.

stead *n.* இடம், நிலை, *instead of* பதிலாக, *stand in good stead* நலம் செய்.

steadfast *a.* உறுதியான, விட்டுக் கொடாத, பணிவான.

steady *a.* ஒழுங்கான, ஒரேமாதிரியான, நம்பக்கூடிய, தளராத *n.* உற்றநண்பர்.

steak *n.* இறைச்சித் துண்டு, மீன் துண்டம்.

steal *v.* களவாடு, பதுங்கிச்செல், *steal a march on* மறைவாக நன்மை பெறு, *steal the show* எதிர்பாராவிதமாய்ப் பிறரை விஞ்சுதல்.

stealth *n.* களவு, *stealthily adv.* மறைவாய்.

steam *n.* நீராவி, *steamer n.* நீராவிக்கப்பல், அவிகலம்.

steatite *n.* சவர்க்காரக்கல்வகை.

steed *n.* குதிரை.

steel *n.* உருக்கு, எஃகு, v. உறுதியாக்கு.

steep *v.* நனை, ஊறவை, *a.* செங்குத்தான.

steeple *n.* கூராணகோபுரம்.

steeplechase *n.* தடைதாண்டியோடும் குதிரைப்பந்தயம்.

steeplejack *n.* கோபுரமுகடேறிப் பழுதுபார்ப்பவர்.

steer *n.* இளங்காளை, *v.* வழிகாட்டு, செலுத்து, *steer clear of* தவிர்.

steerage *n.* கப்பலின் குறைந்த கட்டணப்பகுதி.

steering *a.* வழித்திருப்புகிற,

steering committee வழிப்படுத்s துங் குழு.

stele *n.* செங்குத்தான தூண்.

stellar *a.* விண்மீன் பற்றிய.

stem *v.* எதிர்த்து நில், தோன்று, தடு, *n.* தண்டு, கப்பல் முகப்பு, சொல்லடி.

stench *n.* முடைநாற்றம்.

stencil *n.* உள்வெட்டுப் படிவத் தகடு.

stengun *n.* இயந்திரத் துப்பாக்கி வகை.

Stenographer *n.* சுருக்கெழுத்தாளர்.

stenography *n.* சுருக்கெழுத்து.

stentorian *a.* பெருங்குரலுடைய

step *v.* அடிவை, சிறிது நட, முன்னேறு, *n.* அடி, சிறு தொலை, படிக்கட்டு, நடவடிக்கை, *pl.* ஏணி, *in step* இணங்குதல், *step in* குறுக்கிடு, *step up* விரைவுபடுத்து, விருத்தி செய்.

Step- *pref.* பெற்றோரில் ஒருவர் மறுமணம் செய்வதாலாகும் உறவு முறை, **step-father** *n.* மாற்றுந்தகப்பன், **step-mother** *n.* மாற்றுந்தாய், **step-brother** *n.*, **step-child** *n.*, **step-daughter**, **step-sister** *n.*, **step-son** *n.*

steppe *n.* புல்வெளி.

stepping-stone *n.* மிதிகல், நோக்கத்தை அடைவதற்கான வழி.

-ster *suf.* செய்பவர், *gamester*.

stereo *a.* பல்திசை வரவுத் தொனியுடைய, முப்பரிமாண விளைவு தருகிற.

stereoscope *n.* முப்பரிமாணக் காட்சிக் கருவியனமவு.

stereotype *n.* அச்சுத்தகடு வகை, நிலைத்த மரபியற் கருத்து.

stereotyped *a.* ஒரேமாதிரியான.

sterile *a.* விளைவற்ற, கருத்தற்ற, மலடான, நோய்நுண்மம் நீக்கிய.

Sterilize *v.* மலடாக்கு, நோய்நுண்மம் நீக்கு.

sterling *n.* பிரிட்டனின் செலாவணிப் பொன், *a.* தூய, முகமதிப்புக்குக் குறையாத.

stern *n.* கப்பற் பின்புறம், *a.* கடுமையான.

sternum *n.* மார்பெலும்பு

stertorous *a.* குறட்டை ஒலி செய்கிற.

stet *v. imper* அப்படியே விடுக.

stethoscope *n.* இதயத் துடிப்பறி கருவி.

stetson *n.* தொப்பி வகை.

stevedore (ஸ்ரீவடோ) *n.* கப்பற் சரக்குச் சுமையாள்.

stew *v.* வேகவைத்துவதக்கு, கடுமையாகப் படி, *n.* திகைப்புநிலை.

steward *n.* மேலாளர், கவனிப்பவர், அலுவலர், **stewardess** *fem.*

stick *n.* தடி, *v.* ஒட்டு, குத்து, நிலையாயிரு, தாங்கிக் கொள், பழப்பாகு, *stick-in-the-mud* புதுக்கருத்துக்களை ஏற்காதவர், *stick out* நீட்டிக் கொண்டிரு, கோரிக்கையை வற்புறுத்தியிரு, *stick to* விடாதிரு, *stick to one's guns* விட்டுக்கொடாதிரு

sticker *n.* ஒட்டுப்படம்
stickleback *n.* சிறுமீன் வகை.
stickle *n.* குருட்டுப் பிடிவாதக் காரர்
sticky *a* ஒட்டிக் கொள்கிற. தடை எழுப்புகிற, மெல்லுப்புக்கிடமான.
stiff *a* விறைப்பான, கடுமையான, ஒழுங்கு முறைப்பட்ட, காரமிக்க, stiff-necked *a.* விடாப்பிடியான.
stifle *v.* திணறடி, கட்டுப்படுத்து, அடக்கு.
stigma *n.* இழுக்கு, வடு, சூட்டுத் தழும்பு, பூச்சூல் நுனி, stigmatize *v.*
stile *n.* கடப்பு, படிக்கட்டு
stiletto *n.* குறுவாள், குத்தூசி.
still *a.* அசைவற்ற, ஓசையற்ற, *n.* அமைதி, வடிகலம், நிழற்படம், *adv.* இன்னும், இருந்தபோதும், ஆயினும், still life உயிரில் பொருள் ஓவியம்.
stillborn *a.* செத்தபடியே பிறக்கின்ற.
stilted *a.* கடும் ஒழுங்கு முறைப்பட்ட.
stiltes *n. pl.* உயர்த்திக்காட்டும் நடைக்கோல், தூண்.
stimulant *a.* உற்சாகப்படுத்துகிற.
stimulate *v.* உற்சாகப்படுத்து தூண்டு.
stimulus *n.* ஊக்கி.
sting *n.* கொடுக்கு, கொட்டுதல், *v.* கொட்டு, கடுப்பு, கூடுதலாகப் பணம் பெறு.
stingy *a.* கஞ்சத்தனமான.
stink *v.* முடைநாற்றம் வீசு நேர்மையற்றவராயிரு, வெறுப்புத் தருவதாயிரு
stinker *n.* கடினமானது, அருவருப்பானது.
stint *v.* வரையறு. *n.* ஒதுக்கப்பட்ட வேலை, வழங்கீட்டு வரையறை, முயற்சி எல்லை.
stipend (ஸ்ரைபெண்ட்) *n.* சம்பளம்.
stipendiary *a* சம்பளம்பெறுகிற.
stipple *n.* புள்ளி ஓவியம்.
stipulate *v.* ஒப்பந்தத்தில் பகுதியாகக் கேள், *a.* இலேயடிச் செதிலுடைய.
stipulation *n.* ஒப்பந்தம், இலேயடிச் செதில் அமைவு.
stir *v.* கலக்கு, அசை, ஊக்கு, குழம்பு.
stirrup *n.* அடிதாங்கி, அங்கவடி, குதிரைச் சவாரி செய்வோரின் பாதங்களைத் தாங்கும் அமைவு, stirrup-pump சுமந்து செல்லக்கூடிய சிறுதீயணைப்புப் பொறி.
stitch *n.* தையல், விலாப் புறத் திமிர் வலி, in stitches அடக்க முடியாமல் சிரித்தல்.
stoat *n.* கீரியின விலங்கு,
stock *n.* அடி மரம், இருப்பு, மந்தை, மூதாதை, அரசுக்குக் கொடுத்த கடன், பங்கு, முதலீடு, ஒட்டுத்தாய் மரம், கைபிடி, கணிப்பீடு, கறி வகைச் சார்று, செடி வகை, கழுத்துப் பட்டி, *pl.* கப்பல் தாங்கும்

சட்டம், மரச்சட்ட விலங்கு stock-car பந்தய மோட்டார் வகை, Stock Exchange பங்கு மாற்றுக் களம் பங்குகள் வாங்க விற்கக் கூடிய இடம் stock-in trade வணிகத் தேவைப் பொருள் தொகுதி, stock market பங்குச் சந்தை stock still அசையாத இருப்பு *dead stock* ஈடுபடுத்தாத மூலதனம், முடங்கிய கையிருப்பு, *fat stock* உணவிற்காக கொழுக்க வைக்கப்பட்ட விலங்கு, *laughing stock* ஏளனத்துக்காளானவர், *lock stock and barrel* முழுவதும் *preference stock* ஈவுத்திய முன்னுரிமைப் பங்கு முதல்.

Stockade *n.* பாதுகாப்பு வேலி.

Stockbreeder *n.* கால் நடை வளர்ப்பவர்

Stockbroker *n.* பங்குத் தரகர்.

Stockinet *n.* பின்னற் துணி வகை

stocking *n.* முழந்தாள் வரையான காலுறை.

stockist *n.* சரக்குச் சேமிப்பாளர்.

stockjobber *n.* பங்குத் தரகருடன் பங்கு வணிகஞ் செய்யும் பங்குக்கள உறுப்பினர்.

stockpile *n.* சேமிப்பிலுள்ள சரக்குத் தொகுதி.

stocktaking *n.* இருப்புக் கணிப்பு.

stocky *a.* குறுகிக் கொழுத்த.

stockyard *n.* இறைச்சிக்காக கால் நடைகளைக் கொல்லுமிடம்.

stodge *n.* எளிதிற்செமியா வுண்.

stodgy *a.* கடினமான, மந்தமான.

stoep *n.* விருந்தை.

stoic *a* இன்பதுன்பங்களைப் பொருட்படுத்தாத

Stoicism *n.* ஒழுக்கமே உயர்ந்த தென்றும் ஆசைகளை அடக்கி இன்பதுன்பங்களைப் பொருட்படுத்தாதிருத்தலே சிறந்த தென்றும் அறிவுறுத்திய கிரேக்க அறிவர்செனே (கி பி. 308) என்பாரின் கோட்பாடு.

stoke *v.* நெருப்பினை விறகிட்டு வளர், விரைந்து மிகுதியாயுண்.

stoker *n.* கரி, கரி போடுபவர்.

stole *n.* சமயகுருவின் தோள் பட்டி, மகளிர் தலைத்துண்டு.

stolid *a.* எளிதில் உணர்ச்சி வயப்படாத.

stoma *n.* வாய், *pl.* stomata.

stomach *n.* அடிவயிறு, இரைப்பை, பசி, *v.* பொறுத்துக் கொள்

stomp *v.* அடி அழுத்தி நட, காலுதைத்து ஆடு

stone *n.* கல்லு கொட்டை, மணி, 14 இருத்தல் எடை Stone Age கற்காலம், *stone blind* முழுக் குருடு, *stone dead* முழுச் செவிடு, *leave no stone unturned* முழு முயற்சி செய்.

stony *a* இரக்கமற்ற

stooge *n.* துணையாள், ஊழியாள்.

stool *n.* இருக்கை, பீ, stool pigeon குற்றவாளியைச் சிக்க வைக்கப் பயன்படும் கருவி.

stoop *v.* குனி, இழுகி நட, பணிந்து போ.

stop *v.* நிறுத்து, *n.* நிறுத்தம். முற்றுப் புள்ளி, வில்லையின் துளை, stop press செய்தித் தாளில் இறுதியாகச் சேர்த்த செய்தி.

stopcock *n.* குழாய் நீர் அடைப்பான்.

stopgap *n.* தாற்காலிக பதிலி.

stoppage *n.* நிறுத்தம், தடை.

stopper *n.* அடைப்பு.

storage *n.* சேமிப்பு

store *n.* களஞ்சியம், கடை, *v.* சேர், சேமி, *in store* வரவிருக்கும் நிலையில், *set store by* பெரு மதிப்புவை.

storey, story *n.* நிலை, மாடி.

stork *n.* கொக்கு.

storm *n.* புயல், திடீர்ப்பொழிவு, கடுஞ் சினம், பெருந்தாக்கு, *storm in a tea cup* வெற்றுரவாரம்.

story *n.* கதை, பொய்.

stoup *n.* தூநீர்த் தொட்டி, குடிகலம்.

stout *a.* கொழுத்த, தடித்த, உரமான, உறுதியான, *n.* வெறியம், மதுவகை.

stove (ஸ்ரோவ்) *n.* அடுப்பு வகை.

stow (ஸ்ரோ) *v.* சேகரித்துவை, இறுகப் பொதிந்துவை, *stow away* ஒளிந்திரு.

stowaway *n.* கட்டணஞ் செலுத்தாமல் ஒளிந்து பயணஞ் செய்தல்

straddle *v.* கால்களை அகட்டியிரு.

strafe *n.* பரவல் குண்டு வீச்சு, தாக்குதல், கண்டனம், வசவு.

straggle *v.* பின்தங்கு, அலைந்து திரி, விலகிச் செல்.

